
# கண்ணின் மணி நீயே...!

என்.சீதாலெட்சுமி



# கண்ணின் மணி நீயே..!

## 1

''கோதை பிறந்த ஊர்: கோவிந்தன் வாழுமூர்

சோதி மணிமாடம் தோன்றுமூர்: நீதியால்

நல்ல பக்தர் வாழுமூர் நான் மறைகள் ஓதுமூர்

வில்லிப் புத்தூர் வேதக் கோனூர்.''

துளசி மாடத்தில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப் பட்டு, ரங்கனை மனதிலெண்ணி அவனுக்குச் சூடிக் கொடுத்து, அதே கண்ணனை அடைந்து எல்லாராலும் சக்தி மிக்க கடவுளாகக் கொண்டாடப்படும் ஆண்டாள்

கோவில் கொண்ட ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரின் மிக முக்கியமான இடமான அவளது கோவிலில், ஆண்டாள் - ரங்கமன்னார் கர்ப்பகிரகத்தின் முன்னர் கைகூப்பி நின்றிருந்தாள் மனோன்மணி.

சிறு வயது முதல் அவளது சுக துக்கங்கள் எல்லா வற்றிலும் பங்கு பெற்றிருந்த ஆண்டாளின் முன் னிலையில் ஒரு பெரும் வேண்டுதலோடு நின்றிருந்த மனோன்மணியின் கண்களிலிருந்து கோடென கண்ணீர் வழிந்தது.

சின்ன வயதில் அம்மாவிடம் வாங்கிய அடியும், பருவ வயதில் தன் உடன் பயின்றவன் கொடுத்த காதல் கடிதமும், பன்னிரண்டாவது பொதுத் தேர்வில் பெற்ற நல்ல மதிப்பெண்களும், கல்லூரியில் ஏறிக் குதித்த சுவரும், வேலை இடத்தில் பயின்ற பாடங்களும் என்று மனோன்மணி, ஆண்டாளிடம் சொல்லாத விஷயங் களே இல்லை என்றபோது அவளது காதலையும், திரு மணத்தையும் ஆண்டாள் இல்லாமல் நடத்திக் கொண்டு விடுவாளா என்ன இந்த மனோன்மணி?

மனோ தன்னை மறந்த பிரார்த்தனையில் விழிகள் கண்ணீரைச் சொரிய, ஒரு வெண் கரம் அவளது கண்ணீரை மென்மையாய் துடைத்து விட்டது.

அந்தக் கரத்தின் ஸ்பரிசத்தில் மோன நிலை கலைந்து விழித்த மனோ, ''தேங்க்ஸ் மாட்'' என்றாள் மெல்ல எட்டிப் பார்த்த புன்முறுவலுடன்.

''டோன்ட் வொர்ரி மானி'' என்றவன் மாத்யூஸ் ஜெரால்டே, மனோன்மணியின் வருங்காலக் கணவன்.

மாத்யூஸின் இனி வரும் சம்பாஷணைகள் யாவும் ஆங்கிலத்தில் இருந்தாலும் தமிழில் கொடுக்கப்படும்



(தவிர்க்க முடியாத சில சமயங்கள் தவிர்த்து) வாசகப் பெருமக்கள் அதை அவன் ஆங்கிலத்தில் பேசுவதாக எடுத்துக் கொள்ளவும்.

''நீ சாமி கும்பிட்டு முடித்து விட்டால், நாம் போய் ஒரு காபி சாப்பிடலாம் டார்லிங்'' என மாத்யூ கூற,

''இங்கே வைத்து என்னை டார்லிங் என்று கூப் பிடாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன்'' என ஆங்கிலத்தில் முணுமுணுத்துப் பல்லைக் கடித்தாள் மனோன்மணி.

அவளுக்கு அவனது கைகள் கன்னத்தைத் தொட் டதும், தன்னைத் திரும்பிப் பார்த்த அர்ச்சகரையும், அவனது டார்லிங் என்ற சொல்லைக் கேட்டுப் புருவத் தைச் சுளித்த அவரது நிலையும் எரிச்சலை ஏற்படுத்தி யிருந்தன. அங்கே, அதுவும் வேதங்கள் ஓதி, கடவுளைப் பிரார்த்திக்கும் அந்த இடத்தில், அவனது டார்லிங் என்ற வார்த்தை பெரும் வித்தியாசமாய் பட்டது போலும்.

''சாரி மானி'' என மாத்யூ ஏகமாய் வருத்தப்பட,

''அஞ்சு நிமிஷத்தில் போகலாம்'' என்றவள், ஆண் டாள் கோவில் பிரசாதமாய் கொடுக்கப்பட்ட குங்குமம், துளசி, கல்கண்டு ஆகியவற்றை பயபக்தியோடு வாங்கிக் கண்ணில் ஒத்திக் கொண்டாள்.

அவளையே பார்த்திருந்த மாத்யூவும் அதே போல் செய்ய, அர்ச்சகரிடம் இன்னும் ஒரு வருடத்திற்குத் தேவைப்படும்படி ஆண்டாள் கோவில் குங்குமத்தை வாங்கி, கர்ம சிரத்தையாய் ஒரு கவரில் போட்டவன் முன்னே நடந்தாள்.

அவள் பின்னால் தலை முதல் கால் வரை மைதா மாவைப் பிடித்து வைத்தது போல் வெள்ளை வெள்ளேர் என்றிருந்த மாத்யூ, அந்தப் பழங்கால கோவிலை இன்ச் பை இன்ச்சாக ரசித்துக் கொண்டே வந்தான்.

அவனைப் பின்னே விட்டுத் தான் முன்னே நடந்து கொண்டிருந்த மனோன்மணி, ஏதோ நினைத்தவளாக சட்டெனத் திரும்பினாள். தூண் போல் மாத்யூ நின்றிருப்பான் அவன் மேல் மோதிக் கொள்ளலாம் என்றெண்ணி திரும்பினாளோ என்னவோ, அவள் எண்ணிய படி நடக்காமல் மாத்யூ அவளுக்கு வெகு பின்னால் நின்று கொண்டு கோவிலின் பிரகாரத்தில் வரையப்பட்டிருந்த ஓவியங்களை ரசித்துக் கொண்டிருந்தான்.

அவள் எண்ணம் தான் பலிக்கவில்லை என்றால், திரும்பிய வேகத்தில் அருகில் தூண் போல் மாத்யூ இல்லாமல் தூணே இருந்துவிட, அதில் முட்டிக் கொண்டவளுக்கு வலி உயிர் போனது.

அவளது ''அம்மா'' என்ற அழைப்பில் (அலறலில்) ஓவியத்திலிருந்து கண்ணை எடுத்த மாத்யூ ''ஹோ, பீ கேர்ஃபுல் பேபி'' என்ற கூவலுடன் அங்கே ஓடி வந்தான்.

முட்டிய வேகத்தில் லேசாய் புடைத்திருந்த அவளது நெற்றியை லேசாய் வருடியவனின் கண்களில் லேசாய் நீர் கோர்த்து விட்டது. இது தான் அவன்!

அவளுக்கு ஒன்று என்றால் தாங்க மாட்டான்! தனக்கே மரணக்காயம் பட்டது போல் உள்ளம் உருக, கண்கள் பனித்து விடும். இந்த உருகலும், காதலும் முப்பதே நாள்... ஹ்ம்ம் கலைவாணியின் (அவளது அத்தை மகள்) கணிப்பு படி பத்தே நாட்களில் மறைந்து விடுமா என்ன?



மறையாது என்று தான் ஒரு சமயம் தோன்றுகிறது! சற்று நேரத்திலேயே ஒரு பாதுகாப்பில்லா தன்மை மனதை அரிக்க ஆரம்பித்து விடுகிறதே என்று சற்று அலுப்பாய் இருந்தது மனோவிற்கு!

'இல்லை இல்லை, என் மாட்ட் அப்படியில்லை' என்று தனக்குள் பேசியபடியே அவள் நின்றிருக்க,

''நாம வெளிய போகலாம் டார்லிங்...'' எனக் கூறத் தொடங்கிய மாத்யூஸ், ''ஹோ, டார்லிங் சொல்லக் கூடாதில்லையா? சாரி!'' என்றான்.

அவன் நாக்கைக் கடித்து தன்னைத் திருத்திக் கொண்ட அழகில் (இதில் என்ன அழகு என்றால்... ஹ்ம்ம் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு!) வலியையும் மீறி சிரித்த மனோ ''பரவாயில்லை மாட்ட், டார்லிங் சொல்லலாம்'' என்றாள்.

''ஹோ! ரியலி! ஆனா, நீ தானே சொல்லக் கூடாதுனு சொன்னே?'' என மண்டையைத் தட்டி யோசித்தவனின் தலையைக் கோதி ''என் செல்ல மட்டி!'' என்று கொஞ்ச வேண்டும் போல் தான் இருந்தது. ஆனால், நின்றிருக்கும் இடமும் பிறந்த வீடும் கையையும் வாயையும் ஒருங்கே கட்டிப் போட்டன!

''நான் இன்னொரு தரம் ஆண்டாளைப் பார்த்திட்டு வந்துடுறேன். நீ இங்கேயே இரு!'' என்றவளிடம் ''Convey my regards to her!'' என்ற மாத்யூவிற்கு அவள் கடவுளைப் பற்றி தான் பேசுகிறாள் என்பது புரிந்திருக்கவில்லை. ஏதோ அவளது தோழியைப் பார்க்கப் போவதாய் நினைத்து அவன் கூற, மனோவிற்கு சுத்தமாய் வலி மறந்து போனது!

மீண்டும் ஆண்டாளின் சன்னிதானத்தின் முன்னர் கைகூப்பி நின்று, "கோதை, நான் பண்றது தப்பா? எனக்கு மாத்யூவைப் பிடிச்சிருக்கு. மதம், மொழி, ஜாதி, நாடு இவற்றைத் தாண்டி காதல் வரக் கூடாதா? நீ வரக் கூடாது என்று சொன்னாலும் இப்போ வந்த காதலை என்ன செய்றது? என்னால விட முடியலையே!" என்று கோதை நாச்சியார் என்றழைக்கப்படும் ஆண்டாளுடன் பேசிக் கொண்டிருந்தவள்,

"யார் என்ன சொன்னாலும் நான் கல்யாணம் பண்ணிக்கத் தான் போறேன்! நீ ஏதாவது சொல்வியா கோதை? சொல்ல மாட்டே தானே? உனக்கு உலகத்தில் இருக்கும் எந்த உயிரும்? ப்ளீஸ் கோதை... வேண்டாம்ன்னு சொல்லாதே... சரியா? என் சமத்தில்லை!" என்ற கொஞ்சலுக்குத் தாவி,

"அப்பா - அம்மா ரெண்டு பேருமே வீட்டுக்குள்ள விட மாட்டேங்கிறாங்க கோதை. இப்ப நிலைமை நான் அடுத்த வருஷம் இங்கே வரும்போது மாறிடணும் சரியா? இட்ஸ் அ டீல் ஓகே?" - முடிவாகக் கடவுளிடம் ஓர் உடன்படிக்கை நடத்தி விட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே வெளியேறினாள்.

மனோன்மணியின் தந்தை ரத்தினவேலு - ராஜபாளையம் அருகிலுள்ள மடார்வளாகத்தில் ஒரு பெரிய மில் வைத்து நடத்திக் கொண்டிருக்கும் தொழிலதிபர். அவரது துணைவியார் பரமேஸ்வரி ஒரு அக்மார்க் குடும்பத் தலைவி. ரத்தினவேலு - பரமேஸ்வரி தம்பதியரின் ஒரே தவப் புதல்வியான மனோன்மணி, ஒரு வெள்ளைக்காரனை காதலித்து வந்து நிற்கிறாள் என்ற ஒரே கார



ணமே இத்தனை நாட்கள் ராணியாய் இருந்த மகளை கடுஞ்சொற்கள் எடுத்து வைய வைத்தது!

"கண்ணம்மா, ராஜாத்தி, மணிம்மா" என்ற அழைப்புகளால் குளிப்பாட்டப்பட்டவள், இன்று "கழுதை" என்ற அடைமொழியை மேளதாளத்துடன் சூடியிருந்தாள்.

ராஜா, ராணி, குட்டிம்மா, குட்டிக் கழுதை, என் அம்மாடா நீ... என்றெல்லாம் கொண்டாடிய தந்தை - முகம் கொடுத்துக் கூடப் பேசவில்லை. தாய் தன் ஆதங்கத்தைப் பெரிய ஆர்ப்பாட்டம் செய்து அழுகையாய் வெளியிட்டார் என்றால் தந்தை அவள் முகத்தில் கதவை அறைந்து சாற்றினார்.

தன் தந்தையா? உயிருக்குயிராய், தோழிக்குத் தோழனாய், தாயை விடத் தன்னைப் போற்றி வளர்த்தவரா என்றிருந்தது மனோவிற்கு!

ஹ்ம்ம். அவர் அப்படிப் பேசியபோதும் மனோவால் மாத்யூவை விட முடியவில்லை. தனக்காக, தாய் - தந்தையின் சம்மதம் வாங்கிய பின்னர் தான் திருமணம் என்று தான் சொன்ன ஒரு வார்த்தைக்காக அவனது ஆய்வு வேலைகள் அனைத்தையும் ஒதுக்கி விட்டு, அவள் பின்னே வந்தவனை எண்ணினால் மனம் உருகிப் போனது! அவன் அன்பிற்காக எவ்வளவு ஏங்கிப் போயிருக்கிறான். அது தன்னிடம் கிடைக்கிறது. (கூடவே சில திட்டுக்களும் இலவச இணைப்பாய் கிடைக்கின்றன என்றாலும்) என்பதால் கண்ணை மூடிக் கொண்டு, இரண்டு நாட்கள் முன்னர் இந்தியா வந்த மாத்யூவை எண்ணி மனம் லேசானது.

லேசான மனம் உடனே, நேற்று வந்த அத்தை குடும்பமும் அவர்கள் உறவினர் ஒருவருக்குத் தன்னைத்

திருமணம் முடித்துக் கொடுக்கவில்லை என்ற கடுப்பில் ஏத்திற்குப் பேசிய அத்தையையும், அவரது மகளையும் எண்ணி மீண்டும் கலங்கியது.

இந்த உருகலும் கலங்கலும் ஆண்டாள் சன்னதியி லிருந்து கருடாழ்வார் சன்னதி அடையும் சில நிமிடத் தில் நடந்து முடிந்திருக்க, முடிவில் வந்த கலக்கத்தைப் போக்கும் வண்ணம் கண்ணாடியில் தெரிந்த கோதை நாச்சியாரைப் பார்த்து ஒரு சின்ன சல்யூட் அடித்தாள் மனோ.

அவளது செய்கையைப் பார்த்து, அங்கே சுற்றிக் கொண்டிருந்த குழந்தை ஒன்றும் அதே போல் சல்யூட் வைத்து, அழகாய் சிரித்தது. இருவருக்கும் பதிலாய் கோதையார் ஓர் சிரிப்பு சிரித்தது போலிருந்தது மனோ விற்கு!

எப்போதும் இது அவளது விளையாட்டு! இல்லை இல்லை எண்ணப் போக்கு! ஏதாவது பெரிய வேண்டு தல் நடத்திவிட்டு வரும்போது கண்ணாடியில் கோதையைப் பார்ப்பதும், அதில் கோதை முழுதாய் தெரிந்து, அதே சமயம் ஏதாவது சின்னச் சிரிப்புக் கேட்டால் நினைத்த காரியம் நடந்துவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு!

அப்படியெல்லாம் முன்னர் நடந்திருக்கிறதா என்பது வேறு விஷயம். அது நல்லதே நடக்கும், நடக்கும் என்ற எண்ணத்திலேயே மனோ தன் வேலைகளைச் செய்வ தால் தொண்ணூறு சதம் நல்லதாகவே முடிந்திருக்கிறது. அதே போல், அவளது காதலும் கல்யாணமும் கலக்க மின்றி செல்லும் என்று அவள் நம்புகிறாள். அவளது நம்பிக்கை கைகூடுமா?!



# 2

ஆண்டாள் கோவிலிலிருந்து வெளியே வந்தவர் களை அனைவருமே சற்று வித்தியாசமாய்தான் பார்த் திருந்தனர். நேராய் சென்று அரைக்கிலோ பால் கோவா வையும் கூடவே அரைக் கிலோ பால் அல்வாவையும் வாங்கிய மனோன்மணி, மாத்யூவிடம் சிறிது பால் அல்வாவை உண்ணக் கொடுத்தாள்.

"ஹோ இட்ஸ் யம்மி பேபி! வில் யு கிவ் மீ மோர்" என்று சுருங்கிய கண்களை விரித்து (விரிக்க முயன்று) மாத்யூ புகழ்ந்தபோது, வாங்கிய பால் அல்வாவில் இன்னும் கொஞ்சத்தை கைப்பையில் வைத்திருந்த சிறு பிளாஸ்டிக் ஸ்பூனால் அவனுக்குக் கொடுத்தாள்.

இப்படியாக அவன் கால் கிலோவைக் காலி செய்ய, "மாட்ட், ஒரே நாளில் இவ்வளவு பால்கோவா சாப்பிடக் கூடாது டியர். நாளைக்கு முழுதும் ரெஸ்ட் ரூம்மை விட்டு வர மாட்டாய்" என்று செல்லமாய் அவள் மிரட்டியதில் நிஜமாகவே மிரண்டுப் போன ஒரு தோற்றத்தை (terrific look) கொண்டு வந்தான் மாத்யூ.

"மானி, எனக்கு காபி வேணும் பேபி!" என்றவனை, ஸ்ரீவில்லிப்புத்தூரிலேயே பெரிய ஹோட்டலுக்கு (நான்கு மேசைகளும், பதினாறு நாற்காலிகளும் கொண்ட பெரிய ஹோட்டல் தான்) அழைத்துச் சென்ற

அவனுக்கு காபி என்றும்
மனோ, தனக்கு டீ என்றும்
கூறினாள்.

அவள் கூறிய டீயை எப்படியோ கண்டுகொண்ட
மாத்யூ தனக்கும் டீ என்று கூறியவன், கூடவே ''a tall
one indeed'' என்றதும் மனோன்மணி அவனை ஓர்
விஷமப் பார்வை பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்
டாள்.

ஆனால் அவனோ இருக்கும் நிலையைத் தனக்கு
ஏற்றபடி மாற்றிக் கொள்ளும் திறனுடையவன் என்பதா
வந்த கிளாஸின் அளவைக் கண்டதும் ''இது ரொம்ப க
கம்மியா இருக்கே? எனக்கு இன்னொன்று வேண்டும்''
என்று சொல்லி அனுப்பினான். (கண்டிப்பாக வேண்
டியது தான்! நம்மூர் டீ கடை டம்ளர்களில் மூன்றாவது
வேண்டாமா ஸ்டார்பக்ஸின் ''tall'' அளவைப் பூர்த்தி
செய்ய!)

ஆவி பறக்க வந்திறங்கிய டீயை ஒரு வாய் அருந்திய
மாத்யூ ''இது டீ மாதிரி இல்லையே'' என்றான் ஆங்
கிலத்தில்.

''யா, யா, இதுக்கு பேர் ச்சாய் லாட்டே'' என்ற மனோன்
மணி, அவனது ''ஆனா நாம டீ தானே ஆர்டர் செய்
தோம்? அப்புறம் ஏன் ச்சாய் லாட்டே வந்தது?'' என்ற
கேள்வியை சாய்ஸில் விடுவது தெரியாத வண்ணம்
சாய்ஸில் விட்டாள்.

கொண்டு வரப்பட்ட டீயை மனோன்மணி இரண்டே
நிமிடங்களில் குடித்துவிட, மாத்யூ தனது காபி மக்கில்
ஊற்றிக் கொள்ள, இருவரும் மீண்டும் ஸ்ரீவில்லிப்புத்
தூரை வலம் வர ஆயத்தமாகினர்.



ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி, அங்கிருக்கும்
பாரம்பரியமிக்க நகைக் கடைக்குச் சென்று தாலிக்
கொடியும், சரடும் வாங்கினர்.

தான் எடுத்த சரடை மாத்யூவிடம் காட்டி நன்றாக இருக்
கிறதா என்று மனோ கேட்டபோது ''உன் கழுத்து வலிக்
காதா பேபி?'' எனக் கேட்டு, அவளது கழுத்தை மென்மை
யாக வருடிக் கொடுத்தான் மாத்யூ.

அவனது அந்த மென் வருடலில் மெய் சிலிர்த்து,
அவன் தோளில் இடம் தேடத் துடித்த தலையை முயன்று
கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தவள் ''பரவாயில்லை
மாட்ட் எனக்குப் பிடிச்சிருக்கு'' என்றாள், அவனது
காதலி.

''உனக்குப் பிடித்திருந்தால் எனக்கும் சரி'' என்றவன்,
மெல்லியதாய் புன்னகைத்தான். ரங்கனின் அருள்
பாலிக்கும் முகத்தில் கோதை உருகி நின்றது போல்
மனோவும் உருகி நின்றாள்!! கருப்பாய் இருந்தால்தான்
கண்ணனா? வெள்ளை உள்ளம் கொண்ட வெள்ளைக்
காரன் கண்ணனாக முடியாதா என்ன? ஆனால் எனக்கு
மட்டுமே உரிய கண்ணன் என்று மனம் வாதிட, தன்
காதலனை ஒட்டி நின்றாள், மனோ!!

ஸ்ரீவில்லிப்புத்தூரின் பெரிய கடைகளுள் ஒன்றான
ALN துணிக் கடைக்குள் சென்றவர்கள் (எந்தவொரு
விசேஷத்திற்கும் - பாட்டனார் காலத்திலிருந்து இருக்
கும் அந்தக் கடையில் துணி எடுப்பது அவர்களது குடும்ப
வழக்கம் என்பதால் மனோவும் அங்கேயே வந்திருந்
தாள்) பட்டுப் புடவையும், பட்டு வேஷ்டி சட்டையும்
வாங்கினர்.

கடையின் முதலாளி வீட்டினர் அனைவருக்கும் பழக்கம் என்பதால் அவரது குறுகுறு பார்வையையும், உடனே அவரது கைப்பேசியில் ஓர் அழைப்பு பறந்ததையும் கண்ட மனோவிற்கு, அந்த அழைப்புத் தந்தைக்குத் தான் சென்றிருக்கிறது என்று யூகிக்க முடியாத அளவு மூளை குறைவில்லை.

ஆனால், அழைத்த வேகத்திலேயே கைப்பேசி வைக்கப்பட்டதும், முதலாளியின் முகத்தில் தெரிந்த அப்பட்டமான அதிர்ச்சியும் தந்தைக்கு இந்த விஷயம் தெரியும் என்பதை செவ்வனே படம் பிடித்துக் காட்டின.

அதன் பின்னர் இருவரும் தங்குவதற்கென எடுத்த அறைக்குச் சென்று உடை மாற்றி கிளம்பி வந்தனர். மனோன்மணியின் சேலை கட்டும் படலம் பத்தே நிமிடத்தில் முடிந்துவிட, மாத்யூவின் பேண்ட்டின் மீது வேஷ்டியை சுற்றுவதற்குள் மனோவிற்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கி விட்டது. ஆனால் அந்த மூச்சுக்கள் எல்லாம் "You look gorgeous in this suit darling" என்று கூறி மாட்ட் ஒரு முறை அவளைத் தூக்கிச் சுற்றியதில் மறந்து, மறைந்தே போனது!

இரண்டு மாலைகளையும், இரண்டு அர்ச்சனைத் தட்டுகளையும் வாங்கிக் கொண்டு கோவிலுக்குத் திரும்பச் சென்ற மனோன்மணி - மாத்யூ ஜோடி கோவில் நுழைவு வாயிலில் கல்யாணச் சீட்டு ஒன்றை வாங்கிக் கொண்டு, ஆண்டாள் சன்னதிக்குள் நுழைந்தபோது அர்ச்சகர் ஒரு மாதிரியாகத் தான் பார்த்தார்.

அவரிடம் திருமணத்திற்காக வந்திருக்கிறோம் எனக் கூறியதும், அவர் கேட்ட முதல் கேள்வி "அவா என்ன குலம்?" என்பது தான்.



"மனித குலம்" என நுனி நாக்கு வரை வந்த வார்த்தையைச் சிரமப்பட்டு உள்ளே தள்ளிய மனோ, "என்ன குலமா இருந்தா கல்யாணம் செஞ்சு வைப்பீங்க?" என்றாள்.

அவர் ஒன்றும் சொல்லாமல் இருவரையும் மாறி மாறிப் பார்க்கவே "நீங்க என்ன குலமா இருந்தா கல்யாணம் பண்ணி வைப்பீங்களோ... நாங்க அந்தக் குலம்" என்று மொழிந்த மனோவின் முகத்தில் தெளிவு பிரமாதமாய் மிளிர்ந்தது.

"ஹான்" என வாய் பிளந்து நின்ற அர்ச்சகர், ஒரு அவசரக் காலக் கூட்டம் நடத்த வேறு பக்கம் விரைந்தார். அதே வேகத்துடன் வெளியே வந்தவர், வேற்று மதத்தவருக்கு பெருமாள் முன்னிலையில் (அதுவும் அவர் கையால்) திருமணம் நடப்பது நடவாத காரியம் என்று கூறி விட, மனோ ஒரு வார்த்தை கூட பேசாமல் மாத்யூவை அழைத்துக் கொண்டு பிரகாரத்திற்குள் வந்தாள்.

ஆண்டாள் கோவில் கோபுரம் தெரியும் இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றவள், தான் தினமும் வழிபடும் கோதை பாடிய திருப்பாவையை பாடிக் கொண்டே மாத்யூவின் கழுத்தில் மாலையிட்டாள்.

"நீயும் இதே மாதிரி செய் மாட்ட்ட்!" என மனோ கூற,

"எனக்குப் பாடத் தெரியாதே? மாலையை மட்டும் போடட்டுமா?" என வினவிய மாத்யூவிற்குத் தலையாட்டி சம்மதம் தெரிவித்த மனோவிற்கு, கண்கள் கலங்கின.

"என்னாச்சு பேபி" என மாத்யூ அதற்குப் பதற, "நீ இந்தத் தாலிச் சரடை என் கழுத்தில் போடு. சரியாகிடும்" என்றாள் மனோ.

"இது உனக்குத் தான் பேபி! நான் எடுத்துக்க மாட்டேன்!" என்றவனை "ச்சோ ஸ்வீட்" என்று கொஞ்சிக்கொண்டாள் அவனது மனம் கவர்ந்தவள். (இப்போது வெளிப்படையாகவே!)

கடையில் தாலிச் சரடை காட்டியபோது ஏற்பட்ட மாத்யூவின் ஸ்பரிசத்திற்கே கூசிச் சிலிர்த்தவள், இப்போது அவன் கையால் திரு மாங்கல்யத்தை வாங்கிக்கொண்டபோது பெரும் பரவச நிலையை அடைந்தாள்.

அந்த நொடி வரை, தான் செய்வது தவறோ? இது சரியாய் வருமா? அம்மா - அப்பா மனதை மிகவும் நோடிக்கிறோமோ? அவர்களுக்குத் தெரியாத நல்லதா? (அடேங்கப்பா, காரியம் முடிஞ்சதும் ஃபீலிங்க்ஸ் ஆப் இந்தியாவா இருக்கே!) என்றெல்லாம் தவித்துக் கொண்டிருந்தவளின் மனதில், இது தான் எனக்குரிய வாழ்வென்று தீர்க்கமாய் ஒரு முடிவெடுத்து, அதைச் செயல்படுத்தியும் ஆகிவிட்டது என்றபோது எதிர்காலத்தில் இந்த உறவை ஒரு நல்ல உறவாக, உறவுகள் எண்ணி வியக்கும் அளவு பிணைப்புள்ளதாக மாற்ற வேண்டும் என்ற வைராக்கியம் பிறந்தது! (தட்ஸ் மை கேர்ள்).

தானே அர்ச்சகராய் மந்திரம் ஓதி நடத்திய தனது திருமணத்தை எண்ணி மறு நிமிடமே வியக்கத் தொடங்கிய மனோன்மணி, அதையும் மறு நொடியே மறந்து - தன்னையே ஊடுருவிப் பார்த்தபடி நின்றிருக்கும் மாத்யூவைத் தானும் ஊடுருவிப் பார்த்தபோது கோதையின் வாழ்த்து கோவில் மணியோசையாக வந்து சேரவே, மனோவின் மனதில் சற்று முன் தோன்றிய வைராக்கியம் இன்னமும் ஆழ, ஆழ வேரூன்றி போனது!



ஆனால், தொடர்ந்து கொண்டிருந்த கணவனின் பார்வை வீச்சைத் தாங்க முடியாமல் "ப்ளீஸ் மாட்" என்றாள் மனைவி சிறு வெட்கத்துடன்.

திருமணம் செய்யவென்று தாய்நாடு வந்த மனோவின் எண்ணப்படி (அதாவது தந்தை - தாயை இந்தத் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ள வைத்து, ஊரைக் கூட்டி எல்லோரது ஆசீர்வாதத்துடன் திருமணத்தை நடத்தி, சுற்றத்துடன் கூடி மகிழ்ந்துவிட்டு மாத்யூவின் வேலையிடமான ஜெனீவாவிற்குப் பறப்பதாக எண்ணம்) எதுவும் நடக்கவில்லை என்றாலும், அதில் பிற்பாதியான - திருமணம் முடிந்து மாத்யூவுடன் திரும்பிச் செல்வதை செவ்வனே செய்ய முனைந்தனர் இருவரும்.

மீண்டும் ஓர் முயற்சியாக தனது வீட்டிற்குச் செல்ல மனோ ஆசைப்பட, முதல் நாள் அவளது தந்தை பேசிய பேச்சிலிருந்து ஒன்றும் புரியா விட்டாலும், அவரது முகபாவத்திலும் மனோவின் முகத்தில் தென்பட்ட வருத்தத்திலும் கவலை கொண்ட மாத்யூ அவளைத் தடுக்க முயன்றான்.

"I am fine matt" என்ற மனோ "When your are with me" என்றாள் கூடவே. அவளது கடைசி வார்த்தையில் நெகிழ்ந்து "always dear" என்றவன், அவளைத் தோளோடு சேர்த்து ஆறுதல் கூறவும் மறக்கவில்லை.

ஆனால் மனோவின் ஆசைப்படி மடார்வளாகம் சென்று தாய் வீடு இருக்கும் தெருவில் காலடி எடுத்து வைத்தபோது, நிறைய மனிதர்கள் தத்தம் வீட்டினிலிருந்து எட்டிப் பார்த்தனர். "என் மாட்ட் என்ன காட்சிப் பொருளா... எல்லோரும் பார்ப்பதற்கு?" என்று கூவ

வேண்டும் போல் உணர்ந்த மனோவின் மூளையை அவர்கள் வீட்டு வேலைக்காரியின் வேகமான ஓட்டம் எட்டியது.

அதற்கான காரணம் அவர்கள் வீட்டை நெருங்கிய போது படாரென அடித்துச் சாற்றப்பட்ட கதவின் மூலம் புரிய, தன்னையே அறைந்தது போல் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள் மனோ.

தன்னால் தான் அவளுக்கு இந்த நிலை என்றுணர்ந்த மாத்யூ, ''மானி, நீ வேண்டும் என்றால் இங்கேயே இருக்கிறாயா? நான்... நான் மட்டும் ஜெனீவா போகிறேன்'' எனக் கூற, அவனை நிச்சலமாய் முறைத்தாள், மனோ! (ஹய்யோ மாட்ட், இன்னும் இரண்டு நாளாவது திருப்பிய முகத்தையும், நொடித்த கழுத்தையும் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாய் போலவே!)

''ஒரு மண்ணும் தேவையில்லை'' என்று அப்பட்டமான தமிழில் கூறிய அவனது மனைவி, அதன் பின்னர் அவன் புறம் திரும்ப ஒரு மணி நேரமானது. அதுவும் அவனது ஆயிரம் சாரி டியர்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் தான்! (ஒரு மணி நேரத்தில் ஆயிரம் சாரியா என்று யாரும் கணக்கு கேட்க வேண்டாம்! இதெல்லாம் அரசியலில் சை சை கல்யாண வாழ்க்கையில் சகஜம் அப்பா.)

இப்படியாய் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆரம்பித்த மனோ - மாட்ட் இருவரின் கல்யாண நாள் - இரவை நெருங்கியபோது மனோவும் அவளது கணவனும் மதுரையை அடைந்து அங்கிருந்து சென்னைக்கு விமானம் மூலம் வந்திறங்கினர்.



மனோவுடன் பயின்ற நண்பர்கள் சிலர் சென்னையில் இருந்தமையால் அவர்களுக்குத் தங்கள் திருமணத்தை அறிவித்து, ஒரு சிறு விருந்து கொடுப்பது என்ற திட்டத்துடன் அங்கு வந்தவர்கள் இரண்டு நாட்களில் அதை செவ்வனே செய்தும் முடித்தனர்.

அடுத்த இரண்டு நாட்களை ஷாப்பிங் செய்வதற்கென்று மனோன்மணி ஒதுக்கியிருக்க, அந்த நாட்கள் விடிந்த போது மாத்யூவும் தன் கேமராவுடன் துணைக்கு வந்தான்.

சுடிதார், சேலை என்று மனோ வாங்கிய ஒவ்வொன்றையும் அவளுக்கு வைத்து அழகு பார்த்து வாங்கிய மாத்யூவை, கடைசிப் பெண் சிப்பந்திகள் அனைவரும் வியந்து நோக்கியது மனோவிற்குப் பெருமையாய் இருந்தது. அவள் எடுப்பதை விட, அவன் அவளுக்கு ஏற்றது என்று எடுக்கும் உடைகள் அனைத்தும் பிரமாதமாகவே இருந்தது வேறு கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தது!

இப்படியாக தொடர்ந்த அவர்களது இரண்டு நாள் ஷாப்பிங்கின் முடிவில், மாத்யூவின் ஒரு பெட்டிக்குப் பதிலாய் கிரைண்டரும், மற்றொன்றுக்குப் பதிலாய் மிக்ஸி, தோசைக்கல் மற்றும் இன்ன பிற பொடி மற்றும் தொக்கு வகைகளும் பாக் செய்தாகின.

''எதற்கு இதெல்லாம்? நான் உனக்கு அங்கேயே வாங்கித் தருகிறேன்'' என்று தடுத்தபோது ''ஹ்ம்ம் எனக்கு வேணும், எனக்கு வேணும்'' என்ற பாட்டை விடாமல் சுருதி பிசகாது பாடினாள் மனோ!

அவன் கடைசியாக ''நீ சில சமயம் ரொம்பவும் குழந்தைத்தனமாய் அடம் செய்கிறாய் மானி'' என்று

கூறியபோது அவனைப் பின்னாலிருந்து கட்டிக் கொண்டு "உன்னிடம் செய்யாமல் யாரிடம் செய்வது?'' என்று செல்லம் கொஞ்சினாள் மனைவி.

மேலும் அவள் முதுகில் தன் முகத்தை அழுந்தப் புதைத்துக் கொண்டு "I will make yummy rice cakes for you matt. you will love it'' என்று ஆசைகாட்டியவள் செய்தே இராத இட்லி (அதாங்க ரைஸ் கேக்) நன்றாக இருக்குமோ என்னவோ, அவள் முதுகில் அவள் வைத்த முத்தம் நன்றாக இருந்தது என்பது மனைவியைத் தன் புறம் திருப்பிய மாத்யூவின் வேகத்தில் தெரிந்தது.

## 3

**மா**த்யூவின் வேகத்தில் திக்கு முக்காடிப் போன மனோன்மணி "ப்ளீஸ் மாட், இங்க வேண்டாம் டார்லிங். ஜெனீவா போனதும் ப்ளீஸ்'' என்று எவ்வளவோ எடுத்துக் கூறிய போதும் மாத்யூவின் வேகத்திற்கு அணை ஏற்படவில்லை.

அவனும் அவளது ப்ளீஸ்சையே திரும்பப் படித்து அவளிடம் காரியம் சாதித்துக் கொண்டான்.

சற்று நேரத்தில் இருவரது ப்ளீஸ்சிற்கும் தேவையில்லாமல் போக, இருவரும் ஒருவரை ஒருவர் ப்ளீஸ் பண்ணிக் கொண்டிருந்தனர்!



அடுத்த நாள் விடி காலை நான்கு மணிக்கு விமானம் என்பதால், ஒரு மணிக்கே அலாரம் வைத்து விட்டுப் படுத்த மனோ, அலாரம் அடித்த நேரத்திற்கு எழுந்த போது மனோவின் கண்கள் எரிந்தன.

காலையில் சீக்கிரம் எழுந்ததால் என்று அவளால் எண்ண முடியாமல் முன் தினத்திலிருந்தே தொடர்ந்து கொண்டிருந்தது அந்த கண் எரிச்சல்.

ஆனால் வாங்கிக் குவித்தப் பொருட்களும், மாட்டிடம் கொஞ்சிய கொஞ்சலும், அவனது கைகளில் நெகிழ்ந்த நொடிகளும் அதை மறக்க வைத்திருக்க, இப்போது எரிந்து தொலைத்தது.

எரிந்த கண்களைப் பொருட்படுத்தாமல் குளித்து முடித்தவள், நீல நிற ஜீன்ஸ் மற்றும் மிதமான மஞ்சள் நிற குர்தா அணிந்து மாத்யூவை எழுப்பினாள்.

கண்களைத் திறக்க முயன்று தோற்றவன், மெல்லமாய் கண் விழித்தபோது "ஹேற பேபி, ரொம்ப பனிச்சுன்னு இருக்கியே'' என்று கூறியவாறே அவளைத் தன் மீது இழுத்துக் கொண்டான்.

"காலங்கார்த்தால என்ன மாட் இது? பிளைட் லேட் ஆகுது'' என்று அவன் மார்பில் குத்தியவளை "நாலு மணி பிளைட்டுக்கு என்னடா ஒரு மணிக்கே எழுப்புகிறாய்?'' என அவனும் குத்திய கைகளைச் சிறை பிடித்தான்.

"இப்போ கிளம்பினால் தான் இரண்டரை மணிக்கு அட்லீஸ்ட் ஏர்போர்ட்ல இருக்க முடியும்'' என்றவள், "பொம்பளை கூட சீக்கிரம் கிளம்பிடுவாள், நீ உன்னோட பட்டுக் கூந்தலை வாரி முடிக்க ஒரு மணி

நேரமாகிறது?'' என அவன் கழுத்தில் தாடையை வைத்துப் பேசியவளின் கடைசி வாக்கியம் அப்பட்டமான தமிழில் வந்து விழுந்தது. (நிஜமாகவே பட்டுத் தான்! மிருதுவான வெண்பட்டு!!)

''ஹேஹ. நீ என்னோட ஹேர் பத்தி தானே பேசுறே?'' என்று மாத்யூ கேட்க, ''எப்படி மாட் இப்படி? பெரிய ஆள் ஆகிட்டே போ'' என வியந்து கொண்டாள் மனோ.

''ம்ம்ம் உன்னோட சேர்ந்ததில் இருந்து தான்'' எனக் கூறிய (சே சே கொஞ்சிய) மாத்யூ, தன் கழுத்தில் இருந்த அவளது முகத்தை உதடுகளால் எட்ட முயன்றான்.

''ஹூக்கும், அப்படியே ஆகிட்டாலும்'' என மனோ அதற்கும் சலித்துக் கொள்ள (செல்லமாய் தான்), கால் மணி நேரத்தை யார் பெரிய ஆள்? யாரால் யார் பெரியாள் ஆனார்கள்? என்ற விவாதத்தில் கழித்ததும் தான் சுதாரித்தாள் மனோ.

அவனை ஒரு வழியாய் கட்டிலை விட்டுக் கிளப்பியவள், குளித்து வெளியே வந்தவனை விரட்டோ விரட்டென்று விரட்டி, இரண்டரை மணிக்கு ஹோட்டல் லாபிக்கு அழைத்து வந்து சேர்ந்தாள். அங்கே அறை வாடகையை செட்டில் செய்தவர்கள், விமான நிலையத்திற்கு காரில் பறந்தனர்.

அங்கு செல்லும் வரை, மனோ எரிந்த கண்களைப் பற்றி வாயே திறக்கவில்லை.

அப்படி ஏதும் செய்திருந்தால் அந்தப் பயணத்தையே ரத்து செய்துவிட்டு அவள் உடல்நிலை சரியானதும் செல்லலாம் என்று சொல்லும் ரகம் தான் மாட் என்பதை



அவள் அறிந்திருந்தபடியால் அமைதி காத்தவளை, சிறு இடைவெளிகளில் உற்று உற்று பார்த்துக் கொண்டே வந்த மாட் ''கண்ணில் என்ன?'' என்றான் அவள் முகத்தைத் தன் பால் திருப்பி.

''ஒண்ணுமில்ல மாட். நம்ம பிளைட்டுக்கு செக்-இன் கால் போட்டாச்சு. போகலாம் போகலாம்'' என்றவள் பக்கத்துக்கு வண்டியில் வந்திறங்கியவர்களின் கைப்பெட்டியை தள்ளிக் கொண்டு ஓடப் பார்த்தாள்.

''ஹேறா மானி'' என்ற கூவலுடன் அவள் கையிலிருந்து பெட்டியைப் பிடுங்கியவன், ஆத்திரமாய் முறைத்துக் கொண்டு நின்ற பெட்டியின் சொந்தக்காரரிடம் அவசரமான இரு ''சாரி''களுடன் கொடுத்தான்.

நுனி நாக்கைக் கடித்துக் கொண்டு தப்பு செய்த குழந்தை போல் நின்றிருந்த மனைவியை, கைப்பிடித்து அழைத்துக் கொண்டு (கவனமாய் தனது, அவளது என்று எல்லாவற்றையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்ட பின்னர் தான்!) விமான நிலையத்தினுள் சென்றான்.

விமான நிலையத்தினுள் நுழையும் போது, போன முறை தாய் நாட்டை விட்டுச் சென்ற ஞாபகமும் அதைத் தொடர்ந்து கண்களில் கண்ணீருடன் வழியனுப்பி வைத்த பெற்றோரின் நினைவும் வந்து போனது மனோவிற்கு.

பாஸ்போர்ட்டையும், பயணச் சீட்டையும் வாயிலின் அருகே நின்றிருந்த காவலரிடம் காட்டியவளின் பார்வை பின்னேயே இருப்பதைக் கண்ட மாத்யூ அவளைப் புரிந்து வைத்திருந்ததற்கு அறிகுறியாக ''டார்லிங், சீக்கிரம் வா, பிளைட்டுக்கு நேரமாகிறது'' எனக் கூறி

அவளது கவனத்தை அன்றைய தினப்படி வேளையில் திசை திருப்பி, அதில் வெற்றியும் கண்டான் என்பது அவள் ''யா, யா, லெட்ஸ் கோ'' என்ற சொல்லுடன் முன்னே நடந்ததில் தெரிந்தது.

வெளிநாட்டு விமானப் பயணத்திற்கே உரிய சடங்குகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு, போர்டிங் கால் வரும் வரை காத்திருப்போர் இருக்கையில் அமர்ந்திருந்தனர் தம்பதியர் இருவரும்.

மாத்யூவின் அருகே அமர்ந்தவள், அவன் அணிந்திருந்த மெல்லிய கதர் சட்டையின் மென்மை கண் எரிச்சலுக்கு இதமான வருடலைக் கொடுக்க, அவன் தோளில் முகம் மறைத்து, கண் மூடிக் கொண்டாள்.

மாத்யூவிடம் கதர் சட்டையா? என எண்ணுவோருக்கு அதன் ஸ்தல ச்சே ச்சே சட்டை வரலாறு இதோ - மனோவுடன் ஷாப்பிங் சென்றபோது, அவளுக்கு அவன் வாங்கினான் என்றால் ஒரு கடைக்குள் போனால் அதில் செலவிட்ட இரண்டு மணி நேரத்தில் பாதியை மாத்யூவிற்கு உடை வாங்குவதில் செலவிட்ட மனோ, தன் தேர்வாய் எடுத்தவைகளை இதெல்லாம் அங்கேயே கிடைக்கும்? இங்கிருந்து வாங்கிக் கொண்டு போக வேண்டுமா? என மாத்யூ தட்டிக் கழிக்க, கடைசியில் இந்தியாவில் தயாரித்த வெளிநாடுகளில் அரிதாய் கிடைக்காத கதர் சட்டைகள் பலவற்றை அவனுக்கென வாங்கிக் குவித்திருந்தாள் மனோ.

தன் மேல் சாய்ந்திருந்த மனைவியைச் சுற்றி பாதுகாப்பாய் கை போட்டுக் கொண்ட மாத்யூ, தன் கையிலிருந்த ஒரு ஆங்கில நாவலில் மூழ்கினான்.



மூழ்கி முத்தெடுக்கும் வேளையில் சட்டையில் ஈரம் படிவதையும், தனக்கும் அவனுக்கும் இருக்கும் இடைவெளியை மனோ இன்னுமின்னும் அருகே வந்து குறைக்க முயல்வதையும் கண்டவன், புத்தகத்தை புக் மார்க் செய்து மூடி வைத்துவிட்டு மனோவின் முகத்தை நிமிர்த்தினான்.

நிமிர்ந்தவளின் கண்களில் ஈரத்தைக் கண்டதும், ''ஹோ பேபி, என்கிட்டே இனிமேல் அழமாட்டேன் என்று சத்தியம் பண்ணி இருக்கே இல்ல? அப்புறம் எதுக்கு அழற? நீ இப்படி அழுததால தான், நான் நீ மட்டும் இங்கே இருன்னு சொன்னேன். அதுக்கு உனக்கு ஒரே கோபம். இப்போ நீ திருப்பி அழுதா நான் என்ன செய்யட்டும்?'' என்றவன்,

''நீ அழுதா எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு பேபி'' என்றான் கனிந்த கண்களும், சிவந்த கன்னங்களுமாய்.

''ஹய்யோ என்னோட செல்ல மட்டி. எனக்கு அம்மா - அப்பாவை விட்டுட்டு வாது ரொம்பக் கஷ்டமாத்தான் இருக்கு. அதுக்காக உன்கிட்ட கொடுத்த சத்தியத்தையும் நான் மீறமாட்டேன். மீறி உன்னைக் கஷ்டப்படுத்த மாட்டேன்'' என்றாள் விரிந்த சிரிப்புடன்.

''அப்புறம் எதுக்கு இந்த கண்ணீர்?'' என்று அவள் கண்களைத் துடைத்து விட்டவனுக்கு என்ன பதில் சொல்வது? எனத் தவித்துப் போனாள் மனோ. இவனிடம் மட்டும் பொய்யே சொல்ல முடிவதில்லையே? அப்படியே சொன்னாலும் அடுத்த நொடியே மாட்டிக் கொண்டு விடுகிறோமே? ஏன் எதனால்? என மனோ காரணம் தேடிக் கொண்டிருக்கும்போதே அவர்களது விமானத்திற்கான அழைப்பு வந்து சேர்ந்தது.

"வா, வா போகலாம்" எனத் துடித்தவளை,

"You are an inefficient liar mani dear... especially to me" என்ற மாத்யூவிடம் சண்டை பிடிக்க, மனோவின் மனதில் சம்மன் இல்லாமலே ஆஜரானாள் நம்மூர் மாசியாத்தா.

"ஹோ, அப்போ நீ நல்ல பொய் சொல்லியா? அதுவும் என்கிட்ட? என்கிட்ட பொய் சொல்லுவியா நீ? அதெப்படி சொல்லலாம்?" என சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு நின்ற மனோவின் சிவந்த கண்களை லேசாய் வருடியவன்,

"நான் அவளைப் பத்தி சொன்ன கமெண்ட்டுக்கு பதில் கிடைக்கலைன்னா, அதை என்கிட்ட மாத்தி விடுறது என் ஸ்வீட்டியோட பெரும் பெரிய சாமர்த்தியங்களில் ஒன்றாகும்" என்றான் கண்கள் பளிச்சிட (பொய் சொல்லத் துப்பில்லாமல் பொய் சொல்லிவிட்டு அவனிடம் என்ன எகிறல் வேண்டிக்கிடக்கு? இப்படி ஏதாவது திரும்ப வாங்கினால் தான் இவளும் அடங்குவாள். பச்சைப் புள்ளை... அது தாங்க எங்க ஹீரோ பாவமில்ல!)

அவன் கூறிய விதத்தில் கண், மூக்கு, உதடு என எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சுருக்கி "அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை" என கோணிக் கொண்டாள் மனோ.

அவளது பாவத்தில் "அழகா இருக்கேடா பேபி" என்ற மாத்யூ ஒரு பறக்கும் முத்தத்தைப் பரிசாய் கொடுத்தான். கிண்டல் தான் செய்கிறான் என்று பார்த்தால் கண்களில் மோகம் பொங்கி வழிந்து விமான நிலையத்தை ஈரமாக்கிக் கொண்டிருந்தது. (இவனுக்குப் போய்... சப்போர்ட்



பண்ணினேன் பாருங்க... ஹய்யோ ஹய்யோ... என் நேரம்).

விமானத்தில் ஏறி, ஜன்னலோர சீட்டிற்கு அவனிடம் அல்பத் தனமாய் சண்டையிட்டு, அவன் கூறிய "உனக்கு ட்ராவல் சிக்நெஸ் ஜாஸ்திமா பேபி, நடைபாதை பக்கம் உட்கார்ந்தா தான் சரியா இருக்கும்" என்று அறிவுரையை அலட்சியம் செய்து, அவனை முந்திக் கொண்டு உள்ளே அமர்ந்தாள் மனோன்மணி.

சற்று நேரத்திலேயே மனோ அவனது தோள் வளைவிலும், மாட் அவனது புத்தகத்திலும் புதைந்துவிட, அரும் பெரும் கண்டுபிடிப்புகள் எதுமின்றி பயணம் ஒழுங்காகவே சென்றது.

நடுவிலிருந்த தடையை நீக்கிவிட்டு மாத்யூவை முடிந்த அளவு நெருங்கி அமர்ந்து கொண்ட மனோவின் தலையை வருடிக் கொடுத்து, அவளை உறங்க வைக்க முயன்ற மாட்-டின் கைகள் கண்ணை அடைந்தபோது, அங்கே நிற்காமல் நீர் ஓடிக் கொண்டே இருந்தது தெரிந்தது.

மனோவிற்குத் தன் திருமணத்தால் போற்றி வளர்த்த தாய் தந்தையை நோகடித்து விட்டோமே என்ற வருத்தமும், தாய் நாட்டை விட்டுப் பிரியும் சோகமும், அதை வெளிக்காட்டினால் கணவன் வருத்தப்படுவானே என்ற கவலையும் கண் வலியோடு சேர்ந்து கொள்ள, துடைக்கத் துடைக்க நிற்காமல் கண்ணீர் வந்து கொண்டே இருந்தது.

மாட்-டின் கைகள் கண்ணை எட்டியபோதே இனிமேலும் அவனிடம் மறைக்க முடியாது என்று

தோன்றிவிட, மேலும் அவன் தோளில் புதைந்து கொண்டாள்.

இந்த சமயம், ஒன்றுமே சொல்லாமல் நிமிர்த்திய முகத்தை மாட்ட் பார்த்துக் கொண்டே இருக்கவும் ''கண் வலிக்குது மாட்ட்'' என்றாள் மனோ ஒரு வழியாக. (ஹப்பா... என்ன பில்ட் அப்... தாங்கலை சாமி!ன்னு நீங்க சொல்ல வேண்டாம் நானே சொல்லிட்டேன்!)

''எவ்வளவு நேரமா?'' என்ற அவனது கேள்வியில் அடக்கிய சினம் கண்டிப்பாய் இருந்தது.

''நேத்து நைட்ல இருந்து. சரியாகிடும்ன்னு நினைச்சேன்.''

''ஏன் என்னிடம் சொல்லல?''

''சொன்னா... சொன்னா... பயணத்தை ரத்து செய்து விடுவாயோன்னு நினைத்தேன்.''

அதன் பின்னர் அவன் பேசவே இல்லை. விமானப் பணிப்பெண்ணை அழைத்து, மனோவின் நிலையைக் கூறி முதலுதவி பெட்டியில் கண் வலிக்கு மருந்து ஏதேனும் இருக்கிறதா என ஆராய்ந்தான். அவனே ஒரு மருத்துவன் என்பதால் அவனையே அதை கையாள அனுமதி கொடுத்த விமானப் பணிப்பெண்ணிடம் நன்றி கூறி, தேவையானதை எடுத்துக்கொண்டு மனைவியிடம் வந்தான்.

முதலுதவி பெட்டி கண் வலிக்கென்று தனியாக மாத்திரை ஏதுமில்லை என்பதால், வலி மாத்திரை ஒன்றையும், கொஞ்சம் காட்டனையும் எடுத்துக் கொண்டு வந்தவன், மனோவின் கலங்கிய முகத்தை மதிக்காமல் பஞ்சால் மெல்ல ஒற்றிக் கொடுத்தான்.



மீண்டும் விமானப் பணிப் பெண்ணை அழைத்து மனோவின் உணவை மட்டும் உடனே கொடுக்க முடியுமா என கேட்டான். ஏற்கனவே உணவு பரிமாறுவதில் ஈடுபட்டிருந்த பணியாட்கள் அவன் கேட்டதை மறுப்பின்றி கொண்டு வந்து கொடுத்தும், ''சரி மாட்ட்'' என சொல்லிக் கொண்டே இருந்த மனைவியை ஆராயாமல் அவனே உணவை எடுத்து ஊட்டவும் செய்தான்.

கண்களில் தோன்றிய எரிச்சலினாலோ, அல்லது கணவனின் கோபம் கலந்த கனிவினாலோ வழிந்த கண்ணீரையும், எரிந்த கண்ணையும் துடைக்க கையைக் கொண்டு போன மனோவின் கைகளைப் பட்டெனத் தட்டிவிட்டவன், பஞ்சால் மீண்டும் ஒற்றி எடுத்தான். உணவை அவளுக்குப் புகட்டி, மாத்திரையைக் கொடுத்து, சீட்டை சாய்த்துப் படுக்க வைக்க முயன்றபோது மனோவின் ட்ராவல் சிக்நெஸ் தன் வேலையை செவ்வனே தொடங்கியது.

''வாமிட் வருது மாட்ட்'' என முகம் கலங்கக் கூறியவளை எழுப்பி, ரெஸ்ட் ரூம் அழைத்துச் சென்றவன், ஒரே ஒரு ஆள் நுழையக் கூடிய அந்த ரெஸ்ட் ரூமில் தானும் அவளுடன் நுழைந்தான்.

ஐந்து நிமிடம் முன்னர் உண்ட உணவு அனைத்தையும் மாத்திரையுடன் சேர்த்து ஒட்டு மொத்தமாய் வாந்தி செய்தவளின் தலையைப் பிடித்துக் கொண்டு அவள் வயிற்றிலிருக்கும் குடல் வெளிவரத் துடித்த நொடிக்கு முன்னர் வரை நின்றான். குடல் வெளியேறி விடுவேன் என்று பயமுறுத்திய நொடியில் ''போதும் மாணி'' என அவளை நிமிர்த்தி, தண்ணீர் அடித்து அவள்

முகத்தைத் துடைத்துவிட்டு, facial tissues சிலவற்றை எடுத்து அவள் முகத்தின் ஈரத்தை ஒற்றி எடுத்தான்.

அதன் பின்னர் வயிற்றில் ஏதும் தங்காமல் அவளை வாட்டி எடுத்தது ஒரு புறம் என்றால், உணவில்லாமல் மாத்திரை உட்கொள்ள முடியாமல் கண் வலி அதிகரித்துக் கொண்டே போனது. தொடர்ந்த வாந்தியிலும், கண் வலியிலும் சுருண்டதை விட கணவனின் இறுக்கமான முகத்தில் தளர்ந்து போனாள் மனோன்மணி.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல் ''கண் ரொம்ப வலிக்குது மாட்ட். அதைவிட நீ என்கிட்டே பேசாம இருக்கும்போது நெஞ்சம் வலிக்குது'' நெஞ்சில் கையை வைத்து, மிகப் பரிதாபமான முழி ஒன்றை கண்ணில் கொண்டு வந்து அவனைப் பார்த்தாள் மனோ.

அவளது வலி அவனைத் தாக்கியதோ, ''இப்போ ஒண்ணும் பண்ண முடியாது மானி டியர். முன்னாடியே சொல்லியிருந்தா ட்ரிப் கான்செல் பண்ணி இருக்கலாம். லண்டன் போனதும் பார்க்கலாம்'' என்றவன், சுருங்கிப் போயிருந்த அவளது வலது கண்ணில் லேசாய் முத்தம் வைத்தான்.

''உனக்கும் வந்திடும்'' என்றவள், ''என்னை பப்ளிக்ல வச்சு கிஸ் பண்ணக்கூடாது என்று உனக்கு சொல்லி இருக்கேன் இல்ல? நீயும் பண்ண மாட்டேன்னு சொன்னே தானே?'' என அதில் ஒன்றை பிடித்தாள். (இத்தனை செல்லம் கொடுத்தால் அவள் தலைக்கு மேல் ஏறிக் கொண்டு ஆடாமல் என்ன செய்வாள்? இவனைச் சொல்லணும்! ஹ்க்கும்).



''பஞ்சைவிட, என் உதடு மெருதுவா இல்லையா பேபி?'' என அவன் மென்மையாய் கேட்கவும், கணவன் கொஞ்சம் இயல்பிற்கு வந்து விட்டான் என்ற எண்ணம் தோன்ற, ''இருக்குத் தான்'' என்றாள் உள்ளே போன குரலில். (அடிங்க!) உடனே ''ஆனா, பொது இடத்தில இல்ல'' என அத்துடன் ஒன்றை சேர்த்துக் கொண்டாள்.

அவளது வேதனையை சற்றும் குறைக்க முடியாமல் போய் விட்ட நிலையில், அவளைப் பட்டினியாய் இருக்க விடாமல் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஜூஸ் மற்றும் க்ளுகோஸ் கலந்த தண்ணீரை மெது மெதுவாய் புகட்டிக் கொண்டே இருந்தான் மாத்யூ.

''உனக்கு உடம்பு சரியில்லாமல் இருக்கும்போது பயணம் வேண்டாம் என்று சொல்றதுக்கு இதுதான் காரணம். பயணம் செய்யும்போது உன்னால எதையும் சாப்பிட முடியாது. அப்படிச் சாப்பிட முடியலை என்றால் உடம்பில் சத்திருக்காது. ஏற்கனவே சரியில்லாத உடம்பு மேலும் சத்தில்லாமல் துவண்டு தான் போகும். உனக்குச் சொன்னாப் புரியவே மாட்டேன்கிறது மானி!'' என்றவனின் வாதத்திலும், அக்கறையிலும், தன்னைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கிறான் என்ற வியப்பிலும், நடைமுறையில் கண்டிராத வெறும் வாய் வார்த்தையை கேட்ட தனது ட்ராவல் சிக்நெஸ் பற்றி எத்தனை சரியாய் யூகித்து வைத்திருக்கிறான் என்ற மகிழ்ச்சியிலும் மெய் சிலிர்த்தது. (சும்மா சும்மா இவளுக்கு சிலிர்த்துக் கொண்டே இருக்கில்ல? ஒரு வேலை கண் வலியோட சேர்த்து குளிர் ஜுரமும் வந்துடுச்சோ? இந்த மாட்ட் பையன் வைக்கிற ஐஸ் வேற தாங்க முடியல. அதுல கூட வந்திருக்கலாம்.!)

# 4

லண்டன் விமான நிலையத்தில் விமானம் தரை இறங்குவதற்கு இரண்டு மணி நேரக் காலத் தாமத மானது. இரண்டு மணி நேரக் காலத் தாமதம் என்று கேட்ட மனோ கலங்கினாளோ இல்லையோ, மாட்ட் கலங்கிடப் போனான்.

அவனது முகத்திலிருந்த கவலை ரேகைகளை உணர்ந்த மனோ ''என்னாச்சு மாட்ட்?'' ஏன் கவலையா இருக்கே? நம்மளோட அடுத்த பிளைட்டுக்கு டைம் இருக்கும் மாட்ட். ஒரு மணி நேரம் கண்டிப்பா இருக்கும். அப்புறம் எதுக்கு கவலையா இருக்கே?'' என்றாள்.

''பேபி, அடுத்த பிளைட்டுக்கு போறதுக்கு முன்னாடி உன்னோட கண் வலிக்கு ஏதாவது பண்ணனும். ஏர்போர்ட்ல டாக்டர்ஸ் யாரையாவது பார்க்கலாம்ன்னு நினைச்சேன்'' என்றவனின் வலது கைக்குள் தன் இடது கையை நுழைத்துக் கொண்டு, ''பரவாயில்லை மாட்ட். ஒரு மணி நேர பயணத்தில வீட்டுக்குப் போய்டலாம். அப்புறம் என்ன? வீட்டில போய் நீயே எனக்கு வைத்தியம் பார்த்துடு'' எனக் கூறியவள், ''நான் தூங்கப் போறேன். சும்மா சும்மா கவலைப் படாம பேசாம புக்கைப் படி'' என்று விட்டு கண்ணை மூடிக்கொண்டாள்.

''இல்ல மானி'' என அவன் ஏதோ பேச ஆரம்பிக்கும் முன்னர், அவன் கையை எடுத்து தன் தலைக்குக்



கொண்டு சென்று ''வருடிக் கொடுத்துட்டே இரு மாட்ட். எனக்கு அப்போ தான் தூக்கம் வருது'' என அவன் பேசியதைக் காதிலேயே வாங்காத பாவனையில் தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

''உலகமே அழிஞ்சாலும் உனக்கு உன் வேலை தான் முக்கியம்'' என சலித்துக் கொண்ட மாத்யூவும் அவள் கூறியதைச் செய்ய மறுக்கவில்லை.

''அச்சோ, பிளைட்ல போகும் உலகம் அழியறதைப் பத்திப் பேசாதே மாட்ட் ப்ளீஸ்... எனக்குப் பயமா இருக்கு. நான் செத்துப் போய்ட்டா நீ வேற கல்யாணம் பண்ணிப்பே இல்லை... அதை என்னோட ஆவி கூட தாங்காது'' என கோழிக்குஞ்சாய் அவனிடம் ஒண்டிய வளை ''you are sometimes un-manageable dear'' என்றான் கணவன். (''உன்னைக் கட்டி மேய்க்கவே முடியாது கழுதை'' அப்படின்னு தூய தமிழ்ல சொல்லி இருக்கலாம்... இங்கிலீஷ்ல ரொம்ப டிசன்ட்டா வந்துடுச்சோ?)

லண்டன் விமான நிலையத்தில் அவர்கள் தரை இறங்கியபோது மேலும் அரை மணி நேரத் தாமதம் நிகழ்ந்திருந்தது. மாத்யூ தன் நிதானத்தைக் கடைபிடிக்க, மனோ தன் படபடத்தை அங்கேயும் அரங்கேற்றினாள்.

''ஹோ என்ன மாட்ட் மசமசன்னு நிக்கிற, சீக்கிரம் நட, பிளைட்டுக்கு டைம் ஆச்சு'' என பரபர பிரகஸ்பதியாக பறந்தவளைக் கைப்பிடித்து நிறுத்தியவன், ''கண் வலிக்கிறதா?'' என்றான் அவளது கண்களை ஆழ்ந்து நோக்கியவாறே.

அவனது கூர் பார்வையைத் தாங்க முடியாமல் தலை குனிந்தவளால் அவனிடம் பொய் புகல முடியவில்லை.

''ஹம்ம் ஆமா'' என்று பதிலுரைத்தவள், பேசத் தொடங்கியவனை சட்டென இடைமறித்து ''ஆனா, நாம வீட்டுக்குப் போய்டலாம். பிளைட் கான்செல் பண்ணிட்டு இங்க இருக்க வேண்டாம்'' எனத் தொடர்ந்து நவின்றாள். அவனது முகம் இன்னமும் ஒத்துக் கொள்ளாத பாவனையைக் காட்டியவாறே இருக்கவும், ''நீ என் என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக மாட்டேங்கிற? என்கிட்ட எதையும் மறைக்கிறியா? எனக்கு வீட்டுக்குப் போகணும். நான் இங்க இருக்க மாட்டேன்'' என அழுத்தம் திருத்தமாக மொழிந்து விட்டு முன்னே நடக்க முயன்றாள். (எதோட எதை? சரியான லூசு. இதுக்கு வாங்குவா பாருங்க... அது தான் கிளாஸ்!)

முயன்றாள் தான். முயல மட்டும் தான் செய்தாள். கணவனின் பிடி மிக மிக அழுத்தமாய் இருந்தபோது எங்கிருந்து நகர்வது? வலியால் சுருங்கிய கண்ணை விரித்து அவனைப் பார்த்தவளுக்குப் பதில் ஒன்றும் கூறாமல் தன் பிடியிலேயே அடுத்த விமானம் வரைக் கூட்டிச் சென்றவன், அதில் அவளை ஜன்னல் ஓரத்தில் அமர வைத்துவிட்டு தானும் அமரும் வரை ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அதன் பின்னரும் அவனது மௌனம் தொடர்ந்து கொண்டே இருந்தது. (சூப்பர் அப்பு. மானி உனக்கு நல்லா வேணும், நல்லா வேணும்!)

அடுத்த ஒரு மணி நேரப் பயணத்திலும் மாத்யூ தன் திருவாயைத் திறந்து ஒரு முத்தைக்கூட உதிர்க்கவில்லை. (அவனோட வாய் சிப்பி மாதிரி அழுக்கா இருந்ததான்னு எடக்கு மடக்கு கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது!)



அவளது எத்தனையோ ''சாரி மாட்ட''களை விழுங்கி ஏப்பம் விட்டவன், (செம பசி போல!) விமானத்தில் கொடுத்த கண் உறைகளை மாட்டிக் கொண்டு சீட்டில் சாய்ந்து கொண்டான். அவனது இந்த செயலில் கெஞ்சல்கள் எல்லாம் பறக்க, அவனது கண்களை மூடியிருந்த உறையை வேகமாக விலக்கிய அவனது மனைவி ''நீ ரொம்ப ஓவர்ரா பண்றே. அடி பிச்சிடுவேன் ஆமா'' என வேகமாக நவின்றது தூய தமிழில்.

அவள் பிடுங்கிய உறையை நிதானமாக அவள் கையிலிருந்து வாங்கியவன், அவள் இரண்டு கைகளையும் ஒரு கையில் சேர்த்துப் பிடித்துக் கொண்டு தன் மௌனத்தையும், அதன் சார்ந்த தூக்கத்தையும் தொடர்ந்தவனை என்ன செய்வது என்று தெரியாமல் ''பே'' என்று விழித்துக் கொண்டிருந்தது நம்ம ஹீரோயின் எனப்படும் பரதேவதை.

ஒரு மணி நேரப் பயணத்தில் ஜெனீவா சென்றடைந்தவர்கள், விமான நிலைய பரிசோதனைகள் முடிந்து அதை விட்டு வெளியே வர மேலும் ஒரு மணி நேரம் பிடித்தது. அது வரையிலும் கூட மாத்யூ மனோவிடம் பேசவில்லை.

ஒரு வார்த்தை. அதுவும் கோபமாக இல்லை. ஏதோ நினைவில் தன்னிடம் மறைக்கிறான் என்று சொன்னதற்கு எவ்வளவு கோபம்? ஆமாம் கோபம் தான் என்று மனோன்மணிக்கு வெகு துல்லியமாகப் புரிந்தது. கோபம் என்று ஒன்று வருவது மிக அபூர்வம் என்றாலும் அது வந்து விட்டால் முகத்தைச் சுளிக்காமல், குரலை உயர்த்தாமல், உறுத்து விழிக்காமல் மிகக் கச்சிதமாய்

காட்டும் அவனது பாங்கை அப்போது வியக்காமல் இருக்க முடியவில்லை மனோவால். (நீ வியந்துட்டே இரு மக்கா, அவன் டாக்ஸி பிடிச்சப் போயிட்டே இருக்கான்!'')

டாக்ஸியில் அவர்களது பெட்டிகளை ஏற்றுக் கொண்டிருந்தவன், அந்த வேலை முடிந்ததும் அவனையே பார்த்துக் கொண்டிருந்த மனோவை உள்ளே ஏற்றி, அவர்களது அபார்ட்மெண்ட் முகவரியைக் கூறி அங்கே போகச் சொன்னான். (இவனாவது மனோவை விட்டுப் போவதாவது?!)

அதே அபார்ட்மெண்ட் வளாகத்தில் தான் அவனும் வசித்திருந்தான், அதாவது அவர்களது திருமணத்திற்கு முன்னால் மாட்ட்-டும் மனோவும் ஒரே அபார்ட்மெண்ட் வளாகத்தில் தான் இருந்தனர். அவன் அவனது சொந்த வீட்டில். பேங்க்கிற்கு அந்த சொத்தில் பெரும் பங்கு உண்டு. முக்கால் பாகத்திற்கும் மேலாக! (அப்புறம் எதுக்கு சொந்த வீடுன்னு சொன்னேன்னு கேட்கக் கூடாது. உலக நியதி மக்களே! உலக நியதி! அதைத் தான் நானும் சொல்றேன்). மனோ வாடகை வீட்டில் அதுவும் மூன்று நண்பிகளுடன்.

ஆறாவது மாடியில் இருந்த அவனது வீட்டிற்குச் செல்லும் வரை அவனை எப்படி சமாதானப்படுத்துவது என்ற எண்ணத்திலேயே உழன்று கொண்டிருந்த மனோவின் சிந்தனையை மாட்ட்-டும் கலைக்கவில்லை. (எப்போதாவது தான் யோசிக்கிற. அதையும் ஏன் கெடுப்பானேன்னு நினைச்சிருப்பானா இருக்கும்!)

தன் சாவியைக் கொண்டு வீட்டைத் திறந்தவன், வலியும் யோசனையும் சரி பாதி நிறைந்த கண்களுடன்



நின்றிருந்த மனோவை ''இங்கேயே இரு'' என்றுவிட்டு அவன் மட்டும் உள்ளே சென்று பொருட்கள் அனைத்தையும் வைத்துவிட்டு வந்தான். அவன் கூறியதை மீறவும் முடியாமல் (செம பதி பக்தி தான்!) ஆசையை அடக்கவும் முடியாமல் தலையை மட்டும் உள்ளே நீட்டி அங்குமிங்கும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள் மனோ.

கொண்டு வந்த பொருட்கள் அனைத்தையும் உள்ளே வைத்துவிட்டு வந்தவன், உள்ளே நீட்டியிருந்த அவளது முகத்தில் கை வைத்து லேசாக வெளியே தள்ளியவாறே வெளியே வந்தான்.

''என்ன மாட்ட்? ஏன் வெளியே நிக்கச் சொன்னே?'' என ஆர்வம் கொப்பளிக்க கேட்டவளிடம் பதிலேதும் கூறாமல் அவளைப் பூவென கையில் ஏந்தினான். ''ஹா'' என மனோ கண்ணை விரிக்க, தூக்கிய அவளோடு உள்ளே சென்ற மாத்யூ, தன் முதுகாலேயே கதவை மூடினான். மூடிய வேகத்தில் அவனது இதழ்கள் அவளது நெற்றியில் பதிந்தன. அழகான ''Welcome home my sweet heart'' என்ற அழைப்பு வாசகத்திற்குப் பின்னர்!

அதுவரை கண்களில் கேள்வியுடன் அவன் கைகளில் தவழ்ந்தவள், அவனது அந்த வரவேற்பில் கண்களில் காதலை நிறைத்தாள்.

கைகள் எனும் மாலையை அவன் கழுத்தில் இட்டவள் அவனைத் தன் பால் இழுத்து ''இருந்தாலும் இத்தனை கோபம் ஆகாது மகனே'' என்றாள் செல்லமாக.

அதற்கு ஒன்றும் சொல்லாமல், அவளைக் கைகளில் ஏந்தியவாறே வீட்டைச் சுற்றிக் காட்டியவன் பாத்ரூமை

கூட விடவில்லை. அந்த வீட்டிற்கு ஏற்கனவே வந்திருக்கிறாள் தான் என்றாலும் மாத்யூவின் மனைவியாய் அந்த வீட்டிற்குள் வலம் வருவது இது தான் முதல் முறை!

கணவனின் கைகளில் தவழ்ந்த நேரத்திலும், எதற்காக எல்லா அறைகளையும் (குளியலறை உட்பட) தன்னிடம் காட்டுகிறான் என்ற சந்தேகம் மனோவிற்கு வலுத்தது. ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளை ஏந்திய நிலையிலேயே சோபாவில் அமர்ந்தவன், அவளை வாகாக தன் மடியில் இருத்தியும் கொண்டான்.

அவனது கழுத்தடியில் பதிந்திருந்த மனோவின் முகத்தை நிமிர்த்தியவன், ''உன்கிட்ட இருந்து நான் எதையும் மறைக்கலை ஹனி. உன்கிட்ட மறைக்க இந்த வீட்டில எதுவுமில்லைன்னு இப்போ காண்பிச்சாச்சு, என்கிட்டயும் மறைக்கிற மாதிரி எதுவுமில்லைன்னு எப்படிக் காட்டுறது?'' என்று அவள் கண்களைப் பார்த்து வினவியபோது மனோவால் இமைக்கவே முடியவில்லை என்றபோது வார்த்தைகளுக்கு அங்கு பஞ்சமாகிப் போனது.

வார்த்தைகளை உதிர்ப்பதற்கு முன்னர் சற்று யோசித்திருக்க வேண்டுமோ என்று இப்போது எண்ணியவளுக்கு, எல்லாரிடமும் தெளிவான சிந்தனை, நிலையான முடிவுகள், மாறாத சொற்கள் என்றிருக்கும் தான் ஏன் இவனிடம் மட்டும் தன்னை மறந்து விடுகிறோம் என ஆச்சரியமாக இருந்தது. எல்லாரிடமும் பேசும்போது / பழகும்போது இருக்கும் கவனமும் நிதான



மும் இவனிடம் தொலைந்து போய் விடுகிறதோ? பிறரிடம் இருக்கும் இந்தக் கவனம் இவனிடம் இல்லாமல் இருப்பது காதல் தானே (அடிப்பாவி! காதல் கல்யாணம் என்று நான் இந்த நாளு அப்டேட்டா சொல்லிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா இப்பத்தான் காதல் தானே-ன்னு கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கே!)

தான் உணர்ந்ததை சில பல முத்தங்கள் மற்றும் கட்டிப் பிடிப்புகளின் ஊடே அவனிடமும் உரைத்தாள். ஒரு மெல்லிய புன்னகையுடனே அவளைப் பார்த்திருந்தவன், சும்மா பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கவில்லை.

அவளது கண்களில் மருந்திட்டு, கண்களை மூடிக் கொண்டிருக்குமாறு பணித்து, மூடியிருந்த கண்களின் வழியே வழிந்த மருந்தையும், கண்ணீரையும் மென்மையாக துடைத்து விட்டவன், அவனிடம் மட்டும் வெளிப்படும் தன் பொறுமையின்மையை பொறுமையில்லாமலேயே எடுத்துக் கூறிக் கொண்டிருந்த மனைவியை விரிந்த சிரிப்புடன் நோக்கியிருந்தான்.

அவனது கோபத்தைப் போக்கும் வகையில் தன் எண்ணங்கள் அனைத்தையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்த மனோன்மணிக்குப் பசித்தது. (அப்புறம் இவ்வளவு பேசினால் பசிக்கத்தான் செய்யும்.)

''பசிக்குது மாட்ட். என்ன இருக்க சாப்பிட?'' என்றவளிடம் (அவன் என்ன ஹோட்டலா வச்சிருக்கான்? என்ன இருக்காம்?) ''என்ன வேணும்?'' என்றான் மாத்யூ (உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடா மாத்யூ!)

"நம்ம ரசம் சாதமும், கருணைக் கிழங்கு வறுவலும், கேட்கிறதைப் பாரு" என அவன் மூக்கோடு மூக்கு வைத்து உரசி விளையாடினான் அந்த செந்தமிழ் தேன் மொழியாள். (நீ என் பேச மாட்டே!)

"எனக்குப் பாஸ்தா சாப்பிடணும் போல இருக்கு. செய்யலாமா?" என்றவளிடம், "நான் பண்ணித் தரேன்" எனச் சொல்லி எழுந்தான். "நானும் வரேன்" எனக் கூறி அவனுடன் வந்தவள் அவனுடன் இணைந்து இரு வருக்கும் பிடித்தமான உணவை செவ்வனே செய்து முடித்தாள்.

உணவு முடிந்து, மாத்திரை உண்டு கண்கள் சொக்க சோபாவிலேயே கண்ணயர்ந்து போயிருந்த மனோவை அவர்களது படுக்கை அறைக்குக் கூட்டிச் சென்றவன் அவளருகே படுத்துக் கொண்டு அவள் தலையை வருடிக் கொடுத்தான்.

"நீயும் தூங்கு" என மனோ அவனை இழுக்க, "உன்னைத் தூங்க வச்சுட்டு நான் தூங்குறேன்" என்றவன் வருடலை நிறுத்தவே இல்லை.

காலையில் துயில் களைந்து எழுந்த மனோவிற்கு கண்ணிலிருந்த எரிச்சல் வெகுவாகக் குறைந்திருந்தது. அதற்குக் காரணமான கணவனின் கன்னத்தில் குறைந்திருந்த எரிச்சலுக்கும், நிறைந்திருந்த மனதிற்கும் ஈடாக ஒரு அழுத்தமான முத்தத்தைப் பதித்தவள் எழுந்து குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

குளித்து முடித்து வெளியே வந்தவள் தன் பெட்டியிலிருந்து ஆண்டாள் - ரங்கமன்னார் அருள் பாலித்த படம் ஒன்றை எடுத்தவள், அந்த இரு படுக்கையறை



கொண்ட அபார்ட்மெண்ட்டில் தனது ஆராய்ச்சி மற்றும் கணினி வேலைகளுக்கு என மாத்யூ ஒதுக்கி வைத்திருந்த அலுவலக அறையில் இருந்த கப்போர்டு ஒன்றில் இடம் ஒதுக்கி அதை வைத்தாள்.

ஆண்டாள் கோவிலில் வாங்கி வந்த குங்குமப் பொட்டலத்தை புதிதாய் தெரிந்த ஒரு தட்டில் வைத்து அங்கே வைத்தாள். படத்தின் முன்னே கை கூப்பி நின்றவள் "வாழ்க்கையில் எந்தவிதமான பிரச்னையும் வரக்கூடாது. தாய் தந்தையின் கோபம் குறைய வேண்டும்" என மனதார வேண்டினாள். பிரச்சனை என்பது நாமாய் வரவைத்துக் கொள்வது. ஒரு விஷயம் நல்லதாகவோ கெட்டதாகவோ முடிவது நமது எண்ணத்தினால் தான். அல்லவா?

கோதையிடம் தன் பயண விவரம் முழுதையும் கூறி முடித்தவள், ஆண்டாளின் பிரசாதமான குங்குமத்தை எடுத்து தாலியில் இட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். தாலிக் கொடியில் வைத்த கையோடு நெற்றி வகிட்டிலும் இட்டுக் கொண்டவள், குளிர் சாதனப் பெட்டியிலிருந்து பாலை எடுத்து தேநீர் தயாரித்தாள்.

தயாரித்த தேநீரை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றவள் அங்கிருந்த சாய்வு நாற்காலிகளுள் ஒன்றில் சாய்ந்து அமர்ந்து, சுமாராய் இருந்தாலும் தான் தயாரித்தது என்ற ஒரே காரணத்திற்காக அதை சுவைத்து அருந்திக் கொண்டிருந்தாள்.

அவள் பாதி தேநீரை அருந்தி முடித்திருந்த வேளையில் அவளைப் பின்னாலிருந்து அணைத்த மாத்யூ, அவள் உச்சியில் தன் தாடையைப் பதித்து "குட் மார்னிங் மானி டியர்" என்றான்.

அமர்ந்திருந்த நிலையிலேயே ''குட் மார்னிங் மாட்ட்'' என்றவளைத் திருப்பி கண்களை ஆராய்ந்து ஓரளவு திருப்தியுற்றவனிடம் ''சாய் லாட்டே வேணுமா?'' என வினவினாள் மனைவி.

''ம்ம் கண்டிப்பா'' என்றவன் அவள் எழவும், ''உன் கப்பிலிருந்து கொடுத்தால்!'' என்றான் குறும்புடன்.

அடுத்த அரை மணி நேரம், அந்த அரைக் கப் தேநீர் யாரது வாய்க்குள் யார் கையால் சென்றது என்பதை பிரித்தறிய எனக்கு புத்தி பத்தவில்லை!

# 5

சுமாரான தேநீருடன் இனிமையாக ஆரம்பித்த காலை வேளை, அதன் பின்னரும் இனிமையாகவே கழிந்தது. திருமணத்திற்கு என இரண்டு வார விடுமுறை எடுத்திருந்த இருவரும், ஒரே வாரத்தில் நாடு திரும்பி யிருந்தால் உடனே வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படவில்லை.

காலை உணவை சிற்சில கொஞ்சல்களுடன் முடித் தவர்கள், வீட்டை மனோவின் வரவிற்கு ஏற்ப ஒழுங்கு படுத்துவதில் ஈடுபட்டனர். ஊருக்குக் கொண்டு சென்ற பொருட்களை மாத்யூ அடுக்க ஆரம்பித்த வேளை யில், கேமரா அவனது கண்ணில் பட்டு கருத்தைக் கவர்ந்தது.



அதை எடுத்துக் கொண்டு அலுவல் அறைக்குள் சென்றவன், இந்தியாவில் எடுத்த புகைப் படங்களை கணினிக்கு மாற்றி, அவற்றை ரசிக்கத் தொடங்கினான். அவர்கள் இந்தியாவில் இறங்கிய தினத்தில் தொடங்கி, திருமணம், ஆண்டாள் கோவில், மனோவின் வீடு, அவர்கள் செய்த ஷாப்பிங் என எல்லாவற்றையும் கேம ராவின் வழியே சிறை பிடித்திருந்த மாத்யூவிற்கு அந்த இனிமையான தருணங்களை அசை போடுவதில் பெரும் இன்பம் கிடைத்தது.

சமையலறை பொருட்களை தன் ரசனை மற்றும் வசதிக்கு ஏற்றபடி அடுக்கி வைத்துக் கொண்டிருந்த மனோ, ரொம்ப நேரமாக கணவனிடமிருந்து எந்த சீண்டலும் வராமல் போகவே, என்ன விஷயம் என எட்டிப் பார்த்தாள். கணினியில் தலையை விட்டிருந்தவனை நெருங்கி, அவனைத் தோளோடு சேர்த்து அணைத் தவள், அவன் முதுகில் ஊஞ்சலாடினாள்.

சென்னையில் அவர்கள் ஷாப்பிங் செய்த போது, பட்டுப் புடவை கடையில் ரோஜா வண்ணப் பட்டு ஒன்றை தன் மேல் போட்டு அவள் அழகு பார்த்த அழகை வெகு இயல்பாய் தன் கேமராவில் படம் பிடித்திருந்தான் மாத்யூ. அந்தப் புகைப்படத்தை, அவள் கண்களில் மிளிர்ந்த ஆர்வத்தை, சேலைக்கு ஏற்றபடி ஜொலித்த கன்னங்களை என ஒவ்வொன்றாக அதை ரசித்துக் கொண்டிருந்தான் மாத்யூ.

''என்ன ஆராய்ச்சி?'' என்ற அவளது கேள்வியில், ''நீ அழகா இல்லை, அந்தப் புடவை அழகான்னு பார்க் கிறேன்'' என்றான் மாத்யூ. (உனக்கு இன்னைக்கு

நாக்குல சனி இல்ல, உடம்பு முழுக்க சனி தான் பிடிச்சிருக்கு...)

"ஹ்ம்ம். யாரு அழகு?" என அவன் கழுத்தில் தலையை நுழைத்துக் கொண்டு மனோ கொஞ்ச,

"புடவை தான்" எனக் கூறி, மனைவியின் கையால் வேகமான அடி ஒன்றையும், கூடவே அதி வேகமான தள்ளு ஒன்றையும் பரிசாகப் பெற்றவன், நேராக லேப்டாப்பின் திரையின் மீது முட்டிக் கொண்டான்.

விழுந்த வேகத்திற்கு ஏற்ப "மானி" என்ற அழைப்பும் வேகமாக வந்து சேர்ந்தது. ஆஜானுபாகுவாய் இருந்த மாத்யூ நிமிர்ந்த வேகத்தில், அவனுள் அடங்கும் அளவு பாதியாய் இருந்த மனோன்மணி வேகமாகப் பின்னே தள்ளப்பட்டாள்.

அழைப்பிலும், சட்டென விலக்கித் தள்ளப்பட்ட விதத்திலும் நிஜமாகவே மிரண்டு போனாள் மனோன்மணி. பதிலேதும் பேசாமல் சட்டெனத் திரும்பி ஹாலிற்கு விரைந்தவள், சோபாவில் விழுந்தாள்.

அவனது அந்த சிறு அதட்டலில் சுருசுருவென கண்ணைக் கரித்துக் கொண்டு வந்துவிட்டது மனோவிற்கு. அவன் மௌனக்கோபம் காட்டியபோதே காயப்பட்டவள், இப்போது நேரடியாகவே வெளிப்பட்ட அதட்டலில் சட்டென காயப்பட்டுப் போனாள். (கையை நீட்டி அடிச்ச மாதிரி நீ போடற சீன் இருக்கே?)

அடுத்து ஐந்து நிமிடங்கள் மாத்யூ வந்து சேராமல் இருக்கவே, கரித்தக் கண்களில் அருவி ஓட ஆரம்பித்தது. கண்ணீர் ஓடி கன்னத்தை நனைத்தபோது "இதென்ன அழுகை? இவ்வளவு பலகீனமாய் எப்போது



ஆனோம்?" என்ற கேள்வி சட்டென தோன்றி, கண்களைத் துடைக்கச் செய்தது. ஒரு சின்ன அதட்டல் தன்னை இத்தனை சோர்வுறச் செய்யுமா என்ன? என்று மேலும் தொடர்ந்த எண்ணத்துடன் சமையலறைப் பக்கம் சென்றாள்.

அவளது எண்ணங்களைத் தொடர முடியாமல் மாட்ட் சமையலறையில் நின்றிருந்தான். அவன் மௌனக் கோபம் கொண்டபோது தன் மேல் தப்பு என்று வருந்திய மனோன்மணிக்கு இப்போது தான் தவறு செய்யவில்லை என்ற எண்ணம் அழுத்தமாகத் தோன்றியது.

தன் கோபம் நியாயம் என்று தோன்றிய பின்னர் கணவனிடம் கெஞ்சல் வார்த்தைகளை உபயோகிக்க விரும்பாத மனோ, அவனைக் கண்டு கொள்ளாமல் தன் வேலையில் ஈடுபடத் தொடங்கினாள். தன் தப்பு என்று உணரும்போது வெளிப்படும் உருகல், இப்போது அவன் தப்பு என்று கணித்த நேரத்தில் கோபமாய் உருமாறி இருந்தது.

மனைவியின் மனநிலையை உணர்ந்தவன் போல் அவளைக் கண்களால் தொடர்வதை மட்டும் செய்து கொண்டிருந்த மாத்யூ, அவளைச் சமாதானம் செய்யப் போய் பிரச்னை பெருசாகி விடுமோ என்று லேசாக பின்னடைந்தான் (அடி தாங்க முடியாதுன்னு டிசன்ட்டா சொல்றது தானே?!)

மாத்யூ நின்றிருந்த இடத்தில் இருந்தால் தன்னையும் மீறி அவனிடம் பேசிவிடுவோமோ? (பேசினா தான் என்னவாம்?) என்ற பயத்தில், வேக வேகமாக செய்து கொண்டிருந்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்

மனோ. கொண்டு வந்த பொருட்களில் கிரைண்டர்
மற்றும் மிக்ஸியை அதனதன் பெட்டியிலிருந்து
வெளியே எடுத்தவள், அவற்றுக்கென ஒதுக்கி இருந்த
இடத்தில் சின்ன தடுக்கு (அது தான் mat. இதையும்
மாட்ன்னு சொல்லி, என் ஹீரோ பேரையும் மாட்ன்னு
சொன்னா நல்லா இருக்காதில்ல. அதுதான் தூய(!)
தமிழ் தடுக்கு) ஒன்றை போட்டு, அவற்றைத் தூக்க
முயன்றாள்.

சமையலறை மேஜை மேல் சாய்ந்திருந்த மாட்ட்
அவள் மிக்ஸியை எடுத்து வைக்கும்போது பேசாமல்
இருந்தான் என்றாலும் கிரைண்டரைத் தூக்க ஆயத்தப்
பட்டபோது ''உன்னால தூக்க முடியாது பேபி. நான்
எடுத்து வைக்கிறேன்'' என உதவிக்கு வந்தான்.

அவனது உதவியை ஒரு உஷ்ணப் பார்வையால்
ஒதுக்கியவள், தானே அந்த டேபிள் டாப் கிரைண்டரைத்
தூக்க முயன்றாள்.

தான் சொல்வதை மனோ கேட்கப் போவதில்லை
என்று தெரிந்த பின்னர் அவளை நெருங்கிய மாத்யூ.
பறவை போல் அவள் மேல் படர்ந்து, அவள் கைகளு
டனே தானும் கை கொடுத்து கிரைண்டரைத் தூக்கி
னான்.

அவன் இப்படிச் செய்வான் என்று மனோ எதிர்பார்த்
திராததால், ஒரு கணம் திகைத்து, உடனே கோபமும்
கொண்டாள். கோபம் கொண்ட முகத்தை விருட்டெனத்
திருப்பிய போது, குனிந்திருந்த அவன் முகத்தோடு
நேருக்கு நேராக முட்டிக் கொண்டவள், ''நீ என்ன
பெரிய இவனா? லேசா தள்ளி விட்டதுக்கு என்னைய



கீழ தள்ளி விடுவியா? நான் அழகில்லைன்னு சொன்
னது மட்டுமில்லாம தள்ளி வேற விடுறே! ம்ம்ம்!
திமிராடா உனக்கு?'' எனப் பொரிந்து தள்ளினாள்.

(அவள் கூறிய வசனம் ஆங்கிலமாக இருக்கும் என்று
நினைத்தீர்களா? எப்பவுமே திட்டறதுக்கு தமிழ்தாங்க
வசதி!)

''ஹோல்ட் ஆன், ஹோல்ட் ஆன்'' என்று அவளது
கத்தலை ஒதுக்கியவன், கையிலிருந்த பொருளை
ஒழுங்கான இடத்தில் வைத்தான். (தமிழ் தெரிஞ்சிருந்தா
தூக்கின கிரைண்டரை அவ காலிலேயே போட்டிருப்
பான்!)

கிரைண்டரைத் தூக்கி மேடையில் வைத்த
கையோடு, காச் மூச் என்று கத்திக் கொண்டிருந்த
மனைவியையும் தூக்கி மேடை மேல் வைத்தான்
மாட்ட்.

(இவன் என்னடா சடார் சடார்ன்னு தூக்கிடுறான்னு
நீங்க பெருமூச்சு விட வேண்டாம்! அதற்கான காரணம்
இதோ - சராசரி இந்தியப் பெண்களைப் போன்ற உயரத்
தில் இருந்தாலும், மனோவின் உடம்பில் பெருக்குக்கூட
அதிக சதை இருக்காது. வெறும் எலும்பு மட்டும் இருந்
தால் பார்க்கும் மக்கள் பயந்து ஓடி விடுவார்களே என்ற
நல்ல எண்ணத்தில் கடவுள் அவளுக்குக் கூடுதலாய்
சதைப் போர்வையைச் சாத்தியிருந்தார்! அதனால்
அவளைத் தூக்குவது பெரும் பிரம்ம வித்தையில்லை.
அதுவும் ஆறடிக்கும் மேற்பட்ட உயரத்தில், எலும்பின்
மீது பத்து கோட்டிங் சதை கொண்ட மாத்யூவிற்கு,
அவளை நடத்திச் செல்வதை விட, தூக்கிச் செல்வதே

வசதி என்று என்னும் அவனுக்கு அது கடினமாகவும் இல்லை!)

அவனை மேலும் திட்ட வாய் திறந்தவள், அவனது கண்களில் சிவப்பைக் கண்டதும் "ஹேரா மாட்ட், என்ன இது? கண்ணெல்லாம் ஒரே சிவப்பா இருக்கு? என் கிட்டே இருந்து கண் வலி உனக்கும் தொற்றிவிட்டதா?" என பதறி உருகிப் போனாள். இதுவரை அவன் மேலிருந்த கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

"ரொம்ப எரியல பேபி, சீக்கிரம் சரி ஆகிடும்" என மாத்பூவின் அவளது மூக்கின் மேல் உதடு வைத்துக் கொஞ்ச, தன் கைகளைக் குறுக்கே கொடுத்து அவனைத் தள்ளியவள், "மருந்து போடாம எப்படி சரியாகும்? என்னை முதல்ல கீழ இறக்கிவிடு. நான் மருந்து போட்டு விடுறேன்" என அவசரப்படுத்தினாள்.

மனைவியின் அவசரத்திற்கு மாறாக அவளது மெல்லிய இடையில் கை கொடுத்தவன், அவளைக் கீழே இறக்க முற்படுவது போலவே இருக்கவில்லை. மாறாக அவளைத் தன்னோடு இறுக அணைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான். அவன் தன்னை கீழே விடப் போவதில்லை என்று தெரிந்த பின்னர், தன் கால்களால் அவன் இடுப்பை வளைத்தவள், தன்னை ஹாலிற்கு அழைத்துச் செல்லுமாறு கட்டளையிட்டாள். அவனும் மறுப்பின்றி, சந்தோஷமாகவே அதை நிறைவேற்றினான்.

அதன் பின்னர் மருந்து போடுகிறேன் என்ற சாக்கில் கண்கள் தவிர்த்து, அவன் கன்னம், காது, மூக்கு என்று



மற்ற பாகங்களுக்குத் தேவையற்ற மருத்துவம் பார்த்தாள் மனோ. இதில் "நீ ஆடிட்டே இருந்தா எப்படி மருந்து ஊத்துறது. கையைக் காலை வச்சுக்கிட்டு பேசாம இரு" என மாட்-டிற்கு அறிவுரை வேற! (அவள் ஆடுறாளாம்? யார் யாருக்கு அறிவுரை கொடுக்கிறதுன்னு ஒரு விவஸ்தை இல்லாம போச்சு... ஹ்ம்ம்...)

கடைசியாக "கொஞ்ச நேரம் கண்ணை மூடி தூங்கு மாட்ட், தூங்கினாலே கண் வலி போய்டும்" என மனோ அறிவுறுத்த, (அதென்ன கண் மூடித் தூங்குறது? இவ ஒரு வேளை கண்ணைத் திறந்துக்கிட்டே தூங்குவாளோ!) மாட்ட்-டும் அதை கடைபிடிக்க கடமை கணவனாய் எழுந்து போனான்.

"நீயும் தூங்க வரியா?" என வினவிய கணவனிடம் "ம்ஹூம்ம், நான் உனக்கு சமைக்கப் போறேன். நீ எழுந்துக்கும்போது ரெண்டு பேரும் சாப்பிடலாம்" என இவளும் கடமை மனைவியாய் மாறி அவனை அனுப்பி வைத்தாள்.

அவன் படுக்கையில் விழுந்ததும், ஓசை படாமல் கதவை அடைத்துக் கொண்டு வெளியே வந்த மனோ, சமைக்க எண்ணியது சாதம், ரசம் மற்றும் உருளைக் கிழங்கு வறுவல். ஆனால் அவள் சமைத்து முடித்தது இரண்டு பாக்கெட் நூடுல்ஸ்! (சாதம் - நூடுல்ஸ் ஆகிறது! என்ற தலைப்பில் அதை ஒரு தனி ரெசிபியாக நெட்டில் போட விருப்பம் தான். ஆனால் மக்களின் நலன் கருதி அது இந்தக் கதையின் அங்கமாகவே வருகிறது!)

படுக்கையறையிலிருந்து சமையலறைக்கு இருக்கும் இருபதடி தூரத்தில், என்ன செய்ய வேண்டும் என

முடிவு செய்தவள் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் மனதில் ஓட்டிப் பார்த்துக் கொண்டாள்.

முதல் காரியமாக அரிசியை களைந்து குக்கரில் வைக்க வேண்டும் என்றெண்ணியவள், அங்கிருந்த அலமாரிகளைத் திறந்து அரிசியைத் துலாவினாள். அரிசி வேட்டையின் முடிவில் அவள் கையில் சிக்கிய அரிசி - பிரவுன் ரைஸ். அதை மூக்கு பக்கத்தில் கொண்டு போய் வாசனை பிடித்தவள், ''ஹ்ம்ம்'' என்ற முகச் சுளிப்புடன், எடுத்த ஒரு கை அரிசியையும் உள்ளே போட்டாள். (சத்தானது, உடம்புக்கு நல்லதெல்லாம் சாப்பிட்டா நாம என்ன ஆகுறது?)

அரிசி தான் சொதப்பி விட்டது என்று முடிவு செய்தவள் ரசம் செய்வதற்கு ஆயத்தமானாள். (சோறு இல்லாம ரசத்தை மட்டும் குடிக்கவா முடியும்? என்ன தான் வெளிநாட்டு ஹோட்டல்களில் ரசத்தை சூப் என்று பட்டியலிட்டு இருந்தாலும், வீட்டில் அதுவும் மதிய உணவிற்கு வெறும் ரசத்தை மட்டும் பருகி விட்டு இருக்க முடியுமா என்ன? ஹ்ம்ம் இதெல்லாம் (அதாவது மனோவைத் தான் செல்லமா(!).. கூப்பிட்டேன்) சொல்லித் திருந்தாது, பட்டுத்தான் திருந்தும்!!)

புளித் தண்ணியை கரைத்து விட்டு, தக்காளியைத் தேடினால் அதுவும் இல்லாமல் புளி, புலி போல் அவளிடம் இளித்தது.

இரண்டு விஷயத்தில் சூடு பட்ட பின்னர், உருளைக் கிழங்கு வறுவலுக்கு உருளைக் கிழங்கைத் தேடி விட்டே கடாயை அடுப்பில் வைப்பது என்று முடிவு செய்தாள். (என்ன ஒரு முன்னெச்சரிக்கை!!) மனோன்மணி மாத்யூஸ்!



சமையலறையாவும் தேடிய பின்னர் தான் ஒரு முக்கியமான விஷயம் மனோன்மணிக்கு உறைத்தது. அதாகப்'' '' டது - தாங்கள் இருவரும் இன்று தான் நாடு திரும்பி இருக்கிறோம். மேலும் இங்கிருந்து கிளம்பு வதற்கு முன்னர், ஊருக்குப் போகும் தினங்களில் வீணாக பிரிட்ஜ் ஓட வேண்டாம். காய்கறிகளை எல்லாம் காலி செய்துவிட்டு பிரிட்ஜை நிறுத்திவிட்டு வருமாறு மாத்யூவை நச்சரித்தது நினைவு வந்தது.

பலமாக மண்டையைத் தட்டிக் கொண்டவள், ''உருளைக்கிழங்கு, வெங்காயம் எல்லாம் வெளிய இருந்தா கெட்டா போகும்? அதை அட்லீஸ்ட் ஸ்டாக் வச்சிருக்கலாம் இல்ல. சரியான லூசு! நான் சொல்றதை அப்படியே செஞ்சிடும்'' என கணவனைத் திட்டவும் செய்தாள். (அவன் ஏதாவது செய்யாம இருக்கும்போது ''ஏன் செய்யல''ன்னு நீ கேள்வி கேளு... அப்புறம் உனக்கு இருக்கு மகளே! கேட்டுத்தான் பாரேன்!)

இத்தனை தேடலுக்கும் பின்னர் தான் நேற்று இரவு பாஸ்தா செய்யும்போது காய் ஒன்றுமில்லை. நாளை வாங்க வேண்டும் என்று மாத்யூ கூறியது நினைவில் வந்து மீண்டும் குட்டிக் கொள்ள வைத்தது.

நான்கு குட்டல்கள், இரண்டு நாக்குக் கடிப்புகள் என்று தான் திட்டமிட்ட சமையலை சமைக்காமலே முடித்தாள் மனோ! மாத்யூ எழுந்து கொள்ளும்போது அவனுக்குப் பசிக்குமே என்ற எண்ணமும், கூடவே தன் வயிற்றினுள் பசியால் ஓடிய ரயிலும் அவளை நூடுல்ஸ் செய்ய வைத்தது. துயில் களைந்து எழுந்த கணவனுடன் மதிய உணவை முடித்தவள், அதை உண்ணும்

வேளையில் அவனிடம் தான் சமைத்த அழகை (!) எடுத்துக் கூறி, "கியூட் பேபி" என்ற பாராட்டை வாங்கிக் கொண்டாள். (இது கியூட்டா, இல்ல இது கியூட்டான்னு கேட்கிறேன்!)

அவளுக்குக் கண்களில் எரிச்சல் குறைந்து விட்டால் இருவரும் சென்று வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி வரலாம் என்று கணவன் கூற, மனைவியோ அவன் உடல்நிலையைக் காரணம் காட்டி மற்றொரு நாளுக்கு மாற்றிப் போட்டாள்.

தனக்கு ஒன்றுமில்லை என்று அவன் நின்று சாதித்தப் பின்னர், "ஹ்ம்ம் சரி, ஆனா வாங்க வேண்டிய பொருள் எல்லாத்தையும் லிஸ்ட் போட்டுக்கலாம். ஜஸ்ட் லைக் தட் போறதை விட லிஸ்ட் பார்த்து எடுத்துட்டு வர ரொம்ப டைம் ஆகாது" என்று பழுத்த குடும்பத் தலைவி போல் யோசனை கூறியவள், கர்ம சிரத்தையாய் பட்டியல் தயாரித்தாள்.

மாத்யூவே ஒரு கட்டத்தில், "போதும் பேபி, அங்க போய் உனக்குப் பிடிச்சதை எடுத்துக்கலாம்" என்று கூறுமளவு பட்டியல் மிகப் பெரிதாய் நீண்டு கொண்டே போனது. மேலும் அவள் கண்ணைச் சுருக்கி, பேனாவை மண்டையில் தட்டித் தட்டி யோசித்து எழுதியது அவனை வேறு விதத்தில் வேறு தூண்டிவிட்டுக் கொண்டிருந்தது! (அவன் கஷ்டம் அவனுக்கு).

ஒரு வழியாக மனோ - மாட்ட் ஜோடி, அவர்களது வீட்டை விட்டு கடைக்குக் கிளம்ப நான்கு மணி ஆனது. இரண்டு மணிக்குப் போட ஆரம்பித்த பட்டியல் முடியாமல் நீண்டு கொண்டே போக, மாட்ட் குறுக்கே



விழுந்து அதை தடுத்தபோது மணி மூன்றாகி இருந்தது. அதன் பின்னர் இருவரும் கொஞ்சி, மிஞ்சி, மருந்து ஊற்றி கிளம்ப ஒரு மணி நேரமானது.

ஒரு வழியாக இந்திய காய்கறிகள் மற்றும் இந்திய உணவுப் பொருட்கள் விற்கும் அங்காடியை அணுகினர் இருவரும். கடைக்குள் நுழைந்த கையோடு மனோ வலம் வர, சற்று நேரம் அவளுடன் கூட நடந்த அவளது கணவன் "ஹே மானி, லிஸ்ட்டை எடு" என்று பட்டியலுக்குக் கை நீட்டினான். அவன் கேட்டதும், வேகமாக தன் கைப்பைக்குள் கைவிட்டவளின் முகம் லேசாய் கோணியது.

வேகமாக தேடியதால் கையில் தட்டுப்பட வில்லையோ என்று நினைத்த மனோன்மணி, தன்னை விட சற்றே சின்னதாய் இருந்த கைப்பைக்குள் தலையை விட்டு மெதுவாகத் துலாவினாள்.

கைப்பையினுள்ளே கவனமாய் இருந்த மனோவின் தலையை மெல்ல நிமிர்த்திய மாட்ட், நமட்டுச் சிரிப்பு சிரித்தான். 'ஞே' என அசடு வழிந்த மனைவியின் தோள்களில் கை போட்டவன் "லிஸ்ட் ரெடி பண்ணி வீட்டிலே வச்சிட்டு வந்திட்டியா பேபி? ரொம்பச் சமத்து" என்று மெச்சிக் கொண்டான். (இதுக்கு நான் மனோவைக் கிண்டல் பண்ணமாட்டேன். பாவம் சின்னப் பொண்ணு மன்னிச்சு விட்டுடலாம்! நோ, நோ, ஏன் எதுக்குன்னு கேள்வி கேட்கக் கூடாது!)

"ம்ம்ம் ஆமா" என அவளும் ஏகமாய் வருத்தப்பட, மாத்யூவிற்கு சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. அவனது சிரிப்பிற்கு எதிரொலியாய் முறைக்க ஆரம்

பித்த அவனது உயிர் காதலி, அது முடியாமல் போகவே அவனுடன் இணைந்து நகைத்தாள்.

இரவு எட்டு மணி வரையிலும் கடை கடையாக ஏறி வீட்டிற்குத் தேவையான பொருட்களை சேகரித்த மனோவை "ப்ளீஸ் பேபி, எனக்குப் பசிக்குது. சீக்கிரம் போகலாம்மா" என பல தடவை கெஞ்சி அழைத்துச் சென்றான் மாத்ரு. (பாவம் ஏழு மணிக்கு உணவை முடித்துக் கொள்ளும் வெள்ளைக்காரனை எட்டு மணி வரை காயப்போட்டால் கெஞ்சாமல் என்ன செய்வான்? அதுவும் மதியம் சமைத்துக் கொடுத்த நூடுல்ஸ்க்கு மேலாகவே வேலையும் வாங்கிவிட்டு இவள் செய்யும் அழும்பு தாங்க முடியல!!)

அன்றைய இரவு உணவை வெளியே முடித்துக் கொண்டு (மாட்ட், மெகா எஸ்கேப் போல!) வீடு வந்து சேர்ந்த தம்பதியர், புதிதாய் மணமானவர்களுக்கே உரிய வகையில் அந்த இரவைக் களித்தனர்!

அடுத்த நாள் முதல் வேலையாக மனோவின் பொருட் களை அவள் முன்னர் தங்கியிருந்த இடத்திலிருந்து இடமாற்றியவர்கள், அந்த நாளின் பின்னேரத்தை, கொண்டு வந்த மற்றும் லிஸ்ட் இல்லாமல் வாங்கிக் குவித்தப் பொருட்களை அடுக்குவதில் செலவிட்டனர்.

அடுக்குவதும், கொஞ்சுவதும், குழைவதுமாக சென்ற அன்றைய தினத்தில் சாப்பாடு என்ற பெயரில் சில பதார்த்தங்கள் செய்யப்பட்டு, உணவின் ருசியையோ குணத்தையோ ஆராயும் முயற்சி கூட இல்லாமல் செவ்வனே உள்ளே சென்றது!!

இருவாது விடுமுறையும் இன்னும் சில தினங்கள் மீதம் இருந்ததால், அந்த வார இறுதியிலேயே



அங்கிருக்கும் நண்பர்களுக்கு விருந்து கொடுப்பது நல்லது என மாட்ட் கூற, மனோவும் மறுப்பின்றி தலையாட்டினாள். (அடேங்கப்பா, அவன் சொல்றதுக்கு எதிர் வாதம் செய்யாம சமத்தா சரி சொல்லிட்டியே? உன் குத்து எதுவும் இருக்கா கண்ணம்மா? நீ வெளியே குத்துறதே அவனுக்குப் பாதி நேரம் புரிய மாட்டேங்குது. கொஞ்சம் பார்த்து செய். பாவம் பையன்!)

முதல் வேலையாக இருவாது நண்பர்களுக்கும் ஈமெயில் அனுப்பி, அவர்களில் யாருக்கு அன்று வர வசதிப்படும் என்று கேட்டுத் தெரிந்து கொண்டவர்கள் அதற்கு ஏற்றாற்போல் விழா ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினர்.

உணவு, இடம், பரிசு போன்றவற்றை முதலில் தீர் மானித்தவர்கள் கடைசியாக உடைக்கு வந்தனர். இதில் தான் பிரச்சனை தொடங்கப் போகிறது என்று தெரிந் திருந்ததால் தான் உடை தேர்விற்குக் கடைசியாக வந்தனரோ?

# 6

கணவனின் மடியில் அமர்ந்து தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்த ஒரு தொடரை, மனோன்மணி பார்த்துக் கொண்டிருக்க, அவளது கணவன் தொடரைக் கவனிக்காமல் தன் மன்மத லீலைகளை மனைவியின் மேனியில் தொடர்ந்து கொண்டிருந்தான். (அப்புறம்,

புதுசா கல்யாணமானவன் தொடரைப் பார்த்தாத்தான் தப்பு!)

மேனியில் சடுகுடு விளையாடிய கைகளைப் பற்றி தடுத்தவாறே, "மாட்ட், நீ இப்போ என்கிட்டே அடி வாங்கப் போற. கையை வச்சிக்கிட்டு சும்மாவே இருக்க முடியாதா? இப்படியே பண்ணிட்டு இருந்தே நான் மடியை விட்டு இறங்கி, சோபால உட்கார்ந்துப்பேன்" என்றாள் மனோ மிரட்டலாக!

அவளது மிரட்டலை சின்னச் சிரிப்போடு ஒதுக்கிய மாட்ட், மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தான். (போச்சா, போச்சா... நீ சொல்றதை அவன் மட்டும் தான் கேட்டுட்டு இருந்தான். இப்போ அவனும் உன்னை மதிக்கிறதில்லை போலவே!)

"ஹேற... சொல்லிட்டே இருக்கேன்ல" என்ற மனோ அவனது காதை முறுக்க, முறுக்கிய கைகளைத் தன் கழுத்தைச் சுற்றிக் கொண்டு சென்ற மாத்யூ. தன் மேல் பாயத் தயாராய் இருந்த அவளது செவ்விதழ்களை தன் ஆளுமைக்குள் கொண்டு வந்து ஒரு யுத்தத்தைத் தடுத்த கையோடு, மறு யுத்தத்திற்கு அடி போட்டான். மனோவும் சொற் யுத்தத்தை நிறுத்தி, முத்த யுத்தத் திற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்!

ஒரு யுத்தம் முடிந்து மறு யுத்தம் என யுத்தங்கள் முடிவின்றி தொடர்ந்து கொண்டே இருக்க, யுத்த களம் தான் வரவேற்பறையிலிருந்து படுக்கையறைக்கு மாறியது!

ஒருவாறாக இருவரும் வெற்றி வாகை சூடி யுத் தத்தை நிறைவு செய்தபோது, மனோவின் மூளையில்



மணி அடித்தது! (கோவில் மணியா? காலிங் பெல்லா மனோன்மணி?)

மணி பலமாக அடித்ததோ என்னவோ "ஹேரா ஹோ!" என அலறினாள் அவள். (ஹேரா ஹோ இல்ல, ஹரஹ பெல்! அப்படின்னு அலறியிருந்தா நல்லா இருந்திருக்கும் மனோ!)

தன் மேல் படுத்திருந்த மனைவியை இறுகப் பற் றியபடி "என்ன பேபி? என்னாச்சு" என மாட்ட் பதற, "நாம இன்னும் வெட்டிங் பார்ட்டிக்கு டிரஸ்ஸே வாங்கலையே மாட்ட்!" என கவலைப்பட்டாள் மனைவி.

இவ்வளவு தானா என்பது போல் ஓர் நெடிய மூச்சை வெளியே விட்ட மாத்யூ தன்னிடம் பார்ட்டிக்கு ஏற்ற உடை இருப்பதாகக் கூறினான். (உன்னை யாருடா கேட்டா? ஹய்யோ, இப்படி பச்சை புள்ளையா இருக் கியே மாட்ட் இருக்கியே!)

"உனக்கிருந்தா போதுமா? எனக்கு?" என மனோ சண்டை கோழியாய் சிலிர்க்க, "உனக்குத் தான் நிறைய புடவை இருக்கே? You look gorgeous in those suits dar-ling! wear one of those" என்றான் மாத்யூ காதலுடன்.

அவனது பதிலில் "புடவையா?" என ஒரு நிமிடம் ஆச்சரியம் அடைந்த மனோன்மணி, ஜெனீவாவில் கொடுக்கும் விருந்தில், அதுவும் அவர்களது திருமண விருந்தில் புடவையா என யோசித்தாள். அதையே அவனிடம் கூறியபோது, "ஏன் பேபி? உனக்கு புடவை ரொம்ப நல்லா இருக்கும். உன்னோட உடல் வாகிற்கு சேலை கட்டினால் தான் கொஞ்சமேனும் குண்டா தெரியும்" என வாதாடினான் மாத்யூ. (குண்டுன்னா

உசிலைமணி மாதிரியா?'' மனோன்மணி உசிலைமணி ஆகிறாள்!'' தலைப்பு எப்படி?)

''ப்ரைடல் டிரஸ் போட்டாக்கூட தான் குண்டா தெரியும்'' என மனோ எண்ண, ''I want you to wear that rose petal color saree baby. I long to see you in that!'' எனக் கண்களில் ஆர்வம் மின்னக் கூறிய கணவனிடம் மனோவின் வேறு எந்த வாதமும் செல்லுபடியாகாமல் போகவே, விருந்தன்று மனோவின் பொன்னிற மேனியை ரோஜா நிற சேலை தழுவி சுகம் கொண்டாடியது! (மனோ, உன் உடம்பு எம்பு தோல் போர்த்திய உடம்புன்னு தான் நினைச்சேன்... ஆனா எம்பு பொன் போர்த்திய உடம்பு போலவே!)

பொன்னில் பூ கலந்து, மணம் பரப்பிய சுகந்தத்தை (அட, பொண்டாட்டியை தான்பா) அள்ளி முகர்ந்த மாத்யூவிற்கு, வீட்டை விட்டுக் கிளம்பவே மனம் வரவில்லை. அவர்களது குடியிருப்பு வளாகத்தில் உள்ள recreation hall-இல் தான் விருந்து என்றாலும், அங்கே சென்று விருந்து ஏற்பாடுகளை கவனிக்க வேண்டாமா? அதனால் மனமின்றி மனைவியை விட்டு விலகியவன், விருந்து நடக்கப் போகும் இடத்திற்கு முன்னதாகச் சென்றான்.

அவன் மட்டும் முதலில் செல்கிறேன் எனக் கூற, தானும் வருகிறேன் எனக் கூறி அங்கே சென்றவள், விருந்து ஏற்பாடுகளை அவனுடன் சேர்ந்து செய்திருப்பாள் என எண்ணினால் அது தவறல்லவோ! அவனை ''மாட்ட், இந்த டேபிளை அங்க போடு'', ''இந்த ஜூஸ் பாட்டில்ஸ் எடுத்து இப்படி வை'', ''என்ன இப்படி



செய்றே. ஒழுங்கா பண்ணு'' என அவனை வதக்கி கொண்டிருந்தாள். (மனோ, இப்படி வறுதியே நீ ஒருவேளை aviation இஞ்சினியரோ?)

சற்று நேரம் மனைவி செய்யும் அலும்பைப் பொறுத்தவன், அவளைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று ஒரு இருக்கையில் அமர்த்தினான். பின்னர் கைகள் இரண்டையும் கட்டி, கட்டிய கைகளில் ஒன்றை எடுத்து உள்ளங்கையால் அவளது வாயை மூடி, பேசாமல் அங்கேயே உட்காரும்படி பணித்துவிட்டுத் திரும்பிச் சென்றவன், தன் வேலையைத் தொல்லையின்றி செவ்வனே செய்தான்!! (நீ ஆணியே புடுங்க வேண்டாம்... அப்படின்னு செய்கையில சொல்லிட்டான்பா...)

மாத்யூவுடன் வேலை பார்க்கும் சில நண்பர்களும் அவனது உதவிக்கென, விருந்து நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட, மனோன்மணி வேலை செய்கிறேன் என்ற போர்வையில் செய்து வைத்திருந்த அலங்கோலங்களை சீக்கிரமே சரி செய்து மாலை விழாவிற்கு ஹால் புத்தம் புது பொலிவுடன் தயாரானது. (ஹே மாட்ட், நீ வேலை செய்றது இருக்கட்டும், மனோவையும் வேலை வாங்குறது தானே! என்ன பையன்டா நீ? ஓவர் நல்லது உடம்புக்கு ஆகாது மகனே... ஆகாது!)

விருந்தினரின் வருகை அதிகரிக்கும் முன்னர் மனோவின் வயிற்றைக் கொஞ்சம் கவனித்தான் அவளது கணவன். இரவு வரை நின்று கொண்டே இருக்க வேண்டும் என்றும் கால் வலி வந்து சோர்ந்து போய் விடுவாள் என்றும் கூறியவன், இரு flavoured yogurt கேன்களைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான்.

சிரித்தாய் இருந்த அவற்றையே மாட்டின் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டு உண்டவளிடம் இரக்கம் காட்டினால் தன்னை டபாய்த்து விடுவாள் என்ற எண்ணம் வலுவாக இருந்ததால், மாட்ட் கைகளைக் கட்டிக் கொண்டு அவள் உண்பதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மனோ, தன் மாலைச் சிற்றுண்டியை முடிக்கவும் விருந்தினர் வரவும் சரியாக இருந்தது. மாட்-டுடன் W.H.O.வில் வேலை செய்யும் ஆராய்ச்சியாளர்கள், அவனுடன் பயின்ற நண்பர்கள், அவனது ஆசிரியர்களில் சிலர், அவனுக்கென்று இருந்த (அவனுக்குத் தெரிந்த) சில சொந்தங்கள் என பல பேர் வந்தபோது, மனோ வேலை செய்யும் ஐ.டி. நிறுவனத்திலிருந்து அவளுக்குத் தெரிந்தவர்கள் என சொற்பமானவர்களே வந்தனர். அந்த சொற்பத்துடன் சேர்த்து கொஞ்சம் கொசுறாக, அவளுடன் வீட்டைப் பங்கு போட்டுக் கொண்ட நிஷாவும், சுதாவும் வந்திருந்தனர். கோவிலில், கடைகளில் என பல தமிழரைப் பார்த்திருந்தாலும், அதிக பழக்கம் இல்லாத காரணத்தால் மனோ பல பேரை அழைக்கவில்லை. மாட்ட் வற்புறுத்தியபோது கூட.

வந்திருந்தோரில் பல பேர், மனோவின் ரோஜா வண்ணச் சேலையை வானளாவ புகழ்ந்ததோடு இல்லாமல், அவளது பொன் நிறத்திற்கு அந்தப் புடவை சேர்த்த அழகைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போயினர். அதிலும் ஒரு சிலர் புடவையை தொட்டுப் பார்த்து வியந்தபோது, மாட்-டின் புருவங்கள் அழகாய் உயர்ந்து, அவனது கண்களில் கணவன் பார்வை தேங்கி நின்றது.



(அதென்னப்பா, கணவன் பார்வை! கணவனைத் தான கேட்கணும் இல்லையா?)

வாழ்த்தும், வியப்பும், மகிழ்வுமாய் நேரம் சென்று கொண்டிருக்க, அதை லேசாக அசைத்துப் பார்க்கும் எண்ணத்துடன் மாத்யூவுடன் வேலை செய்யும் ஜீன் வந்து சேர்ந்தாள். வந்தவளின் மேனியை அழகிய வெண்ணிற கவுன் தழுவியிருக்க, அவள் நடக்கும் போதெல்லாம் அந்த சாட்டின் உடை அலை அலையாய் துள்ளி விழுந்தது.

நேராக மாத்யூவிடம் வந்தவள், அவன் கையில் ஒரு சிகப்பு நிறப் பூங்கொத்தைக் கொடுத்துவிட்டு, கன்னத்தோடு கன்னம் வைத்து வாழ்த்துக் கூறினாள். மாத்யூவும் அவளை லேசாக அணைத்து நன்றி கூறினான். நன்றியோடு நிறுத்தி இருக்கலாம்... ஆனால் ''you are looking hot baby'' என அவன் பாராட்டியபோது, மனோவின் மனதில் ஏதோ சுருக்கென்றது. அவள் வாழ்த்துக் கூறிய போதும், மாட்ட் நன்றி உரைத்த போதும் வித்தியாசமாக ஏதும் படவில்லை என்றாலும் இப்போது மாட்ட் பேசிய வார்த்தைகளை உள்ளுக்குள் பொறாமையைத் தூண்டி விட்டது. (என்ன பேர் இது? ஜீன், ஜூன், ஜூலை டி-ஷர்ட்ன்னு அப்படின்னு புகையறது நான் இல்லைங்க, நம்ம மனோ தான்!)

அதிலும் மனோவிடம் திரும்பிய ஜீன் ''இதென்ன டிரஸ்? ப்ரைடல் டிரஸ் போடறதில்லையா? நீ ஜெனீவாவில் இருக்கிறது மறந்து போச்சா?'' எனக் கேட்டபோது மனோவின் காது வழியே புகை வந்தது! தொடர்ந்து அவள் கூறிய ''ஆனாலும் நீ இந்த உடையில் ரொம்ப க்யூட்டா இருக்கே. சோ டைனி'' என்ற வார்த்தைகள்

புகையை அதிகரித்ததே ஒழிய கொஞ்சமும் குறைந்தவில்லை. (பார்த்துமா, வயித்துக்குள்ளே போன போகாம் திரிஞ்சு போயிருக்கப் போகுது).

புகை வண்டியாய் உருமாறியிருந்த மனோ, உதடுகளைக் காதுவரை இழுத்துப் பிடித்து, கடைக் கண்ணால் கணவனை அளந்தாள். அவனோ, ஜீன் கூறிய வார்த்தைகளுக்கு ஜால்ரா தட்டும் விதத்தில் ''மானி ரொம்ப ஒல்லியா குட்டியா இருக்காளா... புடவை கட்டினா கொஞ்சம் பூசினாற் போல இருக்கும்ல. அதனால தான் புடவை கட்டச் சொன்னேன்'' எனக் காரணக் காரியங்களை விளக்கிக் கொண்டிருந்தான். (ஆமா, நீ விளக்கிற விளக்கில கண்டிப்பா தமிழ் திரிஞ்சு ஆவியாய் போயிருக்கும். போடா இவனே!)

மனோவோ பொறுமையை இழுத்துப் பிடித்த கையோடு உதடுகளையும் இழுத்துப் பிடித்தாள். அப்போதைக்கு அவளது பொறுமையை ரொம்பவும் சோதிக்காமல் மனோவுடன் வேலை பார்க்கும் நபர் ஒருவர் வந்து விட, ஜீன் நகர்ந்தாள். அவருடன் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, மாட்-டை விட்டு சற்று நகர்ந்து சென்று தன் அறைத் தோழிகளுடன் இணைந்து கொண்டாள் மனோ.

மனைவியின் முகத்தில் சிறு மாறுதல் ஏற்பட்டாலும் அதை கூர்ந்து கவனிக்கும் மாட், அன்று விருந்தினரைக் கவனிக்கும் வேலையில் அவளைக் கவனிக்க மறந்தான். வந்திருந்தோரிடம் பேசியவாறே அந்த கூடத்தை வலம் வந்தவன், அவனது ஆசிரியர் ஒருவரிடம் நின்று பேசிக் கொண்டிருந்தபோது ஜீன் அவனுடன் இணைந்து கொண்டாள். கணவனையே தொடர்ந்து கொண்டிருந்த



மனோவின் விழிகளில் இந்தக் காட்சி தப்பாமல் பட்டு, மனதைக் குடைந்தது.

அவளது பார்வையைக் கணவன் உணர்ந்தானோ இல்லையோ, அவளது தோழிகள்(!) இந்த ஆச்சரியக் குறி எதுக்குன்னு கொஞ்ச நேரத்தில உங்களுக்கே புரியும். என்-ன்னா அவங்க ரொம்பபபப நல்லவங்கோ!) மிகுந்த சுவாரஸ்யத்தோடு கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களது சுவாரஸ்யத்தையும், மனோவின் சங்கடத்தையும் கூட்டுவது போல் சுதாவின் கைப்பேசி கிணுகிணுத்தது

எடுத்துக் காதில் வைத்தவள் ''ஹலோ அம்மா'' எனத் தொடங்கி சற்று நேரம் வளவளத்தாள். அருகில் மனோ இருப்பது போலவே பாவிக்காமல் தொடர்ந்து அவள் பேசியவை கீழே வருமாறு.

''இங்க மனோவோட வெட்டிங் பார்ட்டிக்கு வந்திருக்கேன்.''

''........''

''அது தான் சொன்னேனேம்மா, மனோ இங்க ஒரு வெள்ளைக்காரப் பையனைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு. அந்த பார்ட்டி தான்.''

''........''

''ச்சே ச்சே, நான் அப்படியெல்லாம் பண்ண மாட்டேன் அம்மா.''

''........''

''அவதான் புத்தி கெட்டுப் போய், அப்பா அம்மாவை மதிக்காம கல்யாணம் பண்ணிக்கிட்டான்னா நானும் பண்ணுவேனா என்ன? என்னமா நீங்க?''

"......"

"நீங்க சொல்லாமலே எனக்குத் தெரியும்மா, இந்த வெள்ளைக்காரங்க எப்போ யாரைப் பார்த்து நம்மளை டைவர்ஸ் பண்ணுவாங்கன்னே தெரியாதப்ப எப்படி அவங்களை நம்பிக் கழுத்தை நீட்டுறது?" (நீ மட்டும் இங்கிலீஷ்ல பேசியிருக்கணும், அங்கிருக்க வெள்ளைக் காரங்க எல்லாரும் உன்னை வெளுத்து வாங்கி வெள்ளை ஆக்கி இருப்பாங்க.)

மேலும் அவள் என்ன பேசியிருப்பாளோ மனோ விற்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்து விட்டது. சுதா தணிந்த குரலில் தான் பேசினாள் என்றாலும் மனோவின் காதுகளில் அவளது தமிழ் உரையாடல்கள் தெளிவாகவே விழுந்தன. (கேட்கணும்ன்னு தானே பேசியிருக்கா! ப்ச்)

தெளிவாய் விழுந்த வார்த்தைகள் - தெளிவில்லாமல் குட்டையாய் குழம்பியிருந்த மனதில் கல் எறிந்தன. குழம்பிய குட்டையில் கல் பலமாய் விழவே, அதி லிருந்து தெறித்த தண்ணீர் கண்ணீராய் வெளிவந்தது.

அங்கிருந்த ரெஸ்ட் ரூமிற்குச் சென்று முகத்தில் தண்ணீர் அடித்துக் கழுவிய மனோ, ''என் மாட்ட் என்னை விட்டுப் போக மாட்டார்'', ''என்னோட மாட்ட் எனக்கு மட்டும்தான், போகவிடமாட்டேன்'' எனத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு வெளியே வந்தாள். ஆயிரம் முறை உருப்போட்டப் போதும், திடீரென ஞாப கப் படுத்தப்பட தாய் தந்தையின் நினைவு அவளைக் கொல்லாமல் கொன்றது.

எப்படி இருக்கிறார்களோ? இந்நேரத்திற்கு ஊரில் விஷயம் பரவி, இருவரையும் துக்கம் விசாரிப்பது போல்



விசாரித்து இருப்பார்களோ? ரொம்பக் கஷ்டமாக இருந்திருக்குமோ? இதையெல்லாம் எண்ணாமல் தன் வாழ்க்கை என்று மட்டும் தான் தோன்றி தனமாய் எண்ணி, மாட்-டை மணம் செய்து கொண்டு விட் டோமோ? என பலப்பல விஷயங்களையும் எண்ணி மனம் சோர்ந்தது.

சோர்ந்த மனதை மேலும் சோர்வுறச் செய்வது போல், மாட்-டும் ஜீனும் இதோ ஒரு விஷயத்திற்காக உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சிரிப்பு உள்ளுக்குள் சீற்றத்தைத் தோற்றுவிக்க, விடுவிடுவென மாட்-டை நெருங்கிய மனோ அவன் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு, அவன் தோளில் சாய்ந்து கொண் டாள்.

அவனும் மனைவியின் தோள்களைச் சுற்றி தன் கையைப் போட்டுக் கொண்டு, தன்னுடன் இறுக்கி னான். கணவனின் நெருக்கம் மனதில் கதகதப்பை ஏற் படுத்த, அவனை மேலும் நெருங்கி நின்றாள் மனோன் மணி. அவளது அந்த செயலிலேயே அவளது மனம் புரிந்தவன் போல், சட்டென மனைவியின் கண்களை ஆழ நோக்கினான் மாட்ட்.

அவனது ஒரு வினாடி ஊடுருவலில் மனோவின் மேனி சிலிர்த்து, கண்கள் மீண்டும் பனித்தன. (திரும்ப சிலிர்க்க ஆரம்பிச்சுடுப்பா இவளுக்கு!) பனித்த கண் களை வெளிக்காட்ட விரும்பாதவள் போல் முகத்தை அவன் தோளில் புதைத்துக் கொண்டு, ''வீட்டுக்குப் போகலாமா மாட்ட், எனக்குத் தூக்கம் வருது'' என்றாள் அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

அவனும், ''என்ன பேபி இது? நாம கொடுக்கிற பார்ட்டில நாமளே முன்னாடி போறதா? சில சமயம் ரொம்பவே பேபி மாதிரி நடந்துக்கிற'' என்றான் லேசான கண்டிப்புடன். ஆனால் லேசான அந்தக் கண்டிப்பு அவளது அன்றைய பாதுகாப்பற்ற தன்மையை கூட்டியது. கணவனின் பாதுகாப்போ, கவனமோ தனக்கு முழுதாய் கிடைக்கவில்லை என்ற எண்ணம் தோன்றிய முதல் வினாடி, பிடிவாதம் தலைக்கேறியது. பிடிவாதத்தின் முதற்கட்டமாக ''எனக்கு வீட்டுக்குப் போகணும். நீ வா'' என்றாள் முழு வேகத்துடன்.

''ஷ் மானி'' எனக் கண்களால் அடக்கிய கணவனை அவள் மதிப்பதாகவே இல்ல. அவனது அதட்டலை சட்டை செய்யாமல், அவனது கைகளைப் பிடித்து வாயில் புறமாக இழுத்தாள் மனோன்மணி.

''Maany, this is the limit. You are going to stop this childish behavior right now'' என அடிக்குரலில் எச்சரித்தவன், பிறர் அறியா வண்ணம் அவளைக் கைப்பிடியாய் அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் அமர வைத்தான்.

அவனது கோபம் கைகளின் அழுத்தத்திலேயே புரிபட்ட போதிலும், அதை ஏற்றுக் கொள்ளும் பகுத்தறிவு தான் மனோவிடம் இல்லாமல் போனது. சுய சிந்தனையைத் தான் பொறாமையும், தன்னிரக்கமும், கணவனின் மேல் கொண்ட கண்மூடித் தனமான காதலும் மழுங்கடித்து இருந்ததே! மழுங்கிய மூளை கிறுக்குத் தனமாய் வேகமாய் வேலை செய்ததன் விளைவாக, அவனது கோபத்திற்கும் மேலாய் அவளைக் கோபம் கொள்ள வைத்தது.



அமர வைத்த நாற்காலியிலிருந்து மனோ எழுந்து கொள்ள முயல, அவளது தோளை அழுத்தி மீண்டும் அதில் உட்கார வைத்தான் அவளது கணவன். ''இந்த விருந்து முடிஞ்சு எல்லாரும் கிளம்பின அப்புறம் தான் நாம வீட்டுக்குப் போறோம். இதில் எந்த விதமான மாற்றமுமில்லை'' என அழுத்திக் கூறியவன், ஓர் கூர் பார்வையுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

## 7

கணவனின் கூர்பார்வை உள்ளத்தை உலுக்க, உதட்டைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் மனோன்மணி. கணவன் கூறியது நியாயம் தான் என உணர்ந்தாலும், மனம் தான் அதைக் கேட்டு நடக்க முரண்டியது. முரண்டிய மனம் அவனை மீறவும் முடியாமல் கோபத்தில் கனன்று கொண்டிருக்க, விருந்திற்கு வந்தவர்கள் மது கோப்பையும், உணவுமாய் கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்தனர்.

மாட்-டும் ஒரு கையில் மது கோப்பையுடன் வலம் வரவே நெஞ்சம் கொதித்தது. வெளிநாட்டில், அதுவும் திருமண விருந்தில் மது அருந்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை அறிந்திருந்தாலும், அதெப்படி அவன் குடிக்கலாம்? என மனம் பேயாட்டம் ஆடியது. (என்ன பாட்டுக்கு? செம குத்து பாட்டோ? ஸ்டெப்ஸ் எல்லாம் ஒழுங்கா போட்டியா மனோ?)

பேயென கோபத்துடன் இருந்த மனோவிடம், ஒரு கோப்பை மதுவைக் கொண்டு வந்து கொடுத்து அருந்துகிறாயா? என மாட் கேட்டபோது, மனதிலிருந்த பேய் கண்ணுக்குள் நுழைந்து, கருமணிகளை பிரேக் டான்ஸ் ஆட வைத்தன. (folk to break... ஹாரர்).

"வெறும் பீர் தான் பேபி" எனக் கூறியவன், மனோ முறைத்த முறையில் சட்டென அடங்கி "ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரட்டா?" என்றான்.

"வேண்டாம்" என வாய் வார்த்தையாக கூறாமல் தலையை இடமும் வலமுமாக ஆட்டியவள், உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்து அமர்ந்து கொண்டாள். அவளது செயல் கணவனைத் தாக்கியதன் விளைவாக மனோவின் மோவாயை பிடித்து நிமிர்த்தி அவன் பேச ஆரம்பிக்கும் முன்னர், ஜூனின் ச்சே ச்சே ஜீனின் குரல் ஓங்கி ஒலித்தது. "ஹே மாட், இங்க வா! டாக்டர் சார்லஸ் கிளம்புறார்" என அவளது அழைப்பில் மனைவியை விட்டுவிட்டு அங்கே விரைந்தான் மாட்.

அவன் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் மனோவின் இதயம் எதையோ இழந்தது போன்ற பிரம்மைக்குள் நுழைந்தது. இப்படியாக அவள் தன் கற்பனை குதிரையை ஜெட் வேகத்தில் தட்டிவிட, அதுவும் தடைகளின்றி பிய்த்துக் கொண்டு ஓடியது. (கடைசில போய் மாட்-டை பதம் பார்க்கப் போகுது... ஹ்ம்ம்)

குதிரைத் தன்னைத் தாக்க வருவதை உணராத மாட்-டோ தன் ஆசிரியருக்கு விடை கொடுத்து, மனோவையும் விடை கொடுக்க வைத்து, பின்னர் ஜீனை



அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு விடை கொடுத்து, அவள் காரில் ஏறும்வரை கை அசைத்துக் கொண்டிருந்தான். (எனக்கு இங்க அல்வா கிடைக்கும் நிலைமையில ஜீனுக்கு டாட்டா-வா? என்ன கொடுமை சரவணன்... ச்சே ச்சே மாட் இது!)

ஜீன் கிளம்பிய சற்று நேரத்தில் வந்தவர்கள் ஒவ்வொருவராக கிளம்ப, அவனிடம் விடைபெற வந்தனர். மாறிய முகத்தை மாறாமல் காத்து (சாப்பிட்டிட்டு சாப்பிடலைன்னு சொல்வாங்களே.. அப்படியா மனோ?) அவர்களுக்குப் பிரியா விடைக் கொடுத்துக் கொண்டிருந்த மனோன்மணி, நிஷாவும் சுதாவும் கிளம்பிய போது அவர்களை நிமிர்ந்து கூட பாராமல் விடை கொடுத்தாள்.

கணவன் சொல் பேச்சைக் கேட்பவள் போல, ஒருத்தருக்கு விடை கொடுத்து முடித்ததும் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டவளை மற்றொருவர் கிளம்பும் போது வரச் சொல்லி அழைக்க வேண்டியதாய் இருந்தது. (சமத்து சக்கரைக் கட்டி! நம்ம மனோவைத் தாங்க கொஞ்சுறேன், புருஷன் சொல்றதை அச்சுப் பிசகாம கேட்கிறா இல்ல, அதான்!)

ஒரு கட்டத்திற்கு மேல் அவளிடம் கெஞ்சுவது செல்லுபடியாகாது என்ற முடிவிற்கு வந்த மாத்யூ (ரொம்பப சீக்கிரம் வந்துட்டா என் ராசா!) அவளைத் தன்னுடன் இழுத்துக் கொண்டே வேலைகளை அனைத்தையும் கவனித்தான், அதே நேரம் விருந்தினரையும் வழியனுப்பினான். அதிலும் ஒரிருவர் "என்ன மாட், புது பொண்டாட்டியைக் கைக்குள்ளேயே வச்சிருக்கியே" என

விஷமமாய் சிரித்தப் போதும் மெலிதாய் புன்னகை செய்தானே ஒழிய தனது பிடியை தளர்த்தவே இல்லை.

''விடு மாட்ட்! விடுன்னு சொல்றேனே... விடு'' என மனோ முணங்கிய வேளையில், ஒரு பார்வையே பதிலாய் வந்தது. ஒரு சிலர் மட்டும் மீந்திருக்க, மாட்ட் மற்றும் மனோவை அவர்களுடன் உணவை முடித்துக் கொள்ளுமாறு அவர்கள் கூற, இரு தட்டுகளில் உணவை எடுத்து வந்த மாத்யூ ஒன்றை மனைவியிடம் நீட்டினான்.

அவன் கொடுத்ததை வாங்கவே யோசித்தவள், அதை உட்கொண்டிருப்பாளா என்ன? சுற்றியிருப்போரின் பார்வைக்காக கையில் இருந்த உணவை கண்ணால் அளந்தாள் அவ்வளவே! (மறந்துட்டியா மனோ, இந்த சூப்பாடு வெளிய இருந்து வந்தது. நீ செய்யல, சோ தைரியமா சாப்பிடுமா செல்லம்)

சுற்றியிருப்போர் பார்வைக்கும் சூடியவன் பார்வைக்கும் வித்தியாசம் உள்ளதல்லவா? அந்த பார்வை வித்தியாசம் மனோவின் கோபத்தை எடுத்துக் காட்ட, அதை தற்போதைக்குக் குறைக்கும் வகை தெரியாமல் மாட்-டும் பேசாமல் இருந்தான்.

ஒருவாறாக விருந்தினர் அனைவரும் கிளம்பிச் சென்ற பின்னர் அங்கிருந்த நாற்காலிகளை ஒழுங்குபடுத்தி, கொண்டு வந்த பொருட்களை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி மனைவியை வழி நடத்தினான்.

கடைசி நபர் வெளியேறி முடித்ததுமே ''வீட்டுக்குப் போகணும், சாவி கொடு'' (உங்க அம்மா இங்க இல்லாததால ''ஆத்தா வையும்''-ஐ விட்டுட்டியா மனோ?) என அனத்த ஆரம்பித்திருந்த மனோவிடம், ''இரண்டு



பேரும் முன்னாடி போகலாம். என்னோட சேர்ந்து இந்த இடத்தை சுத்தம் பண்ணு'' என அடக்கினான் கணவன். (சுத்தம்!?!?! நீ அசுத்தத்தை சுத்தம் செய்யச் சொல்லப் போய், அவள் சுத்தத்தையும் அசுத்தத்தையும் சேர்த்து மேலும் அசுத்தம் ஆக்கிவிட்டால் என்ன செய்வ மாட்ட்? திரும்ப அசுத்தத்தை சுத்தம் செய்வியா? இல்ல அசுத்தத்தை அசுத்தமாவே விட்டுடுவியா? சுத்தமா எல்லாரும் என்னைத் திட்டறதுக்கு முன்னாடி, நானே நிறுத்திக்கிறேன்!)

தன் எண்ணத்திலேயே நின்று வேலைகளை முடித்துக் கொண்டு, மனோவை அழைத்து (இழுத்துச்) சென்றான் மாத்யூ. ''கையை விடு. நான் என்ன சின்னப் பாப்பாவா? எப்போ பார்த்தாலும் கையை, கையைப் பிடிக்கக்கிற'' என எரிந்து விழுந்த மனோவைத் திரும்பிப் பாராமலே, ''பாப்பா தான்! இடம், பொருள், ஏவல் தெரியாமல் நடந்துக்கிற உன்னை பாப்பான்னு சொல்லாம என்னன்னு சொல்றது?'' எனப் பதிலுரைத்தான் மாத்யூஸ்.

''ம்ம்ம், பேய்ன்னு சொல்றது'' என மனோ பல்லைக் கடிக்க, (உண்மையெல்லாம் வாய்ல வருது!!! மாட்-டுக்குத் தெரியாம ரெண்டு பெக் உள்ளே தள்ளிட்டியா மனோ?) மாத்யூ வாய் விட்டுச் சிரித்தான்.

மனோவின் முறைப்பிலும், மாட்-டின் சிரிப்பிலும் சீக்கிரமே அவர்களது வீடு வந்துவிட, மனோவின் கையை விடுவித்த மாட்ட் வீட்டின் கதவைத் திறந்தான். அவன் விடுவதற்காகவே காத்திருந்தவள் போல், அவனைத் தள்ளிக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள். அணிந்திருந்த காலணிகளை இரு உதறலில் கீழே வீசியவள், நேராக படுக்கையில் போய் விழுந்தாள்.

உடுத்தியிருந்த பட்டுப் புடவையுடன் மெத்தையில் சாய்ந்தவள், COMFORTER-ஐ எடுத்து முகம் வரை மூடிக் கொண்டு, விநாடியில் தூங்கிப் போனாள்! நிம்மதியாய் தூங்குவது போல் பாவனை செய்தாள்.

அங்கே மனைவி பொறுப்புகளை உதறியிருக்க, இங்கே கணவனோ அவள் உதறிய காலணிகளை உரிய இடத்தில் எடுத்து வைத்த பின்னர், பரிசு பொருட்கள் அடங்கிய பெரிய பையையும் வரவேற்பறையின் ஒரு பகுதியில் வைத்தான். உடை மாற்றவென படுக்கையறைக்குள் சென்றபோது கூட உடம்பைச் சுருட்டிக் கொண்டு உறங்கும் மனைவியை கவனித்த மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை, மாட்ட்!

இரவு நேரக் குளியலை முடித்துக் கொண்டு உடம்பை உறுத்தாத இரவு உடையை அணிந்து வெளியே வந்த மாட்ட், மனோவின் உடைகள் இருக்கும் அலமாரியை திறந்து அவளுக்கும் ஒரு இரவு ஆடையைக் கையில் எடுத்துக் கொண்டு மனைவியை நெருங்கினான்.

கணவனின் காலடி ஓசைகள் தன்னை நெருங்குவதை உணர்ந்த மனோவின் கைகள், போர்த்தியிருந்த போர்வையை மிக அழுத்தமாக பிடித்துக் கொண்டன.

அவளுக்கு மேல் அழுத்தம் கொடுத்து, போர்வையை பிடிவாதமாக விலக்க முயன்றவனிடம் மனோவும் பிடிவாதமாக போராடினாள். முந்தைய போர்கள் போல இந்த போரில் இருவரும் வெற்றி அடைய வாய்ப்பின்றி போகவே, உடலால் பலசாலியான மாட்ட் வெற்றி கண்டான்.

ஆனால் வெற்றி கொண்ட மிதப்பு கொஞ்சமும் ஏற்படாமல் முகத்தில் யோசனையே படர, மனைவியை



நிமிர்த்தியதில் லேசாய் அதிர்ந்து தான் போனான் எனக் கூற வேண்டும்!

''இப்போ எதுக்கு இழுக்கிற? கொழுப்பா? விடு'' என மனோ அலறியதை லேசான வருத்தத்தோடு பார்த்திருந்த மாட்ட், ''என்ன பேபி, ஏன்டா இப்படி செய்ற? என்னாச்சு உனக்கு?'' என்றான் பரிதாபமாக.

''எனக்கு என்ன ஆச்சா? பைத்தியம் பிடிச்சிருக்கு. அவ்வளவு தான்'' எனக் குரல் உயர்த்திக் கத்திய மனோ, மன இறுக்கம் தாளாமல் சட்டென உடைந்து அழுது விட்டாள். இவ்வளவு நேரம் அவளது பிடிவாதத்தை (மூர்க்கத் தனத்தை) சிறு குழந்தையின் செயலாக எண்ணியிருந்த அவளது கணவனை இந்த அழுகை முழுதாய் இளக்கியது.

''மை டியர் பேபி'' என உள்ளம் உருக மனோவை அள்ளி அணைத்த நிலையில் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''நீ சொன்னதும் வீட்டிற்குக் கூட்டிட்டு வரலைன்னு கோபமா மானி, நாம ஹோஸ்ட்டா இருக்க விருந்தை நாமளே எப்படி பேபி புறக்கணிக்கிறது?'' என அவன் எடுத்துரைக்க முயல, அதை கேட்கும் நிலையில் மனைவி இருந்தால் அல்லவோ?

''அது தான் வர விடாம பிடிச்சு வச்சுக்கிட்ட இல்ல, எல்லாம் உன்னிஷ்டப் படி நடந்த அப்புறம் எதுக்கு இந்த விளக்கம்?'' என முகத்தைத் திருப்பியவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு சீராட்ட வேண்டும் என நெஞ்சம் பரபரக்கத்தான் செய்தது மாட்-டிற்கு. ஆனால் எண்ணியதை செயல்படுத்தினால் மேலும் கோபம்

கொள்வாளோ என்ற பயமும் ஏற்படவே, "சரி மானி, உன் நல்லதுக்காக தான் பேபி" என்றான் மீண்டும் சிறு விளக்கமாக.

"தேங்க்ஸ் போர் தி கேர்" என அவனுக்குக் குத்தலாக பதில் கூறியவள், அவன் கையிலிருந்து போர்வையை இழுக்க முயன்றாள். (தான் பிடிச்ச முயலுக்கு மூணு கால் கூட இல்ல முக்கால் கால் மட்டுமே என்று நிற்பவளை என்ன தான் செய்வது?)

அவளது இழுப்பிற்குப் போர்வையை கொடுக்காமல், உடை மாற்றிய பின்னர் படுக்குமாறு கூறினான் மாத்யூ.

அவன் கூறியதில் இருக்கும் உண்மை உணராமல் "முடியாது" என்ற வார்த்தை பட்டென வந்து விழுந்தது.

"சொல்றதை கேள் மானி" என்ற அவனது அதட்டல் ஆரம்பித்த வினாடியிலேயே, "முடியாது, முடியாது, முடியாது" என அடி வயிற்றிலிருந்து கத்தியவள், சட்டென கட்டிலை விட்டு இறங்கி வெறும் கார்பெட்டில் படுத்துக் கொண்டாள். (போன ஜென்மத்தில் கோர்ட்-ல டவாலி வேலை பார்த்தியா மனோ? இல்ல மூணு தடவை முடியாது-ன்னு சொன்னியே, அதான் கேட்டேன்!)

படுக்கையில் அமர்ந்த நிலையிலேயே விரும்பலின்றே உறக்கத்தைத் தழுவிய மனோவை இமைக்காமல் பார்த்திருந்தான் மாட். விருந்திலிருந்து சீக்கிரம் கிளம்பச் சொன்னதற்கா இத்தனை கோபம்? என வியப்பாக இருந்தது.

சில சமயம் குழந்தைத் தனமாக நடந்து கொள்பவள் தான் என்றாலும் அவளது குழந்தைத்தனம் தான்



அவனை ஈர்த்தது என்பதால் அதை ரசிக்கவே செய்வான் அவன்! ஆனால் இன்று அவளது குழந்தைத்தனம் அளவு மீறிய போது சற்றே குரல் உயர்த்தி தான் அடக்கியது அவளை ரொம்பவே பாதித்துவிட்டது போலவே என தான் அறிந்த ஒரே காரணத்தின் மீதே எண்ணங்களை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவனுக்குத் தான் அவள் மனதில் வைத்திருக்கும் மற்ற காரணங்கள் தெரியாதே? தெரிந்திருந்தால் பிரச்சனை அன்றே தீர்ந்து போயிருந்திருக்குமோ?

என்ன காரணமாக இருந்தாலும், மனைவியின் விசும்பல் மனத்தைக் கரைக்க, அவளைத் தூக்க முயன்றான். ஆனால் மனோ லேசாக முணங்கவே, அவள் தூயில் கலையுமே என்ற அச்சத்தில் சற்று நேரம் தரையிலேயே படுக்கவிட்டான்.

தலையணையாய் செயல்பட்ட முழங்கையை நீக்கி விட்டு, தன் மடியைத் தலையணையாக்கி அவள் தலையைத் தாங்கித் தாலாட்டினான் அந்த அன்புக் கணவன்.

அவனது மடியில் தலை சாய்த்துப் படுத்திருந்தவளின் கூந்தலை மெல்ல மெல்ல வருடிக் கொடுத்தவாறே, அவள் செய்திருந்த தலை அலங்காரத்தை மென்மையாக கலைத்துவிட்டான்.

பனிக்கால மலரின் மேலிருக்கும் நீர்த்துளி போல் ரோஜா வண்ணக் கன்னத்தில் கண்ணீர் வழிந்திருக்க, மெல்ல அதை துடைத்தெடுத்த மாட்-டின் கைகள், அவள் மேனியை இறுக்கிப் பிடித்திருந்த உடைகளை மெல்ல தளர்த்தின.

அவளது அந்த தீண்டலில் மனோ மீண்டும் புரள சற்று நேரம் அமைதி காத்தான். ஒரு மணி நேரத்திற்கு மேலாக உறங்காமல் அவளையே பார்த்து, வருடி முத்தமிட்டு, உருகிக் கொண்டிருந்த மாட், மனைவி ஆழ்ந்து உறங்கிவிட்டாள் என்பதை உறுதி செய்த கையோடு இரவு உடையை அவளுக்கு அணிவித்து கட்டிலுக்குத் தூக்கிப் போய் படுக்க வைத்தான்.

அவள் அருகில் படுத்துக் கொண்டவன், மனைவி யின் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டு "I LOVE YOU SO MUCH BABY. I LOVE YOU" என்றான் ஆத்மார்த்தமாக!

மனதிலிருந்த ஆத்மார்த்தமான காதலுடனே மாட் கண்ணயர, மனோவும் கணவனின் கைகளுக்குள் இருக் கிறோம் என்ற எண்ணமே இல்லாமல் ஆழ்ந்த நித்திரை யில் மூழ்கியிருந்தாள்!

மாட் உறங்குவதற்கு வெகு நேரம் முன்னரே உறங்கி யிருந்தமையால் வெகு சீக்கிரமே விழித்துக் கொண்டாள் மனோன்மணி. ரோஜா மொட்டுகளாய் இருந்த விழிகளை குண்டு மல்லிகைகளாய் மலர்த்திய போது, அவளது புருவ முடிகள் கணவனின் முடி படர்ந்த மார்போடு ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் முகத்தில் யோசனை பரவியது.

அவள் "என்ன யோசனை" என்று சிந்தனை செய்து கொண்டிருக்கும் போதே, மாட் அவளைத் தன்னோடு இறுக்கினான். மூளைக்குள் நுழைந்து சண்டித்தனம் செய்த யோசனைகளை அவளது அனுமதியின்றியே அந்த அணைப்பு களைத்தெறிய, கணவனோடு ஒன் டினாள் மனோ!



உறங்கிக் கொண்டிருந்த கணவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்த மனோவிற்கு நேற்று நடந்த நிகழ்வுகள் பல, நினைவு வந்தன.

உயிருக்கும் மேலாக காதலித்து விட்டு இவன் மேல் எதற்கு கோபம் கொண்டோம்? என எண்ணத் தொடங் கியவளுக்கு, முந்தைய தினம் அவளது தப்புகளாய் தெரிந்த பல செயல்கள் இப்போது சாதாரணமாய், நியாயம் உள்ளதாய் உருமாறின.

அவன் செய்ததில் எது தப்பு என்று பகுத்தறிய தொடங்கியபோது, நேற்று அவளது தப்பாய் தெரிந்த பல இன்று தனது தப்பாய் தோன்றியது! சுதா பேசிய தற்கு அவன் என்ன செய்வான்? என்பதில் தொடங்கி "நீ லூசு மாதிரி பார்ட்டியை விட்டு உடனே கிளம்ப ணும்னு சொன்னதற்கு அடிக்காம விட்டதே பெருசு!" என்பது வரை கணவனுக்காக பரிந்து வந்தது மனது! (எனக்கு அப்படியே புல்லரிக்குது மனோ! என்ன ஒரு கண்டுபிடிப்பு! எங்கேயோ போய்ட்டேமா...)

இவ்வளவுக்குப் பிறகும் லேசான நெருடலாய் இருந்தது ஜீன்! அதையும், பிறப்பு முதல் இந்த நாட்டிலேயே வசித்து வருபவன் விருந்தினரை (ஆண் பெண் வித்தியாசம் பாராமல்) அணைப்பதும், முத்த மிடுவதும் தப்பா? என கணவனுக்காக வாதாடியது மனம்.

பகுத்தறிவது, வாதாடுவது, சப்பை கட்டுக் கட்டுவது எல்லாம் சரி தான்! தன் பிரச்சனையைக் கணவனுடன் பகிர்ந்து, இருவருமாய் அதை ஆராய்ந்து தீர்வு கண்டிருந் தால்....

# 8

கணவனிடமிருந்து தன் மேல் திசை மாறியிருந்த கோபத்தைத் தூசி போல் உதறியவள், எழுந்து அமர்ந்து கணவனை உற்று நோக்கினாள்.

''இருந்தாலும் ரொம்ப பொறுமைடா மட்டி உனக்கு'' எனச் செல்லமாக அவனைச் சீராட்டியவளுக்கு நேற்று தான் நடந்து கொண்ட முறையினால் மாத்யூ கோபத்தில் இருக்கிறானோ என்ற சந்தேகம் சட்டென எழுந்தது. (கோபமா? அவனுக்கா? நீ தான் லூஸுன்னா அவனும் லூசா என்ன? என் கதைக்கு ஒரு லூசு போதும் தாயே!)

முந்தைய இரவு தன் வசமிழந்து கத்திக் கூச்சலிட்டதையும், உடை மாற்றாமலேயே தரையில் படுத்ததையும் நினைத்துப் பார்த்தவள், தன் செயலுக்காக வெட்கியதோடு நில்லாமல், தனக்கு உடை மாற்றி கட்டிலில் தன்னருகே படுக்க வைத்துக் கொண்ட கணவனுக்குக் கோபமோ என்ற எண்ணத்தையும் உடனேயே கைவிட்டாள். (நீ நல்லவளா? கெட்டவளா? மனோ!)

நேற்று செய்த குழந்தைத்தனத்திற்கு ஈடுகட்டும் விதத்தில், கணவனை நெருங்கி அமர்ந்து அவனது தலையைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள். அவனது தொடுகையில் விருட்டென கண்களை மலர்த்திய மாட்டும், மனைவியின் இடுப்பைக் கட்டிக் கொண்டான்.



குனிந்து அவன் காதுக்குள் ''சாரி மாட்ட், நேத்திக்கு ரொம்பச் சின்னப்பிள்ளைத்தனமா நடந்துக்கிட்டேன். சாரி'' என்றாள் மனோன்மணி, மிக மெல்லிய குரலில்! (இதையும் சத்தமா சொல்றது தானே? நேத்திக்கு மட்டும் அடி வயிற்றில் இருந்து கத்தினே?)

''பேபிக்குக் கோபம் போயாச்சா? சாரி கேட்கிற அளவுக்குக் கோபம் கம்மி ஆகிடுச்சு போலவே!'' எனச் சிரித்த மாட்ட், எழுந்து அமர்ந்து கொண்டான். எழுந்ததோடு நில்லாமல் மனைவியைத் தன் கைகளுக்குள் கொண்டு வந்து படுக்கையில் சாய்ந்து கொண்டான்.

''நேத்து... நேத்து... சாரி மாட்ட்! நான் அப்படி நடந்துக்கிட்டு இருக்கக் கூடாது! அதுக்கு என்ன விளக்கம் சொல்றதுன்னு தெரியல மாட்ட். சாரி. இனிமேல் இப்படி செய்யமாட்டேன் மாட்ட்'' என்றாள் மனோ மீண்டும் மிக மெல்லிய குரலில். (குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சுங்கிறது மாதிரியே பேசுறியே!)

''இட்ஸ் ஓகே டியர்!'' என அவளைச் சமாதானம் செய்த மாத்யூவும் சற்று நேரம் பேசாமல் அவளது நெருக்கத்தை அனுபவித்தான்.

சற்று நேரம் சென்ற பின்னர், ''திடீர்னு என்னாச்சு மானி? என் மேல ஏதாவது கோபமா? என்மேல உனக்கு என்ன கோபமிருந்தாலும் நேரடியா கேட்டுடு பேபி. மனசுக்குள்ளேயே வச்சுக்காதே! ப்ளீஸ் பேபி'' என்றான் மாட்ட், அவள் நெற்றியில் ஓர் முத்தம் வைத்து!

இப்படி வெளிப்படையாக பேசுபவனிடம் ''நீ ஏன் ஜீனிடம் வழிந்தாய்?'' என்று மனோவால் கேட்க முடியவில்லை. ''YOU ARE LOOKING HOT BABY'' என்று

அவளைப் பற்றிய ஒரு சின்னப் பாராட்டு தவிர அவன் வேறு என்ன தவறு செய்தான் என மனம் வேறு அவனுக்காக வாதாடியதில், "உன் மேல கோபமில்ல மாட்ட். அப்பா-அம்மா ஞாபகம் வந்துடுச்சு. நமக்கு யாருமில்லை என்ற எண்ணம் வந்ததும் தன்னிரக்கத்தோடு பிடிவாதமும் கூடவே அடமும் சேர்த்து வந்துடுச்சு" என்று பாதி உண்மையை மட்டும் கணவனிடம் பகிர்ந்தாள் மனைவி.

"உனக்கு நான் இருக்கேன் மானி பேபி" என்ற அவனது பதிலில் சட்டென உடல் சிலிர்க்க, அவனை இறுக அணைத்துக் கொண்டு "தேங்க்ஸ் மாட்ட், சாரி மாட்ட், தேங்க்ஸ் மாட்ட், தேங்க்ஸ், தேங்க்ஸ், வெரி சாரி" என இடைவிடாமல் புலம்பிக் கொண்டே இருந்தாள் மனோன்மணி!

"எனக்கு தேங்க்ஸ் வேண்டாம்" என்று அவளைத் தன்னிடமிருந்து பிரித்தவன், தனக்கு வேண்டியதை அவளிடமிருந்து எடுத்துக் கொண்ட பின்னரே கட்டிலை விட்டு கீழிறங்க விட்டான். (மாட்ட், அக்மார்க் கணவன்டா நீ)

"நீ ரொம்ப மோசம். பல் கூட விலக்கல... உவ்வே... ஷை" என மூக்கைப் பிடித்துக் கொண்டு, முகத்தைச் சுருக்கியவளை கை நீட்டி மாட்ட் மீண்டும் இழுக்கும் முன்னர், ஓட்டமாய் ஓடி குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

குளித்து முடித்தவள், கதவை லேசாக திறந்து, தலையை மட்டும் வெளியே நீட்டி கணவனைத் தேட அவனோ அவளது எதிர்பார்ப்பை வீணடிப்பது போல்



அறைக்குள்ளேயே இருக்கவில்லை. எழுந்த ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு வரவேற்பறைக்குள் வந்தால், மாட்ட் சமையற்கட்டில் அடுப்பின் முன்னே நின்று கொண்டிருந்தான்.

சத்தமின்றி அவன் பின்னே சென்று நின்றவள், அவன் முதுகோடு ஒட்டி நின்று கொண்டு, அவன் கைவளைவில் தலையைக் கொடுத்து, அவன் செய்து கொண்டிருந்த சமையலைக் கண்ணுற்றாள்.

கெட்டிலில் பால் சூடு பண்ணிக் கொண்டிருந்தன், தன் கைவளைவில் இருந்த அவளது தலையை லேசாக கலைத்துவிட்டு "உனக்குக் குடிக்கிறதுக்கு என்ன வேணும் மானி?" என கடமை கணவனாய் வினவினான். (பொறாமையைக் கிளப்புறதே உனக்கு வேலையா போச்சுடா மாட்ட்)

"சாய் லாட்டே" என்ற பதில் பட்டென வந்து விழ, "எனக்குப் போடத் தெரியாதே!" என்றான் மாட்ட் கொஞ்சம் பரிதாபமாக. (இந்த சாய் லாட்டேயை விட மாட்டீங்களாடா சாமிகளா?)

"ஓகே. நான் போடறேன். ஆனா பிரேக்ஃபாஸ்ட் நீ தான் செய்யணும். சரியா?" என்ற பேரத்தை முன் வைத்து, அவன் சரி என்றதும் தேநீர் தயாரித்தாள்.

இருவருமாய் தேநீர் அருந்தி முடித்ததும், மாட்ட் பிரெஞ்சு டோஸ்ட் செய்கிறேன் எனக் கூற, "எனக்கு பிரெஞ்சு டோஸ்ட்ல சுகர் போடாதே... என்ன மாட்ட்? பெப்பர் போடு. கொஞ்சம் உப்பும்" என அவனுக்குக் கட்டளையிட்டாள்.

அவளது கட்டளையில் வியந்து, ஒரு விநோதப் பார்வையை அவளிடம் செலுத்தியவன் "அப்போ

அதுக்குப் பேர் பிரெஞ்சு டோஸ்ட் இல்ல மானி'' என கூறிச் சிரித்தான் கணவன்.

''எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் சொல்ல வேண்டியதில்ல'' என முகத்தைத் திருப்பிக் கொண்டு பதிலளித்தவள், மாத்யூ அங்கேயே நிற்பதைக் கண்டதும் ''என்ன வேடிக்கை?? ம்ம்ம் போ போய் வேலையைப் பாரு'' என அவனது முதுகில் கை வைத்து சமையலறைக்குள் தள்ளிவிட்டாள். (வேடிக்கை பார்க்கிற பொருள் மாதிரி நீ நடந்துக்கிட்டா, அவன் பார்க்கத்தான் செய்வான்)

''நீயும் என் கூட வந்து கிட்சன்ல உட்கார்ந்துக்கோ'' என்ற வேண்டுதலுடன், தன் பின்னே நின்றவளை முன்னே இழுத்து, அவளது தோளில் கை வைத்து சமையலறைக்குள் தம்பதியாக நுழைந்தான் மாத்யூஸ்.

கைகளை அகல விரித்து, தலையை இடப்புறம் சரித்து கணவன் புறம் திரும்பிய மனோ, ''என்னைத் தூக்கி மேடைமேல உட்கார வைக்கிறியா'' என்றாள் மையலுடன். மையல் பார்வை என்ன? சாதாரண வார்த்தையிலேயே அவள் கூறியதை கட்சிதமாய் செய்யும் கணவன் இப்போது மறு பேச்சின்றி அவள் சொன்னதை நிறைவேற்றினான். (இதில ஒண்ணும் குறைச்சல் இல்ல... ஹூக்கும்)

முட்டையை உடைத்து, அதை பீட் செய்து, அவனுக்கு ஒரு பாத்திரத்திலும், மனோவிற்கு ஒன்றிலும் ஊற்றி, தனதில் பிரெஞ்சு டோஸ்ட்க்கான பொருட்களை இட்டு, அவளதில் பிரெஞ்சுக்கு எதிரான டோஸ்ட்க்கான பொருட்களை இட்டு, அவளுக்குக் காலை உணவை மாட் தயாரிக்க மனோவோ அவன் செய்வதை வேடிக்கை பார்த்தபடி சலசலத்துக் கொண்டிருந்தாள்.



''இந்தியால என்ன பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடுவீங்க?'' என்ற அவனது ஒரு கேள்விக்கு,

''இட்லி, தோசை, பூரி, பொங்கல், உப்புமா, அப்புறம் குழிப்பணியாரம், ஆப்பம், அடை, புட்டு... வித் தேங்காய்... இதெல்லாம் மெயின் டிஷ் மட்டும் தான்'' என ஆரம்பித்து, ''வடை, கேசரி, மசாலாப் பணியாரம், கந்தரப்பம்'' என்ற இதர இணைப்புகளில் இணைந்து ''ரவா இட்லி, ரவா தோசை, கோதுமை தோசை'' போன்ற மொடுலேஷன்களில் ஐக்கியமாகி, ''சாம்பார், சட்னி, குருமா, கொஸ்து, வடைகறி, தேங்காய்ப்பால், வெல்லம்'' என்ற சைடு டிஷ்களை ட்ரைலரில் ஓட்டி முடித்தாள்! (இந்தியால ஏதும் ஹோட்டல்ல வேலை பார்த்தியா மனோ?)

பேசிய அவளுக்கு மூச்சு வாங்கியதோ இல்லையோ கேட்டிருந்த மாட்-டிற்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது.

இவளை விட்டால் பேசிக் கொண்டே போவாள் போலவே என்றெண்ணியவன், மனைவியின் வாயை அடைக்கும் வண்ணம் போட்டு முடித்திருந்த பிரெஞ்சு இல்லாத டோஸ்ட்டை அவள் வாயில் திணித்தான். அதோடு நிறுத்திக் கொள்ளாமல், ''இதெல்லாம், நீ எனக்கு எப்போ செய்து தரப்போற?'' என அவன் கேட்டக் கேள்வியில் மனோவின் வாயிலிருந்த பிரெஞ்சு டோஸ்ட் கீழே விழுந்தது. (அப்படிப் போடு போடு போடு, அசத்தி போடு கண்ணாலே (வாயாலே))

''என்ன மானி இது?''என்று கடிந்து கொண்டவாறே கீழே விழுந்த துண்டுகளை எடுத்துக் குப்பைத்

தொட்டியில் போட்ட மாட்ட், மனைவி இன்னமும் பதில் சொல்லாமல் வாயை பிளந்த வண்ணம் இருப்பதைப் பார்த்துவிட்டு, அவளது கீழ் தாடையை மெல்ல தட்டிக் கொடுத்து மேல் தாடையோடு ஒட்ட வைத்தான்.

செய்து தருகிறேன் அல்லது செய்ய மாட்டேன் என ஒரு பதிலைக் கூறாமல், "நேற்றைக்கு நைட் வேற நான் சரியாவே சாப்பிடலை. இப்பவும் சாப்பிட விடாம நொய் நொய்ன்னு கேள்வி கேட்கிற" எனப் பேச்சை மாற்றியவள், அவன் செய்து வைத்திருந்த உணவைக் கையில் எடுத்துக் கொண்டு உணவு மேசைக்குச் சென்று, அதே கவனமாக உண்ணவும் தொடங்கினாள்.

"அது என்னோட பிரெஞ்சு டோஸ்ட் பேபி, இது தான் உனக்காக பண்ண வேரியேஷன்" என மாட்ட் சிரிக்காமல் சொல்ல, 'ஙே" என அசடு வழிந்து விட்டு தட்டை மாற்றிக் கொண்டு உண்ணத் தொடங்கியது மனோவே தான்!

"நீ சொன்ன டிஷ் எல்லாம் உனக்குப் பண்ணத் தெரியாதா பேபி?" எனக் கேட்டு, மனைவி பதில் கூறும் முன்னர் "சாப்பிட மட்டும் தான் தெரியுமா.... சாரி தெரியாம கேட்டுட்டேன்" என அவனே பதிலும் சொல்லிக் கொண்டான். (வாழ்க்கையில முதல் முதலா உன் வாயிலிருந்து ஒரு அரும் பெரும் உண்மை வந்திருக்குடா என் ராசா!)

"யு, யு" எனக் கைகளைக் குரங்கு போல் வைத்துக் கொண்டு மனோ பாயத் தயாராக "மீ, மீ" என அவளை ஏற்றிவிட்டான்.



அவன் ஏற்றி விடவே தேவையில்லை என்பது போல மாட்-டின் மீது பாய்ந்து, பிராண்டி, விளையாட்டுகளில் இறங்கி, கொஞ்சி, மிஞ்சி, இருவருமாய் உணவை உண்டு முடித்தனர்.

அடுத்த நாள் முதல் அலுவலகம் செல்ல வேண்டும் என்பதால் அன்றைய பொழுது முழுவதையும் வீட்டிலேயே கழித்தனர் தம்பதியர். பரிசு பொருட்களை பிரிப்பதும், அதை பற்றி மனோ கூறும் கமெண்ட்டை மாட்ட் ரசிப்பதும், அதை உரிய இடம் பார்த்து வைப்பதும் என நேரம் செல்ல, இரவு கனிந்து, காதலுடன் காமம் கலந்து உறவாடி விடியலை வெறுத்தது.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்

நாண நன்னயம் செய்துவிடல்" என்ற குறளை சூரியனும் படித்திருப்பானோ? தம்பதியரின் வெறுப்பை சம்பாதித்தப்பின்னரும் அவர்களுக்கு அந்த நாளை அழகான சூர்யக்கதிர்களுடன் விடிவெள்ளியாகவே ஆரம்பித்து கொடுத்ததைப் பார்க்கும்போது ஆதவன் கண்டிப்பாக குறளைப் படித்திருப்பான் என்றே தோன்றுகிறது!!

மாட்ட் சுறுசுறுப்பாக எழுந்து தன் ஆய்வகத்திற்குக் கிளம்ப, மனோ தான் தவித்துப் போனாள். படுக்கையிலிருந்து எழுந்து கொள்ள மனமில்லாமல் படுக்கையிலேயே புரண்டு கொண்டிருந்தவளை "ஹே மானி, வேலைக்கு நேரமாகுது பேபி! எழுந்துக்கோ" என மாட்ட் கிளம்பிய பின்னர் கூட மனோ கட்டிலை விட்டு இறங்கவே இல்லை. (சோம்பேறிக் கழுதை)

ஒரு முறை அவளைக் கிளம்புமாறு கூறிய மாட்ட் அதன் பின்னர் தன் போக்கில் வேலைகளைப் பார்க்க துவங்கினான். ஆனால் கணவனின் கவனம் தன் மேல் விழவில்லை என்றுணர்ந்த மனோவிற்குப் பொறுமையாக இருக்க முடியவில்லை ''ஏன் கிளம்பலைன்னு கேளு மாட்ட்'' என அவன் கவனத்தைத் தானாக தன் புறம் திருப்பினாள்.

''ஏன்டா'' என வாஞ்சையுடன் கேட்டவாறே அவள் அருகே அமர்ந்து தலையை வருடிக் கொடுக்க, ''நான் வீட்டிலேயே இருக்கவா? எனக்கு வேலைக்குப் போக வேண்டாம்'' என்ற விளக்கத்துடன் கணவனிடம் ஒன்டியவளை நிமிர்த்தி, ''வீட்டில இருக்கியா? நான் வேலைக்குப் போன அப்புறம் நீ தனியா இருக்கணும் மானி. ரொம்ப போர் அடிக்கும் டியர்'' என மாட்ட் தன் வியப்பை மறைக்காமலேயே அவளுக்கு எடுத்துக் கூற, மனைவியோ அவனை மேலும் ஒண்டினாள்.

''என்னமா?'' என அவன் மீண்டும் வினவ, அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ''ம்ம் சரி போறேன்'' என அவனது கூற்றிற்கு அரைமனதாக இசைந்தாள்! ''நீ தான் வொர்க்ல ட்ராப் பண்ணணும். நீ தான் வொர்க் முடிஞ்சதும் திரும்ப கூட்டிட்டு வரணும். என்ன சரியா?'' என்ற நிபந்தனையின் பெயரில்!!

என்னதான் நிபந்தனையை முன்வைத்து, கணவன் அதை ஏற்றுக் கொண்ட போதும் மனோவை வீட்டை விட்டுக் கிளப்புவதற்குள் மாட்ட் பெரும்பாடு பட்டுப் போனான்.

''டிரஸ் மாற்றி கிளம்பு'' என்றால் ''குளிக்கணும்'' என்றாள்.



''சரி குளி'' எனக் குளியலறைக்குள் பிடித்துத் தள்ளி விட்டால், வெளியே வருவதற்கு அரை மணி நேரம் ஆக்கினாள்.

குளித்து முடித்து வந்தவளை வேலை இடத்திற்குத் தகுந்த உடையை அணியுமாறு பத்து நிமிடம் கெஞ்ச வேண்டியதாய் இருந்தது.

ஒருவாறாக குளித்து, உடை மாற்றி, தலை வாரி வெளியே வந்தவளிடம் காலை உணவைக் கொடுத்து உண்ணச் சொன்னால், அதை ஒதுக்கிவிட்டு கைகளை உணவு மேஜை மேல் வைத்து, அதில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு வேண்டாமென தலையசைத்தாள்.

பள்ளி செல்லும் சிறுமியைக் கூட சீக்கிரம் கிளப்பி விடலாம் போல, மாட்ட் அவளிடம் பாடாய் பட்டுப் போனான்!

தார்குச்சி போடாத குறையாக மனோவை வீட்டை விட்டுக் கிளப்பி, அவளது அலுவலக வாசலில் இறக்கி விட்ட மாத்யூ, W.H.O. வின் ஆராய்ச்சி மையம் நோக்கித் தன் பயணத்தைத் துவக்கினான்.

மனமே இல்லாமல் அலுவலகம் வந்த மனோவிற்கும் வெகு விரைவிலேயே வேலையில் கவனம் திரும்பியது. மதிய உணவு நேரம் வரை வேலையை மட்டும் கவனித்தவள், மதிய உணவை சூடு செய்ய மைக்ரோவேவில் வைத்த போது, மாட்ட்-டின் கைப்பேசி எண்ணை கைகள் தாமாக அழுத்தின.

ஒரே மணியில் கணவன் கைப்பேசியை எடுத்துவிடுவான் என மனோ எண்ணவில்லை என்றபோதிலும் முழு மணியும் அடித்து ஓயும் வரை மாட்ட் தன் கைப்பேசியை உயிர்ப்பிக்கவில்லை.

முழு உணவும் வயிற்றுக்குள் சென்று முடியும்வரையிலும் கூட மாட்ட்-டை அழைப்பதை அவள் நிறுத்தவில்லை!

கைகள் சளைக்காமல் அவனது எண்ணை அழுத்திக் கொண்டே இருந்தன. கடைசி வாய் உணவும், கடைசி முறையான அழைப்பும் என அவள் எண்ணியபோது கண்களில் நீர் கோர்த்துவிட்டது. வேலைக்குக் கிளம்புவதில் தான் காட்டிய விருப்பமின்மையை கண்ட பின்னரும், தன் அழைப்பை அவன் எடுக்கவில்லை என்பது நெஞ்சைப் பிசைந்தது. (ஆரம்பிச்சுட்டாயா ஆரம்பிச்சுட்டா! இனி அடங்க மாட்டாளே!)

ஆனால் ஐந்தே நிமிடங்களில், பல நாள் விடுமுறைக்குப் பின்னர் இன்று தான் வேலையில் சேர்ந்திருப்பதால் வேலைப்பளு அதிகமாக இருந்திருக்கும் எனத் தன்னைத் தானே சமாதானமும் செய்து கொண்டாள்.

வருத்தமும் சமாதானமும் மாறி மாறி வந்து கொண்டிருக்க, பத்து நிமிடத்திற்கு ஒரு முறை மாட்ட்-டின் எண்கள் மனோவின் கைப்பேசியில் அழுத்தப்பட்டன.

வேலை நேரம் முடியும் வரையிலும் கூட மனோவின் அழைப்பு எடுக்கப்படவில்லை. அழைப்பை எடுத்துப் பேசாதது கூட பரவாயில்லை என்பது போலிருந்தது. ஐந்து மணியளவில் மனோவின் கைப்பேசிக்கு வந்த "வேலை அதிகமாக உள்ளதால் உன்னை இன்று வீட்டிற்கு அழைத்துச் செல்ல வரமுடியாது. வாடகை வண்டி பிடித்து வீட்டிற்குச் சென்று விடு. சாரி டியர்" என்ற குறுந்தகவல்!! (மனோ மாரியாத்தா... சாமியாட ரெடி! பார்க்க நீங்க ரெடியா?)



# 9

மாட்ட்-டின் குறுந்தகவல் தனது கைப்பேசிக்கு வந்த வினாடி மனோவின் முகம் விகசித்தது. இவ்வளவு நேரம் வேலையாக இருந்திருப்பான். இப்போது வேலை முடிந்ததும், மனைவி ஞாபகம் வந்துவிட்டது. தன்னை வீட்டிற்கு அழைத்துப் போக வந்து கொண்டிருப்பதாக குறுந்தகவல் அனுப்பியிருக்கிறான் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, குறுந்தகவலைப் படித்தவளுக்கு சற்று நேரமாக குறைந்திருந்த தவிப்பு ஒரே வீச்சில் உச்சிக்குச் சென்றது! கூடவே கோபமும்! (சாக்லேட்டை எதிர்பார்த்து மனோ காத்திருக்க சாக்லேட் பேப்பர் கூட இல்லை போலவே! அச்சோ பாவம் குழந்தை!)

காலையில் தான் இட்ட நிபந்தனையை கணவன் பொருட்டாகவே எண்ணவில்லை என்பதில் தொடங்கி, மன சஞ்சலத்துடன் வேலை சென்ற தன்னை ஒரு முறை கூட கணவன் அவனாக அழைக்கவில்லை என்பதில் பூதாகரமாகி, தானாக ஆயிரம் முறை அழைத்தபோது கூட அவன் எடுக்கவில்லை என்பதில் வெடித்து, தன்னை அவன் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல வரவில்லை என்பதில் உடைந்தது. (ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி - நல்ல கதையா இருக்கே இது?)

ஒரு கண்ணில் கோபமும், மறு கண்ணில் கண்ணீருமாக அலுவலக வளாகத்திலிருந்து கிளம்பினாள் மனோன்மணி. மாட்ட் கூறியது போல் டாக்ஸி பிடித்து

வீட்டிற்குச் செல்லாமல், திருமணத்திற்கு முன்பு செல்வதை போல நகரப் பேருந்து பிடித்து வீடு வந்து சேர்ந்தாள். (பெட்ரோல் செலவை மிச்சம் பண்ணினதுக்கு ஒரு நல்ல குடும்பத் தலைவியா நீ பெருமை படணும் மனோ! அதை விட்டுட்டு...)

திருமணம் முடிந்து முதன்முதலாக வேலைக்குச் செல்லும் நாளே இப்படி நடக்க வேண்டுமா என மனம் கிடந்து அலை பாய்ந்தது.

உள்ளே நுழைந்த வேகத்தில், காலணி, கைப்பை, கைப்பேசி என ஒவ்வொன்றும் திசைக்கு ஒன்றாக பறந்தன. (இது வீடு திருமதி. மனோன்மணி, கிரிக்கெட் கிரௌண்ட் அல்ல! நீ பாட்டுக்குத் தூக்கிப்போட்டா, அதை பிடிக்க பத்து fielders-ஆ இருக்காங்க)

முட்டிய கோபத்தை வெளிக்காட்ட ஆள் இல்லாமல் போகவே, வரவேற்பறையிலிருந்த சோபாவில் போய் விழுந்தவள், இரு கால்களையும் மடக்கி அமர்ந்து, சோபாவிலிருந்த சிறு தலையணையில் முகம் புதைத்துக் கொண்டு சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

தனக்கு யாருமில்லை என்ற பரிதவிப்பு மனதில் பரவி, ஏற்கனவே அனல் போலிருந்த கோபத்தை ஏற்றிக் கொண்டே போனது. கோபத்தைக் கொட்டி வடிகால் தேடிக் கொள்ள யாருமில்லாமல் போகவே, தன் கையாலாகாத தனத்தை தலையணையைத் தூக்கி எறிந்து காண்பித்தாள்.

தலையணை பறந்த வேகத்தில், சோபாவின் அருகே இருந்த சின்ன மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தைக் கீழே தள்ளிவிட்டது. ஸ்ரீவில்லிப்



புத்தூரில் அவர்களது திருமணம் முடிந்து வெளியே வந்தவுடன், அங்கிருந்த ஒரு ஆட்டோ டிரைவரிடம் கேமராவைக் கொடுத்து அவர்கள் இருவரையும் தம்பதியாக எடுத்தப் படம் தான் அது!

வேகமாக ஓடிச் சென்று கீழே விழுந்த படத்தை எடுத்தவள், அந்தப் படத்தில் மாட்ட்-டின் கைகள் மனோவின் தோளில் மிக அழுத்தமாக பதிந்திருக்க, வெட்கமும் நாணமும் போட்டியிட கணவனின் கைகளுக்குள் அடங்கியிருக்கும் தன்னைக் கண்டு வெட்கினாள்.

தான் மட்டும் தான் அவன் மேல் பைத்தியமாக இருக்கிறோமோ? அவன் தன்னை நினைப்பதே இல்லையோ? என்றெல்லாம் எண்ணங்கள் தறிக்கெட்டு ஓடிக் கொண்டே இருக்க, நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்க, எடுத்த படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மீண்டும் சோபாவில் விழுந்தாள். (உன்னைக் காதலிக்கிறான் என்பதற்காக அவனுக்கு வெளி வேலையே இருக்கக் கூடாதா? நல்ல கதையா இருக்கே இது!)

எவ்வளவு நேரம் அப்படி கழிந்ததோ மனோ அறியாள்! அவளது மோனத்தைக் கலைக்கும் வண்ணம் தொலைபேசி கிணுகிணுத்தது. அருகிலிருந்த கார்ட்லெஸை எடுத்துப் பார்த்தவளின் கண்களில் மாட்ட்-டின் கைப்பேசி எண்கள் அதில் மிளிரவே, சற்று அடங்கியிருந்த கோபம் படாரென வெடித்தது. அந்த படார் வெடிப்பின் விளைவாக தொலைபேசி எடுக்கப்படாமலே வைக்கப்பட்டது. (சத்தம் கம்மியா வெடிச்சதா? எனக்குக் கேட்கவே இல்லையே! இன்னொரு தடவை வெடிச்சு காட்டுறியா?)

இத்தனை நாட்கள் மனோவுடன் வாழ்ந்த
கைக்கு அர்த்தம் சேர்க்கும் வண்ணம், மாட்ட்-
தொடர்ந்து மூன்று முறை முயன்றான். எத்தனை மு
முயன்றபோதும் மனோ அவனது அழைப்பை ஏ
காமல் இருக்கவே, தொலைபேசியை விடுத்து கை
பேசியை அழைக்க ஆரம்பித்தான் மனோவின் கணவ
(மனோ போனால் வினோ என்றில்லாமல் தொலை
பேசி போனால் கைப்பேசி என்றிருக்கும் மாட்ட்
வாழ்க!)

வேலை முடிந்து வீடு வந்து சேர்ந்தபோது, கை
லிருந்த பொருட்களை மனோ விட்டெறிந்த வேகத்தி
சமையலறையில் எங்கேயோ ஒரு மூலையில் காண
பட்டது.

ஆனால் தொலைபேசியில் அழைத்த கணவன்
கைப்பேசியில் அழைத்துத் தன்னை தொல்லை செ
வான் என்று கூட தெரியாத முட்டாளா என்ன மனோ
மணி! அதனால் கைப்பேசியை கண்டு கொள்ளா
லேயே சோபாவில் அமர்ந்து இரு காதுகளையும் இறுக
மூடி கொண்டாள். (ச்சே ச்சே, மனோவாவது முட்டா
ளாவது... அது ஒரு அடி முட்டாள்!)

தொடர்ந்த பத்து அழைப்புகளின் பின்னர் கைப்பேசி
யும், தொலைபேசியும் மௌனவிரத மோடிற்குச்
சென்றுவிட, இப்போதும் மனோவிற்கு கஷ்டமாக
இருந்தது. கோபமோ, காதலோ, காதலால் விளைந்த
கோபமோ, ஏதோ ஒன்று பசியைத் தூண்டி விட்டிருக்க
சமையலறைக்குள் சென்று ஏதேனும் உண்பதற்கு இருக்
கிறதா எனத் தேடினாள் மனோ! (உலகமே அழிஞ்சாலும்
நமக்கு சாப்பாடு தானப்பா முக்கியம் என்பதற்கு அரிய



எடுத்துக்காட்டு எங்கள் தானைத் தலைவி, மனோன்மணி!)

சமையலறையினுள் காலடி எடுத்து வைத்த நேரத்தில், மனோவின் கால்கள் அவளது கைப்பேசியை மிதிக்க, அது அந்த நேரம் பார்த்து "பீப் பீப்" என ஒலி எழுப்பி, அவளைத் துள்ளி விழ வைத்தது.

"சை, இது ஒண்ணு" என அர்ச்சித்தவாறே அதை எடுத்தவளின் கண்களில் மாட்ட்-டின் எண்ணிலிருந்து வந்திருந்த அடுத்த குறுந்தகவல் கண்ணில் பட்டது. இப்போதென்ன... இன்று எனக்கு நிறைய வேலை இருக்கு. அதனால் வீட்டிற்கு வர முடியாது என்று அனுப்பியிருப்பான் என்ற எண்ணத்துடனே குறுந்தகவலைத் திறந்தவளுக்கு "DEAR, ARE YOU SAFE?" என்ற செய்தியைக் கண்டதும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

ஆனால் மனதில் நிரம்பி வழிந்து கொண்டிருந்த தன்னகங்காரமோ கணவனுக்குப் பதில் அனுப்ப இடம் கொடுக்கவில்லை. கைகளை இறுக மூடித் திறந்தவள், கைப்பேசியை அணைத்துப் போட்டாள். அதன் பின்னர், வயிற்றுக்குள்ளிருந்து கத்திய குருவியை அடக்க சமையலறை அலமாரிகளை உருட்ட ஆரம்பித்தாள். கையில் அகப்பட்ட சிப்ஸ் பாக்கெட்டை ஒரே மூச்சில் சாப்பிட்டு முடித்தவள், பெரிய டம்ளர் நிறைய தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுக்கையறைக்குள் போய் முடங்கினாள்.

சாப்பிடும் வரை பசியே பிரதானமாய் இருக்க, உணவு உள்ளே சென்றதும் மனோவின் கோபங்கள் மீண்டும்

தலை தூக்க ஆரம்பித்தது. படுக்கையறையில் இருந்
தால் கோபத்தோடு தாபமும் சேர்ந்து கொ
நேற்றைய இரவு கணவன் கையில் துவண்டது நி
வில் நர்த்தனமாடி இன்றைய உறக்கத்தை வெரு
கலைத்தது.

முந்தைய இரவையும், இன்று தன்னை ஏமாற்றி
கணவனையும் எண்ணி எண்ணி நோகக் கூடாது என்
முடிவோடு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்
உறங்கப் போன வேளையில் வெளிக்கதவைத் திறந்
கொண்டு மாட்ட் உள்ளே நுழைந்தான்.

'வந்துட்டார் மகாராஜா... ஆபீஸ்லேயே குடும்ப
நடத்த வேண்டியது தானே' என மனதிற்குள் கறுவிய
மனோ அசையாமல் படுத்திருக்க, வீட்டிற்குள் வேகமா
நுழைந்த மாட்ட் ''மானி, மானி'' என்ற அழைப்பி
பதைப்புடன் வந்தான்.

உள்ளே காலடி எடுத்து வைத்த வினாடியே மனோ
வீட்டிற்கு வந்துவிட்டது மாட்ட்-டிற்குப் புலப்பட்டு
விட்டது. பின்னே, மனோவின் கழட்டி எறியப்பட்ட
காலணி தான் அவனைத் தட்டிவிட்டு தாலாட்டியதே!

''ஹப்பாடா'' என்ற நிம்மதி பெருமூச்சுடன் நிமிர்ந்
தவன், மனைவி பண்ணி வைத்திருந்த அலங்கோலங்
களை சரி செய்தான். சமையல் மேடையிலிருந்த அவனது
கைப்பேசியை எடுத்துப் பார்த்தவன், தற்காலிக ஓய்வு
பெற்றிருப்பது புரிய, அதற்கு வேலை கொடுத்ததோடு
நில்லாமல் அதில் வந்த அழைப்புகளைக் கண்ணுற்
றான். வந்த அழைப்புகளை விட அதிலிருந்து போன
அழைப்புகளே அதிகமாக இருக்க, மனைவியின்



தற்போதைய மனநிலையை ஓரளவு கணிக்க முடிந்தது,
மாத்துவால்!!

மனோ சாப்பிட்டு விட்டுப் போட்டிருந்த காலி சிப்ஸ்
பாக்கெட்டை கண்ட போது மாட்ட்-டின் முகத்தில்
லேசாக சிரிப்பு படர்ந்தது. ஆனால் அந்த சிரிப்பு மனைவி
பசியில் இருப்பாளே என்ற வருத்தத்தில் உடனே மறைந்
தும் போனது.

வரவேற்பறை, சமையலறை இரண்டிலும் மனோ
இல்லாததால் படுக்கச் சென்றிருப்பாள் என்ற முடிவின்
பெயரில், அவளை எழுப்பி உணவு உண்ண அழைத்து
வரலாம் என்ற எண்ணத்துடன் மாட்ட் படுக்கையறை
புறம் திரும்பிய நொடி, மனோ வெளியே வந்து அவனை
முறைத்துக் கொண்டிருந்தாள்.

மனோவைக் கண்டதும் அவள் புறம் கை நீட்டிய
மாட்ட், ''சாரி பேபி...'' என்பதற்கு மேல் கணவனை,
மனோ பேசவிடவில்லை.

''உன்கிட்ட நான் ஒண்ணும் விளக்கம் கேட்கல, நீ
எதுவும் சொல்லத் தேவையில்லை'' என முகத்தை உர்ர்
என வைத்துக் கொண்டு அவனைக் கடித்தவள், அவனை
ஒரு கையால் தள்ளியவாறே சமையலறைக்குள் சென்
றாள். (எதுக்கு திரும்ப? தூங்கப் போனபடி உள்ளேயே
இருக்க வேண்டியது தானே! இன்னொரு சிப்ஸ் பாக்
கெட்டுக்கு அடி போடறியா என்ன?)

''என்னடா பசிக்குதா? நீ போய் சோபால உட்கார்ந்
துக்கோ. நான் ஏதாவது செய்து தரேன்... இல்லைன்னா
பீட்சா ஆர்டர் பண்ணிக்கலாம்'' என மனைவியை
சமாதானம் செய்ய முயன்றான், மாட்ட்! (உன்னை பீஸ்

நிலா கிழிக்க அம்மணி காத்திருக்கா, நீ என்னை
பீட்சா சாப்பிட ரெடி ஆகுற!)

''என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ உ
வேலையைப் பார்த்துக்கிட்டு போ'' - கத்தரித்தாற் போ
பேசிவிட்டு, உள்ளே சென்று மனோ செய்தது என்ன
இருந்திருக்கும் என நினைக்கிறீர்கள்? ஆனையைப்
நூடுல்ஸை தனக்கு மட்டுமாய் செய்து கொண்டு உ
மேஜையில் அமர்ந்து உண்ணத் துவங்கியவளை
தொடர்ந்து அவள் கணவனும், தன் இரவு உணவிற்கெ
தட்டு நிறைய பழங்கள் மற்றும் ஒரு பெரிய குவளையி
ஆரஞ்சு ஜூஸையும் எடுத்து வந்து அவளுடன் அமர்ந்
கொண்டான். (தப்பிச்சேடா மாட்ட்! மனோகிட்ட இரு
தில்ல, நூடுல்ஸ்கிட்ட இருந்து!)

அவன் ஒருவன் அங்கிருக்கிறான் என்பதையே
மறந்தவள் போல், சமாராய் இருந்த நூடுல்ஸில் கவன
மாய் இருந்த மனோவைப் பார்க்க சிரிப்பாகவும், அதே
சமயம் பாவமாகவும் இருந்தது.

''கொஞ்சம் பழம் சாப்பிடுறியா பேபி?'' எனக்
கேட்டு, ஐந்து நிமிடத்திற்குப் பின்னர் பதிலில்லாமல்
போகவே,

''கொஞ்சமா ஆரஞ்சு ஜூஸ் குடிக்கிறியா பேபி?''
என மீண்டும் ஒரு தூண்டில் போட்டான்.

இப்போது பதில் மட்டும் வராமல் இருக்கவில்லை,
கூடவே ஒரு வெட்டல் பார்வையும் வந்து சேர்ந்தது.

''சாரி பேபி, மதியம் ஒரு முக்கியமான ரிசர்ச் க்ளோசிங்
மீட்டிங்ல இருந்தேன்மா. அது தான் மொபைல் சைலன்ட்
மோட்ல இருந்தது'' என மாட்ட், அவள் காது கொடுத்து



கேட்க தயாராக இல்லாத விளக்கத்தை சொல்லிக்
கொண்டே சென்றான்.

அவன் சொன்னது காற்றிற்கே என்ற பாவனையில் கை
கழுவ எழுந்து சென்றாள், மனோ!

அவளைத் தொடர்ந்து சென்று அவள் கை கழுவி
முடித்த வினாடி பின்னாலிருந்து அணைத்துத் தூக்கி
யவன், ''ஏ விடு, விடு'' எனத் திமிறி, கால்களை காற்றில்
உதைத்துக் கொண்டு கத்தியவளை சோபாவில்
கொண்டு போய் விட்டான்.

''சாரி சொல்றேனே மானி'' என்ற கொஞ்சலோடு
அவளை இறக்கிவிட்டவன், இறங்கிய வேகத்தில்
அவனை விட்டு விலகி, அறைக்குள் ஓடப் பார்த்தவளை
கைகளுக்குள் கொண்டு வந்து, இறுக அணைக்க
முயன்றான்.

அவன் சமாதானம் பேசிய போதெல்லாம் அமைதி
யாக இருந்தோ, வார்த்தைகளாலோ பதில் கூறிக் கொண்
டிருந்தவள் இப்போது அவன் அணைக்கவும் தன் முழு
பலத்தையும் கூட்டி அவனிடமிருந்து விலகினாள்.

அவளது விலகலை ''சாரி பேபி'' என்ற சின்ன சமா
தானத்தோடு தன் ஆளுமைக்குள் கொண்டு வர முயன்ற
வன், அதில் வெற்றியும் கண்டு கழுத்தில் முகம் புதைத்
தான்.

அவன் அணைத்தபோதே கோபம் தலைக்கேறி
இருக்க, இப்போது தடுப்பின்றி வார்த்தைகள் வேகமாக
வந்து விழுந்தன.

''கொஞ்ச நேரம் வரைக்கும் உனக்கு ஆபீஸ் தானே
முக்கியமா இருந்தது. இப்போ எதுக்கு என்னைக்

கொஞ்சற?" என தன் ஆதங்கத்தை கோபமா வெளிப்படுத்தி கொணர்ந்தாள்.

அதோடு நிறுத்திக் கொள்ளாமல் வார்த்தைகள் வளர்ந்து கொண்டே போனது தான் பெரும் தப்பாகிப் போனது.

"தப்பெல்லாம் நீ பண்ணிட்டு என்னைக் கட்டிப் பிடிச்சு சமாதானம் செய்ற? ARE YOU TRYING TO MAKE ME COOL BY SEX?" எனத் தடித்து துடித்து விழுந்தன வாய்ச்சொற்கள். அவளது வார்த்தைகளின் வேகத்தில் மாட்ட் ஸ்தம்பித்துப் போனான். முதல் சில வினாடிகள் அங்கே பலத்த மௌனம் நிலவ, "MIND YOUR WORDS MAANI" என்ற அதட்டல் மிக அழுத்த மாக வந்து விழுந்தது மாட்ட்-டிடமிருந்து! (தடித்தனமா பேசறதுன்னா இது தான் போல!)

அவனது அழுத்தம் அமைதியை வரவைப்பதற்கு பதிலாக ஆத்திரத்தையே வரவைத்தது. "I DON'T HAVE TO" என அவனுக்கு மேல் அழுத்தமாக பதில் கூறிய மனோ, அதே வேகத்தில் படுக்கையறைக்குள் சென்றும் மறைந்தாள்.

நடந்த வாக்குவாதத்தின் தாக்குதலில் இருவரும் கலங்கி இருக்க, மனோவிடம் மீண்டும் பேசினால் பிரச்சனை பெருசாகும் வாய்ப்புள்ளது என்ற எண்ணத் துடன் மாட்ட் கண் மூடி சோபாவில் அமர்ந்திருக்க, கண்களில் நீர் வடிய கட்டிலில் சாய்ந்திருந்தாள் மனோ.

மனைவியை சமாதானப்படுத்த காதலை கையாளு கிறாய் என்று சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை... காமம் என்றல்லவா கூறிவிட்டாள்? தான் அவள் மேல்



வைத்திருக்கும் அன்பிற்கு இதுவா எதிரொலி? என மாட்ட் மறுகிக் கொண்டிருக்க, மனோவோ ஒரு தப்பை சரிகட்ட தன்னை நெகிழ வைத்துக் குளிர் காய்கிறான் என்ற எண்ணத்துடன் குமுறினாள்.

குமுறலும், கண்ணீருமாய் மனோ உறங்கிவிட, அரை மணி நேரம் சென்று அறைக்குள் நுழைந்த மாட்ட் கட்டிலின் மறுபக்கத்தில் சத்தமின்றி படுத்துக் கொண் டான். இரு தினங்கள் முன்னர் மனைவி அழுததும், தான் சமாதானம் செய்ததும் நினைவில் வந்து அதே போல் செய்ய மனம் துடித்தாலும், அவள் பேசிய வார்த்தைகள் மென்மையைக் கையாள அணைபோட்டன.

முதல் நாள் இருந்த காமக்களியாட்டம் இப்போது சத்தமாய் துடைக்கப்பட்டிருக்க, கனத்த அமைதியில் கழிந்தது அன்றைய இரவு!

மறுநாள் காலை சில நிமிட இடைவெளியில் எழுந்து கொண்ட தம்பதியர் இருவரும் தத்தம் வேலைகளை சத்தமின்றி, முக்கியமான பேச்சோ பார்வையோ இன்றி செய்து முடித்தனர். முதல் நாள் வேலைக்குச் செல்வ தற்கு மிகுந்த தயக்கம் காட்டிய மனோ, இன்றும் தன் தயக்கத்தைக் காட்ட ஆள் இல்லாமல் போகவே வெளியே வரத் துடித்தக் கண்ணீரை உள்ளே இழுத்தப்படி கிளம்பி னாள் என்றால் மனைவியின் கலங்கிய முகத்தைக் கண்டு அவளை அணைக்கத் துடித்த கைகளை அவளது வார்த்தை களின் வலி கட்டிப்போட அமைதியாய் இருந்தான் மாட்ட்.

இருவருமாய் கிளம்பி முடித்து, மாட்ட் தன் காலை உணவை உண்ண அமர்ந்தபோது, உணவைப் புறக்

கனித்த மனோ வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள்.

மனோ வெறும் வயிற்றுடன் வேலைக்குக் கிளம்பியதும் மாட்ட்-டின் அமைதி வேடம் கலைந்தது.

''மானி பேபி, என் மேல இருக்கக் கோபத்தை சாப்பாடு மேல காட்டாதே டியர், ப்ளீஸ்'' என்றவன், மனைவியின் கைப்பிடித்து உள்ளே இழுத்தான்.

''ஒண்ணும் வேண்டாம். என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்ன்னு நான் நேத்திக்கே சொல்லலை!! இப்போ விடு. நான் போறேன்'' என்றாள் மனைவியும் குரல் கண்ணீரிலும் கோபத்திலும் நடுங்க,

ஆனால் அவளது கணவனுக்கோ அந்தக் குரலில் தென்பட்ட கோபத்தை விட, கண்ணீரே மனதைப் பிசைய ''ஹோ டியர், அழாதேடா'' என்றான் வருத்தத்துடன்.

''நான்... நான் அழறேனா? யார் சொன்னா? அப்படியெல்லாம் இல்லை. நான் சந்தோஷமா... நிம்மதியா.. இருக்கேன்'' என்ற மனோவின் குரல் அதற்கு மாறாய் லிட்டர் கணக்கில் சோகத்தைப் பிழிந்தது.

''சரி வா. அந்த சந்தோஷத்தோடவே சாப்பிட்டு முடிச்சிடு'' என அவளை ஒட்டியே பேச முயன்றவன், கைப்பிடியாய் அவளை உள்ளேயும் அழைத்துச் சென்றான்.

உணவு மேசையில் அவளை அமர வைத்து, ஒரு பால் மற்றும் பழங்கள் கலந்த கப் சீரியலை அவள் பக்கம் நகர்த்தி ''சாப்பிடு'' என்றான்.



ஒரே தலையசைப்பில் மறுத்தவள் எழுந்து ஓடவே முயன்றாள். மாட்ட்-டின் இரும்பு பிடி அதற்கு வழி வகுக்காமல் இருக்கவே, ''இப்படியெல்லாம் செஞ்சா நீ பண்ணினது தப்பில்லைன்னு ஆகிடுமா?'' என மீண்டும் தான் பிடித்த முயலுக்குக் மூக்கால் கால் என்ற நிலைக்கு மனோ சொல்லவே,

''ஓகே பேபி, என்னோட வேலையில் இந்த மாதிரி நேரங்கள்.. அதாவது நாள் முழுக்க வீட்டுல்ல இருக்க நேரங்கள் அதிகம் தான். அதை என்னோட தப்புன்னு நீ நினைச்சா, அதுக்கு நான் சாரி கேட்டுக்கிறேன். திரும்பத் திரும்ப அந்த விஷயத்தை இழுக்காதே'' என்ற மாட்ட்-டின் குரலில் பெரும் ஆளுமை இருந்தது.

அந்த ஆளுமை மனோவை அடக்குமா? பொறுத்திருந்து காணலாம்!

# 10

முந்தைய தினம் மனைவியின் அழைப்பை எடுக்காததற்கும், அவளை அழைத்துச் செல்ல வராததற்கும் மன்னிப்புக் கோரிய மாட்ட், மனோவை அந்த விஷயத்தை மீண்டும் இழுக்கக் கூடாது என அறிவுறுத்த, மனோவிற்கும் அவன் இவ்வளவு தூரம் தழைந்து மன்னிப்புக் கோரும் போது முறுக்கிக் கொண்டிருப்பது தப்பாகப்பட்டது.

நேற்று தான் பேசிய வார்த்தைகளே அதிகப்படி எனும் போது, அவன் அதற்குப் பின்னரும் மன்னிப்பையே

வேண்டியதில் கோபம் தணிந்தது என்ற போதிலும், மனோ வாய் மூடி மௌனமாக இருக்க மிக முக்கியமான காரணம் இது நாள் வரை பார்த்திராத ஆளுமையும் அதட்டலும் மாட்-டின் வார்த்தைகளில் காணப்பட்டு மனோவிற்குள் உதறலை ஏற்படுத்தியது தான்!! (இதற்கு பெயர் தான் - பில்டிங் ஸ்ட்ராங், பேஸ்மெண்ட் வீக்கா? அவனோட ஒரே அதட்டலில் அடங்கிவிட்டாளே!)

அவனிடம் சொற்களால் தன் சம்மதத்தைக் கொடுக்காமல் வெறுமே தலையசைத்தவள், தன் முன்னே வைக்கப்பட்டிருந்த சீரியலை வேகமாக உண்ணத் தொடங்கினாள்.

அவள் உண்ணும் அழகை ரசித்தப்படி மாட் தன் காலை வேலை உணவை முடித்தபோது, மனோ தன் கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல ஆயத்தமாகினாள்.

"பேபி, இரண்டு நிமிஷம் வெயிட் பண்ணு. நான் உன்னை ஆபீஸ்ல இறக்கி விடுறேன்" என்றான் மாட், சீரியல் உண்ட சின்னக் குவளைகளை சமையலறையில் வைத்தவாறே. (நீ சாப்பிட்டதை அவன் எடுத்து வைக்கணுமா? உடம்பு வளையவே செய்யாதா மனோ, உனக்கு?)

அவனது உதவியில் மனம் நிறைவதற்குப் பதிலாக, கை எடுத்து ஒரு கும்பிடு போட்ட மனோ, "வேண்டாம் சாமி, நீ என்னை இறக்கிவிடவும் வேண்டாம். அதுக்கு அப்புறம் நீ வரதுக்கு நான் காத்திருக்கவும் வேண்டாம். நீ வராம இருக்கவும் வேண்டாம். அதுக்கு நான் கோபிக்கவும் வேண்டாம். வாய்க்கு வந்ததைப் பேசவும் வேண்



டாம். நானே போய்க்கிறேன்" என வேகமாக அவனிடம் பல "வேண்டாம்"களை உதிர்த்துவிட்டு, திரும்பிப் பார்க்காமலே வெளியேறினாள். (ரொம்பத் தான் சிலிர்த்துக்கிறா இல்ல, விடு மாட்!)

"மானி" என்ற மாட்-டின் பொறுமையற்ற அழைப்பு அவளை நிறுத்தவே இல்லை! அவர்களது வீட்டை விட்டிறங்கி பக்கத்திலிருக்கும் பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த மனோவை, ஐந்தே நிமிடத்தில் எட்டிப் பிடித்தான் மாட்.

"மானி, காரில் ஏறு" என்றவனைத் தாண்டிச் செல்ல மனோ முயல, காரிலிருந்து இறங்கிய மாட் அவளைக் கைகளாலேயே நகர்த்தி உள்ளே ஏற வைத்தான்.

"காலையில் வேலையிடத்தில் உன்னை இறக்கி விடறது எனக்குப் பிரச்சனையே இல்லை பேபி. மாலை நேரம் தான் தினம் வர முடியாது மானி!" என்ற மாட்-டின் விளக்கம், மனோவை ஏதேனும் பேசத் தூண்டியபோதும் நேற்று பேசியதே போதும் என்பது போல் வாயை இறுக மூடிக் கொண்டு, சாலையை வெறித்தாள் அவள்!

"பேபி, பாட்டுப் போடவா? என்ன பாட்டு வேணும்?" "லஞ்ச்சுக்கு என்ன எடுத்துட்டு வந்திருக்க? சப் - வேல ஏதாவது வாங்கித் தரட்டா?" "இன்னைக்கும் எனக்கு ஒரு மீட்டிங் இருக்கு மானி, அதனால போன் எடுக்க முடியாது, சரியா?"

"டின்னர்க்கு வெளியே போகலாமா பேபி? இந்தியன் ரெஸ்டாரண்ட் போகலாமா?" என எந்த ஒரு கேள்விக்கும் பதிலில்லாமல் போய், மனோவின் வெறித்த பார்வை

மாறவே இல்லை. (ஏய், மாட்ட்! நீ திருந்தவே போறதில்லை. இனிமேல் உனக்கு அட்வைஸ் பண்றதுக்கு நான் 144 போடப் போறேன்!)

தனது அலுவலக வளாகம் வந்ததும் காரை சட்டென உயிர்பெற, வண்டியிலிருந்து இறங்க முற்பட்ட மனோவை வலக்கையால் தடுத்து, இடக்கையால் அவள் முகத்தை தன் புறம் திருப்பி, ஆள்காட்டி விரலால் அவளது தாடையிலிருந்து மூக்கு நுனி வரை பயணித்து "ரொம்ப கோபம் வருது என் பேபிக்கு. அந்தக் கோபத்தில் கொஞ்சத்தை நான் எடுத்துக்கட்டுமா?" என்றவன், சிவந்திருந்த மூக்கு நுனியின் மேல் தன் உதட்டு நுனியைப் பொருத்தினான். (தயவு செஞ்சு எடுத்துக் கோப்பா, சாமி! நம்மளால முடியலை...)

"ச்சீ போ" என அவன் முகத்தைத் தன்னிடமிருந்து தள்ளியவளின் உதட்டோரம் சிறு சிரிப்பு மலர்ந்தது!

அவளது சிரிப்பைக் கண்டதும் இறுக்கம் தளர்ந்து சிரித்த மாட்ட் "Thanks baby! you made my day" என்ற வார்த்தையும், பறக்கும் முத்தமுமாக அங்கிருந்து நகர்ந்தான்.

நேற்று மாலை அலுவலகத்திலிருந்து கிளம்பியதற்கும், இன்று காலை அலுவலகத்திற்கு வருவதற்கும் மனோவின் மனநிலையில் லேசாய் மாற்றம் நிகழ்ந்திருந்தது. நேற்று சுண்ணாம்பு கால்வாயாய் இருந்த மனம், இன்று குளிர் நீர் மென்மையாகப் படர்ந்து குளிர ஆரம்பித்திருந்தது.

ஆனால் நேற்று கணவனை ஏசிய வார்த்தைகள், கணவனை எவ்வளவு தூரம் பாதித்ததோ அதே அளவு



மனோவையும் இரவு முழுதும் வதைத்திருந்தது. ஒவ்வொரு தரம் அந்த வார்த்தைகள் மனதில் ரீங்காரமிட்டபோது, தாயின் "சட்டு சட்டுன்னு பேசற இந்த வாயை சடார்னு கிழிக்க ஒருத்தன் வருவான் பாரு. எல்லாரும் உங்கப்பா மாதிரி உன்னைக் கொஞ்சிட்டே இருப்பாங்களாக்கும். உனக்குன்னு வர புருஷன்கிட்ட நானே சொல்லிக் கொடுத்து, அடி பின்னச் சொல்றேன்" என்ற திட்டும் மண்டையைத் தட்டி,

"என் புருஷன் அப்படி இல்லையே! என்னைக் கடிந்து ஒரு வார்த்தை கூட பேசவில்லையே! வார்த்தையை அளந்து பேசு என்றதை கூட நிதானமாகத் தானே செய்தான்! வேறு ஒருவனாய் இருந்திருந்தால் எக்கேடும் கெட்டு ஒழி என்று என்னை விட்டுச் சென்றிருக்க மாட்டானா? எதற்கு என் உடல் நிலையைக் கவனித்து, வேலையில் வந்து இறக்கிவிட வேண்டும்?" என்றெல்லாம் ஞானோதயம் பலமாக நடந்தேறியது!!

அவன் தன்னை அழைத்துச் செல்ல வராமல் இருந்தது தப்பு தான் என்றாலும், தான் அதற்குப் பதிலாகப் பேசிய வார்த்தைகளும் தப்பு தானே! சொல்லப் போனால் சொல்லக் கூடாத வார்த்தைகளை உதிர்த்தது மாபெரும் தப்பு தானே! என மனம் கிடந்து அடித்துக் கொண்டது!

அலுவலகம் எனும் போதி மரம் ஞானசூன்யமாக இருந்த மனோவை ஞானபிரம்மமாக மாற்றியதோ இல்லையோ சிறிய ஞானகுன்றாக மாற்றி இன்பம் கண்டது. அதாகப்பட்டது வேலை ஜரூராக நடந்தேறியது. கூடவே மாட்ட்-டின் கைப்பேசிக்கு அழைப்பு விடுப்பதும் தான்! அலற வேண்டாம்! அவன் எடுக்கவில்லை என்ற போது "ச்சு போடா" என்ற சொல்லோடு நிறுத்திக் கொண்டு

வேலையில் முனைந்தும் போனாள். (ஹைப்பாடா, என் நெஞ்சில் பாலை வார்த்தம்மா பரதேவதை!)

சக அலசலின் மூலமாகவும், மாட்ட் பற்றிய ஆராய்ச்சியின் வாயிலாகவும் கொஞ்சம் கொஞ்சமாய் பறந்திருந்த மனோன்மணியின் கோபம் மாலை வேலை முடிந்து வெளியே வந்தபோது, அங்கே காத்திருந்த மாட்ட்-டைக் கண்டதும் முற்றிலுமாய் தணிந்து மறைந்தே போனது! அந்த நேரத்திலும், "நேத்திக்கே வந்திருக்கலாம் இல்ல, சண்டை போட்டா தான் சார் வருவாராக்கும்... ம்ம்" என்ற முணங்கல் மனதின் ஓரத்தில் எழாமல் இருக்கவில்லை, மனோவின் சிறு குழந்தை மனது!

"ஹேர மாட்ட், என்ன மேன் ஒரே சமாதானமா இருக்கு? என்ன விஷயம்? என்ன தப்பு பண்றே?" என கேள்வி எழுப்பியவாறே காரில் ஏறி அமர்ந்தாள் மனைவி, உற்சாகமாதான்!

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதை விட பெரிய தப்பு உலகத்தில் இருக்குமா?" எனப் பதிலுரைப்பதற்குப் பதிலாக, "நான் நல்ல பையன்டா பேபி, இன்னைக்கு வேலை சீக்கிரம் முடிஞ்சுடுச்சு. அதுதான் உன்னைக் கூட்டிட்டு போகலாம்ன்னு வந்தேன்" என்றவன், அவளைத் தோளோடு அணைத்து விடுவித்தப் பின்னரே வண்டியைக் கிளப்பினான்.

வீட்டை நோக்கிப் பயணம் தொடங்கிய சில நிமிடங்களில் "டின்னர் முடிச்சிட்டு வீட்டுக்குப் போகலாமா மானி? எங்க சாப்பிடலாம்ன்னு நீயே சொல்லு" என இரவு உணவை மாட்ட் திட்டமிட,



மனோவோ பொறுப்பின் சிகரம் என நிரூபிக்கும் ஆர்வத்தில், "வீட்டில போய் சமைச்சுக்கலாம் மாட்ட்! இன்னைக்கு நான் உனக்கு இந்தியன் சாப்பாடு செய்து தரேன்" என்றாள் கண்கள் பளிச்சிட. (தேவா மை கடவுளே, என்ன கொடுமை இது? இதுக்கு நீ அவனை ரெண்டு அடி அடிச்சிருக்கலாம்...)

"ஹய்யோ" என்ற கூவலுடன் வண்டி நிலை தடுமாறி நின்றிருக்க வேண்டிய இடத்தில், "பரவாயில்லைடா, வெளியே சாப்பிடலாம். உனக்கும் வேலைக்குப் போயிட்டு வந்தது அலுப்பா இருக்கும்" என்ற நழுவல் நடந்தேறியது! (நீயும் தான் போராடிப் பார்க்கிற, all the best-டா மாட்ட்! எதுக்கா... எஸ்கேப்புக்கு தான்!)

"நான் இன்னைக்குப் பெருசா ஒன்னும் வேலை செஞ்சு கிழிக்கலை. அதனால வீட்டில போய் சமைக்க அட்லீஸ்ட் செய்றேன்" என மனோவின் தன் அலுப்பை மறைத்து, மாட்ட்-டிடம் இல்லாத பயத்தைக் கிளப்பி விட்டாள்.

"போற வழியில் காய்கறி வாங்கிட்டு வீட்டிற்குப் போகலாம்" என்றவள், "பசிக்குது மாட்ட், ஏதாவது சாப்பிட இருக்கா?" என்று வினவியவாறே காரை கண்களால் அலசினாள்.

பின் சீட்டில் மாட்ட்-டின் அலுவலகப் பை கிடக்க, அதைக் கை நீட்டி எடுத்தவளிடம் "அதுல ஒன்னுமில்லைடா, வெறும் லாப்டாப் மட்டும் தான் இருக்கு" என்ற மாட்ட்-டின் பதில் எடுபட்டதாகவே தெரியவில்லை!

"அதை நானே பார்த்து தெரிஞ்சுக்கிறேன்" என்றவள், அவனது பையைக் குடைந்து அவன் சொன்னதையே

கண்களாலும் கண்டாள், ஒரே ஒரு நெருடலைத் த... - அது ஒரு வாழ்த்தட்டை - ஜீனின் பெயருடன்!

ஆனால் அதை எடுத்து கணவனிடம் இன்னொ... மனஸ்தாபத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்றா... மனதில் உள்ளதை கணவனிடம் கேட்டால் நேற்றை... குப் பேச்சோடு நிறுத்திக் கொண்டவன் இன்று க... நீட்டினாலும் தப்பில்லையோ என்ற பயம் மனதை ... வாயைக் கப்பென மூடிக் கொண்டாள். என்னதா... வாயை மூடிக் கொண்டபோதும் கணவன் தன்னிடம்... பொய் சொல்லியிருப்பானோ என்ற நெருடல் இருக்கவே செய்தது!

அதை மறைத்துக் கொண்டு "ஒரு சின்ன சாக்லே... கூட வச்சக்க மாட்டியா? சை, எனக்குப் பசிக்குதே" என அவனைக் கடிந்து கொண்டாள்.

அவள் பரபரவென்று காரை அலசிக் கொண்டிருந்த வேளையில் மாட்ட்-டின் கார் ஸ்டார்பக்ஸ் காபி ஷாப்பின் முன்னர் நின்றிருந்தது.

"பறக்காதே. ஏதாவது குடிக்க வாங்கிட்டு வரேன்" என்றவனிடம்,

"எனக்குக் குடிக்க எதுவும் வேண்டாம். சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வா" என கட்டளையிட்டாள் மனைவி.

"என்ன வேணும்?" என அவன் கேட்க, "எதுனாலும் ஓகே" என்றவள் அவன் வாங்கி வந்த blueberry muffin ஐ கண்டதும் "வேற ஏதாவது வாங்கிட்டு வந்திருக்கலாம் இல்ல, banana loaf (வாழைப்பழச் சுவை நிரம்பிய கேக் வகை) நல்லா இருக்கும்" என அலுத்தும் கொண்டாள்.



(அவன் என்ன வேணும்ன்னு கேட்டப்பவே சொல்றதுக்கு என்ன? ஆப்பம் என்றாலும் சரி ஆப்பு என்றாலும் சரின்னு சொல்லிட்டு இப்போ அவனுக்கு ஆப்பு வைக்கிற?)

சின்னதாய் சிரித்ததோடு நிறுத்திக் கொண்ட மாட்ட், தனது சாய் லாட்டேவை சுவைத்துக் குடித்தபடியே காய் கடைக்கு வண்டியைச் செலுத்தினான்.

ஒருவாறாக காய் கனிகளை வாங்கிக் கொண்டு (அள்ளிக் கொண்டு) வீடு வந்து சேர்ந்தனர் தம்பதியர். வீட்டில் அணியும் உடைக்கு மாறி மாட்ட் வெளியே வந்த போது, மனோ லாப்டாப்பின் முன்னர் அமர்ந்து எதையோ தீவிரமாக தேடிக் கொண்டிருந்தாள்.

அவள் அருகே வந்து அமர்ந்த மாட்ட், அவளைத் தன் தோள் வளைவில் கொண்டு வந்து அவள் தேடியதை தானும் தேட முனைந்தான்!

"வெஜிடபிள் புலாவ்" என்ற ஒரு பதார்த்தத்திற்கு பத்து இணைய தளங்கள் திறந்திருக்க, மும்முரமாய் தேடிக் கொண்டிருந்தாள் மனைவி! (தேடித்தான் சமைக்கணுமா? கிழிஞ்சுது கிருஷ்ணகிரி!)

தான் மனதில் நினைத்ததை மாட்ட் கேட்டுவிட, "ஒரொரு சைட்லையும் வேற வேற மாதிரி போட்டிருக்காங்க மாட்ட், ஒரே confusion-ஆ இருக்கு. சின்னப் பிள்ளையை ரொம்பக் குழப்பி விடுறாங்க" என அவளும் நொந்து கொள்ள,

"உங்க மம்மி செஞ்சிருப்பாங்க தானே பேபி! அதை பார்த்திருப்பாய் தானே?" என தன் அடுத்த சந்தேகத்தை அவன் முன் வைத்தபோது, மனோ சுதாரித்து விட்டாள்.

"பார்த்தேன், ஆனா பார்க்கல" என அவளைக் குழ...
விட்டு, "நான் ஒரு முடிவிற்கு வந்துட்டேன். நான் ...
சமைக்கிறேன்" என்ற அறிவிப்போடு சமையலறை...
சென்றவளை, மாட்ட்-டும் பின் தொடர்ந்து "பார்த்தேன்
ஆனா பார்க்கலை"க்கு விளக்கம் கேட்டான்.

"அம்மா சமைக்கிறதை பார்த்ததில்ல. சமைச்சப் பிறகு
பார்த்திருக்கேன்" என அதற்கு விளக்கம் கொடுத்த
மனைவியைப் பார்த்து ஓஹோவென சிரித்தான், மாட்ட்...

"ரொம்ப சிரிக்க வேண்டாம். சிரிக்கிற வாயை ஓட்ட...
வைக்க சமைக்கிறேன்" என கறுவியவள், சமையலில்
முழு மூச்சில் இறங்கினாள்.

காய்கறிகளை வெட்டியபோது மனோவின் விரல்
களில் வெட்டுப் பட்டுவிட, மாட்ட்-டின் உதடுகளும்
கரங்களும் அவளை ஆரத் தழுவி காயமாற்றின.

ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர் வெஜி
டபிள் புலாவும், முட்டைக் குருமாவும் உணவு மேசை
யில் காத்திருந்தன.

மனதின் ஓரத்தில் சிறு பயத்துடனே மாட்ட் சாப்பிட
அமர, மனோவும் அதே திகிலுடன் அமர்ந்தாள்.

ஆனால் இருவரின் பயத்தையும் போக்கும் வகையில்
உணவு சுவையாகவே இருந்தது அங்கே பெரும் ஆச்
சரியம்! முட்டைக் குருமாவில் மட்டும் காரம் சற்றே
தூக்கலாக இருக்க, அதையும் மாட்ட் "உஸ், உஸ்" என
முணுமுணுத்தும், தண்ணீரைப் பருகியவாறும் உண்டு
முடித்தான்.

அவன் உண்ட ஒவ்வொரு வாய் உணவிற்கும் "நல்லா
இருக்கா மாட்ட்?" அல்லது "ரொம்ப உரைப்பா



இருக்கா?" அல்லது "நாளைக்குக் கம்மியா போடறேன்,
சரியா?" அல்லது "உனக்குப் பிடிச்சிருக்கா?" அல்லது
"நாளைக்கும் செய்யவா?" என ஓயாமல் கேள்வி
கேட்டு, அவனது ஒரே பதிலான "ரொம்ப நல்லா இருக்கு
மானி, You are a good cook!" என்பதையே மீண்டும்
மீண்டும் பெற்றுக் கொண்டாள்.

உணவு முடிந்து, தொலைக்காட்சியில் சில நிகழ்ச்சி
களை கண்டு விட்டு, பழம் - பால் உண்டு முடித்து
உறங்கும் வரை நேரம் இனிதே சென்றடைந்தது.

ஆனால் உறக்கம் தழுவ படுக்கையறைக்குச் சென்ற
மனோவை மாட்ட் தழுவவில்லை, கணவன் பார்வை
யுடன்!

# 11

மாட்ட்-டின் கரங்கள் மனோன்மணியின் தளிர்
மேனியைத் தழுவியிருந்த போதும், அதில் ஓர் மென்மை
யான காதல் மட்டுமே தட்டுப்பட்டது. மனோன்மணிக்கு
எப்போதும், படுக்கையறை என்று வந்து விட்டால்
மாத்யூவின் புயல் வேகத்தையே கண்டு பழக்கப்பட்
டிருந்தவளுக்கு, அவனது மெல்லிய மேனி வருடல்
வித்தியாசமாய் பட்டது!

முரடன் என்ற அடைமொழி கொடுக்குமளவிற்கு மோச
மில்லை என்றாலும் மாத்யூவின் வேகத்தில் மனோன்
மணி தடுமாறியிருப்பது உண்மை என்றபோதிலும்,

அதை அவள் உள்ளூர ரசிக்கவே செய்தாள் என்பதில் மறுப்பேதும் இல்லை. நெஞ்சுக் கூட்டினுள் நுழைந்து விடுபவன் போல், அவளை இறுக இறுக அணைத்திருந்த மாத்யூவின் அணைப்பிற்கு அவள் ஏங்கிக் கொண்டிருக்க, அவனோ அவளது தலையை மெல்ல வருடியவாறே மிக மென்மையாக அவளைத் தழுவியிருந்தான்.

அவளுக்கு உடம்பு முடியாமல் போனபோது அவன் செய்த செய்கைகள் தான் என்றாலும், இப்போது இருவரும் சமநிலையில் சந்தோஷமாக இருக்கும்போது ஏன் இந்த விலகல்? நேற்று, தான் கோபமாக இருந்தபோது கூட தன்னை அணைத்தானே? இப்போது தான் இழையும் போது விலகியிருக்கிறானே? விலகியிருக்கிறான் என்று சொல்லிவிட முடியாது... அணைத்தபடி தான் இருக்கிறான். ஆனால்... ஆனால் என மனோன்மணியின் பெண்மை கணவனின் காட்டாற்று வெள்ளத்திற்காக தவிக்க ஆரம்பித்தது.

வெட்கத்தை ஏக்கம் வென்றுவிட, ''மாட்ட்'' என அழைத்தவள் அவனை நெருங்கி இறுக அணைத்துக் கொண்டாள். ''பேபி'' என்ற சொல்லோடு அவளது அழைப்பை ஏற்றவன், நெற்றியில் இதழ் பதித்து ''தூங்கு'' என்றான் மெல்ல. ''ம்ஹூம்'' என்ற மறுப்போடு, அவனது மார்பிலிருந்து தன் தலையை நிமிர்த்திப் பார்த்த மனோன்மணி ''என் மேல கோபமா?'' என்றாள் மெலிதான குரலில்.

அவளது கேள்வி முடியும் முன்னரே ''கண்டிப்பாக இல்லை'' என உறுதியாக மறுத்த மாத்யூ, ''ஆபீஸில் வேலையும் பார்த்துவிட்டு வீட்டில் சமைக்கவும் செய்தது சோர்வாக இருக்கும். தூங்கு மானி! நாளைக்கு ஆபீஸ்



போக வேண்டும்'' என்றதோடு, தான் நிறுத்திவிருந்த வருடலை மெல்லத் துவங்கினான்.

அதற்கு மேல் அவனிடம் எப்படிப் பேசுவது என்று தெரியாதது ஒரு புறமிருக்க, பல காலங்களுக்குப் பின்னர் அடுப்பின் முன்னே நின்றிருந்த அசதியும், கணவனின் ஸ்பரிசம் தந்த சுகமும் மனோவின் இமைகளை மெல்ல மூட வைத்தன.

தன்னை ஒட்டிப் படுத்திருந்த மனைவியின் முக வடிவை மெல்ல அளந்தவாறே, மாத்யூவும் மெல்ல கண்ணயர, அங்கே காமமில்லா காதல் களங்கமில்லாமல் அரங்கேறியது.

அதிகாலை ஐந்து மணிக்கே விழிப்பு தட்டிவிட, கணவனின் முகம் பார்த்து மலர்ந்த தாமரை அவனை விட்டு அகல மனமின்றி விழிப்புடனே அவனுடன் படுத்திருந்தாள்.

அரை மணி நேர இடைவேளையில் மாத்யூவும் கண் விழித்துவிட, இருவருமாய் எழுந்து கொண்டனர். அன்றைய தினம் வேறெந்த சலனங்களுமின்றி அமைதியாய் கழிய, அந்த அமைதி இரு வாரங்களாய தொடர்ந்தது.

இரண்டாம் வாரத்தின் கடைசி வேலை நாளான வெள்ளியன்றும், அதிக பேச்சுக்கள் இன்றி கழிந்த காலை வேளையின் தொடர்ச்சியாய் இருவரும் அலுவலகம் கிளம்பினர். அலுவலகம் செல்லும் வழியில் ''பேபி! லஞ்சுக்கு எதுவும் எடுத்திட்டு வரலையே? ஏதாவது வாங்கித் தரவா?'' என அவன் கேட்க, ''வேண்டாம்'' என ஒற்றை வார்த்தையில் மறுத்த மனோன்மணி ''மாட்ட் எனக்கு... எனக்கு... நான் ஆபீஸ் போகலை மாட்ட். வீட்டிலேயே விட்டு விடுகிறாயா?'' என்றாள் தடுமாற்றத்துடன்.

அவனது கேள்வியில் லேசாய் துணுக்குற்ற ம...
"என் பேபி? உனக்கு உடம்பிற்கு முடியவில்லையா? என் சோர்வா இருக்கே?" என்றான் பதற்றத்துடன்.

"இல்ல. உடம்பு நல்லா இருக்கு... ஆனா... ஆனா என் மாட்ட் என் மேல என்ன கோபம்? உன்னோட செய்கைகளில் எனக்கு வித்தியாசம் தெரிகிறது மாட்ட்! நான் ஏதாவது தப்பு செய்துட்டேனா? இரவு... இரவும் அது வந்து... நீ... என்னை நாடவில்லை. காலையில் எழுந்ததும் எப்போதும் என்னை கிஸ் - பண்ணுவே தானே? ரெண்டு வாரமா அதுவும் பண்ணலை... அப்புறம் சாப்பிடும் போதும் நீ என்னை கிஸ் பண்றதில்லை. என்னைத் தூக்குறதில்லை. ஆபீஸ் கிளம்பி வெளியே வரும்போதும் என்னை அணைக்கவில்லை. என் மேல ஏதாவது கோபமா? ப்ளீஸ் மாட்ட்... எனக்கு உன்னை விட்டா வேற யாருமே இல்லை. அப்பா இல்லை... அம்மா இல்லை... பிரெண்ட்ஸ் இல்லை... நீ மட்டும் தான் இருக்கே? நீயும் என்னை ஒதுக்கி வச்சா நான் என்ன மாட்ட் செய்றது? எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு மாட்ட்" என ஒரே மூச்சில் அழுகையின் ஊடே, சொல்லி முடித்தாள் மனோன்மணி. அவளால் கணவனின் சிறு ஒதுக்கத்தைக்கூட, தாங்கிக் கொள்ள முடியாமல் மனம் தவியாய் தவித்துப் போனது.

அவள் பேச ஆரம்பித்தபோதே, அவளை நோக்கி நீண்டிருந்த மாட்-டின் கரங்கள் அவள் பேசி முடித்த போது அவளை ஆரத் தழுவியிருந்தன.

"ஹோ பேபி! நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லை மானி! நமக்குள்ள சண்டை வந்தபோது உன்னை நான்



செக்ஸ் வச்சு சமாதானம் செய்ய முயற்சி பண்றேன்னு சொன்னேனே இல்லையா? அதான்... நான் கொஞ்சம் விலகியே இருந்தேன். எனக்கு உன் மேல அளவு கடந்த ஆசை, மானி! ஆனா, அதை விடவும் மேலா எனக்கு உன் மேல காதலிருக்கு. அந்த காதல் மேல மதிப்பிருக்கு. அதனால் தான்!" என அவன் விளக்க, மனோவிற்குத் தன்னை செருப்பால் அடித்துக் கொள்ள வேண்டும் போல் கைகள் பரபரத்தன. (ஏதாவது உதவி வேணுமா, மனோ? உன்னால உன் செருப்பை எடுக்க முடியவில்லை என்றால் என்னுடையதை வேண்டுமானாலும் தருகிறேன். பாட்டா செருப்பு! ரொம்ப நல்லா இருக்கும்!)

"ஹய்யோ! என்னை மன்னிச்சிடு மாட்ட். நான் சொன்னது தப்புதான்... உன்னைக் கெஞ்சி கேட்கிறேன் என்னை மன்னிச்சிடு மாட்ட்... என்ன பேசுறோம் என்று தெரியாமல் பேசிட்டேன். அதுக்காக உன்கிட்ட எப்படி வேண்டுமென்றாலும் மன்னிப்பு கேட்டுக்கிறேன். என்கிட்டே முன்ன மாதிரியே இரு..." என்றவள், அவனது முகமெங்கும் தன் முத்திரைகளை பதித்து மீண்டாள். முத்தங்களின் நடுவே "எனக்கு நீ வேணும் (I need you) என்ற வாக்கியத்தை விடாமல் உச்சரிக்கவும் அவள் மறந்தாளில்லை. அவனும் "நான் உனக்கு மட்டும் தான் பேபி! (i am just for you)" என்ற பதிலை விடாமல் உச்சரிக்கத் தயங்கவில்லை.

நடு ரோட்டில், ஒரு பிரபல துரித உணவகத்தின் முன்னே வண்டியை நிறுத்திவிட்டு, அதனுள் காதல் வயப்பட்டிருந்த இருவரையும் கலைப்பதற்கு அங்கே வாகனங்களின் ஹாரன் ஒலிகள் கேட்காமலிருக்க, அங்கே

இடம் பொருள் ஏவல் எதும் தெரியாமல் ஓர் காதல் நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்தது.

அதிலிருந்து முதலில் சுதாரித்த மாத்யூ "ஓகே பேபி! நேரமாகிட்டே இருக்கு. உனக்கு லஞ்சுக்கு என்ன வேணும் சொல்லு. நான் வாங்கிட்டு வரேன்" எனத் தன் இருக்கையை விட்டு இறங்க முயன்றவனின் சட்டையைப் பிடித்து இழுத்த மனோன்மணி, "இன்னைக்கு நாம ரெண்டு பேரும் ஆபீஸ் போக வேண்டாம் மாட் வீட்டுக்குப் போகலாம்" என்றாள் மையலுடன்.

பத்து நாட்களுக்கும் மேலாய் தனது ஆசைகளை மூட்டைக் கட்டி வைத்திருந்த மாத்யூவிற்கு நெஞ்சு சருகாய் பரபரத்த போதும், தன்னை நம்பி அளிக்கப் பட்டிருக்கும் வேலையும் அவனது மனதில் சமமான இடம் பிடித்தது.

"நாளைக்கு சனிக்கிழமை தானே பேபி? நாளைக்கு முழுதும் வீட்டில இருக்கலாம்... இன்னைக்கு லேப்ல எனக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு. ஜீன் எனக்காக காத்திருப்பாள். என்னோட ரிசல்ட்ஸ் வச்சுத்தான் மற்றவங்களோட வேலை அமையும். அதனால கண்டிப்பா போகணும்" என்றான் அவன் மெல்லிய வற்புறுத்தலுடன்.

**இத்தனை நாள் பிரிவின் விளைவாக, தான் ஏங்கியிருப்பதை போல் அவனும் தவித்திருப்பான்; அந்த தவிப்புடன் தனது அழைப்பும், மையல் பார்வையும் கைகோர்த்ததில் கணவன் வீடு வர ஒத்துக் கொள்வான் என இறுமாப்புடன் எண்ணியிருந்த மனோன்மணிக்கு அவனது மறுப்பு, மிகுந்த வேதனையை அளித்தது. அது**



மட்டுமில்லாமல், 'ஜீன்' என்ற பெயர், பல தேவையில்லாத கற்பனைகளுக்கு வழிவகுக்க, கோபத்தை வெளிப்படையாய் காட்டியவாறே முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

"சாரி பேபி! இன்னைக்குக் கண்டிப்பா ஆபீஸ் போகணும். என்னைத் தப்பா நினைக்காதே டார்லிங்" என அவன் கெஞ்சியபோதும், மனோவின் முகம் சாலையை விட்டு அங்கே இங்கே நகரவில்லை.

"நாளைக்கு நாள் முழுதும் உன்னுடன் தான் இருப்பேன். கண்டிப்பாக! தயவு செய்து, இன்னைக்கு மட்டும் அட்ஜஸ்ட் செய்துக்கோ" எனக் கடைசியாக மொழிந்துவிட்டு, இருவருக்குமான மதிய உணவை வாங்குவதற்காக கடையை நோக்கி நடையைக் கட்டினான் மாத்யூஸ்.

"உனக்குப் பிடிச்ச வெஜ் சீஸ் சான்ட்விச்" என அவன் நீட்டியதை வாங்க மனமின்றி விறைப்பாய் அமர்ந்திருந்த மனோவின் தோளில் கையிட்டு, அருகே இழுத்தவன் "நீ இப்படியிருந்தா என்னாலே லேப்ல வேலையே பார்க்க முடியாது பேபி. ப்ளீஸ், என்னைப் புரிஞ்சுக்கோ! இன்று இரவும், தொடர்ந்து வரும் இரு நாட்களும் உன்னை விட்டு நகரவே மாட்டேன்" என்றவனின் குரல், அவளது ஓர் சிரிப்பிற்காக ஏங்குவது புரிந்தது.

முழுதாய் சமாதானம் அடையாதபோதும், அவனது குரல் ஏதோ செய்துவிட, உணவு பொட்டலத்தை அவனிடமிருந்து வாங்கியவள் "தேங்க்ஸ்" என்றாள் மொட்டையாக.

"இன்னும் கோபம் போகவில்லை... இல்லையா? பரவாயில்லை... நாளைக்கு முழுசா போக வைத்து

விடுகிறேன்'' என அவளுக்கு மட்டுமல்லாது தனக்கும் சேர்த்து சமாதானம் சொல்லிக் கொண்ட மாத்யூவிற்கு அடுத்த நாள் மட்டுமல்லாது அதற்கு அடுத்த நாளும் தான் வீடு திரும்பப் போவதில்லை என்பது தெரியவில்லை.

மனோவின் அலுவலகத்தின் முன்னே வண்டியை நிறுத்திய மாத்யூ, ''இன்னைக்கு நான் விடுமுறை எடுக்காததால் உன் மேல எனக்கு ஆசையில்லைன்னு நினைக்காதே! எனக்கு மட்டும் வேலையில்லைன்னா உன்னை இன்னும் ஒரு வாரத்திற்கு வேலைக்கே போக விட்டிருக்க மாட்டேன்'' என்றான் மனோ சற்று நேரம் முன்னே பார்த்த மையல் பார்வையைத் தனதாக்கி.

''அதனால், தேவையின்றி மனதை வருத்திக் கொள்ளாமல், நல்ல பெண்ணாக வேலை முடித்துவிட்டு வீடு வந்து சேர்'' என்றவாறே கதவைத் திறந்து விட்டான்.

சில தினங்களாய் தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் அவனது வழக்கத்தை மனதில் வைத்து ''இன்று மாலை என்னை அழைத்துச் செல்ல வருவாய் தானே?'' என மனோ வினவ, ''இன்னைக்கு முடியாதே பேபி! ஜீன் மதியம் இரண்டு மணிக்கு மேல் தான் வருவாள். அவள் வந்ததும்... என்னோட வேலையை அவகிட்ட ஒப்படைச்சிட்டு வரணும். அது முடிய கண்டிப்பா மணி ஆறாகி விடும். அதனால் நீயே வீட்டிற்குப் போய் விடுகிறாயா?'' என்றான் கணவன், விளக்கமாக.

பதிலேதும் சொல்லாமல், தலையை மட்டும் அசைத்து விடைபெற்ற மனோன்மணியின் முகத்தில் ஏக்கமும், வருத்தமும், பொறாமையும் நிற்காமல் தாண்டவமாடின. தன்னைவிட வேலை முக்கியம்... வேலையில்லை ஜீன்



என்பவள் முக்கியம் என்று அவன் சொன்னதே மனதில் முழுதாய் பரவியிருக்க, தனது தப்பான பேச்சினால் தான் அவன் விலகியிருந்தான் என்பதைக்கூட வேறு விதமாய் யோசித்து, தன்னையே வருத்திக் கொண்டாள் செந்தமிழ் பெண்ணரசி.

அவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை, தன்னிடம் உறவு கொள்ளப் பிடிக்கவில்லை. அதை நேரடியாகச் சொல்லாமல், தனது வார்த்தையை அடிக்கோடாக்கி அதன் மேல் கட்டிடத்தை எழுப்பி விட்டான் எனப் பல விதமாய் யோசித்து மனம் நொந்தாள் மாத்யூவின் ஒரே காதலி.

அவன் மீதிருந்த கோபம் எழுபது சதவீதமாய் இருந்த போதும், அவனது கண்களில் தெரிந்த காதலையும் அவளால் நடிப்பு என்று குற்றம் சாற்றிவிட முடியவில்லை.

கணவனே தன்னைத் தழுவியபோது அவனிடமிருந்த வேகம் அவளை யோசிக்கவே வைத்தது. பல நாள் பிரிவிற்குப் பின்னர், இருவரும் ஈருடல் ஒருயிராய் கலக்கும் நாளை அவனும் வரவேற்பது புரிந்தாலும், வெட்கத்தை விட்டுத் தான் வெளியிட்ட ஆசையை அவன் நிறைவேற்றவில்லை என்பது அவளது பெரும் குறையாக இருந்தது! காதலும், ஊடலும், காமமும், வருத்தமும், ஏக்கமும், பொறாமையும் அவளை மாறி மாறி தாக்க, அன்றைய தினம் அவளது வேலையில் தவறுகள் ஏதும் நடக்காமல் இருந்ததே பெரிய விஷயமாகத் தோன்றியது மனோன்மணிக்கு.

நாள் முழுதும் அலைக்கழித்த மனப்போராட்டங்களுக்கு முடிவு கட்டுவது போல், மணி ஐந்தடித்ததும்

அலுவலகத்தை விட்டு வெளியேறிய மனோன்மணியின் மனதில் "இதுநாள் வரை, கணவன் தன்னிடம் எதையும் மறைக்காத போது, தானே கண்டதையும் கற்பனை செய்து தானும் நொந்து, அவனையும் விலக வைத்து அவனது விலகலில் மீண்டும் நொந்து... வாழ்க்கையை சிக்கலாக்கிக் கொள்கிறோமோ?" என்ற கேள்வி எழுந்தது.

"ம்ம்ம் அப்படித்தான்! வேண்டாத கற்பனைகளை ஏறக்கட்டிவிட்டு வரும் நாட்களை மிகுந்த சந்தோஷத்துடன் எதிர்கொள்வோம்" என்ற பதில் சிறு யோசனைக்குப் பின்னர் வந்து உதித்தது.

ஓர் முடிவிற்கு வந்துவிட்டப் பின்னர், அதை ஒட்டியே தனது சிந்தனையை ஓட்டிய மனோன்மணி, அந்த இரவை இருவருக்கும் மறக்க முடியாததாய் ஆக்கும் எண்ணத்துடன் சில பல வேலைகளைச் செய்தாள்.

கைகள் கொள்ளாமல் சாமான்களுடன் வாடகை காரில் வீடு வந்து சேர்ந்தவள், மிகுந்த உற்சாகத்துடன் வேலைகளைச் செய்யலானாள். முதலில் தங்களது படுக்கை விரிப்பை வெள்ளையிலிருந்து இளஞ்சிவப்பு வண்ணத்திற்கு மாற்றியவள், கட்டில் அருகே இருந்த சிறு மேஜையில் இரு சிவப்பு ரோஜாக்களைப் பூக்க வைத்தாள்.

மந்தகாச நறுமணத்திற்காக, வாசனை மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்துவிட்டு வெளியே வந்த மனோன்மணியின் முகம் வெட்கத்தில் பூத்திருந்தது.

சிரிப்புடனே, அன்றைய இரவு உணவாக கணவனுக்குப் பிடித்த ப்ரோகோலி பெச்டோ பாஸ்தாவை செய்தவள், கிவி பழங்களைப் பிழிந்து சாறெடுத்து



இருவருக்குமாய் ஊற்றி வைத்தாள். உணவு மேஜையில் அதை அழகுற அடுக்கி வைத்த கையோடு, வாங்கி வந்திருந்த வாழ்த்தட்டைகளில் தனது முத்திரைகளைப் பதிக்கத் துவங்கினாள்.

"சாரி, என்னுயிரே (sorry, my love)" என்ற தலைப்புடனிருந்த அட்டையில் "எனது சிறு பிள்ளைத்தனமான செய்கைகளுக்கும், யோசிக்காது பேசிய வார்த்தைகளுக்கும் என்னை மன்னித்துவிடு" எனத் தமிழில் எழுதி, தனது இதழ்களை அதனடியில் பதித்தாள்.

கணவனுக்குப் புரியாத தமிழில் தான் எழுதினால் தானே, அர்த்தம் கேட்கும் சாக்கில் இருவரும் சீண்டிக் கொள்ள முடியும்? அந்த சிறு கொஞ்சலுக்கு மனம் ஏங்கியதன் விளைவாக தான் மனோன்மணி, தமிழைத் தேர்வு செய்தது.

மன்னிப்பு கேட்கும் படலம் முடிந்துவிட, ஏக்கத்துடன் கூடிய தனது காதலை வெளிப்படுத்தும் வகையில் அவள் வாங்கியிருந்த வாழ்த்தட்டையில் மனோ கைகளால் எதையும் எழுதவில்லை.

மாறாக, தனது உதடுகளின் அச்சுக்களை இடைவெளியின்றி, அந்த அட்டை முழுதும் நிரப்பி முடித்தவளுக்கு, அவனே நேரில் வந்து தனது முத்திரைகளை வாங்கிக் கொண்டது போல் வெட்கம் தாங்காது போனது!

வேலைகளை ஒருவாறாக முடித்துவிட்டு, மாத்யூவின் வரவிற்காகக் காத்திருக்கத் தொடங்கியதும் மனோன்மணி செய்த முதல் வேலை, கணவனின் கைப்பேசியை அழைப்பது தான்.

இரு முறைக்கும் மேலாக, அவளது அழைப்பை மாத்யூஸ் எடுக்காமலிருக்க, முகமும் மனமும் கனத்துப் போனது. அவளது கணக்கத்தை மேலும் அதிகரிப்பது போல், அரை மணிக்கும் மேலாக மாத்யூவிடமிருந்து மறு அழைப்பு வரவில்லை.

கணக்கம் எரிச்சலாய் மாறிக் கொண்டிருந்த வேளையில் எரிச்சலை கோபமாய் உருவெடுக்கச் செய்வது போல் மனைவியை அழைத்தான் மாத்யூஸ்.

''ஹலோ'' என்ற அவளது சொல்லை கேட்பதற்கு முன்னர், ''சாரி பேபி! ஐ அம் ரியல்லி சாரி! என்னால் இன்றிரவு வீட்டிற்கு வர முடியாது. ஜீன்...'' என அவன் வாக்கியத்தை முடிப்பதற்குள், மனோன்மணி அழைப்பைத் துண்டித்தாள். துண்டித்த அழைப்பை மதிக்காது மீண்டும் சீறிய கைப்பேசியைத் தூக்கி எறிந்தவளின் மனம் உளைக்கலமாய் கொதித்தது.

''ஆக, அவன் தன்னிடம் காலையில் கொஞ்சியதெல்லாம் பொய். வருகிறேன்... உன்னுடன் இருக்கிறேன் என அவன் உருகியதெல்லாம் வெறும் நடிப்பு.

காலையில் தான் அழைத்தபோதே வராமலிருந்தவன் இப்போது மட்டும் வருவான் என்று தான் ஏங்கியது முட்டாள் தனம்!

அந்த முட்டாள் தனத்தின் விளைவாக... என்னவெல்லாம் செய்து விட்டேன்'' என்ற கோபம், அவளை ஆட்கொண்டதும் மனோவின் செயல்களின் மீது அவனுக்குக் கட்டுப்பாடு இருக்கவில்லை.

அவனுக்கென்று வாங்கி வந்த வாழ்த்தட்டைகளை சுக்கு நூறாய் கிழித்துப் போட்டவள், அவனுக்குத்



தயாரித்த உணவில் தண்ணீரை ஊற்றி அதை சாப்பிட முடியாதபடி செய்தாள். அதே கோபத்துடன், படுக்கையறைக்குள் நுழைந்து தான் செய்து வைத்திருந்த அலங்காரங்கள் அனைத்தையும் களைந்தவள், அதன் பின்னர் என்ன செய்வது என்று தெரியாமல் கட்டிலில் குப்புற விழுந்து விசிக்கத் தொடங்கினாள்!!

# 12

அடுத்த நாள் காலை கண் விழித்த மனோன்மணி அருகே தன் கணவனைக் காணாது திகைத்தாள். முந்தைய தின நினைவுகள் படமாய் விரிய, எழுந்து மணியைப் பார்த்தால் சிறிய முள் பத்தில் நின்றிருந்தது (அடேங்கப்பா, எவ்வளவு காலையில் எழுந்து விட்டாய் மனோ!)

இரவு தான் வீடு திரும்பவில்லை, இன்று காலையாவது வீட்டிற்கு வந்திருக்கலாமே என்ற கேள்வி மனதில் எழ, கூடவே கோபமும் எழுந்தது. (அதானே கோபமின்றி மனோன்மணியா? சாமி குத்தம் ஆகிவிடாது?)

நேற்று அவனது வருகைக்காக, தான் செய்திருந்த அலங்காரத்தை கண்ணாடியில் பார்த்த மனோன்மணி "இது ஒண்ணு தான் குறைச்சல்!?'' என்று முணங்கியவாறே பல் துலக்கி, தேநீர் தயாரித்தாள்.

முந்தைய தினம் செய்து வைத்த சேதங்களின் நடுவே, மெல்ல கால் பதித்து பால்கனிக்கு வந்தவள், தேநீரை

சுவைக்க ஆரம்பித்த அடுத்த நொடி, கண
அவனுமாய் பருகும் தேநீருக்காய் மனம் ஏங்கி
ஆனால் ஏங்கிய மனதை ''அவனுக்குத்தான் உ
நினைப்பே இல்லையே? அப்புறம் என்ன உ
கொடுக்கிற எச்சில் டீக்கு அலைகிறாய்?'' என அ
மனதின் மீது ஓங்கி ஒரு குட்டு வைத்தாள் மனோ
(இப்போ நான் வந்து உன்னை நங்குன்னு கு
போறேன்!? ஜாக!)

ஏக்கத்தை மட்டுப்படுத்தி விட்டேன் என்ற நினை
பில் மனோவின் மூளையும், ஏக்கத்தை கைவிட ம
டேன் என்ற பிடிவாதத்தில் மனோவின் மனதும் ஏதே
மாறாய் சிந்தித்ததில் மனோவிற்குத் தலை வலி தா
மிஞ்சியது.

நேற்றிரவு வருவதாய் சொல்லிவிட்டு வராமல் போ
கணவனின் மேலிருந்த கோபத்துடன், இந்தத் தலை
வலியும் சேர்ந்துகொள்ள, மனம் பலதையும் சிந்தித்
மாண்டு போனது.

அனைவரது எதிர்ப்பையும் மீறி, மாத்யூவை மண
முடித்தது தவறோ? நண்பர்கள், உறவினர்கள் அனை
வரும் ''வெள்ளைக்காரனைக் கல்யாணம் செய்துக்க
போறியா? மாசத்திற்கு ஒருத்தி என நிலையான மனை
இருக்காதே அவங்களுக்கு?

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நம்மோட கலாச்சார
திற்கும், தொட்டதற்கெல்லாம் விவாகரத்து செய்யு
அவர்களது கலாச்சாரத்திற்கும் எப்படி ஒத்து வரும்
உனக்கிருக்க அழகுக்கும், படிப்புக்கும் நம்ம ஊர்லே
ராஜா மாதிரி மாப்பிள்ளை கிடைப்பாங்க! நீ எதுக்
வெள்ளைக்காரன் கையில மாட்டிக்கிறே?'' எனக் கூறி



அறிவுரைகள் அனைத்தையும் ''என் மாட் அப்படி யில்லை! பிறந்த ஊரின் வாழ்வு முறை என்னவாய் இருந்தாலும் அவன் மனதில் நான் மட்டும் தான் இருக்கிறேன். நான் மட்டும் தான் இருப்பேன்'' என்ற கர்வத்தில் துடைத்தெறிந்தது நெஞ்சைப் பிளந்தது. (நம்ம ஊரில் மட்டும் எல்லா கணவனும், மனைவியும் ஒட்டி உறவாடுறாங்களா? எதையுமே நாம் வாழுற முறை யில தான் இருக்கு, மானி! கூலிக்காரன் பையனை கலெக்டர் ஆவதில்லையா? அது மாதிரி தானே வெள்ளைக்கார னுக்குப் பிறந்தவன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாச் சாரத்தை மதித்து, அதன்படி நடப்பதும்!?)

ரத்தத்தில் ஊறியிருக்கும் அவனது கலாச்சாரம் அவனை மறக்கடித்து விட்டதோ? மறந்து விட்டானா இல்லை வெறுத்து விட்டானா? ஒரே மாதத்தில் அவள் மீதிருந்த மோகம் வடிந்து விட்டதா? அவள் வாய் தவறி ஒரு வார்த்தை சொன்னால்தான்... அதற்காக இரண்டு வாரங்களாய் அவளை நெருங்காமல் இருக்க முடியுமா? அதுவும் மாத்யூ போன்ற காதல் உணர்வு மிகுந்தவனால் ஆசை கொண்டு மணந்த மனைவியைத் தூர விலக்கி வைக்க முடியுமா? இல்லை முடியாது! முடியவே முடி யாது!

அப்படியென்றால்... அப்படியென்றால்... அவளை ஒதுக்கி வைத்து விட்டான் என்று தானே அர்த்தம்? இரண்டு வார விலகலுக்குப் பின்னர், நேற்று தான் சமா தானமாகி விட்டதே? பின்னரும் வரவில்லை என்றால் அவன் தன்னை நிச்சயமாக ஒதுக்கித் தான் வைத்து விட் டான். கட்டிய மனைவியை விட ஜீன் தானே முக்கிய மாகப் போய்விட்டாள்? எனத் தன் மனதையே அவள்

கேள்வி கேட்டுக் கொண்டிருந்த சமயம், வீட்டுக் கதவை திறந்து கொண்டு மாத்யூஸ் உள்ளே நுழைந்தான் (மணமகனே, மருமகனே வா... வா! உன் வலது காலை எடுத்து வைத்து, எங்கள் பெண்ணிடம் பேச்சு கேட்க வா).

வீடு முழுதும் இறைந்து கிடந்த பொருட்களை எடுத்து வைத்தவாறே வந்தவனின் உதடுகள் ''சாரி பேபி! நம் எதிர்பாராத விஷயம் ஒன்று நேற்று நடந்து விட்டது. அதனால்தான் வர முடியவில்லை. நேற்றைக்கு ஜீனுக்கு ஒரு விபத்து நடந்து விட்டது. அதனால் அவளுடன் இருக்க வேண்டியதாய் போய்விட்டது. இப்போதும் அங்கே இருக்க வேண்டும் தான். ஆனால், நீ கோபமாய் இருப்பாயே என்று சொல்லிவிட்டு வந்தேன். என்ன 'பேபி? கோபமாய் தான் இருக்கிறாயா? என்னை மன்னித்து விடு டார்லிங்! மானி... எங்க இருக்க?'' என மனைவியிடம் பேசியபடியே இருந்தன.

அவனது விளக்கங்கள் எதையும் மனோன்மணி கேட்டிருந்தால் தானே பதில் பேசுவதற்கு? ''சாரி பேபி'' என்ற அவனது வார்த்தைகளைக் கேட்டதுமே, காதை இறுக மூடிக் கொண்டு பால்கனியின் ஒரு கோடிக்குச் சென்று விட்டாள். (ரொம்ப நல்லது? விளங்கிடும்)

பால்கனியின் ஓரத்தில் நின்றிருந்த மனைவியை நெருங்கிய மாத்யூ, அவளைப் பின்னாலிருந்து அணைத்து ''உன் கோபம் எனக்குப் புரிகிறது! ஆனால், நான் இதை வேண்டுமென்றே செய்யல. ஜீன் பாவம் பேபி. அவளுக்கு யாருமே இல்ல. பிரண்ட்ஸ் தான் உதவி செய்தாகணும்'' என மனோவின் காதோரத்தில் குனிந்து, மெல்லப் பேசினான் (அவளுக்கு விபத்து என்ற விபரத்தை



இன்னொரு தடவை சொல்லக்கூடாதா? உன்னோட நூறு கிலோ மேனி குறைந்தா போயிடும்?)

அவனது அந்த ஸ்பரிசத்திலும், மெல்லிதாய் காதை வருடிய பேச்சு வார்த்தையிலும் உடல் நெகிழத் துவங்கியபோது, மனோவின் மூளைக்குள் அலாரம் அடித்தது. அதன் விளைவாக, காதுகளில் பட்டும் படாமலிருந்த கைகளை எடுத்து வாயை மூடிக் கொண்ட மனோன்மணி, அவனை விட்டு விலகி, ஓர் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். அந்த செய்கைக்கு காரணம் - அவன் கூறிய விளக்கங்களில் கோபம் கொண்டிருக்கும் மனம் கண்ட வார்த்தைகளையும் உதிர்த்து விடுமோ? அப்படி வார்த்தைகளை உதிர்த்து விட்டால், அதைக் காரணம் காட்டி மாத்யூ தன்னிடமிருந்து தப்பித்துக் கொள்வானோ என்ற எண்ணம் தான்!

(இன்னும் நீ கண்ணைத்தான் மூடலை? ஹோ கண்மூடித்தனமா கோபம் வரதால, எதுக்கு இன்னொரு தடவை கண்ணை மூடணும்னு விட்டுட்டியா?)

''ஹோ பேபி!'' என அவன் அவளது கையை விலக்க முயல, மேலும் மேலும் பிடிவாதமாய் வாயை அழுந்த மூடிக் கொண்ட மனோன்மணியின் கண்கள் கண்ணீரைப் பொழியத் துவங்கின. ''ஹோ நோ பேபி! அழக் கூடாது! நீ அழுதால் எனக்குத் தாங்க முடியலை மானி. தயவு செய்து அழாதே!'' என அவன் கெஞ்சியது அனைத்திற்கும் பலனின்றி போக, ''ஒருத்தருக்கு உடம்பு முடியாமலிருக்கும் போது அவர்களைத் தனியே விட்டு வருவது நல்ல முறையில்லை, மானி. அதுவும் அவளைப் பார்த்துக் கொள்ளவென்று யாருமில்லாத போது, எப்படி மானி வருவது? நானும் ஒரு மருத்துவன் அல்லவா?

புரிந்து கொள் பேபி!'' எனத் தன்மையாய் அவ
பேசியதும் தான் ஜீனிற்கு உடம்பு முடியாமல் போன
விஷயமே மனோன்மணிக்குத் தெரிந்தது. அப்ப
தான் ''ஜீனிற்கு விபத்து'' என அவன் சொன்ன
காதிலேயே வாங்கவில்லையே.

இப்போதும் அவளுக்கு விபத்து என்றளவு விஷய
தெரியாமல், உடம்பு சரியில்லை என்றளவிற்கு மட்
டுமே விவரம் தெரிந்திருக்க, அவளுக்கு உடம்பு சரியில்
லாததற்கு இரவு முழுதும் அவளுடன் இருக்க வேண்
டுமா? வேண்டியதை செய்துவிட்டு எந்நேரம் ஆனாலு
வீடு வரவேண்டியது தானே? இல்லை, இவன் பொய்
சொல்கிறான்... அவளுக்கு உடம்பிற்கு எதுவுமே இல்லை
சும்மா, சப்பைக்கட்டு கட்டுகிறான் என மனம் குறுக்கு
தனமாய் படு நியாயமாய் சிந்தித்துத் தொலைத்தது
(என்னைக்குத் தான் அது நேரா சிந்திக்குமோ? எப்போ
பார்த்தாலும், லேபிட் இண்டிகேட்டரை போட்டு ரைட்
கை காட்டி வளைஞ்சு நெளிஞ்சு தானே ஓடுது!?)

ஜீனின் உடல்நிலைப் பற்றி மனைவி விசாரிப்பாள்
என்றெண்ணி சிறிது நேரம் மௌனம் காத்த மாட்
மனைவியின் மௌனம் கலையாமலிருக்கவும் ''நீ மட்
டும் வீட்டில் தனியாக இருக்க வேண்டாம். என்னுடன்
கிளம்பு. ஜீனைப் பார்த்துவிட்டு வரலாம்'' என அவள்
கைப்பிடித்து எழுப்பினான்.

அவனது பிடிக்குள் சென்று விட்ட வலது கையை
மீட்பதற்காக, வாயிலிருந்த இடது கையை எடுத்து
விட்ட மனோவிற்குக் கோபம் தாளவில்லை. ''நான்
ஜீனைப் பார்க்க வர முடியாது. நான் எதுக்கு அவளைப்
பார்க்கணும்? அவளைப் பார்த்து ''என்னோட மாத்யூவை



நீ எப்படி மடக்கினாய்?'' என்று கேட்கணும் போலத்
தானிருக்கு. ஆனா, நான் வரமாட்டேன். அங்க வந்து...
நீ சொன்னது போல்... அவளுக்கு உடம்புக்கு எதுவு
மில்லை என்ற விஷயம் எனக்குத் தெரிய வந்தது
என்றால் என்னால் என் வார்த்தைகளை அடக்கிக் கொள்ள
முடியாது. போ... போ... போய்விடு! அவளையே
கொஞ்சிக் கொண்டு இரு!'' என மனோன்மணி ஆவேச
மாய் கத்திக் கொண்டே போக, அவளது வார்த்தைகளில்
முதலில் அதிர்ந்து போயிருந்த மாத்யூ, மனோ நிற்காமல்
கத்திக்கொண்டே இருக்கவும், வேகமாய் அவளை
உள்ளே அழைத்துச் சென்று, ஒரு முறை பலமாக உலுக்
கினான்.

அவனது அச்செய்கையில் திகைத்து விழித்த மனோன்
மணியிடம் ''என்ன மானி இது? உன்னிடமிருந்து
இப்படியொரு எண்ணத்தை நான் எதிர்பார்க்கவில்லை.
அவள் எனக்கு ஒரு நல்ல தோழி. அவ்வளவு தான்! அவ
ளுடன் என்னை... அதுவும் உன்னை விட்டு அவளையா?
நான் அப்படிச் செய்வேனா மானி?'' என அவன் ஆத்
திரமாய் கேட்க,

''ஆமா, நீ அப்படிச் செய்வாய் தான். அன்னைக்கு
நம்மளோட வெட்டிங் பார்ட்டி போது கூட அவ வந்ததும்
அவ கூடவே இருந்தே தானே? அவளைப் பார்த்ததும்
''யு லுக் ஹாட் இன் திஸ் சூட்'' என்று சொன்னாய் தானே?
அவ இருக்கிற வரைக்கும் நீ என்னைத் திட்டிட்டே
இருந்தே?'' என மிக நீளமாய் புகார் பட்டியல் வாசித்தாள்
மனைவி.

''ஹோ! நோ!'' எனத் தலையில் அடித்துக் கொண்ட
மாத்யூஸ், ''அவ என்னுடன் படித்தவள் மானி. நாங்க

நண்பர்கள் மட்டும் தான்... அவளைப் பார்த்[...] உன்னைத் திட்டலை பேபி! நீ அன்னைக்கு [...] முடியும் முன்னரே வீட்டுக்குப் போகணும் [...] சொன்னாய் தானே? அதனால் தான் கோபப்பட்[...] அவளால் இல்லை மானி...'' என்றான் ஆத்திர[...]

''இதென்ன சிறுபிள்ளைத்தனம்?'' என்ற [...] சேர்ந்து கொண்டதன் விளைவாக.

''ம்ஹூம்'' என அப்போதும் தலையை சிலுப்[...] மனோன்மணி, ''சரி, அதை விடு. உன்னோட செல்[...] பாக்ல அவளோட கார்ட் எப்படி வந்தது? அதில [...] முத்தம் கூட கொடுத்திருந்தா...'' என்றாள் இன்னுமொ[...] வழியைக் கண்டுவிட்ட ஆத்திரத்துடன்.

சற்று நேரம் பதில் சொல்லத் தடுமாறிய மாத்[...] என்னைக் காதலித்தாள். இரு இரு.. நான் முடி[...] விடுகிறேன். ஆனால், நான் தான் உன்னை விரும்[...] தாக கூறி அவளிடம் மறந்துவிட்டேன். நம் காத[...] திருமணத்தில் முடிந்த பின்னரும், என்னை மறக்கமுடிய[...] வில்லை என்று கூறி இருமுறை கார்ட் கொடுத்தா[...] என்னை வீட்டிற்குக் கூட அழைத்தாள். நான் விலக்[...] விட்டேன். அப்புறம் அவளுக்கு வேறொரு பாய்பிரண்[...] கிடைத்துவிட்டான். அதனால் என்னைத் தொந்தர[...] செய்வதை விட்டுவிட்டாள்'' என்றான் பொய்மை கலக்காத. ஆனால் தயக்கம் கலந்த மென்குரலில்.

''கொஞ்சநேரம் முன்னாடி தானே அவ உனக்கு ஒரு நல்ல தோழின்னு சொன்னே? இப்போ நீயே அவ உன்னை லவ் பண்ணினா என்று சொல்றே? எது உண்மை? எது பொய்?'' என அவள் கண்களால் வெட்ட, ''ரெண்டுமே தான். எனக்கு அவ பிரண்ட் மட்டும் தான். அவ



என்னை லவ் பண்ணினா'' என அவனது வார்த்தைகளையே தேவையான இடத்தில் அழுத்தம் கொடுத்துப் பேசினான் மாத்யூஸ்.

உதட்டைச் சுளித்து மனோன்மணி, பார்வையால் வெட்ட ''மானி, என் மேல நம்பிக்கையில்லையா?'' என்றான் மாத்யூஸ் கூர்மையாக.

அதற்கு அவளது பதில் மௌனமாய் மட்டுமே இருக்கவும் ''நான் போய் ஜீனைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என அறிவிப்பு போல் கூறியவன், வாசல் நோக்கிச் சென்றான். மனோன்மணி ஆத்திரமாய் ஏதோ பேசத் துவங்கும் முன்னர் ''இரவிலிருந்து பட்டினியாய் இருந்திருப்பாய். இந்த பாக்கெட்டில் இருக்கும் banana loaf சாப்பிடு'' என்றவாறே வீட்டை விட்டுச் செல்ல எத்தனித்தான்.

''இப்போ எதுக்கு அங்க போறே? அவளைப் பார்த்துக்கத் தான் அவளோட பாய்பிரண்ட் இருக்கானே?'' என்ற மனோவின் குரல் ''பாய்பிரண்ட்'' என்ற வார்த்தையில் மிக்க அழுத்தத்துடன் பதிந்தது.

''அவளோட பாய்பிரண்ட் ஏதோ வேலையாக யூ.எஸ் போயிருக்கிறான். நாளை காலை வந்துவிடுவான். அது வரை நான் அங்கு இருக்கவேண்டும்'' பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவன் பதில் கொடுக்க, ''அப்படியென்ன அவளுக்கு உடம்பிற்கு?'' என அலட்சியமாய் கேட்டாள் மனோன்மணி.

''ஹோ, நீ அதை கூட காதில் வாங்கவில்லையா? அவளுக்கு விபத்து. உணர்வு மங்கிய நிலையில் கோமாவில் இருக்கிறாள். நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை

வில்லை என்றால் எங்கள் இருவரின் மேலதிகாரியான மார்ட்டினிடம் கேட்டுக்கொள். ஏனென்றால், நாங்கள் இருவரும் தான் மருத்துவர்கள் என்ற முறையில் அவனைக் கண்காணிக்கிறோம்'' என்று பதில் கொடுத்தவன் கதவை சாற்றிக்கொண்டு போய்விட்டான்.

அவன் அறைந்து சாற்றிய கதவுடன் சேர்ந்து அவனது வார்த்தைகளும் முகத்தில் அறைந்துவிட, மனமும் உடலும் குன்றிபோனாள் மனோன்மணி. மார்ட்டினின் பெயரைக் கொண்டுவந்ததால் கணவனது கூற்றில் உண்மை இருக்கிறது என்பது உறைத்துவிட, சற்று நேரம் முன்னே பேசிய வார்த்தைகளுக்கு முக்கியமான ஜீனின் உடல்நிலைக்கு ஒன்றுமில்லை... அது வெறும் கதை என்ற வார்த்தைகளுக்குரிய மன்னிப்பைப் பெற வேண்டும் என மனம் பரபரத்தது. (மனோ, நீ இவ்வளவு நல்லவளா? நம்ப முடியலையேமா.. நம்ப முடியலையே!)

மனதின் ஆணைப்படி வேகமாய் கிளம்பியவள், மாட்ட் வேலை செய்யும் WHO வளாகத்திற்கு வாடகை காரில் விரைந்தாள். அந்த வளாகத்தில் இருபதிற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இருக்க, நோயாளிகள் அனுமதிக்கப்படும் மருத்துவமனை வளாகத்தை அடையவே இருபது நிமிடங்கள் பிடித்தது.

ஓர் அறையின் முன்னே மாத்யூவும், மார்ட்டினும் நின்றிருக்க அவனிற்குச் சில கட்டளைகளை இட்டு விட்டு அங்கிருந்து மார்டின் நகரவும், மனோ அங்கே செல்லவும் சரியாக இருந்தது. ''மாட்ட்'' என்ற அழைப்புடன், அறைக்குள் செல்லவிருந்த கணவனைத் தடுத்தவள், ஜன்னல் வழியே ஜீனைப் பார்த்தவாறே ''சாரி மாட்ட்'' என்றாள் மெல்ல.



''நோ மானி!'' என வியந்த மாத்யூ, ''தட்ஸ் மை பேபி!'' எனத் தோளோடு அணைத்தான். கூடவே ''ரொம்ப சோர்வா தெரிகிறாயே? இந்த இடத்தைக் கண்டு பிடிக்க கஷ்டமாய் இருந்ததா? கால் வலிக்கிறதா? பசிக்கிறதா?'' என உருகிக் கரைந்தான். (உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடா! சீ.து..ஓடிப்போ!)

## 13

அவசரச் சிகிச்சை பிரிவில் இருந்தமையால் ஜீனைப் பார்ப்பது என்பது ஓர் ஐந்து நிமிடங்கள் தான் நடந்தேறியது. அதன் பின்னர், ''நீ வீட்டிற்குப் போகிறாயா? இல்லை இங்கேயே என்னுடன் இருக்கிறாயா?'' என வினவிய மாத்யூசிடம் ''நீ எப்போ வருவே?'' என எதிர் கேள்வி கேட்டாள்.

''நான் இப்போது வர முடியாது மானி. ஜீனுடன் இருக்க வேண்டும்'' என்றவனை விட்டுவிட்டு வீடு செல்ல ஏனோ மனம் வரவில்லை மனோவிற்கு.

''இங்கேயே இருக்கிறேன்'' என அவள் முடித்துவிட, ''மருத்துவமனையில் அதிக நேரம் உட்கார்ந்திருக்க முடியாது.. அனுமதிக்க மாட்டார்கள். என்னுடைய அறையில் உன்னை விடுகிறேன், வா!'' என மனைவியை அழைத்துக்கொண்டு தனது மேலாளரிடம் சென்றான். (இங்கேயே இருந்து அவனது கொஞ்ச நஞ்ச உயிரையும் எடுத்துவிடு!)

அவரிடம் மனோன்மணியை தனது ஆய்வு கூடத்திற்கு அழைத்துச் செல்வதற்கான அனுமதி கடிதத்தை பெற்றவன், நேராக பாதுகாப்பு மற்றும் நுழைவு இடத்திற்குச் சென்றான். ஒரு மணி நேரம் நடந்த, பாதுகாப்பு பரிசோதனைக்குப் பின்னரே மனோன்மணி உள்ளே அனுமதிக்கப்பட்டாள்.

"இவ்வளவு செக்யூரிட்டி ஸ்கேன் செய்வாங்களா; எனக்குப் பசியே வந்துடுச்சு!?" என மனோ சலித்துக் கொண்டதும், "அதான் வீட்டிற்குப் போ என்று சொன்னேன். நான் சொல்றதை கேட்டால் தானே?" என செல்லமாய் அவள் தலையில் தட்டிய மாட்ட்,

"இங்கே நிறைய ஆய்வு கூடங்கள் இருக்கும் மனோ. ஒவ்வொன்றும் ஒவ்வோர் மருத்துவத்துறையில் ஆய்வு நடத்திக் கொண்டிருப்பார்கள்! அங்கு செய்யப்படும் பரிசோதனைகள், உபயோகிக்கும் மருந்து, ஆய்வு முடிவுகள், அதனால் உண்டாகும் தாக்கங்கள், அது மட்டுமல்லாது அந்த ஆய்வினால் உண்டாகும் நல்ல தீர்வுகள் என எதுவுமே அதிகாரப்பூர்வமாய் வெளியிடுவதற்கு முன்னர் வெளியாள் யாருக்கும் தெரியக் கூடாது என்பது இங்கே சட்டம். அந்த சட்டத்தின் அடிப்படையில், உனக்குப் பார்வையாளர் அனுமதி கொடுத்தப்போதும் அதை தவறாக பயன்படுத்தி, ஆய்வு ரகசியங்களை வெளியிட்டு விடக் கூடாது என்பதற்காக பல பரிசோதனைகளைச் செய்வார்கள்" என நீளமாய் பேசி முடித்தான் அவன்.

"ஹோ" என்று அதை உள்வாங்கிய மனோன்மணி, "நீ.. என்னை ஆய்வு மாட்ட் செய்கிறாய்? சுவைன் ஃப்ளு பத்தி தானே?" எனத் தன் சிறு மூளையைக் கசக்கி



அவன் பதில் கொடுக்கவும் "ஆமாம்" எனத் தலையாட்டிய மாட்ட், "இப்போது H1N1 பத்தி இல்லை மானி, H5N1 பத்தி" என்றான் கூடுதல் தகவலை.

"என்ன விதமான ஆய்வு? அதுக்கு மருந்து கண்டு பிடிக்கிறதா? எனக்கு மட்டும் சொல்லு மாட்ட்!? ப்ளீஸ்! ப்ளீஸ்!" என மனோ கண்ணை விரிக்கவும், "நோ பேபி! அதை பத்தி விரிவா சொல்லக் கூடாதே? அது விதி முறைகளுக்கு அப்பாற்பட்டவை" என அவன் கையை விரித்தான்.

"ப்ச். என்கிட்ட கூடவா?" என மனோ உதட்டைச் சுளித்து, கண்ணைச் சுருக்கி, கைகளால் அபிநயம் பிடித்தப்போதும் தனது தீர்மானத்தை அவன் விலக்கிச் சொன்னதாய் இல்லை. (ஹப்பாடா, எப்படியடா மாட்ட் முடியாது என்று சொன்னாய்? திருந்தி விட்டாயா? பேய் ஏதும் அறைந்துவிட்டதா?)

இதனூடே, அவனது ஆய்வு கூடம் வந்திருக்க "என்னுடைய அறையிலேயே இரு, மானி! இந்த கூடத்தை விட்டு.. வேறெந்த இடத்திற்குச் செல்வதற்கு உனக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை" எனக் கூறியவன், மேசை மீது பரப்பியிருந்த முக்கிய ஆவணங்களைத் திரட்டி, அலமாரியில் பூட்டினான். பின்னர், அங்கிருந்த சிறு குளிர்சாதனப் பெட்டியிலிருந்து பதப்படுத்தப்பட்ட உணவு பொட்டலம் ஒன்றை எடுத்து மின்சார அடுப்பில் வைத்து, சூடாக்கிக் கொண்டு வந்தான். (நானும்.. நீ இப்போது திருந்துவாய் அப்போது திருந்துவாய் என்று எதிர்பார்க்கிறேன்! நீயும் என் நம்பிக்கையில் ஒரு லாரி மண்ணை மடார் மடார்ன்னு போடறியே?)

''மானி, இப்போதைக்கு இதை சாப்பிடு. ஜீனின் உடல்நிலை ஓரளவு முன்னேறியதும், அவனை ஓர் ஜுனியர் டாக்டரிடம் விட்டு வருகிறேன். வந்ததும் வெளியே செல்லலாம்.. அங்கே நல்லதாக உண்டு கொள்ளலாம்'' என்றவன் அவளது தலையாட்டலுக்காக காத்திருந்தான்.

''சரி மாட்!'' எனத் தலையாட்டி அவனை அனுப்பி வைத்த மனோ, தன் முன்னே வைக்கப்பட்டிருந்த உணவை ஒதுக்கிவைத்துவிட்டு, மாட்டின் அறையை நோட்டம் விட்டாள்.

முதலில் அவனது மேஜையை வலம் வந்த அவளது கண்கள், அவன் வாங்கியிருந்த விருதுகள், அவன் கண்டுபிடித்த ஓர் மருந்திற்கான சான்றிதழ், சக மருத்துவர்கள் கொடுத்த வாழ்த்தட்டைகள் போன்றவற்றில் பயணித்து, அங்கிருந்த சில அலுவலக கோப்புகளை அளவிட்டன. அதிலிருந்த ஜெர்மன் வாக்கியங்களைத் தட்டுத்தடுமாறி படித்தவளுக்கு, அது வேறோர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு எழுதப்பட்டக் கடிதம் என்று அதிலிருந்த மருத்துவக் குறியீடுகள் பறைசாற்ற, அதை அப்படியே வைத்துவிட்டாள். அப்படியே கண்களைச் சுழட்டிக் கொண்டு வந்தால், ரோஜா வண்ணச் சேலை உடுத்தி, முந்தானையிலிருந்த ராதை-கிருஷ்ணன் இருவரையும் அகல விரித்துக் காட்டிக் கொண்டிருந்த தேவதையைப் பார்த்ததும் மனம் லேசானது! ஏனென்றால், அந்த தேவதை அவளல்லவா!(நீ தேவதையா? இது உனக்கே ஓவரா தெரியல? ம்ம்.. வனத்தேவதைன்னு வேணும்னா வச்சுக்கலாம். அதான் காளி மாதிரி ஆடித் தீர்க்கிறாயே!)



''என் காதல் தேவதை'' என்ற தலைப்புடன் நின்றிருந்த அப்புகைப்படத்தில் மாத்யூவின் உதடுகள் பதிந்திருந்தது போன்றொரு பிரம்மை மனோன்மணிக்கு உண்டானது!'' என் செல்ல மாட்'' என அவனைச் சீராட்டிய அதே நொடி, அவனது மேஜையின் கடைசி இழுப்பறையில் (திறந்திருந்த கடைசி இழுப்பறையில்) அவளது கண்களில் ஜீனிடமிருந்து வந்த வாழ்த்தட்டைகளும் கண்ணில் பட்டு தொலைந்தன. (ஆரம்பிச்சுட்டாய்யா...ஆரம்பிச்சுட்டா! இனி அடங்க மாட்டாளே!?)

கண்களில் எரிச்சல் மிதந்து வழிய, அதை எடுத்துப் படித்தவள், அதில் பாதிக்கும் மேலாய் காதல் சொல்லும் கடிதங்களாய் இருந்து தொலைத்தன. இருந்த இருபதில், பன்னிரெண்டிற்கும் மேற்பட்டவை காதலை உணர்த்துவதாய் இருக்க, நெஞ்சம் தணலாய் எரிந்தது. முத்தாய்ப்பாய் அந்த அட்டைகளில் அவளது உதட்டுப் பதிவுகள் வேறு.

அவனுக்கு உடம்பு சரியில்லை என்பதில் வடிந்திருந்த கோபம், சட்டென நூறு டிகிரிக்கும் மேலாய் எகிறிக்குதித்தது! நெஞ்சத்தில் பொறாமை உணர்வும், அதற்கு ஈடாய் கண்களில் கண்ணீருமாய் அந்த அறையை விட்டு வெளியே வந்தவள் தனக்கென மாட் எடுத்து வைத்த உணவை மறந்ததுபோல், ஜீனின் காதல் கடிதங்களை மறந்துவிடவில்லை.

தனக்குத் தேவையே இல்லாத ஒன்றை எடுத்துக் கொண்டு, விறுவிறுவென அந்த கட்டிடத்தை விட்டு வெளியே வந்தவள், வாயிலிருந்த பாதுகாப்பு அறையில் தனது ''பார்வையாளர் அட்டை''யைத் திருப்பிக் கொடுத்து விட்டு, பத்திற்கும் மேற்பட்ட இடங்களில் அவர்கள்

கேட்ட கையெழுத்தை இட்டுவிட்டு நகர முற்பட்டாள்.

ஆனால் அவள் வெளியே செல்ல வேண்டுமென்றால், அவள் கையிலிருக்கும் அட்டைகளைத் தாங்கள் பரிசோதனை செய்யவேண்டும் என அதிகாரிகள் கறாராய் கூறினர்.

வெட்கம் பிடுங்கித் திங்க, ஜீனின் காதல் கடிதங்களை அவர்களிடம் நீட்டியவளுக்குத் தன் கணவனைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நினைப்பே எரிச்சலைக் கொடுத்து, ஜீன் மேலும் கணவன் மேலும் இருந்த கோபத்தைக் கூட்டியது. இரண்டு வருடங்களுக்கும் மேலாய் ஜெனிவாவில் குப்பை கொட்டுபவளுக்கு, வெளிநாட்டினர் பிறரது சொந்தவிஷயங்களில் தேவையின்றி மூக்கை நுழைப்பதில்லை என்பதையும் முன் பின் தெரியாதவர்கள் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு புரளி பேசுவதில்லை என்பதையும் எண்ணிப்பார்க்கும் மனம் அப்போதிருக்கவில்லை என்பது உண்மை!

கோபத்தில் உதடும், உடம்பும் துடிக்க மாத்யூவின் அலுவலக வளாகத்தை விட்டு வெளியே வந்தவள், வீட்டிற்குப் போவதற்கான பேருந்தைப் பிடித்து அதில் ஏறி அமர்ந்தாள். ஆனால், பாதி தூரம் கடந்ததும் என்ன தோன்றியதோ, சட்டென அந்தப் பேருந்தை விட்டிறங்கி, நடு வழியில் சற்று நேரம் பேந்த பேந்த முழித்தவாறே நின்று கொண்டிருந்தாள். (இப்போ எதுக்கு இங்க இறங்கினாய்? வீட்டில் போய்.. இன்னும் ரெண்டு மூணு பொருளை உடைக்க வேண்டியது தானே?)

அரை மணி நேரக் காத்திருப்பிற்குப் பின்னர், ஓர் முடிவு செய்தவளாய் வெர்னியர் எனும் இடத்திற்குச் செல்லும் பேருந்தில் ஏறினாள். மேலும் அரை மணி நேரப்பயணத்தில் அந்தப் பகுதியை அடைந்தவள், தன் நினைவுகளைத் தட்டி எழுப்பி, அங்கிருக்கும் அற்புத விநாயகர் ஆலயத்திற்குச் செல்லும் வழியை மனதில் கொண்டு வந்து, மூளை காட்டிய திசையின்படி பயணித்து, அக்கோவில் அமைந்திருந்த மூன்று மாடிக் கட்டடத்தை அடைந்தாள். (ஹோ! கோவிலிற்கு வந்தாயா? நல்ல காரியம் தான்! நீயும்... ஒரொரு சமயம் நல்லதாகவே சிந்திக்கிறாய் மனமே! ஐ அப்ப்ரிஷியேட்யு... அப்ரெண்டீஸ் இல்லை... அப்ப்ரிஷியெட்! அப்ப்ரிஷியெட்!)



மூன்றாம் தளத்திலிருந்த கோவிலுக்குச் சென்று, அதன் பிரதான நுழைவு வாயிலின் அருகே எழுதியிருந்த எண்களைக் கதவைத் திறப்பதற்காக பதிவு செய்தவள், அதன் குமிழை இரண்டு முறை தள்ளியபோதும் கதவு திறக்கவில்லை. ஐந்து முறைக்கும் மேலாக முயன்று தோற்றவள், அங்கே குறிப்பிட்டிருந்த நிர்வாகத்தின் எண்ணிற்கு அழைத்தால் ''கோவில் ஆறு மணிக்குத் தான் திறக்கப்படும்'' என்ற தகவல் இடியாய் வந்தது. (இதுவே இடியா? நீ இறக்கி வைக்கிற ஒரொரு வார்த்தையும் அப்புறம் என்ன சொல்றது? பேரிடி என்றா? இல்லை பூகம்பம் என்றா?)

மணியைத் திருப்பிப் பார்த்தால் நான்கை நெருங்கவே அதற்கு அரை மணி நேரம் தேவைப்பட்டது- தன்னையே நொந்து கொண்டவள், கடவுளும் தன்னைக் கைவிட்டு விட்டார் என்ற நினைப்பில் அதன் வாயிலிலேயே துவண்டு அமர்ந்தாள்.

உள் மனதின் தவிப்புடன், தரிசிக்க வந்த தெய்வம் தன்னை மறுத்துவிட்டது போன்ற ஓர் எண்ணத்தில் அழுகை முட்டிக் கொண்டு வந்தது! நெஞ்சத்தின் அரட்டல் உதடுகளில் பிரார்த்தனையாய் வெளிவர

"கோதை! ஆண்டாளே! ரங்கமன்னார் மனையாளே! எனது தோழியே! என்னால் இந்தப் புறக்கணிப்பை தாங்க முடியவில்லையே! கணவன் தான் தூர நிறுத்தி வைக்கிறான் என்றால்... கடவுளின் சன்னதிக்கு வருவதற்கு கூட எனக்குக் கொடுத்து வைக்கவில்லையா? எதற்கு இந்த தண்டனை? தாய்-தந்தையின் மனதை நோகடித்ததற்காகவா? இல்லை.. உன் மனதை நோகடித்துவிட்டேனா?" என மனம் கண்டதையும் நினைத்து, வெறு வாய் மிரண்டு போனது. (ப்ச், உன்னைப் பார்த்தாலும் பாவமாய்த் தான் இருக்கிறது!)

அவளது புலம்பலையும், மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் அவள் போடும் முடிச்சையும் காண சகிக்காமல் சரியாக ஐந்தரை மணிக்கு, அக்கோவிலின் புரோகிதர் வந்து சேர்ந்தார். கோட் சூட்டில் இருந்தவர், ஐந்து நிமிடத்திற்கும் மேலாய் பிரதான நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் "ACCESS" கருவியுடன் நடத்திய போரின் முடிவில், கோவிலின் கதவு திறக்கப்பட்டது - அங்கிருந்த மனோன்மணிக்கு மட்டுமல்லாது வரவிருக்கும் பக்தர்கள் அனைவருக்கும்!

கடவுளின் அகத்தினுள் நுழைந்தவள், மூசிகத்தை வாகனமாய் கொண்டு ஐந்து கரங்களும் ஆனை முகமுமாய் அருள் பாலித்த விநாயகரின் முன்னே மண்டியிட்டு அமர்ந்தாள்.

"பிள்ளையாரப்பா! அப்பா- அம்மாவை மீறிக் கொண்டு நான் கல்யாணம் பண்ணிக்கொண்டது தப்பு



தான்! ஆனால், எனக்கு அப்போது மாத்யூவின் மதமோ, அவனது பெற்றோரோ, அவன் வளர்ந்த மேலை நாட்டுச் சூழலோ மனதில் நிற்கவில்லை. அருவியாய் என் மீது அவன் பொழிந்த அன்பு மட்டும் தான் கண்ணில் பட்டது!

"எனக்கு நீ மட்டும் தான்" என அவன் சொன்னதை நம்பி, அவனைத் திருமணம் செய்துகொண்டேன் தான். ஆனால், அந்த நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாய் உடைக்கும் வண்ணம் ஏதாவது நடந்து கொண்டே இருக்கிறது.

துயரங்களின் உச்சமாய் ஜீன் அவனைக் காதலிக்கிறாள் என்பதை அவன் வாயாலேயே ஒத்துக் கொண்டுவிட்டான். அதற்கும் மேலாய் அவள் கொடுத்த காதல் கடிதங்களைப் பத்திரமாய் வைத்திருக்கிறான். அதற்கு என்ன அர்த்தம்?"

"நேற்றிரவு மாத்யூ ஜீனுடன் இருந்தான் என்ற எனது சந்தேகம் அபத்தமானது என்பதற்கு சாட்சியாய் ஜீன் மருத்துவமனையில் படுத்திருக்கிறாள். ஓர் சகமனுஷியாய் அவள் குணமடைய வேண்டும் என்ற பிரார்த்தனை எனக்கிருக்கிறது தான். ஆனால்... எனக்கு என் மாட் வேண்டுமே? அவன் என்னை விட்டுப் போய் விடுவானா? அவனாகச் செல்ல மாட்டான் தான்.. ஆனால் இந்த ஜீன்? இப்போது அவளுக்கு உடம்பு சரியில்லாததை சாக்காய் வைத்து.. அவனைத் தன்னுடனே இருத்திக் கொள்வாளோ? என்னால்.. மாட் இல்லாமல் இருக்க முடியாதே!

அவன் வேண்டுமென்றால் "இன்று திருமணம், நாளை விவாகரத்து" என்ற சூழலில் வளர்ந்திருக்கலாம்..

ஆனால் நான் ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்ற கொள்கை பாட்டுடன் வளர்ந்தவள் ஆயிற்றே? மனதையும் உடலையும் அவனிடம் பறிகொடுத்துவிட்டு அவனை என்னால் எப்படி மறக்கமுடியும்? மறக்கவே முடியாது!

''என்னால் அவனை விட்டு எப்படி விலகியிருக்க முடியாதோ? அதே போல், ஜீன் அவனுடன் இருப்பதையும் என்னால் தாங்க முடியாது.. அதற்கு ஏதாவது வழி செய் கடவுளே'' எனக் கண்ணீரின் ஊடே தனது பிரார்த்தனையை முன்வைத்தவள், ஒரு மணி நேரத்துக்கும் மேலாக முட்டிப் போட்டிருந்த தனது நிலையை விட்டு பிரளவே இல்லை. (அக்மார்க் முத்திரை குத்தப்பட்ட மறை கழண்ட லூசு!)

பின்னர், கோவிலின் ஓர் மூலையில் போய் அமர்ந்து கொண்டவள், தன் நெஞ்சத்தை அலைகழிக்கும் நினைவுகளை அச்சுப் பிசகாமல், வரிசை மாறாமல் ஆண்டவனிடம் சொல்ல ஆரம்பித்தாள்.

மனதிற்குள் அவள் நடத்திய அவ்வொப்புவித்தல் இரவு ஒன்பது மணி வரை நடந்தேறியது!!

கணவனிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் கிளம்பி வந்து விட்டப் போதும், கிட்டத்தட்ட ஏழு மணி நேரங்களாக கணவனுக்குத் தொடர்பு கொண்டு அவனிடம் தானிருக்கும் இடத்தைப் பற்றி சொல்ல வேண்டும் என்ற எண்ணமே மனோவிற்கு வரவில்லை.

அப்படிப்பட்ட நல்லெண்ணம் எழுந்திருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு கைப்பேசி என்ற கருவி வேண்டுமல்லவா? அதைத்தான் வீட்டிலேயே கடாசிவிட்டு வந்திருந்தாளே! (ரொம்ப நல்லது! இதுக்கெல்லாம் உன்னைக் கட்டி வைத்து அடிக்கணும். இந்தியாவா



இருந்தா.. இந்நேரம் குடும்பமே ஒன்று கூடி உன்னைக் கரிச்சுக் கொட்டியிருக்கும்! வெளிநாடாய் போய்விட்டதால், உன் இஷ்டப்படி ஆடுகிறாய்!?)

மனைவியின் சிறுபிள்ளைத் தனத்தின் விளைவாக, அவள் மீது உயிரையே வைத்திருந்த அவளது கணவன் மாத்யூஸ் தவித்துப் போயிருந்தான்! (அவன் தவிக்கவில்லை என்றால் தானே அதிசயம்!)

# 14

ஜீனின் மருத்துவச் சிகிச்சை முடிந்து, தன் அறைக்கு வந்து சேர்ந்த மாத்யூஸ் அங்கே மனோன்மணியைக் காணாமல் முதலில் திகைத்தான். குளியலறைக்குச் சென்றிருப்பாளோ என்ற எண்ணத்தில் அவன் திரும்ப, திறந்திருந்த குளியலறைக்கதவு அவனைப் பார்த்து சிரித்தது.

மேசையில் தான் கொடுத்துவிட்டுப் போன உணவு அப்படியே கிடக்க, மனோன்மணி அதை உண்டதற்கான அடையாளம் சிறிதும் இருக்கவில்லை.

பசியோடு இருந்தாளே? உண்ணாமல் எங்கே சென்று விட்டாள்? வீட்டிற்குச் சென்றுவிட்டாளோ? எனப் பல பல கேள்விகளுடன் மேசையை விட்டு நகர்ந்தவனின் கால்களைத் திறந்திருந்த கடைசி இழுப்பறை இடித்தது.

அதிலிருந்த ஜீனின் கடிதங்கள்/வாழ்த்தட்டைகள் காணாமல் போயிருந்ததை வெளியிடுவது போல் அதிலிருந்த சில காகிதங்கள் வெளியே சிதறியிருந்தன.

''ஹோ மை காட்'' எனத் தலையில் அடித்துக்கொண்டவன், ''இதை விடவே மாட்டாளா? ஏற்கனவே ஜீனின் மீது அவளுக்குக் கோபம், இப்போது இந்த வாழ்த்து அட்டைகளும் சேர்ந்துகொண்டதில் என்ன நிலையில் இருக்கிறாளோ? இதைக் கண்டதும் வீட்டிற்குச் சென்றுவிட்டாளோ? ஜீன் கொடுத்த அட்டைகள் அனைத்தையும் எடுத்துச் சென்றிருப்பாள் போலவே? இதென்ன பழக்கம்- கணவன் என்றாலும் வேறொருவருக்கு வந்த கடிதத்தைப் படித்ததும் மட்டுமல்லாது அதை எடுத்துச் செல்வது? வரவர அவளது சிறுபிள்ளைத் தனத்திற்கு ஓரளவே இல்லாது போய்விட்டதே? தன் மேலிருக்கும் அதீத காதலால் என்றாலும் கடிதத்தை எடுத்துச் சென்றது தப்பல்லவா?''- ஆற்றாமையில் தொடங்கி ஆத்திரத்தில் முடித்தவனின் கால்கள் லேசாய் தொய்ந்துபோக, அப்படியே இருக்கையில் விழுந்தான்.

தலையைக் கைகளால் தாங்கிக்கொண்டு மேசையில் கவிழ்ந்து சற்று நேரம் யோசித்தவன், என்னவாகிலும் அவளை சமாதானப்படுத்தியே ஆகவேண்டும் என்ற தவிப்புடன் எழுந்தவன் மனைவி வீட்டில் தான் இருக்க வேண்டும் என்று முழுமையாக நம்பினான்.

அதே நம்பிக்கையுடன் வெளியே வந்தவன், வீட்டிற்கு விரைய அவனது அன்பு மனைவி அங்குமிருக்கவில்லை. வேகமாய் அவளது கைப்பேசிக்கு அழைத்தால், படுக்கையறையிலிருந்து ஒலி எழுப்பி அவனிடம் பல்லைக் காட்டியது அக்குருவி!

அந்த நிமிடம் மாத்யூவின் மனதில் பயம் அப்பிக் கொண்டது. தன் மேலிருக்கும் கோபத்தில் வேறெங்கும் சென்றுவிட்டாளோ? ஒருவேளை வேறுவிதமான



முடிவேதும் எடுத்திருந்தால் என்ற எண்ணமே அவனது பயத்தையும் தவிப்பையும் பன்மடங்காய் பெருக்கியது.

இல்லை, என் மானி என்னைவிட்டுச் செல்லமாட்டாள் எனத் தனக்குள்ளே ஆயிரம் முறை சொல்லிக் கொண்டவன், மனைவி போயிருக்கக்கூடிய இடங்களைப் பட்டியலிட்டான்.

அவளுக்கென்று இந்த ஊரில் சொந்தங்கள் யாருமில்லை என்றாலும் இரண்டு இந்திய நண்பர்கள் இருப்பது அவன் அறிந்ததே. தன்னிடம் உள்ள கோபத்தில் வீட்டிற்கு வரப் பிடிக்காமல் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருப்பாள் போல என்றெண்ணிய மாத்திரத்தில் தங்களது அபார்ட்மெண்ட் வளாகத்திலேயே இருந்த நிஷா மற்றும் சுதாவின் வீட்டிற்கு விரைந்தான் அவன்.

சனிக்கிழமை மதிய நேரத் தூக்கம் கலைந்ததின் விளைவாக, ''யாரது?'' என்ற மங்கிய அழைப்புடன் வந்த சுதாவிடம், ''ஹாய் சுதா, நான் மாத்யூஸ்- மனோன்மணியின் கணவன். மானி, இன்று உங்களைப் பார்க்க வருவதாக சொன்னாள். அது தான் வந்திருக்கிறாளா எனப் பார்க்க வந்தேன்'' என்றான் உண்மை போல.

''ஹோ மனோவா? அவளுக்கு எங்களையெல்லாம் கூட ஞாபகம் இருக்கா?''- பதில் சொல்லாமல் போனா போதும் ஓர் எதிர்கேள்வியுடன் சுதா உதட்டைச் சுளித்ததும், ''சாரி'' என்ற ஒற்றைச் சொல்லோடு அங்கிருந்து நகர்ந்துவந்து விட்டான் மாத்யூஸ்.

அடுத்ததாக, மாத்யூவிற்குத் தோன்றிய இடம்- மனோவின் அலுவலகம். வார இறுதிகளில் திறக்கவே படாத அவளது அலுவலகத்திற்கு மெனக்கெட்டுச் சென்று திரும்பியவனின் மனதில் பயம் கூடிக்கொண்டே போனது!

"எங்கே போனாய் மனோ?" என நெஞ்சம் பதைக்க காரை எடுத்துக் கொண்டு இந்தியன் பொருட்கள் விற்கும் கடைக்குச் சென்றவன் அங்கேயும் அவளைக் காணாது தவித்தான்.

தொடர்ந்து மனோ செல்லக்கூடிய இடங்கள் என அவன் கணித்ததில்- மனோ ஒரே ஓர் முறை மட்டும், அதுவும் திருமணத்திற்கு முன்னர் சென்று வந்த அந்த விநாயகர் கோவில் இடம்பெறவே இல்லை.

இரவு கனிந்து, குளிரும் பனியும் கொட்டத் துவங்கிய வேளையில் மனோன்மணியின் உயிர்நிலையை எண்ணி அவன் கலங்கிப்போனதை வார்த்தையால் விவரிக்கமுடியாது. என்னதான்- ஒருத்தி இல்லாவிட்டால் இன்னொருத்தி என்ற கலாச்சாரத்தில் வளர்ந்திருந்தபோதும், அவனால் மனோவின்றி ஓர் வாழ்வை எண்ணிப் பார்க்க முடியவில்லை. மனோவைப் பார்ப்பதற்கு முன்னர் பெண்கள் மீது தோன்றிய ஈர்ப்பை காதல் என்றும் நட்பு என்றும் பகுத்தறியும் அறிவு கொண்டிருந்தவனுக்கு, மனோவின் மீதிருந்த அன்பு காதல் தான் என்ற முடிவு தெரிந்த நொடியிலிருந்து அவனது உயிராகிப் போனவளை எண்ணி மறுகிப் போனான், அந்த உயிர் காதலன்.

"அவள் அங்கே? அவள் அங்கே? குளிரிலும் பனியிலும் தனியாக தவிப்பாளோ?" என்ற மறுகலுடன் காரை எடுத்துக்கொண்டு ஜெனீவாவை சுற்றிவந்தவனின் கைப்பேசி, சரியாக இரவு ஒன்பதரைக்கு அடித்தது.

புது எண்ணாக இருந்தமையால் சிறு தயக்கத்திற்குப் பின்னர் எடுத்தவனின் காதுகளில் அமுதம் பாய்ந்தது என்றே சொல்லவேண்டும்!!



"மாட்ட்!" என அழு குரலினூடே பேசியது அவளது மணியே தான்!

"மாட்டி டியர்! எங்கே இருக்கிறாய்?" என மாத்யூவின் குரலில் நிம்மதி இருந்தபோதும், அதன் இடத்தை பதட்டமும் பிடித்திருந்தது. அருமை மனைவி எந்த நிலையில் இருக்கிறாள் என்ற பதைப்பில் குரல் நடுங்கியது.

"நான்...நான்... இங்கே மோந்நெட்-டில், வெர்னியர் பக்கத்தில் இருக்கிறேன். இங்க ஒரே குளிரா இருக்கு மாட்ட். இருட்டாவும் இருக்கு. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு மாட்ட். பஸ் எதுவுமே வர மாட்டேன்கிறது?!" என்ற மனோன்மணியின் குரல் நிச்சயம் அச்சமிருந்தது. கூடவே அழுகையும்!

"வெர்னியர்-ரிலா? அங்கே யார் இருக்கிறார்கள்?" எனக் குழம்பிய மாத்யூ, அதை வாய்விட்டும் கேட்டுவிட, "கோவில்.. கோவிலுக்கு வந்தேன்" என்று திக்கினாள் மனோ.

"கோவிலுக்கா? இந்த நேரத்திலா? சரி, சரி அழாதே மாணி. நான் சற்று நேரத்தில் அங்கே வந்துவிடுறேன். நீ இருக்கும் இடத்தின் முகவரி சொல்லு. நான் அங்கே வருகிறேன். நான் வரும்வரை கோவில் வளாகத்திலேயே இரு" என அவளிடம் வேண்டிய விவரம் வாங்கிக்கொண்டு விரைந்தவன், அரை மணி நேரத்தில் மனோவை நெருங்கியிருந்தான்.

அவனது காரைக் கண்டதும் "மாட்ட்" என்ற கூவலுடன் ஓடி வந்தவளை ஓர் வேகத்துடன் அணைத்தவன், தெருவென்றும் பாராமல் அவளை இறுக்கி அணைத்து, தன்னுள் புதைத்து, முத்தங்களால் அவளைக் குளிப்பாட்டினான்.

கோவிலை விட்டு வெளியேறியதும் வாட்டிய பனியும், மிரட்டிய இருட்டும், பயப்படுத்திய தனிமையும், ஆள் நடமாட்டமில்லாத தெருவும் நெஞ்சைப் பிசைந்ததில் நெஞ்சில் அப்பியிருந்த பயம்- இரு தெருக்கள் தள்ளியிருந்த ஓர் பொது தொலைபேசியில் கணவனை அழைத்து, தன்னை வந்து அழைத்துச்செல்லுமாறு கூறியதும் சற்றே குறைந்திருந்தது மனோன்மணிக்கு.

அந்த பயத்தை முழுவதும் அகற்றும் வண்ணம், சொன்ன நேரத்தில் தன்னைக் காக்க வந்த கணவனை அவனுமே இறுக இறுக அணைத்துக்கொண்டு அவனுள்ளிருக்கும் புதையலை மெல்ல மெல்ல தோண்டி, புதையலிருந்த இடத்தில தன்னைப் புதைத்துக் கொண்டாள்.

இருவருமாய் குளிர் மறந்து, பனி மறந்து, இரவு மறந்து, இருட்டு மறந்து, தெரு மறந்து, சுற்றி செல்லும் வாகனங்கள் மறந்து, இது நாள் வரை நிலவிய மன வேதனை மறந்து, ஏன் தங்களையே மறந்து, தங்களுள் இருக்கும் காதலை மட்டும் சாரலாய் இன்றி இடியுடன் கூடிய மழையாய் பொழிந்து கொண்டிருந்தாள்.

"என்னை விட்டு எங்கே சென்றாய் மானி?"

"நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன்?"

"என்ன கோபம் என்றாலும் வீட்டிலிருந்தே சண்டை போட்டிருக்கலாமே?"

"இனிமேல் என்ன காரணம் எனிலும் என்னை விட்டுப் பிரியக்கூடாது! பிரியவிடமாட்டேன்" என மாத்யூவின் புலம்பலுக்கு மனோன்மணியின் ஒரே பதில்



"ஐ லவ் யூ, மாட்" என்பதாய் மட்டுமே அமைந்ததில் அவர்களது முத்த யுத்தம், கொட்டிய பனியை மிஞ்சிக் கொண்டு வலுத்தது.

மழை வலுத்து, இடி மின்னல் புயல் என அவர்களது காதல் வெள்ளம் ஓடிக்கொண்டிருக்க, அவளது காதலின் வேகத்தினாலோ, குளிரின் தாக்கத்தினாலோ நடுங்கிய மனோவின் மேனி கணவனுடன் மேலும் ஒன்ட, அவளது உடம்பில் ஓடி மறைந்த நடுக்கத்தை உணர்ந்த கணவன், "வீட்டில் போய் பேசிக்கொள்ளலாம்" எனக் கூறி, அவளை மீண்டும் ஒரு முறை அணைத்து, காரினுள் ஏற்றினான்.

வாகனத்திலிருந்த ஹீட்டர் குளிரைச் சற்று குறைக்க, மனோவின் உடம்பினுள் சூடு ஏறிய சில நொடிகளில் மனதினுள்ளும் சூடு பரவி வழிந்தது.

கணவனின் கைகளுக்குள் தன் கையிருந்த தைரியமோ, அவன் மீது தான் கொண்டிருந்த காதலினால் ஏற்பட்ட கர்வமோ "என்னை ஏன் நீ தேடவே இல்லை? இவ்வளவு நேரம் சென்று வருகிறாய்? ஜீனின் உடம்பு சரியானதும் தான் என் நினைவு வந்ததா?" என்றவளின் கண்களில் கோபம் இல்லாதபோதும், சிறுபிள்ளைத் தனமும், லேசாய் கர்வமும், கொஞ்சமாய் மையலும் குடியிருந்தன. (உன் வாயே உன் எதிரி!)

ஆனால், அவளது உணர்ச்சிகளுக்கு முற்றிலும் மாறாய் அவளை விலக்கி நிறுத்திய மாத்யூஸ்- "மானி, எல்லாவற்றுக்கும் ஒரு அளவுகோல் இருக்கிறது! நீ, அதை அநியாயத்திற்கு மீறுகிறாய்!" என்றான் கடுமையான குரலில். (மாத்யூவிற்குக் கோபம் வந்துடுச்சு டோய்)

# 15

குளிரினால் அல்லாது கணவனின் கடுமையினால் மனோன்மணிக்கு மேனி நடுங்கியது.

நடுக்கத்தின் காரணமாய் அவனைப் பார்த்த மனோன்மணி ''மாட்ட்'' என்றாள் திகைப்பினூடே. (காசா பணமா என்ற ரேஞ்சில் வார்த்தையை விட்டுட்டு.. இப்போ திகைக்க என்ன புண்ணியம்?)

அவளது அழைப்பில் பொதிந்திருந்த கேள்விக்குப் பதில் சொல்லாமல் ''வீட்டிற்குப் போய் பேசிக்கொள்ளலாம்'' என்றதோடு முடித்துவிட்ட மாத்யூசின் மனதில் பிரதானமாய் இருந்த உணர்வு கோபம் தான்.

கிட்டத்தட்ட ஆறு மணி நேரங்களாக அவன் தவித்தத் தவிப்பை என்ன வார்த்தை சொல்லி உடைத்துவிட்டாள் என்று குமுறிய மனம், அவன் தன்னை- தனது காதலை அவமானப்படுத்தியது போலவே தோன்றியது. தன் மேல் அன்பு கொண்டிருந்தால், தான் தவித்த அதே தவிப்பை அவளும் பட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படி தவித்து மறுகியவளால் அவனது அன்பை வார்த்தைகளால் தகர்க்க முடியுமா? என மென்மேலும் கோபத்தில் காய்ந்தது. (கோபம்? மாத்யூவிற்கு? ஹ்ம்ம் நடத்து நடத்து! வேடிக்கை பார்க்க நாங்க ரெடி? சண்டை போட நீ ரெடியா?)

அதன் பின்னர் மாத்யூவின் கண்கள் மனோவின் புறம் திரும்பவே இல்லை.



இதுவரை கணவனின் கோபத்திற்கு ஆளாகும் வண்ணம் மனோன்மணி நடந்து கொண்டதே இல்லை என்று சொல்ல முடியாமல், அவர்கள் காதலித்து முதல் பற்பல சமயங்களில் மாத்யூவின் வாய் பேசாத ஊமைக் கோபத்திற்கு மனோன்மணி ஆட்பட்டிருக்கிறாள் தான்.

இதுவரையிலான அவனது கோபங்கள் அவளது நலனில் அக்கறை கொண்டதாகவே அமைந்திருக்கும் என்பதால்- தன் துன்பத்தை முன்னிறுத்தியல்லவா கோபம் கொள்கிறான் என்று மனோன்மணிக்குப் பெருமையாகவே இருக்கும். (தோடா...கோபப்பட்டா அம்மணி பெருமைப்படுவாங்களாம்! யார்கிட்ட டபாய்க்கிற?)

ஆனால், இப்போது வந்திருக்கும் அவனது கோபத்தைப் பார்த்து அரண்டு போனாள் மனோன்மணி.

சொல்லக்கூடாத வார்த்தைகளைத் தான் கூறிய போதும், கோபம் காட்டாது வெறும் விலகலிலேயே தனது தவறை சுட்டிக்காட்டியவன், இன்று அவன் கோபம் சிறிதுமில்லாமல் காதலும், மையலுமாய் விளையாட்டாய் கூறிய வார்த்தைகளுக்குப் பதிலாய் அவன் காட்டிய கடுமை மனோன்மணியை உலுக்கவே செய்தது! (விளையாட்டுப் பிள்ளை!)

நெஞ்சில் ஓர் திகிலுடன் மாத்யூசைப் திரும்பிப் பார்த்தால், அவனோ வீட்டைக் குறி வைத்து சாலை எனும் வில்லில் கார் எனும் அம்பை மிகுந்த கவனத்துடன் விட்டுக் கொண்டிருந்தான். (வில்லின் வீரன் அர்ஜுனனை மிஞ்சி விடுவாய் போலவே, மாட்ட்!)

''மாட்ட்'' என்ற அவளது அழைப்பிற்குப் பதிலேதும் இல்லாது போயிருந்தால் கூட பரவாயில்லை, அவனது கூர் பார்வை பதிலாய்- பரிசாய் வந்து விழுந்ததில்

சூடேறியிருந்த தேகம் குளிர் ஜுரம் கண்டது போல சிலிர்த்து அடங்கியது. (கொஞ்ச நாளுக்கு அப்புறம் மேடம்க்கு மேனி சிலிர்க்க ஆரம்பிக்குதே?! நல்ல சகுனமா? கெட்ட சகுனமா?)

அரை மணி நேரப் பயணத்தில் வீட்டை அடைந்து கதவை மாத்யூஸ் திறந்த மறு விநாடி, ''மாட்ட்... நான் சும்மா விளையாட்டாய் தான் அப்படி கேட்டேன்'' என்று தொடங்கினாள் மனோன்மணி. நெஞ்சம் படபடக்க, அவனது பதிலுக்காக அவள் காத்திருக்க, ''உடை மாற்றிக்கொண்டு வா, பேசலாம்'' என்றவன், குளியலறைக்குள் புகுந்துகொண்டான்.

ஐந்தே நிமிடங்களில் இரவு உடைக்கு மாறிய மனோன்மணியின் மனதில் அபாய மணி ஓங்கி அடித்தது- தான் கண் வலியால் அவதிப்பட்டபோது கூட மாத்யூஸ் கோபப்பட்டான் தான்- ஆனால் அதில் மிளிர்ந்தது அப்பட்டமான அக்கறை- அவள் மீதிருந்த காதலின் விளைவாய் வழிந்த நம்பிக்கை! இப்போது, அவன் கொண்டிருப்பதோ வேறு விதமான கோபம் என்றே அவளுக்குப்பட்டது!

இத்தனை நாட்கள் தான் சிறு பிள்ளைத் தனமாய் செய்ததை சிரிப்புடன் பார்த்திருந்தவன் இன்றும் அப்படியிருக்க மாட்டான் என்றே தோன்றியது மனோன்மணிக்கு. (நீ கூட சரியா யோசிக்கிறியேமா..... யோசிக்கிறியே!)

மானசீகமாய் கோதையிடம் பிரார்த்தனை நடத்திக் கொண்டே வெளியே வந்தவளுக்கு, அடுப்பின் முன்னே நின்றிருந்த கணவனைக் கண்டதும் மனம் சற்றே லேசான போதும், ஒன்றும் பேசாது அடுப்பு மேடை



ராமாக சாய்ந்து நின்றாள். (அதானே, நாம சமைக்கலைன்னா நமக்கு நிம்மதி என்பதைவிட சாப்பிடப் போற அவனுக்கு எவ்வளவு நிம்மதி! அந்த நிம்மதியில மனசு கண்டிப்பா லேசாகணும்!)

கணவனின் கைவண்ணத்தில் தயாரான டோட்டிலாவிலேயே கண்ணைப் பதித்திருந்தவள், சூடான டோட்டிலாவின் (சோளச்சப்பாத்தி) மீது முட்டையை அடித்து ஊற்றி, வெங்காயம்- பச்சை மிளகாய்-தக்காளி- குடமிளகாய் என சிறிதாய் அரிந்து வைத்திருந்த கலவையைத் தூவி, அவன் முட்டை ரோல் தயார் செய்யவும் உதட்டில் ஓர் புன்னகை பூத்தது. பின்னே, கணவன் தயாரிக்கும் உணவு அவளது விருப்ப உணவல்லவா! (அவனும் திருந்தப் போறதில்லை... நீயும் திருந்தப்போறதில்லை!)

அவன் உணவு தயாரித்து முடிக்கும் வரை பேசாதிந்தவள், தனக்கென்று ஒரு தட்டை எடுத்துக் கொண்டவன், மற்றொன்றை அவளிடம் நீட்டினான்.

''என் மேலிருந்து கோபம் போயாச்சா?'' எனத் தலை சரித்து அவள் கொஞ்ச, மாத்யூசிடமிருந்து பதிலேதும் வராது போனது. ''போயாச்சுன்னு சொல்லு. அப்போதான் சாப்பிடுவேன்'' என அவள் மேலும் மிளிற்றியதில் உருகி வழியாது திடமாய் நின்ற மாட்ட், உணவுத் தட்டை மேசை மீது வைத்துவிட்டுத் தன் போக்கில் சோபாவில் சென்றமர்ந்தான். (விட்டான் பாருங்க ஒரு ரிவீட்டு! இங்க ஒரு விசில் சத்தத்தை எக்ஸ்ட்ராவா சேர்த்துக்கோங்க!)

அவனது அந்த செயலில் உள்ளம் உதறல் கொள்ள, மெல்ல அவன் பக்கம் சென்றமர்ந்தவள் மறக்காமல் உணவைக் கையில் எடுத்துக்கொண்டாள். அவனை

ஒட்டி அமர்ந்துகொண்டு, அவன் நெஞ்சில் முகம் புதைக்க முயன்றவளை விலக்கி, ''சாப்பிடு, அப்புறம் பேசலாம்'' என்றான் மாத்யூஸ். அவனுக்குப் பல விஷயங்களை விளக்கவும், விளக்கம் கேட்கவும் வேண்டியிருந்தது. மனதின் கோபம் வடியும் தருவாயில் இருப்பதை உணர்ந்தவன் போல், மனைவியை விலக்கியே அமர்த்திக்கொண்டான். (முன்னெச்சரிக்கை முனுசாமி!)

''நான் சும்மா விளையாட்டுக்கு தான், அப்படிக் கேட்டேன்'' என மனோ ஆரம்பிக்கும்போதே, வாயின் மீது விரல் வைத்தவன் உணவைக் காட்டியவன், தானும் கடைப்பிடித்தான்.

உணவு நேரமான அரை மணி நேரத்தின் பின்னரும், மனோவின் உணவில் பாதி உணவு அப்படியே இருக்க, ''சீக்கிரம் சாப்பிடு, மானி!'' என்றான் மாட். அவனது 'மானி'யில் மேலும் கொஞ்சம் தெளிவு பிறக்க, அவனது கோபத்தை மேலும் கூட்டுவது உசிதமாய் படாததால், ஐந்தே நிமிடத்தில் மீதி உணவை முடித்துவிட்டாள் மனோன்மணி. (கடோத்கஜனிக்கு தம்பி பொண்டாட்டி!)

உணவு முடிந்ததும் படுக்கையறைக்குள் வருவான் என்ற எண்ணத்தில் மனோ, மஞ்சத்தின் மீது அவன் காட்டும் மோகத்தின் மேல் கொண்ட மயக்கம் பாதியும், கணவன் வர வேண்டுமே என்ற வேண்டுதல் மீதியுமாய் உள்ளே நுழைய முற்பட்டாள்.

ஆனால் அவன் சற்றும் அசையாது அமர்ந்திருக்கவும் ''தூங்க வரலையா?'' என்றாள் மனோன்மணி சிறு கவலையுடன்.

''நீ இங்க வா. கொஞ்சம் பேசலாம்'' என்றவன், அவள் தயக்கத்துடன் வந்ததும் ''ஜீன் எனக்குக் கொடுத்த



வாழ்த்தட்டைகளை, என்னைக் கேட்காமல் எதற்கு எடுத்து வந்தாய்?'' என்றான் முதல் கேள்வியாய்.

''என்..நான் அதை எடுக்கக்கூடாதா? அவ எப்படி உனக்கு லெட்டர் கொடுக்கலாம்? எனக்கு சொந்தமான ஒரு பொருளை அவ எப்படி சொந்தம் கொண்டாடலாம்?'' என மனோவிற்கும் கோபம் வந்தது. ஜீனின் வாழ்த்தட்டைகள் அவனுக்கு எந்தளவு கோபம் மூட்டியதோ அதே அளவு கணவனின் கேள்விகளும் கோபமூட்டின. அவன் கொடுத்த ஒரு பொருளை எடுத்ததற்காக என்னிடம் கோபம் கொள்கிறானே என்ற எண்ணமே அவளது கோபத்திற்குத் தூபமிட்டது எனலாம்! (நீ எப்பவுமே கேள்வியை ஒழுங்கா படிக்கவே மாட்டியா? தப்பும் தவறுமா படிச்சிட்டு முட்டை மார்க் வாங்கும் பிரகஸ்பதியா நீ?)

''உன்னை ஏன் எடுத்தாய் என்று கேட்கவில்லை. என்னைக் கேட்காமல் எதற்கு எடுத்தாய் என்று கேட்டேன். கணவனே என்றாலும், எனக்கு வந்த ஒரு கடிதத்தை நீ எடுத்துப் படிப்பது அநாகரீகம் இல்லையா? அதைத் தான் உங்க கலாச்சாரம் சொல்லிக்கொடுத்ததா?'' என அவன் சூடாய் கேட்டுவிட, மனோன்மணிக்குக் கோபம் தலைக்கேறியபோதும் அவன் சுட்டிக்காட்டிய தவறு உறைக்கவே செய்தது. (தவறு உறைந்து விட்டதா? இஸ் இட்? அப்படியா மனோ? என்னால் நம்ப முடியலையேமா.. நம்ப முடியலையே!)

இருப்பினும், தனது தப்பை ஒப்புக்கொள்ள மனமில்லாமல் ''அவள் எப்படி உனக்கு லவ் லெட்டர் கொடுக்கலாம்? எனக்கும் உனக்கும் திருமணம் முடிந்து விட்டது என்று தெரிந்தும் அவ...லெட்டர் கொடுத்தது மட்டும்

தப்பில்லையா?'' எனத் தன் தப்பை அப்படியே அந்
தரத்தில் விட்டுவிட்டு, ஜீனின் தப்பால் தான் தன் தப்பு
விளைந்தது என்பது போல் வாக்கு வாதம் செய்தான்.

''அவள் செய்தது தப்பு என்றால் நீ செய்ததும் தப்பு தான்!'' எனக் கணவன் அழுத்த, மனோவிற்குக் கோபம் வந்தது.

''எப்போவும் அவ மேல தான் உனக்குப் பிரியம். அவளுக்காக என்னைத் திட்டுகிறாய் தானே? என்னை விட அவள் தான் பெருசா?'' எனக் கோபத்திலும், கண்ணீரிலும் குரல் திக்கியது மனோவிற்கு. (அதானே பார்த்தேன்! என் நம்பிக்கையை காப்பாற்றியதற்கு உனக்கு ''சந்தேகத்திலகம்'' என்ற நோபெல் பரிசு கொடுக்கப் படுகிறது!)

''ஷட் அப், மானி! எதற்கெடுத்தாலும் ஜீன் எதற்கு நமது வாக்குவாதத்தில் வருகிறாள்? அவள் என்னைக் காதலித்தாள் தான். ஆனால் நான் அவளை விரும்பவில்லை என்பதை எத்தனை தடவை சொல்றது?'' என அவனும் கடுப்படிக்க,

''அவளைப் பத்தி நான் பேசக்கூடாதா? வாயை மூடிட்டு உன்னை அவளுக்கு விட்டுக் கொடுக்கணுமா? என்னால முடியாது... நீ எனக்கு மட்டும் தான்'' எனக் காலை உதைத்துக் கொண்டு கத்தினாள் தர்மபத்தினியாய். (காலை உதைத்துக் கொண்டு- மனோன்மணி *கழுதையா நீ? ச்சீ..ச்சீ!)*

''நானும் அதையே தான் சொல்றேன். நான் உன்னை மட்டும் தான் காதலிக்கிறேன். உன் மேல எனது அன்பு முழுதையும் வைத்திருக்கிறேன். இன்று உன்னைக்



காணாமல் நான் பட்ட வேதனை எனக்குத் தான் தெரியும்'' என்றவனை இடைமறித்து,

''அந்த வேதனைக்கே ஜீன் தான் காரணம்.... அவள் உனக்கு லவ் லெட்டர் கொடுத்தாள்?'' எனப் பல்லைக் கடித்தாள் மனோன்மணி, சிறுபிள்ளையின் தேய்ந்த டேப்ரெகார்டர் போல.

''அவள் கொடுத்தால் நான் என்ன செய்யட்டும்?'' என மாத்யூஸ் பொறுமையாகவே பதில் கேள்வி கேட்க,

''தூக்கி எறிய வேண்டியது தானே? எதுக்கு பத்திரமாய் வைத்திருக்கிறாய்? அவள் மேல் காதல் இல்லை என்று சொல்பவன் தூக்கி எறிய வேண்டியது தானே?'' என்றாள் மனோன்மணி வேகமான பதிலாக.

''அவள் கொடுத்த கடிதங்களை வைத்திருப்பதாலோ, தூக்கி எறிவதாலோ உன் மீது நான் கொண்ட காதல் மாறாது. புரிந்து கொள், மானி! அவள் வேறு... நீ முற்றிலும் வேறு!'' என்றான் மாத்யூஸ் மேலும் மேலும் பொறுமையாகவே. (நீ ரொம்ப நல்லவன்டா)

''இல்லை. இல்லை. அவள் வேறு... நான் வேறு என்றால் நீ ஏன் நேற்று வரவில்லை? இன்றும் எவ்வளவு நேரம் சென்று வந்தாய்?'' எனத் தன் வாயையே தனக்கு எதிரியாக்கினாள்.

''அவளது உடல்நிலையைப் பார்த்தப்பின்னரும் நீ கேட்கும் இந்தக் கேள்வி- அபத்தமானது மானி! அப்புறம்... இன்றைய நேரத் தாமதத்தைப் பற்றி நீ பேசாதே? எங்கே இருக்கிறாய்? என் அறையிலிருந்து எப்போது கிளம்பினாய்? எங்கே சென்றாய்? எதற்கு கோபம்? என ஒன்றுமே தெரியாமல் நான் தவித்தது எனக்குத் தான்

தெரியும். உன் தோழிகள் வீடு, அலுவலகம், இந்த... கடை, மால் என்று தெரு தெருவாய் அலைந்து கொண்டு இருக்கிறாய் என்ற விவரம் தெரியாமல் நான் பட்ட வேதனை எனக்குத் தான் தெரியும்! தகவல் சொல்லாமல் செல்லும் அரிய பழக்கத்தை நீ படித்துவிட்டு என்னை எதற்கு குற்றம் சொல்கிறாய்?'' என்றான் மாத்யூவும் கோபமாக. கோபம் என்றபோதும் அவனது குரலில் கத்தல் இருக்கவில்லை. மாறாக அழுத்தமும் இறுக்கமும் அவனது கோபத்தை வெகு துல்லியமாய் எடுத்துக்காட்டின.

அவனது கோபம் புரிந்தபோதும், தான் எதற்காக கோவிலுக்குப் போனோம் என்றெண்ணிய மனோன் மணியின் மனம் மேலும் முரண்டியதன் விளைவாக ''நானும் தான் வேதனைப்பட்டேன்.... எங்கே ஜீவின் பக்கம் நீ சாய்ந்துவிடுவாயோ என்று எப்படி பயந்தேன் தெரியுமா?'' என அவள் தேம்ப,

''எவ்வளவு தூரம் படித்துப்படித்து சொல்கிறேன். அவளுக்கும் எனக்கும் நட்பு என்பதை மீறி எதுவுமில்லை என்று. அதை உன்னால் நம்ப முடியாது இல்லையா? எனது வார்த்தைகளின் மீது உனக்கு நம்பிக்கையில்லை எனும்போது எனக்கு வேறென்ன சொல்வது என்று தெரியவில்லை. உனக்காய் புரியும் போது புரியட்டும். அதுவரை எனது காதலுக்கு நீ கொடுக்கும் மரியாதை இதுவாகவே இருக்கட்டும்'' என அமைதியான குரலில் கூறியவன், அவளைத் தாண்டி படுக்கையறைக்குள் சென்று மறைந்தான்.

கலங்கிய கண்களினூடே அவனைப் பார்த்தவளின் உள்ளம், அழுத்தம் அளவிற்கு அதிகமாய் கொடுக்கப்



பட்ட அவளது அமைதிக் குரலில் ஊமையாய் அழுதது! (ஊமையாகிவிட்டாயா? ஹப்பாடா மாத்யூ.. கிரேட் எஸ்கேப்டா மகனே!)

# 16

மாத்யூசின் விலகலில் ஊமையாகிப் போன மனோன் மணியால், சிறிது நேரத்திற்கு இருந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. கால்கள் வேரோடியது போல் நிலைத்துவிட, படுக்கையறைக் கதவையே வெறித்துக் கொண்டு சற்று நேரம் நின்றாள். (தென்னை மரத்தைப் பார்த்திருக்கேன்.. மாமரத்தைப் பார்த்திருக்கேன்... புளியமரத்தைக் கூடப் பார்த்திருக்கேன் (அதாவது வேதாளம்.. இல்லை இல்லை மனோன்மணி வசிக்கும் மரம்)...ஆனா இதென்னடா இது? மனுஷ மரம்? இல்ல கால் வேரோடிப் போச்சுன்னு சொன்னதால சின்னதா ஒரு டவுட்.. வேறொண்ணுமில்லை!)

பின்னர், ஏதோ நினைத்தவளாக மாத்யூசின் கணினி அறைக்குள் சென்றவள், அதன் ஓரமாக அவன் வைத்திருந்த பூஜையறையின் முன்னே நின்றாள். அருள் கொஞ்சும் ஆண்டாளின் முன்னே கையேந்தி நின்றவள், கண்களை மூடி, நெஞ்சுருக வேண்டினாள். (என்னாத்துக்கு? அவனைத் திட்டும் சக்தியை எனக்குக் கொடுன்னா?)

பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாய் நடந்த அப்பிரார்த்தனை நேரம் முழுதும், திருப்பாவையின் பதினாறாம் பாசுரத்தை மனமுருகப் பாடினாள்.

''நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ!
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.''

என்ற பாசுரத்தைப் பாடியவளின் மனம், மூடியிருக்கும் தன் மணாளனின் மனக்கதவைத் திறக்கச் செய்யுமாறு வேண்டிக்கொண்டது! (இருந்தாலும்...நீ பேசுற ஒட்டைத்தமிழே அவனுக்கு இன்னும் புரிஞ்சப்பாடில்லை. இதில தூயத்தமிழில் பாசுரம் வேற!?)

தனது சிறுப் பிள்ளைத் தனமும், அவனது பேச்சை நம்பாத நிலையும்- தான் அவனது கோபத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தபோதும், அவளால் ஜீனின் கடிதங்களைக் குப்பை என ஒதுக்க முடியவில்லை.

கணவன் அவற்றை குப்பை என்றெண்ணியிருந்தால், தூக்கி எறிந்திருப்பானே என மனம் சூடாய் கேள்வியும் கேட்க, மனோன்மணி ஓர் நிலைக்கு வர முடியாது தடு மாறினாள். (என்னைக்குத் தான் அது ஸ்டடியா இருந் திருக்கு? எப்போ பார்த்தாலும் குடிகாரனோட நடை மாதிரி தடுமாறிட்டே தானே இருக்கும்)

கணவனின் அணைப்பிற்கு ஏங்கிய அதே மனது, கணவனின் அணைப்புத் தனக்கு மட்டுமாய் இருக்க வேண்டுமே என இரு மருங்கிலும் தவிக்கத்



தொடங்கியது. தவிப்பை அடக்க முடியாது போக, கடவு ளிடம் தஞ்சம் புகுந்தவளின் மனம் லேசாய் அமைதி கொண்டுவிட, மெல்லிய காலடிகளுடன் தங்கள் படுக்கை யறைக்குள் சென்றாள்.

அங்கே அவளது ஏமாற்றத்திற்கு ஏற்றவகையில், மாதவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்! தன்னைத் திட்டிவிட்டு.. எப்படி இவனால் நிம்மதியாக உறங்க முடிகிறது? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்காதா என நெஞ்சம் குறுகுறுக்க, அவன் அருகே சென்று படுத்தாள் மனோன்மணி.

அவனை விட்டு அரை அடி விலகிப் படுக்கச் செய்த தன்மான உணர்வு, விட்டத்தை வெறித்துக் கொண்டு தங்களுக்குள் நடந்தேறிய உரையாடலை அசைப் போட்டபோது காணாமல் போனது என்னமோ நிஜம் என்று தான் சொல்லவேண்டும்! (போலீஸ் கம்ப்ளைண்ட் வேணும்னா கொடுப்போமா? நிஜமா காணாம போச் சுன்னு வேற சொல்ற? சீக்கிரம் கண்டுப்பிடிக்கணும் இல்லையா?!)

''என் வார்த்தைகளில் மீது உனக்கு நம்பிக்கையில் லையா?'' என அவன் அழுத்தம் திருத்தமாக கேட்டதே மனதில் ஆட, நமக்குப் பொறுமையே இல்லையோ... அவன் சொல்லும் வார்த்தைகளை நம்புவதற்கு ஒரு முயற்சியும் எடுக்காது விட்டோமே என மனம் கலங்கியது.

நம்பும் மூளையைத் தான் ஜீனின் வாழ்த்தட்டை களிலிருந்த முத்தங்கள் அழித்திருந்தனவே என எண் ணிய வினாடி, அவன் எதற்காக ஜீனின் கடிதங்களைத் தூக்கி எறியாது வைத்திருக்கிறான் என்ற எண்ணம் மீண்டும் எழுந்து அவளது உள்ளத் தீய்க்கு எண்ணை

ளத்தியது! (என்னை தானா? ரொம்ப கம்மி .. ஜெட்டா இருக்கே? நெய் ஊத்திவிருக்கலாமோ?)

மாத்தூவின் பக்கம் ஒரு முறையும், தன் பக்கம் ஒரு முறையும் எனத் தாவித் திரிந்த மனத்தைக் கட்டுக்குள் வைக்கவே பெரும் பாடாய் இருப்பதை உணர்ந்த மனோன்மணி, இந்த வேண்டாத வேலை செய்வதைவிட, தூங்குவதே மேல் என்றெண்ணி கண்களை இறுக மூடிக் கொண்டு உறங்க முயற்சி செய்தாள்.

அரை மணி நேரத்திற்கும் மேலாக, அவளது தூங்கும் முயற்சி, முயற்சி என்ற அளவிலேயே இருக்க, எரிச்சலுடன் எழுந்து அமர்ந்த மனோன்மணி முழங்காலில் முகம் புதைத்தாள். (உன் ரேஞ்சுக்கு.. ரெண்டு மூணு தலையணையை எடுத்து மாத்தூவை சாத்திருப்பேன்னு நினைச்சேன்! பரவாயில்லை.. நீ கூட வளர்ந்துட்டே!)

அந்த நிலையும் எரிச்சலை வரவழைக்க, வீட்டின் கூடத்திற்கு எழுந்து சென்றவள், தொலைக்காட்சியை ஓடவிட்டு, அதை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அந்த நேரத்தில், ஏனோ சம்பந்தமில்லாமல் தன் தாய் வீட்டில் தான் போடும் சண்டைகளும், சண்டையின் விளைவாக உண்டாகும் கோபத்தினால் சரியாக உண்ணாமல் படுத்துவிடுவது, சரியாக உண்ணாததால் நடு இரவில் விழித்துக்கொண்டு அமர்ந்திருப்பதும், ரோசத்தின் காரணமாய் தாயை எழுப்பாது கூடத்திற்கு வந்து அமர்ந்து கொள்வதும், ''இந்தா கண்ணு.. இந்தப் பாலைக் குடி...'' எனப் பத்தாவது நிமிடத்தில் தன்னருகே பால் டம்ளருடன் வந்தமரும் தந்தையும், ''எனக்கு வேணாம்...'' என முறுக்கிக் கொள்ளும் மகளிடம் அவர் கொஞ்சம் அழகும் எனப் பலதும் நினைவில் வந்து, கண்களில்



ஜேக் சோத்துவிட்டுச் சென்றனை. (என்ன ஒரு பிளாஷ்பேக்!? என்ன ஒரு பிளாஷ்பாக்!? பேஷ், பேஷ்! ரொம்ப நல்லா இருக்கு!

பத்து நிமிடங்களுக்கும் மேலாய் பொங்கிப் பெருகிய கண்ணீரைத் துடைத்தவளின் கைகள், வீட்டுத் தொலைபேசிக் கருவியை எடுத்து, காலிங் கார்ட் மூலமாக இந்தியா என ஒன்றை அழுத்திவிட்டு, மனம் கணக்க காத்திருந்தாள்.

நாலரை மணி நேரம் பின் தங்கியிருக்கும் தனக்கு ஒரு மணி எனும்போது, அவர்களுக்கு அதிகாலை என்பதைக் கணக்கிட்ட அதே மனது, அதிகாலையில் விழித்துவிடும் தந்தையே இந்த அழைப்பை எடுக்கக்கூடும் என்றும் கணக்கிட்டது.

அவளது கணக்கிடலை வீணாக்காது ''ஹெல்லோவ்'' என்ற குரல், அவளது தந்தையது தான்!

''அப்பா...'' என அவள் கூவியதில், அந்தப் பக்கமிருந்த ரத்தினவேலுவிற்குப் பேச்சு நின்றுபோய்விட, அங்கே பரிபூர்ண அமைதியும், மௌனத்தினால் பரிமாறப்பட்டப் பாசமும் மட்டுமே நிறைந்திருந்தது.

தொடர்ந்த இரண்டு நிமிடங்களுக்கும், மனோன்மணியும் ஒரு வார்த்தை பேசவில்லை, அதே போல் அவளது தந்தையும் ஒரு வார்த்தை கூட உதிர்க்கவில்லை. சில பல மாதங்களாய் நிலவிக் கொண்டிருந்த பனிப்போரும், ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த பாசமும் ஒன்றோன்று போட்டியிட, வார்த்தைகளற்ற மௌனம் அங்கே ஆயுதமாகி, இருவருக்குமான போரை முடிவிற்குக் கொண்டு வர முயன்று கொண்டிருந்தது!

மனோன்மணியின் மௌனத்தை விடவும் அவளது அழுகையில் கரைந்து போனாரோ என்னவோ "பாப்பா..." என்ற ரத்தினவேலாலும் தொடர்ந்து பேச முடியவில்லை.

"அப்பா... அப்பா..." எனத் தடுமாறிய மனோன்மணி முயன்று தொண்டையை செருமிக்கொண்டு "எப்படி இருக்கீங்கப்பா? அம்மா... அம்மா... எப்படி இருக்காங்க?" என்றாள் ஏக்கம் மறையாத குரலில்.

"எங்களுக்கு என்ன பாப்பா... குத்துக்கல்லாட்டம் ரொம்ப நல்லா இருக்கோம்? நீ எப்படி இருக்கே? அந்த... அந்தப் பை.. பையன்.. ஹூக்கும்....மாப்பிள்ளை உன்னை நல்லா வச்சிருக்காரா?" என்றார் பெரும் திணறலுடன். (வாவ்! வாவ்! வாவ்! மாட்ட் நீ மாப்பிள்ளை ஆகிட்டே டா! ட்ரீட்! ட்ரீட்! ட்ரீட்!)

அவரது "மாப்பிள்ளை" என்ற சொல்லில் திகைத்துப் போன மனோன்மணி, "என் மேல இருக்க கோபம் போயிடுச்சாப்பா? மாட்ட் நல்லா இருக்கார் பா... என்னை ராணி மாதிரி வச்சிருக்கார்.. எனக்கு ஒண்ணுன்னா துடிச்சுப் போய்டுறார்... இன்னைக்குக் கூட நான் பாட்டுக்குச் சொல்லாம கொள்ளாம கோவிலுக்குப் போயிட்டேனா.. அவருக்கு ரொம்ப டென்ஷன் ஆகிடுச்சு.... என்னைப் பார்க்கிற வரைக்கும் ரொம்பவும் தவிச்சுப் போயிட்டாராம்... அவர் ரொம்ப நல்லவர் பா" என்றாள் வேகவேகமாக. (இதல்லவோ, பதி பக்தி!)

"அவர் நல்லவரோ.. கெட்டவரோ... என் பெண்ணின் மனசுக்குப் பிடிச்சவரை எனக்கும் பிடிக்கும் பாப்பா" என அவர் தழுதழுக்க, இங்கே மனோன்மணிக்குச் சந்தோஷத்தில் வார்த்தைகள் வர மறுத்தன. (நீ இப்போவெல்லாம் அடிக்கடி ஊமையாகிடுறே, மனோன்மணி! இது சுத்தமா



நல்லாயில்லை... ஆமா! நீ உன் இஷ்டத்துக்கு ஊமையாகிட்டா.. நான் யாரைத் திட்டுறது??)

தனது காதல் தெரிந்த நாள் தொட்டு, தன்னிடம் முகம் கொடுத்தே பேசுவது என்ன.. தன் முகத்தில் விழிப்பது கூட பாவம் என்பது போலிருந்த தந்தையா என்றிருந்தது மனோன்மணிக்கு.

எல்லையில்லா சந்தோசம் மனதில் நிறைந்துவிட, "அப்பா.. அப்பா.. உங்களுக்கு என் மேல கோபமில்லையா?" என்ற போது குரல் நடுங்கிவிட்டது.

"கோபம் இருந்ததும்மா... ஆனா இத்தனை நாளா உன்னோட குரலைக் கேட்காம, நீ "அப்பா"ன்னு கூப்பிடறதைக் கேட்காம... அப்பா ரொம்ப நொடிச்சுப்போயிட்டேன்டா ராசாத்தி! சோறு தண்ணி இறக்காம... உன் நினைப்பாவே இருந்தது."

"எனக்கும் தானப்பா" என மனோன்மணி இடைப் புகுந்ததை கவனிக்காமல் அவர் தொடர்ந்தார். (பெரியவங்க பேசும்போது குறுக்கப் பேசக் கூடாதுன்னு உனக்கு ஆயிரம் தடவை சொல்லியாச்சு!)

"அந்த நேரத்தில எல்லாம் நினைச்சிருக்கேன்- ஒத்தப் புள்ளைன்னு அவ கேட்டதையெல்லாம் கொடுத்தோமே. இப்போ அவ ஆசைப்பட்டுக் கேட்கிற மனுஷனை ஏன் நம்மளால ஏத்துக்க முடியலைன்னு என்னையே கேள்வி கேட்டிருக்கேன்! வெள்ளைக்காரனா இருந்தா என்ன? அவனும் மனுஷன் தானே? என் பொண்ணுக்குப் பிடிச்ச ஆண்டாளை எனக்கும் பிடிச்ச மாதிரி... அவளுக்குப் பிடிச்சவனை எனக்கு ஏன் பிடிக்காம போச்சுன்னு யோசிச்சிட்டு இருந்தேன் பாப்பா... நம்மூர் பசங்களை

மட்டும் எப்படி நம்புறது? எத்தனை பேர்... கட்டின பெண் சாதியை விட்டுட்டு ஓடிப் போறானுங்க... அவங்க... கைன்னு ஆரம்பிச்சா உலகத்தில யாரையுமே நம்ப முடியாதே..'' என அவர் பேசிக்கொண்டே போக, மனோன்மணியை யாரோ சுரீர் என்று அறைந்தது போலிருந்தது. (நான்.. கூட அடிச்சுட்டாங்களோன்னு நினைச்சேன்.. ஒரு நிமிஷம்... ஒரே நிமிஷம் சந்தோஷமா இருந்தேன்! ஹ்ம்ம்....)

ஆனால் அவளது அதிர்ச்சி உலகத்தின் ஓர் கோடியிலிருந்த ரத்தினவேலுவிற்குத் தெரியாது போக, அவர் தன் போக்கில் பேசிக்கொண்டே போனார்.

''நீ... கல்யாணம் முடிஞ்சு போன கையோட உன்னைத் தலை முழுகிட்டதா தான் ராசாத்தி நினைச்சேன்... அந்த நினைப்பில், உனக்குப் பார்த்து வச்சிருந்த ராஜேந்திரனுக்கும் நம்ம கலைவாணிக்கும் கல்யாணம் பண்ணி... சொந்தப் பிள்ளைங்க மாதிரி வச்சிருந்தேன் பாப்பா... ஆனா, அந்த களவாணிப் பயலுக்கு குடி, கூத்துன்னு மெட்ராஸ்ல இல்லாத சேர்க்கையில்லையாம்... கலைவாணியோட நகை அம்புட்டையும் எடுத்துகிட்டு அவளை அடிச்சிருக்கான்.... அத்தை வந்து.... எம்மகளைப் படுகுழில தள்ளிட்டியேன்னு என்னைக் கண்ட மேனிக்குப் பேசிட்டுப் போயிருச்சு! அதில தான் ராசாத்தி, ஆண்டாள் அவளோட பக்தைக்கு நல்லது நினைச்சுத் தான் உன்னை வேற எடத்தில கட்டிக்க வச்சுட்டான்னு தோணுச்சு'' என்றார் ரத்தினவேலு, மேலும் நீளமாய்.

சற்று நேரம், கலைவாணியின் வாழ்க்கை பற்றி பேசி, ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறிக் கொண்டனர்.

''என்னால நம்பவே முடியலப்பா.. இப்போ போன் போடும்போது கூட, நீங்க என்கிட்டே பேசுவீங்களோ மாட்



டீங்களோன்னு பயந்துட்டே இருந்தேன்பா.. எத்தனை நாள் வீட்டு நம்பருக்கு போன் போட்டுட்டு நீங்க எடுக்கிறதுக்குள்ள போனை வச்சிருக்கேன் தெரியுமா?'' என்றபோது மனோன்மணிக்குள் சிறு பிள்ளைத் தனம் மீண்டும் குடிவந்திருந்தது. (அது எங்கே போனது மீண்டும் வருவதற்கு? அது தான் 99 வருஷ லீஸ் அக்ரீமெண்ட் போட்டு... சாஷ்டாங்கமா உட்கார்ந்திருக்கே)

''நானும் உன்னைக் கூப்பிடணும்ன்னு நினைப்பேன் பாப்பா...ஒரொரு தடவையும் பிள்ளை முகத்தில் அறைஞ்ச மாதிரி கதவை மூடினோமேன்னு தயக்கமா இருக்கும்.'' என்றார் தந்தை சங்கடத்துடன்.

''என்கிட்டே என்ன தயக்கம்? தயக்கம் பாராட்டுற அளவுக்கு என்னை அந்நியமா நினைக்கிறீங்களா? போன் பண்ணி ரெண்டு வார்த்தையாவது பேசியிருக்கலாம் தானே?'' என மனோ பொரிய,

''என் பொண்ணுக்குக் கோபம் மட்டும் என்ன ஆனாலும் குறையவே குறையாது இல்லையாடா?'' எனக் கெஞ்சினார் தந்தை.

''மழுப்பாதீங்க...ஏன் கூப்பிடலை?'' என அதிலேயே நின்றாள் மகள். (ரொம்ப நேரம் நின்னா கால் வலிக்கும், மனோ! சத்த உட்காரு!)

''அம்மா இருக்கும்போது எப்படி பாப்பா கூப்பிடறது?'' என்ற அவரது பதிலில் உடல் விறைத்த மனோன்மணி,

''அம்மா...அம்மாக்கு...என் மேல இருக்கக் கோபம் போகலையாப்பா?'' என்றாள் உள்ளே சென்ற குரலில்.

''முன்ன போல இல்லைன்னாலும்...அம்மாக்கு எங்களை மீறி கல்யாணம் செய்துகிட்டது பிடிக்கலை பாப்பா.

கிராமத்து மனுஷி இல்லையா? அதுவும் சாஸ்திர சம்பிரதாயத்தில் ஊறிப் போனவ? அவங்க அந்த வீட்டில திருவிழான்னா கூட நம்ம வீட்டில கறி சமைக்க மாட்டாளே? அப்படியிருக்கவளை இவ்வளவு சீக்கிரம் மாத்த முடியாது பாப்பா!'' எனத் தேற்றினார் தந்தையவர்.

''இப்போ, அம்மா எங்கப்பா? தூங்குறாங்களா? உங்களைத் தூக்கத்தில இருந்து எழுப்பிட்டேனா?'' என அவள் அக்கறையுடன் கேட்கவும்,

''எப்பவும் எழுந்துக்கிற அஞ்சு மணிக்குப் பதிலா நாலரை...பெரிய வித்யாசம் தான் போ...'' எனச் சிரிப்புடன் பேசிய தந்தை.

மேலும் நெகிழ்ந்த குரலில் ''இன்னைக்கு இராப்பூராவும் உன் ஞாபகமா இருந்ததும்மா! தூக்கம் பிடிக்காம ஆண்டாளையும் உன்னையும் நினைச்சுக்கிட்டே படுத்திருந்தேன்... அவளே உன்னை என்கிட்டே பேச வச்சுட்டா!'' என்றபோது தந்தை - மகள் இருவருக்குமே வார்த்தைகள் ஏதும் வரவில்லை.

அடைபட்டிருந்த தொண்டையை செருமிக்கொண்டே மனோன்மணி ''அம்மா... எங்கேப்பா? திட்டினாலும் பரவாயில்லை... ரெண்டு வார்த்தை அவங்களோட பேசணும் போலிருக்குப்பா'' என்றாள் ஏக்கத்துடன்.

''கொஞ்ச நாள் போகட்டும் பாப்பா. அவ லேசா கரையிற சமயம் பார்த்து...நானே பேசச் சொல்றேன். இப்போ பேசி, இருக்கிற நல்ல மனநிலையைக் கெடுத்துக்க வேணாம்'' என முடித்தப் பெரியவர்,

''அங்க ராவாகிருக்குமே, பாப்பா? இன்னும் தூங்கலையா? மாப்பிள்ளை தம்பி... வீட்டுக்கு வந்தாச்சா?'' என்றார் இயல்பாகிவிட்ட மனநிலையுடன்.



''அது...அது...தூங்கிட்டோம்பா...எனக்குத் திக்குன்னு உங்களோட பேசணும் போலிருந்தது. அது தான்...'' என மென்று முழுங்கியவளை நம்பிய ரத்தினவேலு ''நடு ராத்திரில எழுந்தது பசிக்கப் போகுது. பாப்பா, எதுனா சாப்பிட்டுப் படு. நாளைக்குப் பேசலாம்'' என்றார் கனிவாக.

சட்டென கண்ணில் நீர் சுரந்துவிட... ''ம்ம்ம் ஆமா... பசிக்குது... இன்னைக்கு உங்க மாப்பிள்ளை சமைச்சது ரொம்ப கொடுமையா இருந்ததுன்னு கம்மியா சாப்பிட்டேனா... அதுவும் சேர்ந்து பசிக்குது! நான் போய்... எதாவது சாப்பிடுறேன்'' என அழுகையை சிரிப்பில் ...ட்ட முயன்றாள் மகள். (நோக் கொடுமைடா சாமி! ...த்தன் கோபத்தையும் மறந்து உனக்குச் சமைக்கப் போட்டா...நீ என் பேச மாட்டே?!)

''கழுதை! தினமும் மாப்பிள்ளை தான் சமைக்கிறாரா? நீ சமைக்கிறதில்லையா? அம்மா கேட்டா...உதை வைக்கப் போறா!'' எனச் சிரித்த தந்தை, ''அம்மா இல்லாத நேரம் பார்த்து... அப்பா அடிக்கடி கூப்பிடுறேன், பாப்பா! நீ போய் தூங்கு...'' என வழி அனுப்பிவைத்தார்.

தந்தையுடன் பேசியதில் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்த மனோன்மணிக்கு, அவரது வார்த்தைகளால் புது ஞானோதயம் ஒன்றும் பிறந்திருந்தது. ''அவநம்பிக்கைன்னு ஆரம்பிச்சா உலகத்திலே யாரையுமே நம்ப முடியாதே...'' என்ற அவரது வார்த்தைகளை மீண்டும் மனதில் பதித்தவள், ஒரு முறை கணவனின் சொல்லில் உண்மை இருக்கிறது என்று நம்புவோமே? என்ற முடிவிற்கு வந்தாள்.

அந்த முடிவின் ஆரம்பமாக, மாத்யூசை நெருங்கிப் படுத்தவள் ''என்ன மாப்பிள்ளை சார்...ஓவரா கோபப்

படுதீங்க? கோபத்தைக் கொஞ்சம் குறைங்க சார்...'' என
அவன் மூக்கைப் பிடித்து ஆட்டியதில், அவனது மூக்
கோவைப் பழமாய் சிவந்து போனது! (இவ கோபப்பட்
டுக்கு மூக்கைத் திருக ஆரம்பிச்சு இருந்தா... இந்நேரம்
கையோட கழண்டு வந்திருக்கும்!!)

''வலிக்குது, மானி!'' என முனங்கிய மாதவியின்
உறக்கம் களைந்துவிட, ''உன்னோட மூக்கு ஸ்ட்ராபெரி
மாதிரி... அழகா இருக்கு'' என ரசித்துச் சொன்னாள்
மனோன்மணி.

''உஸ்...உஸ்'' என மூக்கைத் தடவிக் கொண்டவன்,
''இன்னும் தூங்கலையா? பேசாம படு...'' என அவளை
ஒரே அமுக்காய் அமுக்கித், தன் நெஞ்சிற்குள் அவளது
தலையை புதைய வைத்து, முதுகைத் தன் ஒரு கரத்தால்
வளைத்து, மறு கரத்தால் தலையை வருடினான். (அவ
என்ன பாப்பாவா? அவளே வளர்ந்தாலும்... நீ விட
மாட்டே போலவே)

''தூக்கம் வரல... வரல'' என அவள் முண்டியதைப்
பொருட்படுத்தாமல், ''ஷ்'' என்ற அதட்டல் வந்து
விழுந்ததோடு அல்லாமல், அவளை மேலும் இறுக்கிப்
பிடித்துத் தூங்க வைத்தான்!

# 17



தந்தையிடம் பேசிய சந்தோஷத்தில் மனம் நிம்மதி
கொண்டிருந்த வேளையில் கணவனின் இறுக்கமான



அணைப்பும் சேர்ந்து கொள்ள, அடுத்த ஐந்தாவது
நிமிடம் ஆழ்ந்த துயிலிற்குள் சென்றுவிட்டாள் மனோன்
மணி. (அப்பாடா! தூங்கிவிட்டாயா? மாதவியின் மூக்கு
பிழைத்தது!)

காலையில் துயில் கலைந்து, கணவனின் அகன்ற
தோள்களை அவள் அணைக்க முற்படுகையில் தான்
கணவன் மெத்தையில் இல்லை என்பது அவளுக்கு
உறைத்தது. மெல்ல இமைகளை உயர்த்தி, மணி பார்த்
தவள் எழு நெருங்கிக் கொண்டிருந்த கடிகாரத்தைக்
கண்டு திகைத்தவாறே எழுந்து அமர்ந்தாள். (இவளல்
லவோ சிறந்த இல்லத்தரசி! பின் தூங்கிப் பின் எழும்,
பண்ணிவதி!)

''மாட்ட்! என்னை ஏன் எழுப்பலை? மணி என்ன
ஆச்சு தெரியுமா? ஆபீஸ் போகணும் இல்லையா...''
எனக் கூறியவாறே படுக்கையறையை விட்டு வெளியே
வந்தவளுக்கு, சமையலறை மேசை மீதிருந்த நாள்
காட்டியில் ஞாயிற்றுக்கிழமை என்றிருந்ததை கண்டதும்,
தன்னைத் தானே குட்டிக் கொண்டு ''ஹையா! இன்
னைக்கு சண்டே! எங்கேயாவது வெளிய போகலாமா
மாட்ட்?'' என்ற உற்சாகக் கூவலுடன் கணவனை விடெங்
கும் தேடினாள். (அவன் உன்னை எழுப்பணுமா? எழுப்
பினா மட்டும் போதுமா? இல்லை பெட் காபி...பெட்
டிபன்... ஒரு வேளை பெட் குளியல் இது போல...
ஏதாவது எக்ஸ்ட்ரா பிட்டிங்க்ஸ் வேணுமா?)

பால்கனியில் இருந்த சிறு செடிகளுக்கு நீர் ஊற்றிக்
கொண்டிருந்த கணவனைக் கண்டு பிடித்தவள், அவன்
பின்னே சென்று அணைத்துக்கொள்ள, எப்போதும்
போல் மாட்ட் தன் வேலையை விட்டு விட்டு, அவளை

அனைத்துத் தூக்கமில்லை. மாறாக அவனிடம் ஓர் அமைதியே இருந்தது. (புயலுக்கு முன்னும் பின்னும் அமைதி - என்ற புதுமொழியை உருவாக்கிவிட்டாயே மாட்! கள்ளன்டா நீ!)

அவனது அமைதியை உணராத மனோன்மணியோ "மாட், நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? ஏன் என்று சொல்லு? சொல்லு...மாட்" எனச் செல்லம் கொஞ்ச, அதற்கும் பதிலேதும் வராது போகவே (பெரிய சஸ்பென்ஸ்? சொல்லுத்தா... தாங்க முடியல... உன்னோட கொஞ்சல்!?)

"ப்ச். என்ன மாட் நீ?" எனச் சலித்துக் கொண்டவள் "கேட்க மாட்டியா?" என்றாள் மீண்டும் பரிதாபமாய். அப்போதும் அவனது கணவனின் மௌனம் கலையாது போகவே "என் மேல கோபமா இருக்கியா? அதான் கேட்க மாட்டியா? சரி...நீ கேட்கலை என்றாலும் நான் சொல்லுவேன்" எனத் தானே விளக்கம் கூறிக் கொண்டு, தன் சந்தோஷத்திற்கான காரணத்தைப் பகிர ஆரம்பித்தாள். (அதானே! பேச ஒரு சான்ஸ் கிடைச்சா அதை விடுவோமா என்ன? பேசியே தீர்த்திட மாட்டோம்!)

"நேற்று இரவு அப்பாவோட பேசினேன். அப்பாக்கு நம்ம மேலிருந்த கோபம் எல்லாம் காணாம போய்டுச்சு... தெரியுமா?! உன்னை மாப்பிள்ளை'' என்று சொன்னாங்க! எனக்கு ரொம்ப ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருந்தது!'' என விடாது ஆர்ப்பரித்தவள் ''அம்மாக்குத் தான் இன்னும் கோபம் போகலையாம்'' என வருத்தத்தில் முடித்தாள். (நீ நெம்ப நல்லவன்டா!)

தந்தையிடம் பேசியதை அவள் கூறியபோது ஓர் அளவான புன்னகையுடன் அதை எதிர்கொண்டவன்,



[illegible] கோபம் பற்றி அவள் கூறியபோது "சீக்கிரம் [illegible] விடும்'' என்றான் மெல்ல.

"ம்ம்ம். ஆமா! சீக்கிரமே சரியாகிடும்!'' என [illegible] கூறியவள், தந்தையிடம் தான் பேசிய [illegible]யும் மடமடவென கணவனிடம் கொட்டத் [illegible]னாள். (பார்த்துமா மெதுவா...நீ கொட்டுற [illegible] மாட் என்கிற மலை சாய்ந்திடப் போகுது!)

அவனிடம் ஒரு கப் கருப்பு காபியை ஊற்றிக் கொடுத்துவிட்டு, அவள் எதிரே அமர்ந்த மாத்யூஸ் "[illegible]", "குட்", ''பைன்'' போன்ற வார்த்தைகளைத் [illegible] வேறேதும் சொல்லவில்லை. (நீ பேசாம...ஒரு வார்த்தை ஒரு லட்சம் நிகழ்ச்சிக்குப் போயிருக்கலாம்! [illegible]டா ஒரு ஒரு வார்த்தையா எண்ணி எண்ணிப் பேசறியே!)

தந்தையிடம் பேசியதைக் கூறும் சந்தோஷத்தில், மனோன்மணியும் அதை கவனிக்கவில்லை. (ப்ச், மாட்! உன்னோட ஒரு வார்த்தைக்கு ஒரு லட்சம் என்ன... ஒரு நயாப்பைசா கூடத் தேறாது போலவே! அதான்டா, மனோவுக்கு உன்னோட உள் குத்து புரியல...இல்லை...அதான் சொன்னேன்!)

ஒருவாறாக, மனோன்மணியின் குதூகலம் முடிவடையவும் தேநீர் கோப்பை காலியாகவும் சரியாக இருக்க, "இன்னைக்கு எங்கேயாவது வெளியே போகலாமா?'' என்றாள் மனோ ஆசையாக. பேச்சின்றி எழுந்த மாத்யூஸ், அவளது முகம் பாராது "எனக்கு ஆஸ்பத்திரியில் வேலை இருக்கிறது. ஜீனின் உடல்நிலையைச் சரி பார்த்துவிட்டு, வேறோர் மருத்துவரிடம் விட்டு வரவேண்டும்'' என்றவாறே வீட்டினுள் நுழைந்துவிட்டான்.

சட்டென முகம் வாடினாலும், இரவில் தந்தை கூறிய ''தம்பிக்கை'' பற்றிய வார்த்தைகள் மனதினுள் வந்து விட்டதில் ''நானும் உன்கூடவே வரட்டுமா?'' என்றாள் பரிதாபக் குரலில். (பாவமில்லையே! குட் கேர்ள் ஆகிட்டியே!)

''தேவையில்லை!'' என அவன் ஒற்றை வார்த்தையில் மறுத்துவிட, ''நான் அங்க வந்து சமத்தா இருப்பேன், மாட்ட்'' என்றாள் மனோன்மணி மீண்டும் அதே பரிதாபத்துடன். (அச்சோ! பாப்பா அங்க வந்து சமத்தா... அடம் பண்ணாம இருக்குமாம். ஒரு லாலிப்பாப் வாங்கிக் கொடுத்துக் கூட்டிட்டுப் போப்பா...)

''எப்படி இருப்பதாக இருந்தாலும் நீ அங்கே வரத் தேவையில்லை. அங்கே வந்து, தேவையில்லாத பலவற்றை கண்டுவிட்டு, நீ எங்காவது போனால்... என்னால் உன்னைத் தேட முடியாது! நேற்று நான் தவித்த தவிப்பை மீண்டும் ஒரு முறை அனுபவிக்கவும் முடியாது! அதனால், வீட்டிலேயே இரு!'' எனச் சுருக்கென கூறியவன், மடமடவென உள்ளே சென்றுவிட்டான். (ப்ச், லாலிபாப் என்ன ஒரு பல்வி மிட்டாய் கூட இல்லையாம், மனோ!? என்ன கொடுமை இல்லையா!?)

நேற்றிரவு நடந்த சம்பாஷணையின் முடிவில், கீழ்க் கண்டத் தீர்மானத்தை எடுத்திருந்தான் அவன்.

''அவளது தவறை திருத்தாமல், அவளிடம் கெஞ்சிக் கொஞ்சிக் கொண்டிருந்தால் அவள் தன் தவறை உணர்வது என்பது நடவாத காரியம்! ''சின்னப்பெண் தானே! திருந்திவிடுவாள்'' என அவன் தண்டனையைச் சிறிதாக்க, சிறிதாக்க, அப்போதைக்கு நேராகும் அவளின்



புத்தி, மீண்டும் ''ஜீன்'' என்ற வார்த்தையில் தாறுமாறாய் ஓட ஆரம்பித்துவிடுகிறது! ஆதலினால், சற்றே கடுமை காட்டி, அவளது சிறுப் பிள்ளைத் தனத்தைச் சிறிது குறைத்தால் தான் இருவரின் வாழ்க்கைக்குமே நல்லது!'' (கிளாப்...கிளாப்...கிளாப்!)

அதன் முதற்படியாக, அவளிடம் உருகத் தொடங்கி விடும் தன் குரலையும், வார்த்தைகளையும் கட்டுப் படுத்திக் கொண்டு உள்ளே செல்ல முயன்ற மாத்யூஸை மேலும் சோதித்துப் பார்க்கும் வண்ணம் ''இல்ல மாட்ட்! நான் எங்கேயும் போகவே மாட்டேன்! உன்னோடவே இருக்கேன்... உன்னோட ரூமுக்குக் கூட வரலை மாட்ட்... அப்படியே வந்தாலும் எதையும் எடுக்காம இருக்கேன்... ப்ளீஸ்! கூட்டிட்டுப் போ மாட்ட்! எனக்கு இங்க தனியா இருக்க ஒரு மாதிரி இருக்கு'' என்றாள் மனோ, அழுதுவிடும் நிலையில்.

ஆனால் அவளது அழுகையைப் பார்த்தால் மேலும் ஓர் பூகம்பம் வெடிக்கும் வாய்ப்பிருக்கிறது என்பதை உணர்ந்த மாத்யூஸ் ''நோ'' என்ற ஒற்றைச் சொல்லோடு, குளியலறைக்குள்ளும் புகுந்துகொண்டான். (ரொம்பத் தான் ஸ்ட்ரிக்ட் ஆபீசர் ஆகிட்டேடா...நீ! பாவம் எங்கூரு பிள்ளை!)

ஆனால் வெளியே வந்தபோது ''ப்ளீஸ் மாட்ட்! எந்த தொந்தரவும் கொடுக்காமல் இருப்பேன், மாட்ட்! ப்ளீஸ் என்னையும் அழைத்துச் செல்லேன்'' என்றாள் மீண்டும் கெஞ்சலாக.

அதில் கணவனின் உறுதி கொண்ட உள்ளம் உருகி விட, ''அங்கே எனக்கு நிறைய வேலைகள் இருக்கும்,

மானி! ஜீனிற்கு உடம்பு முடியாமல் போனதால், அவ... செய்ய வேண்டிய வேலைகளும் என் தலையில் விழுந்துவிட்டன. அந்த வேலைகளைச் செய்ய, எனக்கு முக்கியமாய் தேவைப்படுவது தனிமை. நீ அங்கே வந்தால்...அது எனக்குக் கிட்டாது! உன்னை விட்டுற அழைத்துச் செல்ல வேண்டுமே என்ற எண்ணம் தா... மனதில் ஓடிக்கொண்டே இருக்கும். அதனால் வேண டாம் மானி'' என்றான் சமாதானமாக.

மறுத்துப் பேச முடியாது போக, ''ஓகே'' எனக் கு... மண்டை உருட்டலுடன் சமையலறைக்குள் சென்றவள், பத்து நிமிடங்களில் பிரெஞ்சு டோஸ்ட்-டுடன் வெளியே வந்தாள். ''இந்தா...'' என அவனிடம் ஒன்றை நீட்டி விட்டு, அவனருகே அமர்ந்து தானும் ஒன்றை உண்ணத் துவங்கினாள். லேசாய் அவள் தலையை வருடிவிட்ட மாத்யூவின் கைகளைப் பற்றி, கன்னத்தில் வைத்துக் கொண்ட மனோன்மணி, அதில் மெலிதாய் ஒரு முத்தம் வைத்தாள். (பிரெஞ்சு டோஸ்ட்? மனோ...நீயா?? உலகம் மாற்றி சுற்றத் துவங்கிவிட்டதா?)

அவளது மென் முத்தத்தில் தடுமாறத் துவங்கிய ஆண் சித்தம், வெகு சிரமப்பட்டு தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தது!!

முயன்று விலகிய கணவன் ''மதியம் ஒழுங்கான லஞ்ச் தயார் செய்து சாப்பிடு. நான் வரவில்லை என்பதற்காக பட்டினி கிடக்காதே!'' என அக்கறையைக் குரலில் கொண்டு வர முயன்று, அதில் வெற்றியும் கண்டான். (இதில மட்டும்... உன்னை யாராலும் மிஞ்ச முடியாதுடா!)



''ம். சரி'' என உரைத்த மனோன்மணி, ''நீ WHO கிளம்ப இன்னும் நேரமாகுமா?'' என்றாள் கேள்வியாக.

''ஆம். பத்து மணிக்குத் தான் செல்வேன். அதுவரை, அலுவலகத்தில் வேலையிருக்கிறது'' என்றவாறே, தனது கணினி அறைக்குள் புகுந்து கொண்டான்.

மனோவால் கடந்த ஒரு மணி நேரமாக மாத்யூஸ் பேசியதை வைத்தே, அவனது கோபத்தை உணர முடிந்தது!

அவளது விருப்பத்தைக் காலால் அல்லது தலையால் நிறைவேற்றும் அவனின் இன்றைய மாற்றம் முகத்தில் அறைந்தாற் போல் அவளைத் தாக்கவே செய்தது! அந்த மாற்றத்திற்குக் காரணம், தன் முந்தினப் பேச்சு என்பதையும் அவள் உணர்ந்தே இருந்தாள்!!

ஆனால், அவளைக் குழப்பிய ஒரே விஷயம் - நேற்றிரவு கணவன் தன்னிடம் நடந்து கொண்ட முறை! கணவன் என்ற உரிமையை அவன் நிலைநாட்டவில்லை என்றாலும், நேற்றைய அவனது அணைப்பிலிருந்த இறுக்கத்திற்கும் இப்போது காட்டப்படும் கோபத்திற்கும் சம்பந்தமே இல்லாதது போல் தோன்றியது! அவனது நேற்றைய அணைப்பு - காதல் மிகவும் வேளைகளில் வெளிப்படும் அணைப்பே என்பதையும், சிறிதாய் கோபமிருந்தாலும் அது அவனது அணைப்பில் தான் முதலில் வெளிப்படும் என்பதையும் மனைவியை உணர்ந்திருந்தவளால், அவனது நேற்றைய அணைப்பை எண்ணிக் குழம்பவே முடிந்தது!

குழப்பத்தின் ஊடே, மாத்யூவிற்கு மதிய உணவாக ஃபிரைட் ரைசும், சிக்கன் ஃபிரையும் செய்தவள், அதற்குரிய டப்பாக்களில் போட்டு மூடி, மேசை மீது

வைத்தாள். (இப்போது கன்ஃபார்ம், உலகம் மாத்தித் தான் சுத்துது போல!)

அவன் வரும் வரையில், சோபாவில் அமர்ந்து மீண்டும் தன் குழப்பத்தைத் தொடர முயன்றவளின் எண்ணங்கள் யாவும், இன்றைய குழப்பத்தை விட்டு, பல நாட்கள் முன் உதித்த காதலுக்குத் தாவியது!! (அப்பாடா, கொசுவர்த்திச் சுருளுக்கு வேலை வந்திருச்சு! நான் கூட, வாங்கி வச்ச பொருள் வீணாப் போயிடுமோன்னு ஒரே பீலிங்க்ஸ்-ல இருந்தேன்! குட் மனோன்மணி!)

முதன் முதலில், மாத்யூசைப் பார்த்த நாளை நினைவில் கொண்டு வந்தவளுக்குத் தன்னையும் அறியாமல் முகத்தில் ஓர் சிரிப்புப் படர்ந்தது! அவள் ஜெனீவா வந்து அரை மாதமே ஆகியிருந்த நிலையில், அப்போது தான் நிஷா மற்றும் சுதாவைப் பற்றி நெட் மூலமாக கேள்விப்பட்டு, அவர்களுடன் தங்கிக் கொள்வதற்கென அந்த அபார்ட்மெண்டினுள் நுழைந்த சமயம் அது.

காலையில் குளிருக்கு இதமாக, ரஜாய்க்குள் புகுந்திருந்த மனோன்மணியை உலுக்கி எழுப்பி, தங்களுடன் ஜாக்கிங் அழைத்துச் சென்ற 'புது' தோழியர் இருவரையும் ஒன்றும் சொல்ல முடியாது போகவே, எரிச்சலுடனே ஓடினாள் மனோன்மணி! (அப்புறம், ஒன்பது மணி வரை இழுத்துப் போர்த்தி தூங்கும் தாரகையை... இவ்வளவு சீக்கிரமாய் ஏழு மணிக்கு எழுப்பினால் எரிச்சல் வரத்தானே செய்யும்!)

போகும் வழியாவும், உஷாவும் நிஷாவும் எதிர்படும் மனிதர்கள் / விலங்குகள் / பறவைகள் / செடிகள் என்று கணக்கே இல்லாது எல்லாவற்றையும் பார்த்து கமெண்ட்



என்ற பெயரில் உறிக் கொண்டே வரவும், மனோன்மணிக்குத் தூக்கக் கலக்கத்தில் எரிச்சல் மண்டியது!

அதிலும், அந்நாட்டவருக்குப் புரியக் கூடாது என்பதற்காக தமிழில் அவர்கள் அடிக்கும் சில விமர்சனங்கள் சற்று அதிகப்படியாகவே இருக்க, மனோவிற்குக் கூச்சமாக இருந்தது! இதுவே தொடர்ந்து இரு வாரங்களும் தொடர, ஓட்டம் என்ற பெயரில் அவர்கள் அடிக்கும் கமெண்ட்களிலிருந்து தப்புவதற்கு, மனோன்மணி கண்டுபிடித்த வழி தான் - அபார்ட்மெண்ட் வளாகத்திலிருந்த உடற்பயிற்சிக் கூடம்! (உடற்பயிற்சிக் கூடத்தைக் கட்டிப் பெருக்க ஆள் இருக்காம், மனோன்மணி! தேவையில்லாமல்... நீ ஏன் சிரமப்படுறே?)

காலையில் தோழிகள் எழுப்பினால் "நான் சாயந்திரம் ஜிம் போய்க்கிறேன்பா...நீங்க ரெண்டு பேரும் ஜாகிங் போங்க! நமக்கு இந்த காலையில எழுந்துக்கிற வேலையெல்லாம் சரி வராது" என்ற மனோன்மணி, குப்புறப் படுத்து உறங்கியே போனாள். (உண்மையை ஒத்துக் கொண்ட எங்கள் தங்கத்தாரகை மனோன்மணி, வாழ்க! தூக்கத்துடனே வளர்க!)

"ஜிம்" என்ற வார்த்தை, அவர்களைக் கேள்வி கேட்க வைக்காது என்று அவள் நினைக்க, அவர்களோ "என்னமோ ஜிம் போறதா சொன்னே? அப்படி எதுக்கும் போறதா எங்களுக்குத் தெரியலையே? காலையில எங்களை ஏறக்கட்டி அனுப்பிட்டு...உன்னோட பாய்பிரண்டோட சாட் பண்றியா? என்ன? எங்க இருக்கான்...அந்தணர் நாட்டான்? ஸ்ரீவில்லிபுத்தூரிலா?" என மாடர்ன் யுவதிகளாக கேலி பேசவும், மிகவும் ரோஷப்பட்டு உடற்பயிற்சி நிலையத்திற்குள் காலடி எடுத்து

வைத்தாள் மனோன்மணி! (நல்ல நாள்...பெரிய நாள் பார்த்து காலடி எடுத்து வச்சியா, மனோ?)

இரு தினங்கள், அங்கிருந்த உடற்பயிற்சி இயந்திரங்களையே சுற்றி சுற்றி வந்தவளுக்கு, எதனுமே எப்படி பயிற்சி செய்வது என்று விளங்காத நிலையில், பெரும் திரு திரு முழியே முகத்தில் குடி கொண்டிருந்தது.

அங்கிருந்த வெளிநாட்டவரிடம் கேட்கலாம் என்றால், மனோவிற்குத் தெரிந்த இரண்டு மொழிகளில் ஸ்விஸ் மொழி ஒன்றில்லாமல் போனதில், அந்த வழியும் நன்றாகவே அடைத்துக் கொண்டிருந்தது. (மாட்ட் மாதிரி ரெண்டு பேர் கதவு முன்னே நின்னுட்டு இருந்தாங்களா? இல்லை வழி அடச்சிருந்ததுன்னு சொன்னியே... அதான்!)

நான்கு நாட்கள் சுற்றி சுற்றி வந்தவள், ஐந்தாம் நாள் ஓர் முடிவு செய்தவள் போல், தொண்ணூறு சதவீத நபர்கள் உறங்கத் துவங்கும் ஒன்பது மணி அளவில், உடற்பயிற்சி நிலையத்திற்குள் பூனை போல் நுழைந்தாள்.

ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்ற நினைப்பில், ஒவ்வோர் இயந்திரமாக சென்று, அதை இயக்கும் முறையை ஆராயத் துவங்கினாள்.

வலைத்தளத்தில் பார்த்ததையும், அங்கிருக்கும் இயந்திரங்களையும் இணைக்க முயன்று, மெது மெதுவாய் முன்னேறிக் கொண்டிருந்தவளுக்கு, திரட்மில்லைக் கண்டதும் உற்சாகம் பீறிட்டது! (பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்த்த மாதிரின்னு சொல்லு!)

வேகமாய் நடப்பதற்கு உண்டான இயந்திரம் தானே? இதை இயக்குவதென்ன கம்ப சூத்திரமா என்ற மிதப்பில், அதன் மீதேறி நின்றவள் சட்டென ஓர்



பட்டனைத் தட்டிவிட... வேக நடைக்கான அந்த இயந்திரம் அதி வேகநடையை அமல்படுத்த, அதன் வேகத்தில் நிலை தடுமாறிப் போன மனோன்மணிக்கு, சுதாரிக்கவே முடியவில்லை!! (ஐய்யோ! ஐய்யோ! என்னால சிரிப்பை அடக்கவே முடியலையே!)

அந்த நேரத்தில் அனாத ரக்ஷகக்குரலாய் ''ஹே, லிட்டில் பேபி! திரட்மில்-லில் நீ என்ன செய்கிறாய்?'' என்ற கேள்வியும் (ஸ்விஸ் மொழியில்), ஆபத்பாந்தவனாய் மாத்யூவும் வந்து சேர, மயக்கம் வரும் நிலையிலிருந்த மனோன்மணி ''ஹெல்ப்'' என்றாள் அலறல் குரலில். அவளது குரலைக் கேட்கும் முன்னரே, இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தி விட்டிருந்த மாத்யூஸ், தடுமாறி விழப்போன மனோன்மணியைக் கையில் ஏந்தினான்.

''ரிலாக்ஸ்! உனக்கு ஒன்றுமில்லை'' என அவன் அவளை ஆசுவாசப்படுத்த முயல, மனோன்மணியோ ''நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை'' என்றாள் மிக மிக பரிதாபமாய். (அச்சோ...பிள்ளை பாவம்!)

''ஹோ! ஆங்கிலம் மட்டும் தான் தெரியுமா?'' என்றவன், தொடர்ந்து ஆங்கிலத்திலேயே பேசினான்.

அருகிலிருந்த இருக்கையில் அவளை அமர வைத்து, வேர்த்திருந்த முகத்தை மெல்லத் துடைத்து, வெட வெடவென நடுங்கிக் கொண்டிருந்த கைகளுக்கு சூடேற்றி, பயத்தில் உறைந்து போயிருந்த கால்களை மிதமாய் பிடித்துவிட்டு, மெல்ல மெல்ல அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தான். (முதல் நாளேவா!? ஜம்ம்ம் நடத்து மக்கா!)

அவளது முகம், அடர் சிவப்பிலிருந்து மென் சிவப்பிற்கு மாறியதுமே அவள் இயல்பு நிலைக்குத்

திரும்பிவிட்டான் என்பதை உணர்ந்தவன் போல் "இனி மேல் ஜிம்முக்கு வரும் போது ஒழுங்கான இணை... சட்டோடு வரவேண்டும். இல்லை என்றால் அம்மா அல்லது அப்பாவுடன் வரவேண்டும். சிறு பிள்ளைகள் தனியாக ஜிம்மிற்குள் வருவது தவறு" என்றான் பெரிய மனிதத் தோரணையில். (ஹஹா...ஹஹா...ஹஹஹா...)

அவனது அறிவுரையில் சிலிர்த்து "நான் ஒன்றும் சின்னப் பெண்ணில்லை. எனக்கு இருபத்தி மூன்று வயதாகிறது! வேலை பார்க்கிறேன்...தெரியுமா? என்று தலையை வெட்டினாள், நம் கதாநாயகி. (எம்மாம் பெரிய பொண்ணு! அவளைப் போய்...என்ன மாட்டு... நீ?)

"என்னது? வேலைக்குச் செல்கிறாயா? இவ்வளவு குட்டிப் பெண்ணாக இருக்கிறாயே? ஒழுங்காக உண்பதில்லையா?" என அவன் வியப்பினூடே அக்கறை கொள்ள, அங்கு வந்ததிலிருந்து தன் உணவைப் பற்றி அக்கறைப்பட யாருமே இல்லை என்ற எண்ணத்திலிருந்து மனோன்மணி, சட்டென நெகிழ்ந்து தான் போனாள்!

அவளது பாவனையில் புருவம் உயர்த்தி, அவன் என் என்று கேட்க, "எங்கப்பா மாதிரியே கேட்கறீங்க" என்றாள் சிரிப்புடன். அதைப் பிடித்துக் கொண்டு, அவளது குடும்பம் பற்றி அவன் விசாரிக்க, "இந்தியா" என்ற வார்த்தையைக் கேட்டதும், இந்திய கலாச்சாரத்தைப் பற்றி மனோன்மணி அறியாத விஷயங்களைக் கூட எடுத்துரைத்து, மகிழ்ந்து போனான் மாத்யூஸ்.

அன்றைக்கு ஒரு மணி நேரத்திற்கும் மேலாய் நடந்த உரையாடல், தொடர்ந்த நாட்களில் ஒரு மணி நேர



உடற்பயிற்சி, ஒரு மணி நேர உரையாடல் என்ற ரீதியில் செல்ல, இருவருக்குள்ளும் ஓர் நல்ல நட்பு உருவானது! அதிலும், மனோ அவளது வீட்டை விட்டுப் பிரிந்திருக்கிறாள் என்பது மாத்யூசை எந்த விதத்தில் தாக்கியதோ தெரியவில்லை... தினமும் அவளின் உணவு மற்றும் உறக்கம் பற்றி வினவாது அவன் இருந்ததே இல்லை எனலாம்! கூடவே மனோவின் சிறுபிள்ளைத் தனமான கேள்விகளும் அவனை ஈர்க்க, மனோவைப் பார்ப்பதற்காகவே அந்த நாள் விடிவது போலிருந்தது அவனுக்கு!

அதே போல், மனோன்மணிக்கு அவனது பெற்றோரைப் பற்றிய விவரமேதும் அவனுக்குத் தெரியவில்லை என்பதை அவன் மீது ஓர் பரிதாபத்தை மட்டுமல்லாது, அந்த நிலையிலும் தன் முயற்சியாலேயே படித்து WHO நிறுவனத்தில் மூத்த ஆய்வாளன் என்ற நிலையிலிருக்கும் அவன் மீது அவளுக்கு மரியாதையும் கூடியது!

பார்த்த ஒரே மாதத்தில், "உன்னையும், உன் சிறுப்பிள்ளைத் தனத்தையும், அதற்கும் மேலாய் உன் நாட்டின் கலாச்சாரத்தையும் எனக்குப் பிடித்திருக்கிறது! என்னை மணந்து கொள்வாயா?" என மண்டியிட்டு, ஒற்றை ரோஜாவுடன் அவன் கேட்கையில் மனோவிற்குப் பெருமிதமாய் கூட இருந்தது எனக் கூறலாம். (அப்படிப் போடு!)

சிறு வெட்கத்துடன் அவனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, நீட்டியிருந்த அவனது கைகளில் முத்தம் வைத்து நிமிர்ந்தவளுக்குத் தாய் - தந்தை - ஊர் - உற்றார் - உறவினர் பற்றிய எண்ணமே வரவில்லை எனலாம்! ஆனால், சிறகடித்த மனதுடன் அவனிடம்

கொஞ்சிவிட்டு வந்தவளுக்குத் தந்தையின் ஞாபகம் சட்டென வந்துவிட, மாத்யூவின் எண்ணிற்கு அழைத்தவள் ''இந்த திருமணம் சரி வராது. வேண்டாம்'' என மறுத்தாள் - ஒப்புக்கொள்கையில் எவ்வளவு வேகமிருந்ததோ அதே வேகம் மறுக்கையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது! (எதிலும் அவசரம்... எங்கும் அவசரம்... யோசியா அவசரம்... ஆளைக் கவுக்கும் அவசரம்...)

அதன் பின்னர், மாத்யூசின் கெஞ்சல் பல வாரங்கள் நடந்தேற, அதிலெல்லாம் அசராத மனோவை, இரண்டு நாட்கள் அவன் பேசாமல் இருந்தது அசைத்துவிட, தன்னாலும் அவனைப் பிரிந்து இருக்க இயலாது என்பதை உணர்ந்து, காதலுக்கும் தொடர்ந்த திருமணத்திற்கும் சரியென்றாள் மனோன்மணி!!

அந்த நேரத்தில், மாத்யூஸ் அவளைத் தூக்கிச் சுற்றிய வேகமும், அவனது அணைப்பிலிருந்த இறுக்கமும், அழுந்த பதிந்த உதடுகளும் இப்போதும் மனோவின் மேனியைச் சிவக்க வைக்க, ஓர் மோகனப் புன்னகையுடன் நிகழ்விற்கு மீண்டுவந்தவளின் உடலும் உள்ளமும் கணவனுக்காய் ஏங்க ஆரம்பித்தது! (கொசுவர்த்திச் சுருளை வாங்கியதற்கு, உரிய மரியாதையை செலுத்தியாகிவிட்டது! இனி, அதற்கு ஓய்வு தான்!)

# 18

கனவுலகில் மிதந்து கொண்டிருந்த மனோன்மணியின் மோன நிலையைக் கலைப்பது போல், மாத்யூஸ் கிளம்பி வெளியே வரும் அரவம் கேட்டது!



தன் வண்ணக் கனவுகளில் தேவதையாய் பறந்து கொண்டிருந்த மனோவைச் சட்டென தரையிறங்கச் செய்த மாட், ''பாய் பேபி!'' என்ற சொல்லுடன் வெளியே கிளம்பினான். (தேவதைன்னா எப்படி மனோ, வெள்ளை கவுன் போட்டு, சிறகெல்லாம் வச்சு...கையைக் கையை ஆட்டி டான்ஸ் ஆடுவாங்களே! அவங்களா?)

''ஹே மாட், இரு இரு! லஞ்ச் செய்திருக்கேன். எடுத்திட்டுப் போ!'' என அவன் கையில் சாப்பாட்டு டப்பாவைத் திணித்தவள், கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எம்பி அவன் கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தாள்! (இதுக்குப் பேரு தான் மச்சி, டைமிங்)

அவளது முத்தத்தில் கிறங்கிப் போன மாத்யூ, கண்ணிமைக்கும் நேரத்திற்கும் குறைவான அரை வினாடியில் அவளை அணைத்து, தன்னுடன் இறுக்கி, கொஞ்சமாய் அவளைத் தூக்கி, உதட்டோடு உதடு கலக்க நீண்ட முத்தம் ஒன்றை வைத்தான்! (இதுக்குப் பேரு என்னது? ரிப்பீட் டைமிங்! நாம வைக்கிறது தானே பேரு...)

வைத்தவன், எப்போது மீண்டான் என்பதை இருவருமே அறியவில்லை!

காலம் உறைந்துவிட, பூமி சுற்றுவதை நிறுத்திவிட, நிமிட முட்கள் நகர மறுக்க, மனங்கள் கலந்துவிட, அங்கே ஓர் காதல் காவியம் அரங்கேறியது! (பூமி சுற்றுவதை நிறுத்தி விட்டதா? அதற்கு மாறாய்தான் நீ சுற்ற தொடங்கிவிட்டாயா?! ஹய்யகோ! யாரங்கே! பெண்ணைப் பூமி என்று வர்ணித்த கவிஞரை இழுத்து வாருங்கள்!?!)

தங்களை மறந்து அவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்த நிலையில், முதலில் சுதாரித்தவன் மாத்யூ தான்! சுதாரித்த நொடி, அவளை விலக்கி நிறுத்தியவன்

"கவனமாய் இரு" என்ற சொல்லோடு வெளியேறிச் சென்றுவிட்டான். வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தவனின் சட்டையைப் பிடித்து நிறுத்திய மனோ "ஏன் மாட்..!?" எனப் பரிதாபமாய் கேட்டதை ஒதுக்கி விட்டு, வேகமாய் நடந்து மறைந்தே போனான் அவன். (பாவம்டா, அந்தப் பச்சப்புள்ள!)

அவன் குடியிருந்த கூடு காலியாகிவிட, ஆயாசமாய் உணர்ந்த மனோன்மணி சோபாவில் சாய்ந்தபோது, கண்களிலிருந்து தாமாய் கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது! அரை மணி நேர அழுகையின் பின்னர், "தானே இழுத்துக் கொண்ட வினை தானே?" என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் மனோ. (நீ என்ன கண்ணீருக்கு 99 வருஷக் குத்தகை எடுத்திருக்கிறாயா? சும்மா சும்மா அழுது கொண்டு!)

"நேற்று தான் பேசிய வார்த்தைகளை அவன் என்றேனும் மறப்பானா? அவனது கனிந்த காதலும், கனியாத காமமும் தனக்குத் திரும்பக் கிடைக்குமா?" என்று ஏங்கிய மனோவின் மனதிற்கு, அதில் எதுவுமே இம்மியும் குறையவில்லை என்பது புரியாது போனது! (முழிச்சுக்கோ மனோ...காம்ப்ளான் குடிச்சுக்கோ!)

கண்ணில் வழிந்த நீருடனே மதிய உணவு நேரம் வரை அமர்ந்திருந்தவளை, மேலும் அங்கேயே அமரச் செய்ய விடாமல் வீட்டுத் தொலைபேசி சீறியது! (அது எதுக்கு சீறுது? சும்மா அழைத்தாலே, அவள் வந்து எடுப்பாளே!)

நெஞ்சம் படபடக்க, அகமுடையானின் அழைப்போ என்ற எண்ணத்தில் துள்ளி ஓடிய மனோவின் முகத்தில் "ஹலோ மேடம், நான் மெரினா, ஏ.பி.சி.டி இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து பேசுகிறேன். உங்களது வீட்டுக்



[illegible] குறைக்கும்..." என்ற கவிஸ் மொழி
[illegible] போதவும்.
[illegible] ஆறு விட்டா ரத்தமும் முகத்திற்குப்
[illegible] கடனே இல்லைடி கடன்காரி! என்னோட
[illegible] வேணும்னா கடனா தரேன்...வாங்கிக்கோ"
[illegible] கடித்துத் துப்பிவிட்டுத் தொலை
[illegible] வைத்தவளுக்குக், கணவனின் அழைப்பு
[illegible] நெஞ்சைப் பிளந்தது! (மாத்யூ மேல ஏறவேண்
[illegible], மெரினா மேல ஏறிவிட்டாளே! பாவம்
[illegible] மேரி யாத்தா வந்திருந்தாலாவது சந்தோஷப்
[illegible]! ஊர் பேர் தெரியாத மாரியாத்தா வந்ததில்
[illegible] போயிருப்பாளோ?!)

[illegible] கிளம்பிச் சென்றவன், மதியம் வரை ஒரு
[illegible] கூட அழைக்கவில்லையே...அப்படியென்ன
[illegible] நெஞ்சம் காந்தியபோது, எப்போதுமே வேலை
[illegible] அவனாக பேச மாட்டான்; தானாக தான்
[illegible] அவனது உயிரை வாங்குவோம் என்பது மறந்தே
[illegible]!! (நாம என்னைக்குத் தான் நம்ம தப்பை
[illegible] வச்சிருக்கோம்!)

வந்த அழைப்பினால் எகிறியிருந்த நெஞ்சில், கண
[illegible] மேல் கொண்ட கோபம் தூபம் போட, மனோ
[illegible] கைகள் மாத்யூவின் கைப்பேசி எண்ணை அழுத்
[illegible]. இரண்டே மணிகளில் அதை எடுத்தவனிடம்
[illegible]! சாப்பிட்டாயா? ஃபிரிட் ரைஸ் ரொம்ப நல்லா
[illegible]. சமையலில் தேறிவிட்டாய், மானி! யு ஆர்
[illegible] கிரேட் குக்!" என அவன் உற்சாகமாய் பேசியதும்,
கோபம் சட்டென மறைந்து, வெகு தொலைவிற்கு
ஓடியே போனது. (பிடி...பிடி! ஓடுது பாரு...அதான்
கோபம் ஓடுது பாரு... சீக்கிரம் பிடி!)

ஓடிய கோபத்தைத் துரத்திக் கொண்டு ஓடிய மனைத் மாத்யூவின் அடுத்தப் பேச்சு பிரேக் போட்டு நிறுத்தச் செய்தது. "சிக்கன் நல்லா மரிநெட் ஆகி, ரொம்ப மெதுவா...பதமா இருந்தது! இரவிற்கும் அதையே செய்து தரியா?" என அவன் போட்ட வேகத் தடையில், கோபத்தின் வேகம் குறைவதற்குப் பதிலாக, ஒரே அடியாக நின்றே போனது! (அச்சோ! ஸ்பீட் பிரேக்கர்ல நிக்கிற அளவுக்கு first gear-லேயா போனே? என்ன பொண்ணு... நீயு?)

"உனக்குப் பிடிச்சதா? தேங்க்ஸ்! தேங்க்ஸ்! நைட்-டும் அதையே செய்றேன்!" எனக் குதூகலமாய் ஒத்துக் கொண்ட மனோவின் உற்சாகக் குரலில்,

"நீ...எப்போ வீட்டுக்கு வருவே?" என்றபோது குதூகலம் நெகடிவ் நிலையிலும், ஏக்கம் பாசிட்டிவ் நிலையிலும் நிரம்பியிருந்தது! (சின்ன வயசில, கணக்கைக் கரைத்துக் குடித்திருப்பே போலவே!)

"இரவிற்குள் வந்து விடுவேன்" என்ற அரிய தகவலைக் கூறிய மாத்யூ "சரி பேபி! எனக்கு வேலையிருக்கிறது..." எனக் கூறி, அழைப்பை வைக்கப்போவதை உறுதிப் படுத்தினான். கூடவே "சாப்பிட்டு விட்டு... கொஞ்ச நேரம் தூங்கு" என்றதோடு அழைப்பை வைத்தே விட்டான்.

"ம்ம்... நீ... வா... நீ வந்ததும் தான் சாப்பிடுவேன்!" எனச் செல்லப் பிள்ளையாய் அவள் அடம் பிடித்தது ஆடிக் காற்றோடு கரைந்து போனது! ஆனால், அந்த அடத்தை அடமாய் பிடித்திருந்த ஆதிரையோ, ஆசை கொண்டவன் வீடு வரும் வரை அமர்ந்திருந்த நிலையிலேயே அமர்ந்திருந்தாள். (ஒரே இடத்திலா? என்ன கொடுமை சரவணன் இது?)



சரியாக ஏழு மணியளவில் வீடு வந்து சேர்ந்த மாத்யூவின் கண்களில் முதலில் தென்பட்டது இருள் தான்! விளக்குகள் எதையும் போடாது உள்ளே அமர்ந்திருந்த மனோன்மணியைக் கவனிக்காது,

"இன்றும் எங்கேனும் சென்று விட்டாளோ? இவளுக்கு என்னை அலைய விடுவதே வேலையாய் போய் விட்டது! இந்தச் சிறுப் பிள்ளைத் தனத்தை எப்போது தான் விடப் போகிறாளோ?!" என்ற எரிச்சலில், படுக்கை அறைக்குள் நுழைய, முழங்காலில் முகம் புதைத்த ஓர் உருவம் கட்டிலில் அமர்ந்திருந்தது. (உருவமா? டேய், அவ உன் பொண்டாட்டிடா, பாவி!)

கண நேரத்தில் அது தன் அருமந்திர மனைவி என்பது விளங்கிவிட, "பேபி! உடம்பு சரியில்லையா? ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" எனப் பதறி விட்டான், அந்த அன்புக் கணவன்! (அதானே, மாத்யூ என்ற பெயருக்கு இழுக்கு வந்துவிடுமோ என்று பயந்தே போனேன்! ஃபார்ம்க்கு வந்துட்டடா மச்சான்!)

ஒளியின் வேகத்துடன் ஒளி பெற்ற அறைக்குள் ஒளியைப் புகுத்தும் வண்ணம் கணவன் பேசியது, மனைவியின் முகத்தில் ஒளிரச் செய்தது! சோர்ந்திருந்த கண்களில் சிரிப்பு உட்புக, "மாட்ட்" என்ற கூவலுடன் அவனிடம் ஓடிச் சென்றவள் "பசிக்குது" என்றாள் அவனை இறுக்கிக் கொண்டு!!

"ஏழு மணி தானே ஆகிறது? அதுக்குள்ளே...இந்த சின்ன வயிற்றுக்குப் பசித்துவிட்டதா?" என இரவு உணவை மனதில் வைத்து, அவன் ஆச்சரியப்பட "ம்ம். ஆமா! காலையிலிருந்து சாப்பிடலைன்னா பசிக்கத் தான்

செய்யும்'' என நொடித்தாள் மனைவி. (என்ன ஒரு கண்டு பிடிப்பு!? உனக்கு ஒரு நோபெல் பரிசு பார்சல்-லில் வருகிறது, மனோ!)

''காலையிலிருந்து பட்டினியா? மதியம் சாப்பிடுன்னு சொன்னேன் இல்லையா?'' எனக் கடிந்து கொண்டான் கணவன். ''நானும் தான்...நீ வந்தா தான் சாப்பிடு வேன்னு சொன்னேனே! நீதான் கேட்டுக்கலை...'' என அதற்கும் ஓர் வெட்டு வெட்டினாள், மாத்யூவின் காதலி. (அவன் பேசும் போது நாம கேட்டிருந்தா, இந்த நிலைமை ஏன் வருது?)

''வேலையிருக்கும் போது...'' எனத் தொடங்கியவன், பேசி நேரத்தை வீண் செய்யாமல் ''இரவிற்கு சமைத் தாயா? இல்லை, நான் எதுவும் செய்யவா?'' எனக் கடமைக் கணவனாய் வினவினான். (ஹுக்கும்!)

''செய்துட்டேன்! நீ தான்...சிக்கன் செய்யச் சொன் னியே!?'' எனத் தன் புத்தியைத் தட்டி ஞாபகப்படுத் திய மனோன்மணியை அழைத்துக் கொண்டு, அங்கே ஓர் சாப்பாட்டு நேரம் இனிதே நிகழ்த்தி முடித்தான், மாத்யூஸ் ஹாலிடே!

அவன் ஊட்டிய அழகில், அன்றைய தினம் இருவருக் குள்ளும் ஓர் சமாதானம் நடந்தேறிவிடும் என அதீத நம்பிக்கையுடனிருந்த மனோவின் எண்ணங்களில் மண்ணைப் போடுவது போல், மாத்யூஸ் படுத்ததும் உறங்கிவிட்டான்!

''மாட்ட்''என வெட்கத்தைத் துறந்து, மனோ நெருங் கியபோதும் ''படு பேபி'' என்றதோடு அவனது அன் றைய தினம் முடிந்தே போனது! (அடப் போங்கப்பா!)



கண்ணில் நீர் மீண்டும் கோர்த்துக் கொள்ள, அவனையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தவளை, அரை மணி நேரத்தில் தன் மீது இழுத்துச் சாய்த்துக் கொண்ட மாத்யூஸ், மெல்ல அவளது முதுகை வருடி, உறங்கச் செய்தான்! (கண்ணீருக்கான 99 வருஷ குத்தகையை மேலும் நீடித்திருக்கிறாயா, மனோ?)

அந்த நேரத்தில் பேச வாய் திறந்த மனோவின் உதடு களுக்கு, மாத்யூவின் விரல்கள் சிறைக் கம்பி வேலை களைச் சரியாய் செய்ய, காதல் கரை புரண்டிருக்க வேண் டிய மஞ்சத்தில் உறக்கம் கரை தாண்டி புரண்டோடியது!

அன்றைய தினம் மட்டுமல்லாது, தொடர்ந்த வாரம் முழுதும், மாத்யூவின் மனஉறுதி சிறிதும் தளர்ந்துவிட வில்லை. அதற்காக, அவளிடம் அவன் பேசாமலிருந் தான் என்று சொல்ல முடியாது! எழுந்தாயா, கிளம்பி னாயா, உண்டாயா, உறங்கினாயா போன்ற உடல் பேணும் கேள்விகளும், உருகல்களும் குறைவின்றி நடந்தேறியபோதும், மாத்யூவின் உதடுகள் முத்தம் என்ற ஒன்றை மட்டும் மனோவின் மேனியில் பதிக்கவில்லை!

கைப்பிடித்துத் தூக்கிவிட்டான்,

பல நாட்களுக்குப் பின்னர் ஜிம் போகிறேன் பேர்வழி என்று மனோ காலைச் சுளுக்கிக் கொண்டு வந்து நின்ற போது, ''உள்ளதே ஒல்லி! எதற்கு இந்த வேண்டாத வேலை?'' என்ற கண்டிப்புடன் கால்களுக்கு மருந்திட்டான்.

இரவு ஒரு மணிக்கு எழுந்து கொண்டு ''பசிக்குது மாட்ட்'' என அவள் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டபோது நூட்லஸ் செய்து கொடுத்தான்.

''அப்பா பேசுறாங்க, மாட்ட்! எப்படி இருக்கீங்க... கேளு...

"எப்...ப..டி... இரு..க்கீ...ங்க...மா...மா..., இப்படி கேளு" என அவள் சொல்லிக் கொடுத்ததை விடவும் மேலாய் அழகாகவே மாமனாருடன் பேசினான்.

"அப்பாக்கு உன்கிட்ட பேசினதில் ரொம்ப சந்தோஷமாம். உன்கிட்ட பேசறதுக்காக இங்கிலீஷ் படிக்கிறாங்களாம்!" என அவள் துள்ளிக் குதித்தபோது அவளுடைய சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டான்.

"இன்னைக்கு...பீட்சா சாப்பிடணும் போலிருக்கு! ஆனா, ஆர்டர் பண்ணக் கூடாது! வீட்டில செய்யப் போறேன்" என வீட்டையே தலைகீழாய் மாற்றியவளை ஒன்றும் சொல்லாது - அவள் செய்து வைத்திருந்த அலங்கோலங்களைச் சளைக்காமல் எடுத்துவைத்தான்.

பீட்சா பானை விட்டு வெளியவே வராத பீட்சாவைப் பார்த்துச் சோலைக் காட்டுப் பொம்மை போல் விழித்தவளின் தலையில் கொட்டிவிட்டு; உணவகத்திலிருந்து பீட்சா வரவழைத்து அவளை உண்ணச் செய்தான்.

தன்னால் முடிந்த தினமெல்லாம் அவளை அலுவலகத்தில் கொண்டுவிட்டுக் கூட்டி வந்தான் - எல்லாமே நன்றாக இருந்தபோதும், அவனது ஒற்றை அணைப்பிற்கு ஏங்கித் தவித்துப் போனது பெண் மனது!! (என்னமா ஃபீல் பண்ணி எழுதியிருக்கேன், பாருங்களேன்!)

அவன் மீது தான் கொண்ட சந்தேகம் தான் இந்தப் பிரிவிற்குக் காரணம் என்றெண்ணிய மனோன்மணி, அதைத் தெளிவுப் படுத்திவிடும் எண்ணத்தில், அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் வழியில் "மாட்ட், அன்னைக்கு நான் பேசினது தப்பு தான்...உன்னோட அன்பும் காதலும் எனக்கு மட்டும் தான் இருக்கணும் என்ற சுயநலத்தில அப்படிப் பேசிட்டேன்னு வச்சுக்கோயேன்!



பேசினது தப்புன்னு எனக்குப் புரியுது மாட்ட்! எந்தவொரு நிலைமையாய் இருந்தாலும், உன்னை நான் நம்பியிருக்கணும். அதை செய்யாதது என்னோட சின்னப் பிள்ளைத் தனத்தின் உச்சம்! தயவு செய்து...மறந்துவிடு, மாட்ட்! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்" என்றான் மன்றாடும் குரலில். (சமத்து! என்ன அழகா பேசுது... பாருங்களேன்! கண்ணு போட்டுறாதீங்க!)

இது நாள் வரையில், "ஜீன்" "சந்தேகம்" "மன்னிப்பு" "சரி" என அவன் ஆரம்பிக்கும் போதெல்லாம், வேறு வேலை தேடி சென்றுவிடுபவளுக்கு, இன்றைய தினம் காரிலிருந்து குதிக்க முடியவில்லை.

சிறிது நேரம் மௌனமாய் வண்டியைச் செலுத்தியவன் "இல்லை மானி! என்னால் மறக்க முடியவில்லை. அன்று...நீ விநாயகர் கோவிலிலிருந்த தினம்...என் உயிரே என்னிடமில்லை. ஆனால் அதை நீ மதிக்கவில்லை. அந்தத் தவிப்பை, அந்தக் காதலை, என் பதற்றத்தை, எனது மனதின் போராட்டத்தை நீ மதிக்கவே இல்லை. ஜீன் என்ற மூன்றாம் மனுஷியை அந்தத் தவிப்பிற்குக் காரணமாக்கிவிட்டு, என்னையும் காயப்படுத்திவிட்டாய்!? இப்போது நீ கேட்கும் மன்னிப்பை மனதில் வைத்துக் கொண்டு, நான் இணங்கி வந்தால், மேலும் ஒன்றைப் பிடித்துக் கொண்டு என்றாவது ஒரு நாள் ஆடுவாய்?! என்னால் முடியாது... எப்போது எதைப் பேசுவாய் என்று தெரியாமல்... ப்ச் வேண்டாம்" எனச் சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டு பேசியவனின் கண்களின் ஓரத்தில், மனோவின் கலங்கிய முகம் பட்ட போதும் பதிலின்றியே, அந்தப் பயணத்தைக் கழிக்கச் செய்தான், அந்த மருத்துவன். (சரி...சரி...

உனக்கும் தவிப்புத் தான், காதல் தான், கோபம் தான்... எல்லாம் புரிது! அதுக்கு என்ன செய்யச் சொல்றே?)

மனம் பாறாங்கல்லாய் கனக்க, வார்த்தைகள் ஏதுமின்றி வண்டியை விட்டு இறங்கியவளின் கைப்பிடித்து நிறுத்தியவன் "இதற்காக, உன் மீது நான் கொண்டிருக்கும் காதல் குறைந்துவிட்டது என்று ஒரு போதும் எண்ணாதே! உன்னிடம் நான் கொண்டது காதல் எனத் தெரிந்த நாள் தொட்டு, இன்றுவரை யாரையுமே காதல் என்ற கண்ணுடன் நான் பார்த்ததில்லை. அன்று முதல் இன்று வரை, நீ மட்டும் தான்! நீ மட்டுமே தான்! என்றுமே உன் மேல் நான் கொண்ட காதலோ, ஆசையோ குறையாது! வளர்ந்து கொண்டே தான் போகும்! என்றைக்கு உனக்கு என் மேல் நம்பிக்கை வருகிறதோ, அன்று சொல்லு! அது வரைக் காத்திருக்கிறேன்!" என்றான், உணர்வுப் பூர்வமாக. (ஹுக்கும், வாயாலேயே வடை சுடுடா நீ!)

"எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது" என்பது போல் மனோன்மணி பார்க்க,

"இல்லை! இது...உன் தந்தையின் வார்த்தைகளால் உண்டான தாக்கம். அவ்வளவு தான். அது குறையத் துவங்கும் போது, எந்த ஒரு சூழலிலும் நீ என்னைச் சந்தேகிக்கலாம்!" என்றுவிட்டு, அறையினுள் சென்று மறைந்துவிட்டான்!

அவனது வார்த்தைகளில் அவன் மனம் பட்ட / படும் வேதனை புரிய, அதற்குக் காரணமான தனது பேச்சை, அடியோடு நிறுத்துவது என்ற மனோவின் முடிவு தான் தப்பாய் போனது!! (பேச்சை நிறுத்துவதா???? என்னோட ஹீரோயின் மனோன்மணி தானே, நீ? உலகம்



இப்போது தான் நிஜமாகவே தன் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டதோ?)

அந்த முடிவின் பெயரில், மனோன்மணி மாதவ்விடம் பேசவில்லை! அன்றைய இரவு மட்டுமல்ல, தொடர்ந்த ஒரு வாரமும் மௌனமே அவளது மொழியானது!

கடமை மனைவியாய், அவனுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தபோதும் வார்த்தைகளால் அழைப்பு விடுக்காது சிறு துண்டு பேப்பர்களில் அழைப்புகளை எழுதி வைத்துவிட்டு, அறையினுள் முடங்கிக் கொண்டாள்.

"உன்னை அலுவலகத்தில் விட்டு விடுகிறேன்" என்று அவன் அழைத்தால், அவனுடன் வண்டியில் ஏறி அமர்ந்தவள், பயணத்தின் போது மட்டுமல்லாது அலுவலகம் சென்ற பின்னரும் கூட அழைப்பு விடுக்காது, தன்னுள்ளே மறுகிப் போனாள்!

அவனுக்காய் சமைக்கும் போது, கையைச் சுட்டுக் கொண்டதில் "அம்மா" என்ற அலறல் வந்துவிட, "என்னாச்சு பேபி!" எனப் பதறிக் கொண்டு வந்தவனிடமிருந்து விலகிப் போய், தானாகவே மருந்து எடுத்துப் போட்டுக் கொண்டாள்!

"இந்த கேக் உனக்குப் பிடிக்கும் என்று வாங்கி வந்தேன்" என அவன் நீட்டினால், "நன்றி" என்ற ஒரு வார்த்தைப் பதில் கூட இல்லாது, கேக்-கை அங்கேயே வைத்துவிட்டு எழுந்து சென்றாள்.

"இன்று வெளியே செல்வோமா? வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்கி வரலாம்" என்ற அவனது அழைப்பிற்கு, "வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்கியாகிவிட்டது" என்ற குறுஞ்செய்தி, வீட்டினுள்ளிருந்தே பறந்தது.

அந்தச் செயலில் கோபம் கொண்ட மாத்யூ "என்னது இது?" எனக் கைப்பேசியை அவள் முன்னே நீட்டி, ஒரு கையால் முகத்தை நிமிர்த்தினான்.

கண்களில் வழிந்த நீரை முழங்கையால் துடைத்துக் கொண்டு "எப்போது எதைப் பேசவேனோ என்று நீ தான் பயந்து கொண்டிருக்கிறாயே? அது தான், பேசாமலே இருந்தால் உனக்கு அந்தப் பயம் போய்விடுமோ என்றெண்ணினேன்" என மனோ, திக்கவும் "மை ஸ்வீட் விட்டில் பேபி!" என அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான், கணவன். (இதுக்குப் பேர் தான் சொந்த செலவில் சூனியம் வைத்துக் கொள்வது! லூசு மனோ)

அவனது கொஞ்சலில் முகம் மலர்ந்து மனோன்மணி "கோபம் போயிடுச்சா?" என்றாள் விழிகள் விரிய! (விழி எதுவரை விரிந்தது மனோ? அடுத்த வீடு வரையா?)

ஆனால் அவன் பதிலேதும் சொல்லாமல் இருந்ததிலேயே அவனது மனம் புரிந்துவிட "ப்ச்" எனச் சோர்ந்து அமர்ந்த மனோன்மணி, தொடர்ந்து சில நாட்களும் சோர்ந்து சோர்ந்து அமர்ந்து கொண்டாள்!

கணவன் கவனித்துவிட்டுக் கேட்டால் "அலுவலகத்தில் அதிக வேலை" எனச் சுருக்கமாய் வந்த பதிலில், அவளுக்கே நம்பிக்கை இல்லை எனும் போது மாத்யூவிற்கு எங்கனம் நம்பிக்கை வரும். யோசனையாய் மனைவியைத் தொடர்ந்த அவனது பார்வைகளுக்கு, அடுத்த நாள் அவனது கைப்பேசிக்கு வந்த அழைப்பு விடை சொன்னது! (போன்கால் பண்றவங்க தான் பேசுவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்! வர வர போன் காலே பேசுதே!!!)



தான் ஆராய்ச்சி செய்யும் மருந்துகளின் குறிப்புகளை அவன் கர்ம சிரத்தையுடன் குறித்துக் கொண்டிருக்கையில், சிணுங்கிய கைப்பேசியை சிறிது எரிச்சலுடன் நோக்கியவன் "வேலை நேரத்தில் தொந்தரவு செய்வது இவளது முழு நேர வேலை!" என மனைவியின் மேல் கோபம் கொண்டு, உடனேயே "ஒரு வாரமாய் அவள் பேசவே இல்லையே?! ரொம்பவும் மாறிவிட்டாள்! அவளைப் பார்க்கப் பார்க்கப் பாவமாய் இருக்கிறதே" எனத் தன் எண்ணத்தை உடனேயே மாற்றி, கைப்பேசியைப் பாய்ந்து எடுத்தான்.

ஆனால் அதில் மனைவியின் எண் ஒளிராமல், வேறேதோ எண் ஒளிரவும் யோசனையாய் காதில் வைத்தவனின் காதுகளில் ஈயம் ஊற்றப்பட்டதோ?! காதில் விழுந்ததை ஜீரணிக்க முடியாமல் "எந்த மருத்துவமனை?" என்றபோது நெஞ்சம், பறக்கும் ரயிலை விட வேகமாய் பறந்து மனோவை அடைந்திருந்தது! (மனமா வைத்தியம் பார்க்கப் போகிறது? அதை அனுப்பிவிட்டு, அதுவும் பறக்கும் ரயில்ல அனுப்பிட்டு நீ என்ன பண்ற? சீக்கிரம் போடா...)

# 19

"தாங்கள் திருமதி. மனோன்மணியின் கணவரா?" என்று ஆரம்பித்த விசாரணை, மாத்யூவின் "ஆம்" என்ற பதிலைத் தொடர்ந்து "உங்கள் மனைவி அலுவலகத்தில் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். மருத்துவ

மனையில் சேர்த்திருக்கிறோம்'' என்ற தகவல் சொல்லப் பட்டது! (மயக்கம் போடும் அளவிற்கு அலுவலகத்தில் என்ன செய்த மனோ? மாட்ட்-டை நினைச்சிட்டு மாடு ஓட்டினியா?)

''மனைவி மயங்கி விட்டாள்'' என்ற செய்தி, மாத்யு வின் மூளையினுள் அவளது ஒரு வாரச் சோர்வை நினைவு படுத்த.

''அவளைக் கவனிக்காது விட்டோமோ?!'' என மனதினுள் நொந்தவாறே, ''எந்த மருத்துவமனை?'' என்று வெளியே கேட்டான் மனோவின் உடல் நலம் பேணும் உத்தமன். (நீ பேணிப் பேணித் தான் அவளைப் பாப்பாவாக்கி வச்சிருந்த! மறுபடியுமா?)

அந்தப் பக்கம் மருத்துவமனை பெயர் சொல்லப் பட்டதும், தனது மேலாளரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு அங்கே பறந்தவனின் மனதில் ஒரு வாரமாய் அவளது சோர்வும், சரியாக உண்ணாததும், கேட்டால் பிடிக்கவில்லை என்பதும், சுருண்டு சுருண்டு படுத்துக் கொள்வதும் நினைவு வந்து வதைத்தன. அவள் மேலி ருக்கும் கோபத்தில்... ம்ம் அதற்குப் பெயர் கோபமா?... தன்னால் மனோவின் மீது கோபம் கொள்ள முடியுமா என்ன? அது வருத்தம், என்னைப் புரிந்து கொள்ள வில்லையே என்ற ஆதங்கம்... ஏதோ ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு அவளைச் சரியாக பராமரிக்க வில்லை போலவே. (அது கோபமில்லைன்னு கண்டு பிடிச்சிங்?? ஹிஹி கள்ளனடா நீ!)

அவள் ஒரு குழந்தை என்று தெரிந்து தானே மணந்து கொண்டாம்? அதுவும் அந்த குணம் தன்னை ஈர்த்த தால் தானே இந்தத் திருமணமே நடந்தேறியது!



(சைல்ட் மேரேஜ் சட்டத்தின் கீழ், நீர் கைது செய்யப் படுகிறீர்கள், மிஸ்டர்.மாத்யூஸ் நராவிடே!)

குழந்தை போன்ற அவள் மனதினுள் இருக்கும் உற்சாகத்தை ரசித்தத் தன்னால், அந்தக் குழந்தைத்தனம் உண்டு பண்ணியிருக்கும் மன முதிர்ச்சி இன்மையைச் சகித்துக் கொள்ள முடியவில்லையா? அவளது மன உளைச்சலைக் குறைக்கும் மன முதிர்ச்சித் தனக்கில் லாமல் போய்விட்டதா? (இன்னும் நீ முதிரணுமா? விட்டு உத்திரம் பத்திரம்டாப்பா!)

உனக்கு என்று நம்பிக்கை வருகிறதோ...அது வரை காத்திருப்பேன் என்று சொன்னேனே, அந்த நம்பிக் கையை அவளது மனதிற்கு அளிக்க வேண்டியவனே நானல்லவா?

தன் கணவனின் பார்வை பிற பெண்களின் மீது திரும்புவதைக் கூட விரும்பாத மனோவின் கண்களில் ஜீனின் காதல் கடிதங்களை வைத்ததே தப்பல்லவா?! (ஞானோதயம் வர புத்த மாத்துக்குக் கீழே உட்கார்ந் திருந்தியா என்ன? புது சாமியார்ன்னு நினைச்சு, போலீஸ் லபக்கிரப் போகுது!)

தனக்கென்று இருக்கும் பொருளை யாருக்கும் விட்டுக் கொடுக்காத அச்சிறு பெண்ணிற்கு, கணவனின் அறையில் வேறொரு பெண்ணின் கடிதங்களைக் கண் டால் கோபம் தானே வரும்? கோபம் வராது, அந்தக் கடிதங்களைப் படித்து மகிழும் ஜாதியா அவனது மனைவி? (அதானே?! அவன் பெண்ஜாதி ஒரு புலி ஜாதியல்லவோ!)

அவளின் குணமும், தன் மேல் அவள் கொண்டிருக் கும் அபரிதமான நேசமும், அதனால் உண்டான

பாதுகாப்பற்ற தன்மையும் அவன் அறிந்த ஒன்றே எனும் போது, ஜீனின் காதல் கடிதங்களைத் தூக்கி எறியாது, அலுவலக அறையினுள் வைத்திருந்தது தப்பல்லவா?

அவளைச் சந்தேகப்படுகிறாள் என்று கூறும் தான், அவள் மீது நம்பிக்கை வைத்திருந்தால் இந்தக் கடிதங்களை அவளிடம் காட்டி, அதை ஒரு வேண்டாத எண்ணமாய் பேசி முடித்திருக்க வேண்டுமோ? அதை விட்டுட்டு அவளிடம் அதை மறைத்து...ம்ம்ம்...மறைக்க வேண்டும் என்ற எண்ணமில்லை என்றாலும் அக்கடிதங்கள் வந்ததை அவளிடம் கூறினால் கோபம் கொள்வாளோ என்று அஞ்சி, அவற்றை குப்பைகளுடன் குப்பையாக அலுவலக அறையினுள் போட்டது பிழையாகிப் போயிற்றே! (அவகிட்ட ஜீனோட கடிதங்கள் பற்றி பேசி முடிக்கிறாயா? உனக்கெதுவும் மேரியாத்தா அடிச்சிடுச்சா?)

ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்து, தாய்-தந்தையின் அன்பை முழுதாய் பெற்று வளர்ந்தவளுக்குத் திருமணத்திற்குப் பின்னரும் அவனது அன்பு, தனக்கு மட்டுமாய் இருக்க வேண்டும் என்ற எண்ணமிருப்பதைக் குறை கூற முடியாதே?

அந்த ஆற்றாமையில், தன் அன்பிற்குப் பங்கம் வந்துவிடுமோ என்ற பாதிப்பில் அவள் பேசிய வார்த்தைகள் தவறு தான் என்றாலும், அவள் மன்னிப்பு கேட்ட பின்னரும் அதைப் பிடித்துக் கொண்டு தொங்கிவிட்டோமே? (நீ தொங்கின கம்பி நல்லா இருக்கான்னு முதல பாரு!)

அவள் செய்தது தப்பென்று அவன் உணர்ந்த பின்னரும், அவளை ஒதுக்கி வைத்தது தவறோ? தவறோ



என்ன தவறோ? தவறுதான்! என் செல்ல மாணிக்கு, அந்த ஒதுக்கத்தினால் தான் உடம்பிற்கு முடியாமல் வந்துவிட்டதோ!

''மாணி பேபி! மாணி பேபி!'' என உள்ளம் உருப்போட, வண்டியை வேகத்துடன் விரட்டிய மாதவ், மருத்துவமனை அடைந்து மனோன்மணியின் பெயரைக் கூறி, அறை எண்ணைக் கேட்டுக் கொண்டு ஓடினான்.

அந்த நேரம் அறையை விட்டு ஒரு மருத்துவர் வெளியே வர, அவரிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, மனோவின் உடல்நிலை பற்றி பதட்டத்துடன் விசாரித்தான்.

அவரோ, அவனது பதட்டத்திற்கு மாறாக ''வாழ்த்துக்கள்'' எனக் கூறி, அவன் கைப்பிடித்துக் குலுக்க, மாதவின் மருத்துவ அறிவு, ஒன்றும் ஒன்றும் மூன்று என அழகாய் கணக்குப் போட்டு, அவனது முகத்தையும் மனதையும் ஒருங்கே பிரகாசமாக்கியது! (ஒன்றும் ஒன்றும் மூன்று! நீ டாக்டர் தான் ஒத்துக்கிறேன்... அதுக்காக கணக்கில் இந்தச் சின்ன கணக்கு கூடவா தெரியாது?)

சந்தோஷம் குரலில் நர்த்தனமாட ''மிக்க நன்றி'' என்றதுடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவனைச் சோர்ந்து படுத்திருந்த மனோன்மணியின் மோனநிலையே வரவேற்றது!

ஆசையுடன் அவளருகே சென்று அமர்ந்தவன், கலைந்திருந்த அவளது தலைமுடியை மெல்ல ஒதுக்கி, நெற்றியில் அழுத்தமாய் முத்தம் வைக்கக் கையுடன் மெல்லச் சரிந்து மனோன்மணியின் மணி வயிற்றில் மிக மிக மென்மையாய் முத்தம் வைத்தான்.

அவனது முதல் முத்தம் விழுந்தபோதே, தூக்கத்தைத் துறந்துவிட்ட மனோன்மணி, அவனது அடுத்த முத்தத்தில் முகம் சிவக்க, தன் மணி வயிற்றிலிருந்த மணாளனின் தலையை வயிற்றுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள்! (ஹையா பாப்பாக்கு பாப்பா பிறக்கப் போகுது!)

அந்த அணைப்பில் ஆயிரம் கோடி சந்தோஷ வார்த்தைகள் வெளிப்பட்ட நிம்மதி கிடைத்துவிட, தனது முரட்டு அணைப்பை முயன்று கட்டுப்படுத்தி, அவளை மெல்ல, அதே சமயம் இறுக அணைத்தான்.

''பேபி'' என அவனது அழைப்பு, தேனில் தோய்த்த பலாவாய் தித்திக்க ''மாட்ட்'' என இரு கையையும் விரித்து அவனைக் காந்த விழிகளால் இழுத்தாள். மனைவி காந்தம் - நீ நெகடிவ் போல்தானே?''

அவளை அணைத்து நெற்றியில் முத்தம் வைத்தவன் ''தேங்க்ஸ்!'' என்று உள்ளார்ந்த குரலில் கூறிய வினாடி ''நானும் தேங்க்ஸ்!'' என்றாள் மனோ, வெட்கத்துடன். (அச்சோ, பாப்பா!)

அதற்கு வார்த்தைகளால் வரவேற்பு அளிக்காமல், முத்தத்தாலும் அணைப்புகளாலும் அழைப்பு விடுத்தவன், சற்று நேரம் மௌனத்தையே இருவருக்குமான யுத்த மொழியாக்கினான்.

மனோவிற்கும் மௌனம் என்ற இனிய பாஷை உச்சரிப்பதற்கு இனிதாய் இருக்க, தங்கள் காதலின் அடையாளமாய் உருவாகியிருந்த சின்னஞ்சிறு உயிருக்கு மகத்தான வரவேற்பு நடந்தேறியது! (பூமழை தூவி, பொன்மகளை வரவேறுங்கள்!)



பத்து நிமிடங்கள் நடந்தேறிய வரவேற்பை இனிதாய் முடித்துவைத்த மனோன்மணி ''மாட்ட், வீட்டுக்குப் போகலாமா? எனக்கு இங்கப் பிடிக்கலை'' என்றாள் ஒரு வித ஏக்கத்துடன்.

''வீட்டுக்கா? ம்ம்..இரு. நான் டாக்டர்களிடம் கேட்டு விட்டு வருகிறேன்'' என எழுந்தவன், ''அரை மணி நேரம் என்றாலும், நான் ரொம்பவே பயந்து விட்டேன், பேபி!'' என அவளை மீண்டும் அணைத்து விடுவித்தான்.

கதவு வரைச் சென்றவன், மீண்டும் திரும்பி ''உனக்கு உடம்பு சரியாகும் வரை, இங்கேயே இருந்துவிட்டுச் செல்லலாம், பேபி! எனக்குக் கொஞ்சம் படபடப்பாகவே இருக்கிறது!'' என ஏறக் குறைய கெஞ்சினான் என்றே சொல்ல வேண்டும்! (எழுதி சத்தியம் பண்ணித் தரேன். அவ ஒத்துக்கப் போறதில்லை!)

''ம்ஹூம். இங்க வேண்டாம் என்றால் வேண்டாம் தான்! எனக்கு உன்னோட கைக்குள்ள இருந்தாலே... எல்லாம் சரியாகிடும்!'' என அந்த ''எல்லாம்''மில் அழுத்தம் கொடுத்து அவள் பேசவும், மாத்யூவின் மனம் நெகிழ்ந்து போனது! சற்று முன்னர் வந்த அவளது ஏக்கக் குரலும், இப்போது வரும் அழுத்தக் குரலும் அவளது விருப்பத்தைப் பறைசாற்ற ''சீக்கிரம் வீட்டிற்குப் போகலாம்!'' என்ற சொல்லோடு, வெளியே சென்றான். (அதானே பார்த்தேன்! என்னடா நம்ம மாத்யூ சொன்ன பேச்சை நம்ம மனோ கேட்டுட்டாளே என்று சந்தோஷப்படப் போனேன்!)

அவனை அதிகம் பேச வைக்காது, சில பல மாத்திரைகளும், திடமான உணவும் என அறிவுரை கூறியவர்கள், அவன் மருத்துவன் என்று அறிந்ததும் ''உங்களுக்கே தெரியும்!'' என முடித்துக் கொண்டு, இருவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

வீட்டிற்குச் செல்லும் வழியாவும், மாத்தூவின் தோள்களில் தலை சாய்ந்தவாறே வந்த மனோன்மணி, சிறு மௌனத்திற்குப் பின்னர் ''மாட்ட், சாரி மாட்ட்! நான் செய்தது...'' என ஆரம்பிக்கவும், ஒற்றை விரல் வைத்து அவளது உதடுகளை மூடியவன் ''நீ எதுவும் சொல்ல வேண்டாம், பேபி!'' எனத் தடுத்துவிட்டுத் தான் பேசினான்.

''இந்த நேரத்தில், நமக்குள்ள நடந்த கசப்பான விஷயங்கள் எதையும் நீ நினைக்கவே கூடாது! சொல்லப்போனால், அதையெல்லாம் நீ மறந்தே விடவேண்டும்! நானும் ஞாபகப்படுத்த மாட்டேன்'' என்றான் ஆத்மார்த்தமாய்.

''அப்போ, கோபம் போயிடுச்சா?'' என அவள் விழிகளை விரிக்க, மாத்தூவின் உதடுகள் அவளது விரிந்த விழிகளுள் விழுந்து எழுந்தன. (விழிகளுள் விழுந்தியா? அவ்வளவு பெருசாவா இருக்கு அவ கண்ணு?)

''அதெப்படி போச்சு? நீதான்...எனக்கு உன் மேல நம்பிக்கை வர வரைக்கும்...'' என அவள் ஒரு விரல் தட்டி யோசிக்கவும், ''ஷ், இப்போ தானே சொன்னேன்? அதைப் பத்திப் பேசக் கூடாது...நினைக்கக் கூடாது என்று. அப்புறம் திரும்பவும் செய்கிறாய்?'' என அவன் ஒரு விரல் நீட்டி, அவளது தாடையின் மறுபுறம் தட்டிச் சிரித்தான்.

''ம்ம் சரி!'' என ஒத்துக் கொண்ட மனோன்மணிக்கும், கணவன் தன் மீது கொண்டிருந்த கோபம் காணாமல் போனதில் பெருத்த சந்தோஷமாய் இருக்கவே, அவன் மேல் தான் பட்ட சந்தேகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு,



அவனை ஒட்டி அமர்ந்தாள். (சொல் பேச்சுக் கேட்ட எங்கள் தங்கத் தாரகை மனோன்மணி, வாழ்க!)

வீட்டிற்குச் சென்றதும், தன் கைப்பிடியிலே அழைத்துச் சென்றவன், வீட்டுக் கதவைத் திறந்ததும், மனோ உள்ளே செல்ல எத்தனிக்கவும், அவளைத் தடுத்தான். கேள்வியாய் நோக்குகிறேன் என்ற அர்த்தத்தில் மீண்டும் மனோன்மணி கண்ணை விரிக்க, விரிந்த கண்களுள் மீண்டும் உதடுகளை விழச் செய்து எழுந்தவன், அவளுக்குரிய பதிலாய் அவளைக் கையில் ஏந்திக் கொண்டு உள்ளே வந்தான். (சும்மா சும்மா விழாதேடா! என்னால தூக்கிவிட முடியல!)

திருமணம் முடிந்து முதல் முறையாக உள்ளே வந்த போது, அவன் தூக்கியது நினைவு வர, சிவந்த முகத்தை அவனது பரந்த புஜத்தில் பதித்துக் கொண்டு, ஓர் விரிந்த சிரிப்பை உதிர்த்தாள் மனோன்மணி! (சிவந்த, பரந்த, விரிந்த - என்ன ஒரு எதுகை மோனை!)

''ஐ லவ் யு, பேபி!'' என்ற உருகலுடன் அவளை உள்ளே இட்டுச் சென்றவன் அடுத்து வந்த ஒரு மணி நேரமும் அவளைத் தன் மடியை விட்டு இறக்கவே இல்லை.

''எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கத் தெரியுமா?''

''நான் அப்பாவாகப் போறேன்! ஹோ மை காட்!! தேங்க்ஸ் தேங்க்ஸ்!''

''ஐ லவ் யு, பேபி!''

''நீ ரெண்டு வாரத்திற்கு வேலைக்குப் போகவேண்டாம். வீட்டிலேயே ஓய்வாக இரு'' என இந்த ஐந்து

வாக்கியங்களையுமே மாற்றி மாற்றிப் பேசியவனின் சந்தோசம், மனோவைத் தித்திப்பில் திக்குமுக்காட வைத்தது.

ஒரு மணி நேர இறுதியில், மனோ உடம்பை ஒருவாறாய் முறுக்கவே ''என்ன பேபி? என்ன செய்யுது?'' என முன்னிலும் அதிகமாய் பதறியவனின் மார்பில் அழுந்தப் புதைந்து கொண்டவள் ''டையர்ட்-டா இருக்கு'' என்றாள் சோர்வுடன்.

''ஹோ, உனக்கு உடம்பு சரியில்லை என்பது தெரியாமல், நான் வேறு உன்னைப் படுத்திவிட்டேன்'' என்ற தனது தாங்குதல் அமர்விற்கான விளக்கமாய் கொஞ்சியவன்,

''வா, உள்ளே போய் படுக்கலாம்'' என்று அவளைக் கிளப்ப முயன்றான்.

''இல்லை, இங்கேவே!'' என முணுமுணுத்த மனோன்மணியின் கண்கள், அப்போதே சொருகத் துவங்கி, வினாடி நேரத்திற்குள் உறக்கத்திற்குச் சென்று விட்டிருந்தாள், அவள்.

''மை ஸ்வீட் லிட்டில் பேபி!'' என்ற அழைப்புடன் அவளைத் தட்டிக் கொடுத்தவனுக்கு, ஐந்தே நிமிடத்திற்குள் ''இது உறக்கமா? மயக்கமா?'' என்ற பதட்டம் வந்துவிட, சட்டென நாடித்துடிப்புப் பார்த்து, மேலும் சில பரிசோதனைகள் செய்து, உறக்கம் என்று உறுதி செய்து கொண்டான்.

அரை மணி நேரம், ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தவன், மனைவி நன்றாக உறங்கிவிட்டாள் என்று தெரிந்ததும், அவளைப் படுக்கையில் விட்டுவர, அவளைத் தூக்கிக் கொண்டு எழுந்தான்.



இதுவரையிலும் மார்பில் புதைந்திருந்த முகத்தை இப்போது நேராய் பார்த்தவனுக்கு, அவளது சோர்வின் அளவு புரிந்தது! இந்த நேரங்களிலிருக்கும் இயற்கையான சோர்வை விட, தனது ஒதுக்கத்தினாலும், மேலும் புரியாத பிடிவாதத்தினாலும் இழுத்துக் கொண்ட மன வேதனை அதிகமாகி விட்டதோ என்ற வேதனையில், அவளைப்படுக்க வைத்து மூடிவிட்டவன், அவளுக்காய் சமைக்கச் சென்றான்! (நீ இப்படி சமைச்சுட்டே இரு! ஒரு நாள் இல்லை ஒரு நாள், நான் விடுற புகையில எல்லாம் ஸ்வாகா ஆகப் போகுது!)

கடந்த நாட்களில் தொலைத்த தூக்கத்தை எல்லாம், ஒரே நாளில் உறங்கிக் கழிப்பவள் போல் ஒரேடியாக உறங்கிய மனோன்மணியை, மூன்று மணி நேரங்கள் கழித்தும், மாத்யூவாகவே அவளை எழுப்ப வேண்டியிருந்தது!

''ம்ம் தூக்கம்'' என மீண்டும் படுக்க முயன்றவளை ஒருவழியாய் எழுப்பி, வயிற்றுக்கு உணவிட்டுக் கொண்டிருக்கும் போதே, சில வினாடிகள் முன்னர் உள்ளே சென்ற கார சாரமான பாஸ்தா, ஒரே மடக்கில் வெளியே வந்தது! (இன்புட் வாங்கினா அதை ப்ரோசெச்ஸ் செய்யணும். அப்படியே அவுட்புட் செய்யக் கூடாது!)

''ஹோ மை பேபி!'' என அவன் பதறும் போதே, ''சாரி மாட்ட்! சாரி...சாரி!'' எனப் பதறிவிட்டாள் மனோன்மணி.

''பரவாயில்லைமா. உனக்குப் பிடிக்குமே என்று செய்தேன்'' என அவன் பரிதாபமாய் பேசவும்,

''எனக்கு இதுன்னு இல்லை மாட்ட், எதுவுமே ஒத்துக்க மாட்டேங்குது! ஒரு வாரமாவே இப்படித் தான் இருக்கு

பசிக்கிறது என்று எதையாவது சாப்பிட்ட உடனே வாந்தி வந்துவிடுது!'' எனக் கூறிவிட்டு, வயிற்றை அழுத்திக் கொண்டு மீண்டும் உறங்கிப் போனாள், மனோ.

"ஒரு வாரமாகவே இப்படித் தான் இருக்கிறது!'' என அவள் சொல்லிய வார்த்தைகள் வருத்தத்தையும், வேதனையையும் உண்டு பண்ண, அவளது முடியை மெல்ல வருடிவிட்ட ஐந்தே நிமிடத்தில் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு அவளை மீண்டும் எழுப்பினான்.

எழ மனமின்றி எழுந்தவளின் உதடுகளில் ஒரு பெரிய கண்ணாடிக் குவளையை வைத்து "உனக்குப் பிடித்த ஆப்பிள் ஜூஸ், கொஞ்சமாய் குடி'' என்றான். "வாந்தி வரும்'' என அவள் தயங்கியபோதும், விடாது அவளைப் பருகச் செய்து, மீண்டுமோர் அபிஷேகத்தை நிகழ்த்திக் கொண்டு, மனமுடைந்தான்!

அன்று மட்டுமல்லாது, தொடர்ந்த பல தினங்களும் மனோன்மணி, மசக்கையால் துவண்டாள்! தன் வாரிசு வருவது குறித்து எவ்வளவுக்கு எவ்வளவு சந்தோசம் கொண்டானோ, அதே அளவு என்ன அதை விடவும் மேலாய் தன் குழந்தையினும் மேலான மனைவி துவண்டு போவதில் வருத்தம் கொண்டான்!

அவளுக்குப் பிடித்தது என்று தான் அறிந்ததெல்லாம் செய்து கொடுத்தவனிடம் "என்னாலே சாப்பிட முடியலையே'' என்ற பரிதாபப் பார்வை பார்த்த மனோவிற்கு, நிஜமாகவே முடியவில்லை.

கணவன் செய்து கொடுக்கும் பதார்த்தங்களை விட, அவனது அன்பிலும் கவனிப்பிலும் உடல் தேறுவது போல் உணர்ந்தாலும், அவளது உடல் தேறிவிடவில்லை. உள்ளே இருக்கும் சின்ன உயிர், தன் தாயை



அலைக்கழித்துத் தான் பார்த்தது! (நீ எத்தனை பேரை அலைக்கழிச்ச இருப்பே? அதுக்கெல்லாம் ரீப்பீட்! தந்தைக்காக போர் தொடுக்கும் வீர சிங்கமல்லவோ...உன் பிள்ளை!)

"மாட்ட், இந்த வாமிட் நிற்கிறதுக்கு ஏதாவது மருந்து தரியா? ப்ளீஸ்?'' எனக் கெஞ்சியவளின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாது. அவனது மருத்துவ அறிவு உள்ளிருக்கும் குழந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

ஆனாலும், வெளியிலிருக்கும் குழந்தையைப் பார்க்க முடியாது போனதில் தவித்து, அவளது முகத்தைக் கையில் ஏந்தி "மருந்து மாத்திரை சாப்பிட்டால், குழந்தையின் உடல்நிலைக்கு பாதிப்பு வந்துவிடும் பேபி! அதனால் வேண்டாமே? என்ன சொல்கிறாய்?'' எனக் காரணமும் கூறி, விளக்கமும் கேட்டான்.

"ஹோ!'' என ஒற்றைச் சொல்லில் அதை உள்வாங்கிய மனோவிற்கு, ஒரே சமயத்தில் "வேண்டும்'' என்றும் தோன்றியது; "வேண்டாம்'' என்றும் தோன்றியது! அந்த இரு துருவத்திற்கும் இடையே அதிக நேரம் போராட முடியாது, மீண்டும் சுருண்டு படுத்தாள் அவள்.

அவளைக் கூடவே இருந்து பார்த்துக் கொண்ட மாத்வ்வாலும் இரண்டு நாட்களுக்கும் மேலாய் வீட்டிலேயே இருக்க முடியவில்லை. வேலையிடத்திலிருந்து அழைப்பு மேல் அழைப்பும், மின்னஞ்சல் மேல் மின்னஞ்சலும் வந்து கொண்டிருக்க, ஆயிரம் அறிவுரைகளுடன் வேலைக்குச் சென்றவனுக்கு மனம் தவியாய் தவித்த அதே நேரம் மனோவின் மனதும் தவித்துப் போனது!

ஆனால், மாத்துவைப் போல் தன் பாதியை நினைத்து அவள் தவிக்கவில்லை. தாயாகப் போகும் அந்தத் தாய்ப்பசு, கன்றாய் மாறி தன் தாய்ப்பசுவின் மடி தேடி அலைந்தது (நோ! மை பேபி!)

தனக்கு வாரிசு வரப் போவது உறுதியானதுமே, "மாம்மா, நீங்க தத்தா ஆகப் போர்ரீ...ங்க" என மாட்ட, தத்தித் தத்தித் தமிழ் பேசி, மனோவின் அப்பாவிற்கு விஷயத்தைக் கூறியிருந்தான். (ச்சோ ஸ்வீட்)

தன் பேரனின் வரவிற்குச் சமமாய் தன் மருமகனின் தமிழை எண்ணி மகிழ்ந்த அவரும், "ரொம்ப சந்தோசம் மாப்பிள்ளை" என்றார் அழகான ஆங்கிலத்தில்!

அந்த சந்தோஷத்தினூடே "அம்மாகிட்ட கொடுங்கப்பா! நானே, இந்த விஷயத்தைச் சொல்றேன்" என மனோ, ஆர்வமாய் பறக்கத் தான் செய்தாள்.

தாயாகியிருக்கும் தங்க மகளின் சேய் மனதை அவளது தாய் நோகச் செய்துவிடுவாளோ என்ற பதைப்பில் "அம்மா...தூங்குகிறாள், மனோ குட்டி! எழுந்ததும் நானே விஷயத்தைச் சொல்லிவிட்டு உன்னைக் கூப்பிடுகிறேன்" என முற்றுப் புள்ளி வைத்த பெரியவர், அந்த முற்றுப் புள்ளியை தொடர் புள்ளியாய் மாற்றாமலேயே அவளை ஏமாற்றினார்.

அந்த ஏமாற்றமும், மசக்கை நேரங்களில் தாயைத் தேடிய மனதின் தவிப்புமென, மனோவின் உடல் மெலிந்து கொண்டே போனது!

தாயைத் தேடும் நேரமெல்லாம் கோதையின் படமும், ஆண்டாள் கோவிலில் வாங்கிவந்த கிளியுமே துணை



யிருக்க, கோதையின் படத்தின் மீது தாயின் சேலையை விரித்து, அதில் தலை சாய்ந்து கொண்டாள் மனோன்மணி!

அவளது மெலிவைப் பார்க்க சகிக்காது, மாத்துவும் தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் செய்து கொண்டே தான் இருந்தான். பிடித்த இசை, பிடித்த இடம், பிடித்த படம், பிடித்த உணவு எனப் பார்த்துப் பார்த்துச் செய்தவனுக்கு, "பிடித்த உணவில்" தான் பிரச்னை வந்து சேர்ந்தது!

"இன்று என்ன சாப்பிடுகிறாய் பேபி?" என்றால்

"புடலங்காய் பால் கூட்டு சாப்பிடணும் போலிருக்கு."

"எண்ணெய் கத்திரிக்காய் காரக் குழம்பு செய்து தரியா?"

"சேனைக் கிழங்கு வருவலும், மிளகு ரசமும் சாப்பிட்டா இந்தக் குளிருக்கு சுகமா இருக்கும்!"

"எல்லா காயும் போட்டு...எங்கம்மா ஒரு மண்டி செய்வாங்க! அது செய்றியா?" என அவனைச் சமையல்காரன் ரேஞ்சிற்கு, அதுவும் மதுரைப் பக்கச் சமையல்காரன் ரேஞ்சிற்கு அலைகழித்தாள், மனைவி. அவளும் வேண்டுமென்றே செய்யவில்லை, நிஜமாகவே மசக்கையிலிருந்த நாக்குத் தாயின் சமையலுக்கு ஏங்கியது! (அவனைச் செய்யச் சொல்லி கேட்கிற இதெல்லாம் உனக்கு செய்யத் தெரியுமா? அட்லீஸ்ட் அந்தக் காயெல்லாம் எப்படி இருக்கும் என்றாவது தெரியுமா? புடலங்காய் என்றால் உருண்டையா, சிகப்பா இருக்குமே? அதானே மனோ?)

# 20

மனோன்மணி கேட்ட உணவுகளின் பெயரைக் கூட மாத்யூவினால் உச்சரிக்க முடியவில்லை என்றபோது, அவற்றை சமைப்பது என்பது அவனுக்கு எப்படி சாத்தியமாகும்? (மாத்யூ - புடலங்காய் சொல்லு பார்க்கலாம்! போட்லிக்காயே கிடையாது... பு...ட...ல..ங்கா...ய்...)

''பேபி! இதெல்லாம் எனக்குச் செய்யத் தெரியாதே! நீ வேணும்னா எப்படி செய்யணும்னு சொல்லு, செய்து தரேன்'' என மனைவியை மடியில் ஏந்திக் கொண்டு, இரு கைகளாலும் அவளைச் சிறைப்பிடித்து, கன்னத்தோடு கன்னம் உரசி அவன் கொஞ்சிக் கெஞ்ச, அவனது நெஞ்சோடு தனது முதுகை உரசியவாறு அமர்ந்திருந்த மனோன்மணியின் முகத்தில் சோர்வையும் மீறி ஒரு பீதி கிளம்பியது! (எப்படி செய்றதுன்னு கேட்டதுக்கு பீதியா? செய்யச் சொல்லியிருந்தா...ஹஹஹஹா! ஹூஹூஹூ)

அந்த பீதியை முயன்று மறுத்து, அப்பாவி தன்மையைக் குரலில் கொண்டு வந்து ''எனக்கும் செய்யத் தெரியாதே'' என்றாள் மனோன்மணி, பரிதாபமாக. (அட இங்க பாருடா! உண்மையை ஒத்துக்குச்சு பாப்பா!)

''ஹோ, நோ! அப்புறம் எப்படி உனக்கு அந்த டிஷ் பேரெல்லாம் தெரியும்?'' என மாத்யூ, எதிர் கேள்வி கேட்கவும், மனோவின் முகத்தில் வருத்தம் படர்ந்தது. (என்னடா மாட்ட், நீ பச்சைப் புள்ளையா இருக்கியே?



டிஷ் பேர் தெரியறதுக்கு சமைக்கத் தெரியணும்னு அவசியமில்லைடா! சாப்பிடத் தெரிந்தாலே போதும்!)

அமர்ந்த நிலையிலேயே திரும்பி, கணவனின் முடி படர்ந்த மார்பில் முகத்தை அழுத்திக் கொண்டு ''அம்மா செய்து தருவாங்க!'' என்றாள் மனோன்மணி!

தாய்க்காக அவள் ஏங்குவது புரிய, மனைவியின் முதுகை மெல்ல வருடிக் கொடுத்தான். தன் ஏக்கத்தை அவன் உணர்ந்துகொண்டது, அந்த வருடலில் புரிய, மனோன்மணியின் கண்கள் மடை திறந்த அணையாய் மாறிக் கண்ணீரை வெள்ளமென பாயச் செய்தன!

''நோ பேபி! அழக்கூடாது! ப்ளீஸ் அழாதே!'' என மாத்யூவின் ஆறுதல் வார்த்தைகளுக்கு நடுவே ''எனக்கு அம்மாவைப் பார்க்கணும் போலிருக்கு... அம்மா வேணும்! அம்மா வேணும்!'' எனக் கதறித் தீர்த்துவிட்டாள் மனோன்மணி!

ஒரு மணி நேர அழுகையில், மனோன்மணியின் கண்ணீர் - ஆற்றில் ஓடும் தண்ணீர், ஓடையில் ஓடும் தண்ணீர், தண்ணீர் லாரிகள் ஊற்றிச் செல்லும் தண்ணீர், சென்னைக் குழாய்களில் விழும் தண்ணீர் என உருமாற்றம் பெற்று, கொஞ்சம் கொஞ்சமாக சிறு கேவல், மெல்லிய விசும்பல் என்ற நிலைக்குப் பயணித்து, முடிவில் தூக்கத்தில் போய் முடிந்தது!

மனைவியின் கண்களுக்குள் தூக்கம் புகும் வரை, அவளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த மாத்யூ, ஓர் முடிவுடன் அவளைப் படுக்கையில் கிடத்திவிட்டு, தொலைபேசியைக் கையில் எடுத்தான்!

யாருக்காகவும் நிற்காமல் காலம் வேகமாய் ஓடி மறைய, இரண்டு வாரங்கள் கடந்த நிலையில், ஓர் நாள்

மாலை மாத்யூ வேலை முடிந்து வரும் போது, கணினியின் முன்னே அமர்ந்திருந்தாள் மனோன்மணி! (எதுக்கு? அம்மாவை எப்படி சமாதானம் செய்றதுன்னு டிப்ஸ் திரட்டவா?)

அவளருகே வந்தமர்ந்த கணவன், தன் வழக்கமான முத்தத்தை வைத்துவிட்டு ''என்ன செய்றே, பேபி?'' என்றான் கணினியின் திரையைப் பார்த்துக் கொண்டே.

''எல்லா காய்கறியும் போட்டு எங்கம்மா ஒரு மண்டி செய்வாங்க. அது எப்படி செய்றதுன்னு பார்த்திட்டு இருக்கேன்'' எனத் தகவல் சொல்லியவள், கூடுதலாய் ''உன்னோட மாமாகிட்ட, மண்டி எப்படி செய்றதுன்னு ரெசிபி கேட்டா...ஞேன்னு முழிக்கிறார்! இத்தனை வருஷமா... அம்மா சமைக்கப் போடறதை ''இது நொள்ளை... இது நொட்டை''ன்னு குறை சொல்லிச் சாப்பிட மட்டும் தெரியுமாம். இதோட செய்முறை தெரியாதாம்... ஙொக்கும்ம்'' என நொடித்துக் கொள்ளவும் செய்தாள். (நீ எப்படி மனோ முழிச்சே? மே மே மேன்னா?!)

தொலைபேசியில் மனைவியிடம் மாட்டிக் கொண்டு விழித்தத் தன் மாமனாரின் நிலையை மனக்கண்ணில் பார்த்த மாத்யூவிற்கு, அவர் மேல் பரிதாபம் ஆறாய் பெருக ''பாவம் மாமி!'' என்றான் அவருக்காக பரிவது போல். (ஒரு ஆணின் மனசு ஆணுக்குத் தான்டாப்பா தெரியும்!!)

''என்ன பாவம்? நீ... எவ்வளவு நல்லா சமைக்கிறே? எனக்காக என்னவெல்லாம் செய்து தரே? இவரைச் சமைக்கவா சொல்றேன்... ரெசிபி தானே கேட்டேன்'' எனத் தன் கணவனின் புகழ் பாடி முடித்தவள்,



''மாட்ட்.. நாம போய் காய்கறி வாங்கிட்டு வரலாம் வா!'' என அவனைப் பிடித்து இழுத்தாள்.

''இப்பவா?'' என அவன் தயங்க, ''ம்ம்ம். இப்போ தான்! நீ வாறதுக்கு முன்னாடியே போலாம்ன்னு நினைச்சேன். ஆனா, பஸ்ல போய் எங்கேயாவது மயங்கி விழுந்துட்டா... பாப்பாக்குக் கஷ்டமில்ல... அதான் உனக்காக வெயிட் பண்ணினேன். வா... வா...'' என அவனை விரட்டினாள்.

முந்தைய தினங்கள் போல், இதைச் சாப்பிட வேண்டும், அதைச் சுவைக்க வேண்டும், இந்தப் பதார்த்தத்தைச் செய். இந்தப் பாஸ்தா வேண்டாம் என அவனை அலைக்கழிக்காமல், தானே செய்கிறேன் என அவள் முடிவு செய்தது மாத்யூவிற்கு நிம்மதியாகவே இருந்தது!

இது நாள் வரையிலும், அதீதமாய் எதையும் உண்ணாமல் அரை வயிறை மட்டுமே நிரப்பிக் கொண்டிருந்தவள், தானாக சமைக்கும் போது வேண்டியதை உண்பாளே என்ற எதிர்பார்ப்பும் சேர்ந்து கொண்டது.

கூடவே, வீட்டினுள்ளே அடைந்து கிடக்கிறாளே என்ற கவலையும் மாற, அவளை சந்தோஷமாகவே அழைத்துச் சென்றான், அவளது கண்ணான கணவன்.

இந்திய உணவுகள் விற்கும் கடையினுள் நுழைந்தவள், இவளா சோர்ந்து போய் சுருண்டு படுத்திருந்தாள் என்று மாத்யூ வியக்கும் அளவிற்கு, உற்சாகப் பந்தாய் மாறி, அந்தக் கடையை அலசி ஆராய்ந்தாள்! (அது என்ன உற்சாகப் பந்தா மாறுறது? உருண்டு உருண்டு போறதையா உற்சாகப் பந்துன்னு சொல்றீங்க? அதுக்குப் பேர் ரோடு ரோல்லர்ங்க!)

கத்திரிக்காய், முருங்கைக்காய், வாழைக்காய், உருளைக்கிழங்கு, கொத்தவரங்காய், தட்டப்பயத்தங்காய், கீரை, சின்ன வெங்காயம் எனக் கையில் வைத்திருந்த துண்டுச் சீட்டைப் பார்த்துப் பார்த்து அவள் எடுத்த அழகை, ரசித்துக் கொண்டு, அவள் எடுக்கும் பொருட்களுக்கான கூடையை சுமந்து, அவள் பின்னாடியே சென்று கொண்டிருந்தான் மாத்யூ. (யு னோ திருத்துஃபை!)

ஓரோர் காயையும் எடுக்கும் போதும் - அந்தக் காயைத் தானே பயிரிட்டு, ஊட்டமாய் வளர உரம் போட்டு, வாடி விடாது காக்க தண்ணீர் பாய்ச்சி, சரியான நிலை வந்ததும் அறுவடை செய்து, நியாயமான விலை வந்ததும் விலை பேசி விற்ற விவசாயியின் ஆவி உள்ளே புகுந்தது போல், அந்தக் காயைப் பற்றி ஓர் புராணமே வாசித்து முடித்துப் பின்னர் தான், மாத்யூ வைத்திருந்த காய் கூடையினுள் காய்கறி இடம் பிடித்தது! (விவசாயிகளின் பிரதிநிதி - மனோன்மணி, வாழ்க!)

மனைவியின் சோர்ந்த விழிகளுள் ஆர்வம் படர்வதை ரசித்துக் கொண்டே இருக்க, மாத்யூவிற்கு ஆசை தான் என்றாலும், கடையை மூடிவிட்டு வீட்டிற்குச் செல்லத் துடிக்கும் கடைக்காரனுக்குப் பிடிக்குமா என்ன? கடையை அடைக்கும் நேரம் நெருங்கிவிட்டது என அவன் அறிவித்துவிட்டு (எச்சரித்துவிட்டு) அகன்றதும், மாத்யூ மனோன்மணியைத் துரிதப் படுத்தினான்.

ஒருவாறாய், காய்கனியை வாங்கிக் கொண்டு பில் போட வந்தால், பாதி பில் போய்க் கொண்டிருக்கும் போதே ''மாட்ட், நீ போய்... மாங்கா எடுத்திட்டு வரியா? வாந்தி வரும் போது சாப்பிட்டா... நல்லா இருக்கும்''



என்றாள் மனோன்மணி. (எல்லாத்தையும் ஒரே நேரத்தில சாப்பிட்டா, வாந்தி வராம என்ன செய்யும்?)

''சரி'' என்ற தலையாட்டலுடன் சென்ற மாத்யூ, மாம்பழங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தின் அருகே செல்லவும் ''மாம்பழம் இல்லை. மாங்காய்!'' எனக் கூவினாள் மனோன்மணி. (இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை!)

''ஓகே. ஓகே! கத்தாதே! எங்கேயாவது பிடித்துக் கொள்ளும்'' என அக்கறையுடன் அதட்டிய மாத்யூவிற்கு, மாங்காய் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கவே ஐந்து நிமிடம் பிடித்தது. ஒருவாறாய், அங்கே சென்று சில மாங்காய்களை எடுத்துக் கொண்டு வந்தவனிடம் ''இந்த மாங்கா தான் இருக்கா? மூக்கு மாங்கா இல்லையா?'' எனக் கேள்வி கேட்டுத், திரு திருவென விழிக்க வைத்தாள்!

''நோஸ் மாங்கா? வாட் இஸ் தட்!'' என அவன் புரியாது வினவ, பில் போட்டுக் கொண்டிருந்தவருக்கே அவன் மேல் பரிதாபம் தோன்றியது போலும் ''இந்த மாங்காய் தான் மேடம் இருக்கு! மூக்கு மாங்காய்.... அடுத்த வாரம் தான் வரும்'' எனத் துணைக்கு வந்தார். (பாவம்டா மாட்ட், நீ! அந்தக் கடைக் காரருக்குக் கூட உன்னோட கஷ்டம் புரியது பாரேன்!)

''ப்ச்'' என உதட்டுச் சுளிப்புடன், காய்கனிகளை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தவர்கள், அடுத்ததாய் சமையலில் ஆழ்ந்தனர்.

அரை மணி நேரத்திற்கும் மேல் பம்பரமாய் சுழன்றவளின் நெற்றியில் அரும்பிய வியர்வையை வாஞ்சை

யாய் துடைத்துவிட்ட மாத்தூ, ''ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே, பேபி!'' என்றான் அக்கறையுடன்.

''ம்ம். சோர்வாத்தான் இருக்கு. ஆனாலும்... இது இன்னைக்குச் சாப்பிடணும்'' எனத் தீர்மானமாய் அதைச் செய்து முடித்தவள், உண்ண அமர்ந்தபோதும், அவளுக்கிருந்த நிம்மதியை விட மாத்தூவின் நிம்மதி பலமடங்காய் இருந்தது! பல தினங்களுக்குப் பின்னர், உணவைச் சுளித்த முகத்தோடு பாராமல், ஆசையுடன் பார்க்கிறாளே என்று சந்தோஷமாய் இருந்தது, அந்த அன்புக் கணவனுக்கு!

மனைவியின் கைப் பக்குவத்தில் தயார் செய்யப்பட்ட உணவை உண்ணுகையில் மாத்தூவின் சந்தோசம் பெருகவே செய்தது! (நம்ம செய்றது ஒண்ணும் இந்தளவு மோசமில்லைன்னு தானே?)

எல்லா காய்களும் புளிச்சாறில் பக்குவாய் வெந்திருக்க, காரசாரமாய் இருந்த மண்டியை ருசித்தவனின் சந்தோசம் பெருகி ''நல்லா இருக்கு.. மானி'' என்ற சொல் அவனது வாயிலிருந்து வரும்போது, வாயைப் பொத்திக் கொண்டு எழுந்த மனோன்மணி, குளியலறை நோக்கி ஓடினாள். (ஹய்யோ, மாட்ட்! கொஞ்சம் பொறுத்துச் சாப்பிட்டிருக்கலாமே!)

பதறிக் கொண்டு பின்னே ஓடிய மாத்தூவால், வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வாந்தி செய்த மனோவின் தலையைத் தாங்கிப் பிடிக்கத்தான் முடிந்ததே ஒழிய, அவளது உடல்நிலையைத் தேற்ற முடியவில்லை.

''உனக்குப் பிடித்த உணவு தானே, மானி! ப்ச்.. அதையும் வாந்தி செய்துவிட்டாயே!'' என வருத்தம்



தோன்றவரே, அவளது முகத்தில் நீர் அடித்து, முகம் சுழுவி விட்டான் அவன்.

''அது... அது... எங்கம்மா செய்ற மாதிரியே வரல, மாட்ட்! எங்கம்மா செய்றதில் வேற ஒரு டேஸ்ட் வரும்'' என்றவளின் முகம் சோர்வை விட வருத்தத்தை அதிகமாய் பூசிக்கொண்டது! (லக்கனை பிடிச்ச நாக்கு!)

''சரி பரவாயில்லை. இந்த பாலை மட்டும் குடித்து விட்டுப் படுத்துக்கொள்'' என்றவன், அப்போது தன் செல்பேசக் கேட்டுப் படுத்துவிட்டாலும், நடு இரவில் விழித்துக் கொண்டு, தன் தாயைத் தேடப் போகிறாள் என்பதை உணரவில்லை.

தன் நெஞ்சில் தலைவைத்துப் படுத்திருந்த மனோவின் ஸ்பரிசத்தை, நடு இரவில் உணராத மாட்ட், பதைப்புடன் எழுந்து வந்து பார்த்தபோது, மற்றோர் அறையில் தன் தாயின் சேலையை விரித்து, அதில் ஆண்டாளின் படத்தை வைத்து, ஆண்டாளின் மடியில் படுத்திருப்பது போன்ற பாவனையுடன் அங்கே சுருண்டிருந்தாள் மனோ!

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்கு அப்பறை கொண்ட ஆற்றை அணிப்புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்!!

எனத் திருப்பாவையின் கடைசிப் பாசுரத்தை உதடுகள் மெல்ல மெல்ல முணுமுணுத்தது.

"பெருமாளே! ரெங்கமன்னரே! சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் கோதை நாச்சியாரின் திருப்பாவையைத் தினமும் படிக்கிறேன்... அதைப் படித்து உன் அடிகளையும் என்னோட துயரைப் போக்கிடு! தயவு செய்து, எங்கம்மாவோட கோபத்தைப் போக்கிடு! எனக்கு அவங்க வேணும்! தாயாகப் போற இந்த நேரத்தில நான், நான் செஞ்சிட்டு வந்த தப்பு ரொம்பப் பெருசாப் படுது. இன்னும் கையில பார்க்காத என் குழந்தை மேல எனக்கிருக்க பாசத்தை விடவும் இருபத்திரண்டு வருஷம் என்னைத் தாங்கித் தடுக்குப் போட்ட அம்மாவுக்கு எவ்வளவு இருக்கும்? மண்டையில் ஓங்கி அடிச்சமாதிரி, எனக்கு இப்போ உரைக்குது! எல்லா விஷயத்திலும் அவங்களோட அருகாமையை நான் எதிர்பார்க்க ஆரம்பிச்சுட்டேன். ப்ளீஸ்..ப்ளீஸ்.. என்னை அவங்களோட சேர்த்து வச்சுடு!" என மனம் உருகி, கோதையிடம் கோதையைக் கொண்டவனிடமும் கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தாள் மனோன்மணி.

அவளது கோரிக்கை கோதையைக் கொண்டவனின் காதுகளில் விழுந்த அதே சமயம், மனோன்மணியைக் கொண்டவனின் காதுகளிலும் அது விழுந்தது! தமிழில் சொல்லப்பட்ட அந்தப் பிரார்த்தனை புரியாவிட்டாலும், "அம்மா" என்ற வார்த்தை, மனைவியின் ஏக்கத்தைப் புரியவைக்க, மெல்ல அவளருகே தரையில் அமர்ந்து, முடியைக் கோதிவிட்டான்.

"மாட்ட்" எனப் பாய்ந்து அவனது மடிக்கு வந்தவள், "தூக்கமே வரமாட்டேங்குது, மாட்ட்! மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு!" என்றாள் வருத்ததுடன்.



"நம்ம குழந்தையை சுமக்கும் இந்த நேரத்தில, வருத்தமே கூடாது மானி! உன் மனசும், உடம்பும் ரொம்ப நல்ல மனநிலையில் இருக்கணும். இல்லைன்னா குழந்தைக்கு நிறைய பிரச்சனைகள் வரலாம். அந்தக் குழந்தை நம்மளோட பிரின்சஸ்/பிரின்ஸ் இல்லையா? அதைக் கவனமா பார்த்துக்க வேண்டாமா?" எனச் சிறுப் பிள்ளைக்குச் சொல்வது போல், பொறுமையாக வெளி வந்த மாத்யூவின் வார்த்தைகளுக்கு உரிய மதிப்பு கிடைத்தது!

அவனது வார்த்தைகளிலிருந்த உண்மையை மதித்து, மெல்ல எழுந்தவள், ஆண்டாளின் படத்தை எடுத்து, மீண்டும் கண்ணில் ஒத்திக் கொண்டு, அலமாரியில் வைக்கப் போனாள்.

அப்போது "ஷி இஸ் லுக்கிங் கார்ஜியஸ்" என்ற விமர்சனத்தை மாத்யூவின் உதடுகள் உதிர்க்கவும், மனோவின் கைகள் மாத்யூவின் முதுகில் ஓங்கி ஓர் அடியை வைத்து எழுந்தது! (என்னே உந்தன் பதி பக்தி!)

"ஹோ! வலிக்குது பேபி!" என அவன் கைகளைப் பின்னே கொண்டு செல்ல, "கோதை என்பவள் கடவுள்! அவளைப்போய்.. லூசு லூசு... சாரி கேட்டு, அவளோட பாதத்தைத் தொட்டுக் கும்பிடு" என்றாள் மனோன்மணி எரிச்சலுடன். இந்த வாக்கியத்தை ஆங்கிலத்தில் அல்லாது தமிழில் மனோன்மணி சொல்லியதால், மீண்டும் ஓர் திரு திரு முக பாவனையைக் கொண்டு வந்தான் மாத்யூ. (இனிமேல் அவளைத் திட்டணும்ன்னா சுவிஸ்-ல திட்டுடா, மாட்ட்! ரொம்பத் தான் பண்றா!)

"என்ன முழிச்சிட்டு இருக்கே? தொட்டுக் கும்பிடு" என ஆங்கிலத்தில் கட்டளையிட்ட மனோன்மணி,

அவன் கைகளைக் கொண்டு வந்ததும் "இன்னைக்கு அசைவம் சாப்பிட்டியா?" என்றாள் அவன் கையைத் தடுத்தவாறே.

அவன் யோசித்து முடிக்கும் முன்னரே தான் யோசித்து முடித்து, "இன்னைக்கு நான் உனக்கு அசைவம் எதுவும் கொடுத்துவிடலை! ம்ம்ம்... நீயா எங்கேயும் சாப்பிட்டியா?" என அடுத்தொரு கேள்வியை வீசினாள். (இன்னைக்குக் காலையில நாலு கேக்கை சைக்கிள் கேப்-ல உள்ள தள்ளினியே, அதில முட்டையே இல்லையாம்மா?)

ஆடு திருடிய கள்ளன் போல் விழித்துக் கொண்டிருந்த மாத்யூ, மண்டையை இடம் வலமாக ஆட்டவும் "ம்ம்ம் அப்போ தொடு!" என அவனை ஏவி, வேலையை நிறைவு செய்துகொண்டாள், அந்த ஆண்டாள் பக்தை.

மனைவியின் ஏவலில் அவளது இயல்பு நிலைத் திரும்பிவிட்டதோ என்றெண்ணிய மாத்யூ "தூங்கலாமா?" எனக் கேட்க,

"ம்ம்...தூங்கலாம்!" என அவனுடன் வந்தவள், "அம்மாகிட்ட ஒரு தடவை பேசிப் பார்க்கலாமா?" எனக் கேட்டு, வீட்டு எண்ணைத் தொலைபேசியில் அழுத்தியும் விட்டாள்.

இந்த முறையும், மனோவின் தந்தையே அழைப்பை எடுக்க, "அம்மாகிட்ட பேசணும்! அம்மாகிட்ட கொடுங்க!" என்பதையே மாற்றி மாற்றிப் படித்தாள், மனோ.

அவளைச் சமாளிக்க முடியாமல், "உங்கம்மாகிட்ட விஷயம் சொல்லியாச்சும்மா. ஆனா, அவளுக்கு உன் மேலிருக்க கோபம் போகலை. கொஞ்ச நாள் போகட்டும்..." என்று ஒரு வழியாய் முடித்தே விட்டார்,



மனோவைப் பெற்றவர். (என்னங்க சார் நீங்க? இத்தனை வருஷமா குடித்தனம் பண்ணி, இதைக்கூட சாதிக்க முடியலையா? இது தெரியாம, நான் பாட்டுக்கு மாட்டைத் திட்டிட்டுத் திரியுறேன்!)

அந்த அழைப்பிற்குப் பின்னர், மனோவிடம் ஓர் நிலையற்ற அமைதி நிலவுவதை, அவளைப் பற்றி முற்று முதலாய் அறிந்த கணவன், கண்டு கொண்டான்! நாட்கள் செல்லச் செல்ல, எந்தவொரு விஷயம் என்றாலும் மனோவின் மனம் தாயுடன் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தது! அதைப் பல சமயங்களில் உள்ளேயே வைத்திருந்தவள், சில சமயங்களில் மனதின் ஆற்றாமை தாங்காமல் வெளியவும் சொன்னாள்! இதனிடையே, "ஆஸ்திரேலியாவில் நடக்கும் கருத்தரங்கிற்கு நான் செல்ல வேண்டியிருப்பதால், பத்து நாட்களுக்குத் தனியாக இருந்து கொள்வாயா?" என்ற கேள்வியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான் மாத்யூஸ்.

"பத்து நாளா? ஆஸ்திரேலியாவா? தனியாகவா? நானா?" என வாயைப் பிளந்த மனோன்மணி, "போகவே கூடாது" எனத் தலையால் தண்ணீர் குடித்தாள்! (உன்னோட பேர் என்ன? கேள்விக் கோசலையா?)

கெஞ்சல், கொஞ்சல் என்ற தனது வழக்கமான காம்பானங்களைப் பிரயோகித்த மாத்யூஸ், முடிவில் "என்னோட ஆராய்ச்சியின் முடிவு இந்த கருத்தரங்கில் அலசப்படப் போகிறது! அதனால், நான் போயே ஆக வேண்டும்! வேறு வழியே இல்லை! தயவு செய்து என்னைப் புரிந்துகொள்!" என அழுத்தமான குரலில் கூறியவன், அப்போதும் மனோவின் முகத்தில் சிறிதாய் மறுப்புத் தெரியவே "உன்னோட சிறுப் பிள்ளைத்தனத்திற்கு ஒரு அளவே இல்லாமல் போய்விட்டது!

உனக்கென்று ஒரு பிள்ளை வரும் இந்த வேளை யிலாவது, கொஞ்சம் வளர்ந்தால் என்ன?'' எனக் கடு கடுப்பாய் சொல்லி, மனோவின் சிறுபிள்ளைக் கோபப் பார்வையைப் பெரிய மனுஷியின் அடிபட்டப் பார்வை யாய் மாற்றிப் போட்டான்! (என்ன ஒரு மாற்றம்? தேறிட்டேடா, மச்சான்!)

அவன், ஆஸ்திரேலியா செல்லும் நாள் நெருங்க நெருங்க, தன் கோபத்தையெல்லாம் கைவிட்டு, அவனுடன் ஒட்டி ஒட்டி அமர்ந்து கொள்வதும், அவ னுடனே ஈஷிக் கொண்டு அலைவதும், மாலையில் வீட் டிற்கு வருபவனை உடை கூட மாற்றவிடாமல் அவனது மடி தேடித் பாய்ந்த குட்டியாய் ஒட்டி உறவாடினாள், மனோன்மணி!

''பேபி! பேபி!'' என தன் பேபியைச் சுமக்கும் பேபியைப் பேணித் தான் பூரித்துப் போனான், அந்தக் கணவனும்! (யு நோ திருந்துஃபை!)

ஆஸ்திரேலியா செல்வதற்காக விமானநிலையம் கிளம்பும் போது, விமான நிலையத்திற்கு உடன் வருகிறேன் என்ற மனோன்மணியை அவசரமாய் தடுத்த மாத்யூவைச் சந்தேகமாய் பார்த்த மனைவியிடம் ''போகும் போது காரை நான் ஓட்டிக் கொண்டு வருவேன், வரும் போது, நீ எப்படி ஓட்டுவாய்? உனக்குத் தான் ஓட்டத் தெரியாதே?'' எனக் காரணம் கூறி, மழுப்பப் பார்த்தான்!

ஆனால், மசக்கையிலும் மசியாது வேலை செய்த மனோவின் சாம்பல் பொருள் ''காரில்தான் போக ணும்னு என்ன இருக்கு? டாக்ஸில போகலாம்! வரும் போது, நான் வேற ஒரு டாக்ஸில வந்துடுறேன்'' என்றாள் ஓர் அறிஞரின் அறிவுக் குரலில். (செல்லக்



குட்டி. வேண்டாத நேரத்தில எல்லாம் உன்னோட மூளை ஓவர் டைம் வேலை பாக்குமே?)

''நோ! நோ பேபி!'' எனத் தலையில் கை வைத்த மாத்யூ தனது சாம்பல் பொருளின் அடர்த்தி அவளதை விட அதிகம் என்பது போல ''இந்த நிலைமையில் ட்ரா வல் செய்வது அவ்வளவு உசிதமில்லை, பேபி! ப்ளீஸ், நான் சொல்வதைக் கேள்'' என்றான் மன்றாடும் குரலில்.

அவளது குரல் ஏதோ செய்ய, அதைவிடவும் மேலாய் அவன் சொல்வதைக் கேட்போமே என்ற உந்துதல் எங்கிருந்தோ வந்துவிட, ''சரி'' என மண்டையாட்டிய அவளது மனோன்மணியின் மூக்கைப் பிடித்து ஆட்டிய அவளது மணவாளன் ''உனக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து என்ன வேணும்?'' என்றான் ஆசையாக.

அவனை இறுக அணைத்து, நெஞ்சில் முகம் புதைத்து ''நீங்க தான்!'' என்று காதல் வசனம் போது. ''ம்ம். ரெண்டு கங்காரு வாங்கிட்டு வரியா? இங்க வச்சு மேய்க் கலாம்!'' எனப் பழிப்புக் காட்டினாள், மாத்யூவின் சரிபாதி. (அது தான் உன்னை மேய்க்கிறானே? இன்னும் கொஞ்ச நாளில் உன் பிள்ளையை வேற மேய்க்கப் போறான்? அது பத்தாது?)

பிடித்திருந்த மூக்கை நன்றாக திருகிவிட்டுக் கிளம் பிய மாத்யூவின் நினைவாகவே இரண்டு நாட்களைக் கடத்திய, மனோன்மணியின் சிந்தனைகளைத் திசை மாற்றவென, ஓர் நல்ல நாளின் மாலைப் பொழுதில் ஜீன், அவர்கள் வீட்டு வாசல் மணியை அடித்துவிட்டுக் காத்திருந்தாள்! (ஆத்மா மகராசி! கொஞ்ச நாளா.. பிக்ச்சர்குள்ள வராம இருந்தியேன்னு சந்தோஷப்பட் டேன்! திரும்பவுமா? என்னால முடியலைடி, ராஜாத்தி!?)

# 21

மாத்யூ ஆஸ்திரேலியாவில் நடக்கும் கருத்தரங்கிற்குக் கிளம்பிச் சென்று இரண்டு நாட்கள் ஆகியிருந்த நிலையில், குட்டிப் போட்டப் பூனையாய் வீட்டையே சுற்றி வந்து கொண்டிருந்தாள் மனோன்மணி. (குட்டிப் போட்டப் பூனையில்லை, குட்டிப் போடப்போற புலி!)

வேலையிடத்தில் அவள் மயங்கி விழுந்த நாள் தொட்டு, ''நீ வேலைக்குப் போக வேண்டாம், பேபி! அடிக்கடி மயக்கமும் வாந்தியும் வரும் இந்த நிலையில், உன்னை வேலைக்கு அனுப்பிவிட்டு என்னால் நிம்மதியாக இருக்க முடியாது'' என்று அக்கறையில் தொடங்கி, ''வீட்டில ஒரு வேலையும் பார்க்காமலே உனக்கு மயக்கம் வந்துடுது. இதில, வேலைக்குப் போனால், கண்டிப்பாக மயங்கி விழுந்துவிடுவாய்'' என்ற உண்மையில் முடித்தான், அவளது கணவன். (உண்மை பேசியும் உன்னைய உயிரோட விட்டுட்டாளா? என்னை கொடுமைடா மாட்ட், இது?)

அவளது கடைசி வரியில் லேசாய் ரோஷம் துளிர்த்தாலும், மனோவாலும் கணினியின் முன்னே அமர்ந்து, தன் மொத்தக் கவனத்தையும் அதில் செலுத்தப் பயமாக இருந்தது! அன்று, மண்டியின் செய்முறைக்காக கணினியின் முன்னே பத்து நிமிடம் உட்கார்ந்ததற்கே, கண்ணில் பூச்சிப் பறக்கத் தொடங்கிவிட்டது என்பதால் வேலையிலிருந்து விலகியிருந்தாள், மனோன்மணி. (உன்



னோட கண் அளவுக்கு என்றால்.... கண்டிப்பாக சப்பான் பூச்சியாகத்தான் இருக்கமுடியும்!)

அலுவலக வேலையும் இல்லாமல், கணவனைப் படுத்தும் வேலையும் இல்லாமல் விச்ராந்தியாக இருந்த மனோவிற்கு, அவளது வயிற்றில் துள்ளிக் கொண்டிருந்த மகவு துணையாக, கோதை நாச்சியார் தோள் சாயும் தூண் ஆனார். (வெட்டி ஆபீசர்!!!)

துணையுடன் தூணில் தலை சாய்ந்த மனோவின் ''அம்மாவின் வயிற்கான'' வேண்டுதல்களில் சில மாற்றங்கள் உட்புகுந்தன. அந்த மாற்றங்களுக்கான காரணம்- மனோவின் சிந்தனைகள்! (சிந்தனை... ம்ம்ம்... மனோ நீயா? நமக்குச் சம்மந்தமில்லாததை எதுக்கு செய்றே?)

எப்போதும் போல், தாயின் சேலையை விரித்து, அதன் மீது கோதையின் படத்தை வைத்துத் தலை சாய்ந்திருந்தவளுக்கு, பக்தியிலும் பாசத்திலுமாய் பாசுரங்கள் திக்கின. மனப்பாடமாய் தெரிந்த பாசுரங்கள் என்பதாலும் எதையும் வேகவேகமாய் செய்யும் மனநிலை கொண்டவள் என்பதாலும், இருபது நிமிடங்களில் முழு பாசுரத்தையும் பாடி முடித்துவிடும் மனோன்மணி, உடம்பின் சோர்வு காரணமாகவோ அல்லது மனதின் தேடல் காரணமாகவோ ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, ஒவ்வோர் வரியையும் அனுபவித்து, அர்த்தம் புரிந்து, ஆயர் குலப் பெண்டிருள் ஒருவராய் மாறி, மணிவண்ணனைத் துயில் எழுப்பினாள், மனோ!

(பாவம், அவராவது நிம்மதியா தூங்கட்டுமே? மாத்யூவின் தூக்கத்தைப் பறித்தது பத்தாது என்று அவரையும் எதுக்குப் படுத்துறே?)

ஆயர்குலக் கண்ணன், தன் துயிலைக் கலைத்ததோடு நில்லாமல், தன் பக்தியின் மனதிலிருந்த சலனமேனும் தூசியையும் களையென களைந்தெறிந்தான்! (ஆனா, பாரேன்! நீ என்ன தான் கொடுமை செஞ்சாலும், மாத்பூ மாதிரியே அவர் உனக்கு நல்லது செய்றார்! தெய்வ குணம்...தெய்வ குணம் தான்!)

என்ன சலனம்? என்ன தூசி? என்றால் ''தாய் - தந்தையை மீறி மாத்பூவை மணம் புரிந்து கொண்டது தவறோ?'' என்ற சலனம்! (எம்புட்டு நாளைக்கு அப்புறம்?)

தாயின் அருகாமைக்காக ஏங்கித் தவிக்கும் தான், எப்படி மாத்பூவை மணந்தோம்? அவனது காதல் தன்னை மிகவும் பாதித்தது மட்டும் தான் காரணமா? அல்லது, வயதின் தாக்கமா? என உழன்ற மனோவின் மனதைத், தன் அருள்பார்வையால் சரி படுத்தினான், மாயன் மணிவண்ணன்!

மாத்பூவைத் தான் மணந்து கொண்டதில், மாத்பூ உட்பட அனைவருக்குமே பிரச்னை என்ற ரீதியில் சிந்தித்துக் கொண்டிருந்தவளை, மாத்பூவிற்கும் தனக்கும் நடந்த திருமணம் சொர்க்கத்தில் முடிவு செய்யப் பட்டத் திருமணம் என்ற நிலைக்குத் தள்ளிக் கொண்டு வந்தான், உலகாளும் உத்தமனான ஊரகப் பெருமாள்!

இப்போது தாயைப் பிரிந்து இருப்பதால், அவரைத் தேடும் தன் மனது- மாத்பூவின் காதலை ஏற்காது, வேறொருவரை மணந்திருந்தால் அவனையும் தேடும் அல்லவா? வேறொருவர் மனைவி என்றாகிவிட்ட நிலையில் மாத்பூவை எண்ணி ஏங்குவது என்பது எவ்வளவு இழிவான செயல்!? அச்செயலுக்கு, கல்யாணத்திற்கு முன்னரும் பின்னரும்,. என் சாகும் வரையிலும் கூட



தன் தாயாகவே இருக்கும் அன்னையை எண்ணி ஏங்குவதில் ஓர் நியாயமிருப்பதை, மனோன்மணிக்கு எடுத்துரைத்தான், தன் நெஞ்சில் தாயாரைச் சுமந்திருக்கும் லக்ஷ்மி நரசிம்மன்!

தாய்க்குப் பிடிக்கவில்லை என்பதற்காக, மாத்பூவை மறுப்பது என்பது அவளுக்கு இயலாத ஒரு காரியம் என்பதை அவளது எண்ணங்களின் ஓட்டத்தினாலேயே உறுதிப் படுத்தினான், சூடிக் கொடுத்த சுடர்கொடியைத் தானே சூடிக் கொண்ட ரங்கராஜப் பெருமான்!

தனிமையில் தவித்திருந்த மனோன்மணிக்கு, மாத்பூவைச் சந்தித்த முதல் தருணத்தில் தான் கேட்ட உதவியில் தொடங்கி அவன் காதலைச் சொன்ன போது உண்டான வெட்கம் வரை ஓர் படமாக விரிய, அவன் காதலைக் கூறிய போது கோபத்திற்குப் பதிலாக வெட்கத்தைப் பூசிக் கொண்ட தன் மனதின் காதல் இனிமையாய் உறைத்தது!

தன் மனதிலிருந்த ஆசையின் விளைவாக அவனது காதலைச் சட்டென ஏற்றுக் கொண்ட தான், தாய் - தந்தை, ஜாதி - மதம், வெவ்வேறு நாடுகள் என்ற சிந்தனைகளின் பாதிப்பினால் அதை மறுத்ததும், அந்த மறுப்பை இருவாரங்கள் கூட தன்னால் தக்கவைத்துக் கொள்ள இயலவில்லை என்பதும் அவளது காதலுக்குச் சான்றுகளாக, மாத்பூ இல்லாத ஓர் வாழ்வை வாழ்வது சாத்தியப்படாத காரியம் என்பது புரிய, தங்களது திருமணத்தை எண்ணிச் சலனப்பட்டுக் கொண்டிருந்தவள், மெல்ல மெல்ல தெளிந்தாள்!

கடவுள்களுக்கும் பக்தைக்குமான அந்த தெய்வீக காதலை உணரச்செய்து, மனோவின் காதலிலும்

தப்பில்லை என்பதை உணர வைத்தவள், காதலின் விளைவால் பாசத்தை இழந்து நிற்கும் மனோவிற்கு தைரியமும், உற்சாகமும் அளிக்க முற்பட, அவளும் தெளிந்த மனதுடனே அதை ஏற்றாள்.

இந்த திருமணம் இரு நல்ல உள்ளங்களை இணைத்தது போல், சில உறவுகளைப் பிரித்தாலும் சீக்கிரமே சேர்த்துவிடும் என்ற நம்பிக்கை என்றுமில்லாமல் இன்றைக்கு அவள் மனதினுள் புகுந்தது!

கணவனின் காதலைத் தான் உணர்ந்தது போல், தங்கள் இருவருக்குமான காதலைத் தன் தந்தை உணர்ந்தது போல், தன் தாயும் தங்களை விரைவிலேயே ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை நெஞ்சில் வேர்விட்டது!

மாத்பூ இருக்கும் வரை, அவன் மடியை விட்டு இறங்காமல் சின்னப்பிள்ளையாய் சீராடிக் கொண்டிருந்தவளுக்கு, அவனது தற்காலிக பிரிவு பல நல்ல உண்மைகளை உணர வைத்தது!

அந்த நல்ல எண்ணங்களின் விளைவாக, மாத்பூவின் கவனிப்பு தனக்கில்லாது ஜீனிற்கு சென்று விடுமோ என்ற தனக்கெழுந்த சந்தேகமும் பதற்றமும் கூட காதலின் விளைவாக பட, தாயின் வரவிற்காக மாத்பூவைப் படுத்திய பாடுகளை எண்ணிப் புன்னகை கூட பூத்தாள். மாட்ட்-டின் மானி! (நீ என் பூக்க மாட்டே? அவன் தானே, உன்னோட படுத்தலைத் தாங்கி வேர்வை முத்துக்களைப் பூக்கிறான்... அவனுக்குப் போட்டியா நீயும்.. பூத்துக் குலுங்கு!)

''என் செல்ல புஜ்ஜு! நா என்ன அழுச்சாட்டியம் பண்ணினாலும் என்னைக் கொஞ்சிட்டே இருப்பான்... சமத்து! ஐ லவ் யு, மசா..! ஐ லவ் யு...சோ மச்!'' என்று



வெளிப்படையாகவே நடந்தேறிய மனோவின் கொஞ்சலுக்கு எதிரொலியாய், வீட்டின் அழைப்புமணியும் கூவ, விரிந்த புன்னகையுடன் கதவைத் திறந்தவள், அங்கே ஜீனைக் காணவும் ஒரு நிமிடம் உறைந்து போனாள்.

உடனேயே, ஜீனையும் கணவனையும் இணைத்துத் தான் பேசிய வார்த்தைகளும், அதனால் கணவன் தன் மீது கொண்ட கோபத்தையும், ''என் மீது நம்பிக்கையில்லையா?'' என்ற அவனது வேதனைக் குரலும், நாட்கணக்கில் அவன் காட்டிய ஒதுக்கமும், தான் கருவுற்று இருக்கிறேன் என்ற நல்ல செய்தி கேட்டதும் கெட்டது அனைத்தையும் அவன் மறந்ததும், கண்ணின் மணியாய் தன்னைத் தாங்கியதும் மின்னல் வேகத்தில் மனதிற்குள் ஓடி மறைய, ஜீனைப் புன்னகையுடனே எதிர்கொண்டாள், மனோன்மணி! (இவ்வளவும் ஒரே வினாடியிலா? நீ என்ன எந்திரன் ரோபோவா?)

அதன் தொடர்ச்சியாய் ''ஹாய்! உள்ளே வாங்க'' என்ற வார்த்தைகள் உற்சாகமாகவே வெளிவந்தன. (பரவாயில்லையே! நல்ல பெண் ஆகிட்டியே!)

தொடர்ந்த அரை மணி நேரமும், ஜீனின் உடல் நிலைப் பற்றிய விசாரிப்புகள் நடந்தேறியபோதும், விட்டரசியாய் ஜீனை உபசரிக்கவும் மறந்தாளில்லை. மனோ!

மனோ கொடுத்த கேசரியை ''இது என்ன ஸ்வீட்? ரொம்ப நல்லா இருக்கு!'' எனச் சப்புக் கொட்டி உண்ட ஜீன், ''மாட்ட் சொல்வது போல், நீ அருமையான குக்!'' என்றான் மனதார. (அது மூணு நாளுக்கு முன்னாடி, எலியைக் கொல்றதுக்காக செஞ்சதாம்!)

'வேலையிடம் வரை தன் புகழ் பாடியிருக்கிறானே?! என் செல்ல...புஜ்ஜி"... டார்லிங்.. சமத்து.. வைரக் கட்டி...' என உள்ளுக்குள் கணவனைக் கொஞ்சிக் கொண்ட மனோன்மணி, வெளியே ஓர் விரிந்த சிரிப்பை உதிர்த்தாள்.

வீட்டு உத்திரத்தில் பறந்து கொண்டிருந்த மனோன் மணியை, வானில் பறக்க வைப்பது போல், ஓர் சிறு பரிசுப் பொருளை எடுத்து நீட்டிய ஜீன் ''இது உனது தாய்மைக்கான... எனது பரிசு!'' என்றுவிட்டு,

''மாட்ட் இருக்கும் போதே வர வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், என் உடல் பிரமாதமாய் தேறி விடவில்லை. அதனால் தான் தாமதம்'' என்றாள் விளக்கம் போல்.

நன்றி நவிலலோடு பரிசை வாங்கிக் கொண்ட மனோன் மணி, ''உங்களுக்கு எப்படித் தெரியும்? மாட்ட் சொன்னாரா?'' என்றாள் மென் குரலில். (அவன் சொல்லாம? வயித்துக்குள்ள இருக்க உன் பையனா சொல்லுவான்?)

''ம்ம்'' என மௌனமாய் தலையசைத்த ஜீன், தலையை உலுக்கிக் கொண்டு, இன்னுமொரு உறையை எடுத்து நீட்டி ''இதைக் கொடுத்துவிட்டு... உன் தாய்மை விஷயம் சொன்னான்'' என்றாள்.

அவற்றை வாங்காமலே, அவை- ஜீன், தன் கணவ னுக்குக் கொடுத்த காதல் கடிதங்கள் என்பதை ஊகித்து விட்ட மனோன்மணியின் முகம், மெல்ல சுருங்கியது.

ஆனால், ஜீனோ தொடர்ந்து பேசினாள்! ''இதெல் லாம் என்ன தெரியுமா? நான் மாத்யூவிற்குக் கொடுத்தக் காதல் கடிதங்கள்!'' என மனோவிற்குத் தெரியாத ஒரு



விஷயத்தைக் கூறும் பாவனையில் பேசியவள் (அதான் அவளுக்குத் தெரியுமே? அது ஒரு திருட்டுப் பூனை)

''நான் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் சென்ற தும், மாத்யூ ஒரு நாள் வீட்டிற்கு வந்தான். இதையெல் லாம் என்னிடம் கொடுத்துவிட்டு, ''மானிக்கு... நீ என் மீது கொண்டிருக்கும் காதல் பிடிக்கவில்லை. அதன் அடையாளமாய் என்னிடமிருக்கும் இந்தப் பொருட்கள் அவளது மன அமைதியைக் குலைக்கும். எனக்குமே, அவள் கருவுற்றிருக்கும் இந்த நிலையில் அவளை அலைக்கழிக்க விருப்பமில்லை. அதனால், இவற்றை நீ எடுத்துக் கொள்!'' என்று கூறி, என்னிடம் இவற்றைக் கொடுத்துவிட்டான்.''

''உனக்குப் பிடிக்கவில்லை என்றால், கிழித்துப் போட வேண்டியது தானே என நான் சீறியபோது ''இவற்றை என்னால் கிழித்துப் போட்டிருக்க முடியும்... ஆனால், நான் உன்னை தோழி என்ற முறையில் மதிக்கிறேன்... உன்னிடமிருந்து வந்த பொருளைக் கிழித்துப் போட்டு, நம் நட்பிற்குக் களங்கம் விளைவிக்க விரும்பவில்லை'' என்றுவிட்டான். அதற்கு மேல், என்னால் மாத்யூ உன் மீது வைத்திருக்கும் காதலையும், என் மீது வைத் திருக்கும் நட்பையும் மதிக்காமல் இருக்க முடியவில்லை.''

''அது மட்டுமில்லாமல், எனக்கென்று ஒரு துணை வந்த பிறகு, உன் துணையைப் பறிப்பது போல் நான் நடந்துகொண்டது சரியாகப் படவில்லை....'' என்று கூறி, மிக நீளமாய் ஓர் இடைவெளி விட்டவாறு நிறுத்தி னாள்.

பின்னர், ''உன் தாய்மைக்கு நான் கொடுக்கக் கூடிய பெரிய பரிசு.. இதுவாகத்தான் இருக்கமுடியும் என்று

தோனுச்சு. அதான், வந்தேன்!'' எனத் தன் பக்கப் பேச்சு வார்த்தைக்கு முற்றுப் புள்ளி வைத்தவளுக்குத், தன்னையே இமைக்காமல் பார்த்திருந்த மனோவைக் கண்டதும் லேசாய் திகைப்பு வந்தது! (மாட்ட்! எங் கேயோ போய்ட்டடா மச்சான்!)

''மானி..'' என அவள் மெல்ல அழைக்க, ''ஜோன்..'' எனத் திரும்பிய மனோன்மணி, ''தேங்க்ஸ்.. தேங்க்ஸ்.. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்!'' எனக் கூறி, அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

மனோன்மணியின் இறுகிய அணைப்பில் வாய் விட்டுச் சிரித்த ஜீன், ''நான் மாத்யூ இல்லை!! ஜீன்!!'' என்றாள் குறும்பாக. (அடப் போம்மா, நீ வேற! மாத்யூவா இருந்தா, இந்நேரத்திற்கு அவளைத் தூக்கிச் சுற்றியிருப்பான்!)

''சில நாட்களாக, நீ மிகவும் சோர்ந்திருப்பதாய் ரொம்பவே வருத்தப்பட்டான்! இனிமேலாவது, எந்தக் கவலையுமில்லாமல் சந்தோஷமாக இரு!'' என வாழ்த்தியவள்,

''குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், எந்த விதமான சலனமும் வேண்டாம்.. என்ன சரியா? உன் கணவனின் காதல் உனக்கே உனக்கு மட்டும் தான் என்ற சந்தோஷத்துடன், உனது பிள் ளையைப் பெற்றெடு! உன்னையும், உன் குழந்தையை யும் தனது உயிர் போல பார்த்துக் கொள்வான், மாட்ட்!'' எனத் தன் நண்பனின் புகழையும் பாடிவிட்டே கிளம்ப ஆயத்தமானாள்.

இரவு உணவிற்கு இருந்துவிட்டுப் போகலாம் என மனோ வற்புறுத்தியதற்குத் தன் காதலனுடன்



டின்னருக்குச் செல்வதாய் கூறிச் சென்றவளிடம்,
''ஆமா, நீங்க ஏன் ஆஸ்திரேலியா போகலை? நீங்களும் மாத்யூவும் ஒன்றாக தானே வேலை பார்க்கிறீங்க?'' எனத் தன் சந்தேகத்தை ஒரு வழியாக கேட்டு முடித்தாள், மனோன்மணி! (ஒருவழியா, பல்பு எரிஞ்சுடுச்சா? எங்கடா, வாங்கின பல்பை ஒரு தடவை கூட எரிக்காம, ஃப்யூஸ் ஆக்கிடுவியோன்னு பயந்துட்டேன்)

ஒரு நிமிடம் திகைத்தது போலிருந்த ஜீனின் பார்வை, சட்டென இயல்பு நிலைக்கு வந்ததோடல்லாமல் ''நான் தான் ஆஸ்திரேலியா போக வேண்டியதாய் இருந்தது. ஆனால், நடந்த விபத்தின் காரணமாய் போக முடிய வில்லை. எனக்குப் பதிலாய் தான்.. மாட்ட் சென்றிருக் கிறான்'' என்றாள் கோர்வையாக.

''சரி சரி'' என மனோன்மணி ஒத்துக்கொண்டதுமே,

வேறு விஷயங்களுக்கு லாவகமாய் தாவியவள்,

முடிவில் ''உனக்கு வாந்தி-மயக்கம் அதிகமாய் இருப்பதாக, மாட்ட் சொன்னான். அதற்காக, இயற்கை மாத்திரைகள் சிலது வாங்கி வந்திருக்கிறேன். ரொம்பவும் முடியவில்லை என்றால் ஒன்று இரண்டு போட்டுக் கொள்'' எனச் சில அட்டைகளை நீட்டிய கையோடு தன் வேலை முடிந்தது என்றெண்ணாமல்,

''மாட்ட் ஊரில் இல்லாத சமயத்தில், உனக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், என்னைக் கூப்பிடு! மாட்ட்... உன்னைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிச் சென்றான்... நீ பேபியாம்.. உனக்கு என்ன தேவை என்றே உனக்குத் தெரியாதாம்.. அதனால் என்னை அடிக்கடி வந்து கவனித்துக் கொள்ளச் சொன்னான்....

என்னை கூப்பிடுகிறாயா?'' எனக் கன்னத்தில் தட்டி விட்டு, வெளியே சென்று மறைந்தாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த மனோவிற்கு, அவளது துணையோ... ஏன் அவன் கொடுத்த மாத்திரைகளின் துணையோ சுத்தமாக தேவைப்படவில்லை! அந்தளவிற்கு, உடம்பும் மனசும் லேசாகிப் போயிருந்தன! தனது உடல்நலத்தை மட்டு மல்லாது மனநலத்தையும் பேணிக் காக்கும் கண்ணாளனை கணவன் அமைந்ததில், தூசித் தும்பாய் ஒட்டிக் கொண்டிருந்த சலனமும் மாயமாய் மறைந்து போனது!

கணவனை உடனே காணவேண்டும் என்ற ஆவல் கட்டுக் கடங்காமல் பெருக, அவனை அழைக்கும் வழி தெரியாது, வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தாள்!

(வழி மேல விழி வச்சுட்டு, உன் கண்ணில் என்னத்தை வச்சிருக்கே? முதல்ல, போய் வழியிலிருந்து அதை எடுத்திட்டு வா, யாராவது மிதிச்சு அதுக்கு வலிக்கப் போவுது!)

தனக்கு அவன் மேலிருக்கும் உரிமையையும், தான் அவன் மேல் கொண்டிருந்த அளப்பரிய அன்பையும் புரிந்து கொண்டு, தன் சந்தேகத்தைத் தீர்க்கும் வண்ணம் கணவன் செயல்பட்டிருக்கிறான் என்பதே, தனது இப்போதைய சங்கடமான ''தாயின் ஏக்கத்தையும்'' அவன் சரி செய்வான் என்று ஏனோ மனோவிற்குத் தோன்றியது!

அவளது எண்ண அலைகளின் சக்தியினாலோ அல்லது மாத்யூ மனோவின் மீது கொண்ட காதலின் சக்தியினாலோ, பத்து நாட்களில் திரும்பி வர வேண்டிய மாத்யூ ஏழே நாட்களில் திரும்பி வந்ததோடல்லாமல், மனோன் மணியின் அம்மாவும் அப்பாவும் உடன் வந்து சேர்ந்தனர்! (கில்லாடிக்குக் கில்லாடி- மாத்யூ ஹாலிடே வாழ்க!)



அதிகாலை ஆறு மணிக்கு அடுத்த அழைப்பு மணிச் சத்தத்தை, அலாரத்தின் ஒலி எனக் கணித்து, வைக்காத அலாரத்தை அணைத்துவிட்டுத் திரும்பப் படுத்த மனோன்மணிக்கு, அது திரும்ப திரும்ப அடிக்கப்படவும் தான் விழிப்பே வந்தது!

கசங்கிய கண்களுடன் எழுந்து வந்தவள், கதவுத் துவாரத்தின் வழியாக வந்தவர்களைக் காண முயல, மாத்யூவின் உயர்ந்த உருவம் அந்தச் சிறு ஓட்டையை மறைத்தவாறு இருக்க, ''மாட்ட்! மாட்ட்!'' என்ற கூவ லுடன் கதவைத் திறந்தவள், கணவனின் கைகளுக்குள் புகுவதற்கு முன்னர் ''கல்யாணமாகி ஒரு பிள்ளையும் பிறக்கப் போகுது! இன்னும் சோம்பேறித் தனமா, காலையில் ஆறு மணி வரைக்கும் தூங்கிட்டு இருக்குப் பாருங்க...'' என அவளது தாயின் குரல் கேட்க, ஸ்தம்பித்து நின்றாள் மனோ!! (நல்லா கேளுங்கம்மா! கேட்கிறதுக்கு ஆளில்லாம, ஓவர் ஆட்டம் போடுது உங்க பொண்ணு! நல்லா... நாலு அடி வச்சுக் கேளுங்க!)

# 22

''ம்மா'' என வார்த்தை வராமல் திக்கிய மனோன் மணியின் கன்னம் வழித்துக் கொஞ்சிய ரத்தினவேலு, ''என் ராசாத்தி!'' என்றார் பாசத்துடன்.

அவரது அழைப்பில் அவரிடம் ஓடிய மனோவைக் கைப்பிடித்து நிறுத்திய பரமேஸ்வரி, ''வயுத்துக்குள்ள எம் பேரன் இருக்கானா இல்ல ரப்பர் பந்து எதுவும் உள்ள

இருக்கா? இந்தக் குதி குதிக்கிறவ? வீட்டுக்குள்ள போய்ப் பேசலாம் வா..." என்ற கண்டிப்புடன் உள்ளே அழைத்துச் சென்றார்.

"அப்பா, நீங்க எப்படிப்பா இங்க?" "மாட்ட் வந்து, உங்களை அழைச்சுட்டு வந்தானா?" "அம்மா எப்படி சமாதானம் ஆனாங்க?!" என ஆயிரத்தெட்டுக் கேள்விகளுடன் உள்ளே நுழைந்தவளுக்கு ஆச்சரியம் அடங்கிய பாடாய் இல்லை.

ரத்தினவேலுவின் பதில்கள் மகளை எட்டும் முன்னர் "மாப்பிள்ளையை என்ன அவன்.... இவன்னு சொல்லிட்டுத் திரியுறே? கேட்க ஆளில்லாம போனதில், கொழுப்புக் கூடிப் போச்சுப் போல.. இனியும் எங்க முன்னாடி அப்படிப் பேசக் கூடாது! மரியாதையா பேசிப் பழகு!" என அடுத்த அதட்டல் விரைந்து வந்தது! (இப்படியொரு ஆளைத் தான் ரொம்ப நாளா... எதிர்பார்த்திட்டு இருந்தேன்! வாங்க! வாங்க!)

"பல வருஷம் கழிச்சுப் பார்க்கிற புள்ளையைச் சும்மா மிரட்டாதே. பாமு! புள்ளத்தாச்சிப் பொண்ணு வேற.. அவ உடம்பை முதல்ல பாரு" எனத் தாயை அடக்கிய தந்தையைத் தொடர்ந்து வந்த மாத்யூவையே தொடர்ந்தது மனோவின் பார்வை.

அவளது கண்களில் காதலை உணர்ந்த கள்வனோ, கண்களைச் சிமிட்டிய கையுடன் உதட்டைக் குவித்து ஓர் முத்தத்தை மிதக்க விட்டான்! அதில் காதல் வழிந்த மனோவின் கன்னங்கள் சிவப்பேறி விட, மாத்யூவிற்கு அவளை அப்போதே அணைத்துக் கொள்ள வேண்டும் போல், கைகள் பரபரத்தன!



அவளை இழுத்துக் கொள்ளலாம் என்றால் அவளது அம்மாவிற்கும் அப்பாவிற்கும் இடையே நின்று கொண்டிருக்கிறாளே என்று யோசனையாக இருக்க, அந்த உரையாடலை அறியாத பரமேஸ்வரியோ, "எதாவது சாப்பிட்டியா, கண்ணு?" எனப் பரிவுடன் வினவிய கையுடன், "ரொம்ப வாந்தியா இருக்காமே? மாப்பிள்ளை சொன்னார்! இப்ப எப்படி இருக்கு?" என்றார் வாஞ்சையாக.

"பரவாயில்லை மா! நேத்து நைட், ரெண்டு ஸ்லைஸ் பிரட் சாப்பிட்டேன். அவ்வளவு தான்" என்ற மகளின் பதிலில், "ரொட்டியா? அது எந்த மூலைக்கு? பல்லை விளக்கிட்டு வா.. சூடா பால் கலந்து தாரேன்" எனக் கூறிவிட்டு, அப்போதே மகளுக்கு வேண்டியவற்றை கவனிக்க ஆயத்தமாகிவிட்டார்.

ஆனால், அவருக்கு முன்னாடியே சமையலறைக்குள் சென்றிருந்த மாத்யூ கையில் தேநீர் கோப்பையுடன் வெளியே வந்துவிட, பரமேஸ்வரிக்கு உச்சிக் குளிர்ந்து விட்டது! (ரத்தினவேலு சாருக்குக் கூடிய சீக்கிரம் எதிரியாகிடுவே. போலவே! பார்த்துடா!)

"இதா சமையலறை? நா பின் கட்டில இருக்கும்னு நினைச்சேன்..." என வாசலுக்கு இடது பக்கத்திலிருந்த பகுதியைச் சுட்டிக் காட்டி, அவர் வியக்கவும் "பின் கட்டா? இங்கெல்லாம் ஒரே கட்டு தான்மா. நம்ம வீட்டு முற்றம் தான்மா... இங்க வீடே!" என்றாள் மனோ, சிரிப்புடன். (பின் கட்டா?? ஹய்யகோ, உங்க மருமகன் பின் லேடன் ரேஞ்சுக்கு இருந்தா தான் பின் கட்டெல்லாம்! இல்லன்னா, பில் கட்டியே ஓஞ்சுப் போய்டுவான்!)

"ஹான்" என இரு பெரியவர்களும் வாயைப் பிளக்கவும், "உங்க மருமகன் போட்ட டீயைக் குடிச்சிட்டே, வீட்டைச் சுத்திப் பார்க்கலாமா?" எனக் கேட்டுத், தன் கணவன் கொண்டு வந்த கோப்பைகளைப் பெற்றோரிடம் எடுத்து நீட்டிய மனோன்மணி.

"மாட்ட்! எனக்கு டீ வேணாம்... நுட்ரோலைட் (நம்ம ஊரு காம்ப்ளான்) வேணும்" எனத் தன் கோப்பையை அதில் வைத்து விட்டதைக் கண்ட பரமேஸ்வரி, அவளது ஆங்கில உரையாடல் புரியாமல் "ஏன் வச்சுட்டே?" எனக் காரணம் கேட்டார். (நுட்ரோலைட்டா வேணும்.... நுட்ரோலைட்? உங்கம்மாவை வைக்கச் சொல்றேன் பாரு.. ஹெவி ஃபைட்)

"ம்ம். எனக்குப் பிடிக்கலை மா! அதான், நுட்ரோலைட் போடச் சொன்னேன்" என மகள் செல்லம் கொஞ்சியத்தை விட, மறுப் பேச்சில்லாமல் மருமகன் சமையலறைக்குள் சென்றது கோபத்தைக் கிளப்பிவிட, "மருமகப் பிள்ளையை இப்படி... வேலை வாங்குறது ரொம்ப தப்பு, மனோ! போ.. நீ போய் கலந்து எடுத்திட்டு வா" எனக் கண்டித்தார் தாயார். (இதுக்கேவா? இன்னும் மாத்யூ பட்டப் பாடைக் கேட்டா, ரத்தக்கண்ணீர் வடிப்பீங்க போலவே?)

"ப்ச். என்னம்மா? மாட்ட்... ஒண்ணும் சொல்ல மாட்டான்..." என ஆரம்பித்த மனோன்மணி, பரமேஸ்வரியின் கையினால் வாங்கிய லேசான அடியில் "மாட்டார்" என மாற்றிவிட்டு, சமையலறைக்குள் சென்றாள்.

"பால்கனில நின்னு, அங்க உங்க மருமகன் வச்சிருக்க குட்டித் தோட்டத்தைப் பாருங்கம்மா. நாங்க



ரெண்டு பேரும் அங்க வந்திடுறோம்" எனக் குரல் கொடுத்தவாறே, சமையலறைக்குள் உள்ளே நுழைந்த மனோன்மணி, பெற்றோர் இருவரும் தங்கள் கண்ணை விட்டு மறைந்து விட்டனர் என்பது உறுதியானதும், மாத்யூவைப் பின்புறமிருந்து இறுக அணைத்தாள்.

"தேங்க்ஸ் மாட்ட்! தேங்க்ஸ் சோ மச்! எனக்காக... என்னவெல்லாம் செய்திருக்கே! ஐ லவ் யூ சோ மச் மாட்ட்! மை டார்லிங்" என மாறி மாறி அவனைக் கொஞ்சிக் கொண்டே, அவனது பரந்த முதுகில், விரிந்த தனது முகத்தை வைத்து, தாமரையாய் மலர்ந்து போனவளை, முன்னே இழுத்து இறுக அணைத்தான் அவளது கணவனெனும் காதலன்!

"ஐ லவ் யு.... பேபி! உனக்கு இப்போது மனதிற்கு சந்தோஷமா? உன் அம்மாவைப் பார்த்ததும், மனோவோட முகம் அப்படியே மலர்ந்து போச்சே?" என்றவன் அவளை லேசாய் தூக்கி, உச்சியில் முத்தமிட "அதுக்கு முன்னாடியே மலர்ந்து போச்சு!" என்றாள் அவனது ஆசை மனைவிப் பூடகமாய். (நீ ஒரு பூடம் என்பதை மறைமுகமா சொல்றியா? குட்! குட்!)

"அதுக்கு முன்னாடியா? நான் உன் வீட்டுக்குப் போனது... உனக்கு முன்னாடியே தெரியுமா? யார் சொன்னாங்க? நான் இந்தியா போனது, மார்ட்டின் மற்றும் ஜீன் தவிர யாருக்குமே தெரியாதே? அப்படின்னா... அவங்க இங்க வந்தாங்களா? யாரு வந்தா? மார்ட்டினா? ஜீனா? ஜீன் வந்தாளா? என்ன சொன்னாள்?" எனப் பதறித் துடித்துவிட்டான், மனைவி மேல் கொண்ட நேசத்திற்கு நூறு வருடக் குத்தகை எடுத்திருந்தவன். (நீ அல்லவோ.. அக்மார்க் கணவன்!)

மனையாள் கருவுற்றிருக்கும் இந்த வேளையில், அவளது மனநிலையைப் பாதிக்கும் வண்ணம் எதையும் சொல்லிவிட்டாளோ என்ற பயம் மனதினுள் அப்ப, ஏற்கனவே ஜீன் மீது கோபமாய் இருந்த மனோ, இப்போதைய பேச்சு வார்த்தையை எப்படி எடுத்துக் கொண்டாளோ என்ற பீதி மனதைப் பிசைந்தது. (சும்மா சும்மா உனக்கு எதுக்குடா மனசைப் பிசையுது? பைசாக்குப் பிரயோஜனம் இல்லாம? சப்பாத்தி மாவைப் பிசைந்தாலாவது புண்ணியமுண்டு!)

ஆனால், அவளது பயத்திற்கு அவசியமே இல்லை என்பது போல "ஜீன் தான் வந்தா! ஆனா, நீ இந்தியா போனதைச் சொல்லலை!?" எனக் கிளுக்கிச் சிரித்த மனோ,

"ஜீன் என்ன சொன்னாது, நைட் ஸ்பெஷல்லா சொல்றேன்! இப்போ, எனக்கு நுட்ரோலைட் போடு!" என அவளது கன்னத்தில் அழுத்தமாய் முத்தம் வைத்து நிமிர்ந்தாள்.

'ஹோ மை டார்லிங்!!" என அவளை இன்னமும் இறுக அணைத்த மாத்யூவால், அவளை விட்டு விலகவே முடியவில்லை. (என்னைக்குத்தான் முடிஞ்சிருக்கு?! இன்னைக்கு முடியிறதுக்கு?!)

ஓர் நெடிய முத்தத்தை மனைவியின் உதடுகளில் அவன் பதித்துக் கொண்டிருக்கும் போதே, அவனைத் தள்ளிய மனோ "அப்பா-அம்மா இருக்கும் போது, இப்படி எல்லாம் செய்யக் கூடாது. இனிமேல் ரூமுக்குள்ள வந்ததும் தான் எல்லாம்" என அவனுக்குப் பாடம் எடுத்துவிட்டு, "எனக்கு நுட்ரோலைட்" எனச் சட்டமாக



அவனிடம் கை நீட்டினாள். (நீ பாடம் எடுக்கிற அளவுக்கு, அவனோட நிலைமை தாழ்ந்து போச்சா? இதெல்லாம் காலக் கொடுமை!)

"இதோ பேபி!" என அவனிடம் ஓர் கோப்பையை நீட்டிய மாத்யூவின் கைப்பற்றி, "நீயும், பால்கனிக்கு வா" என அழைத்துச் சென்றாள், ரத்தினவேலுவின் மகள்.

பால்கனியிலிருந்த அனைத்துப் பூ வகைகளையும், ஆராய்ந்து கொண்டிருந்த ரத்தினவேலுவிடம் சென்று செல்லமாய் சாய்ந்துகொண்ட மனோ "எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குது தெரியுமா?" என்றாள் ஆனந்தமாக.

தாயின் துணைக்காக ஏங்கியிருந்த மனோவின் மனது, தன் மீதிருந்த கோபம் சிறிதுமின்றி, தன் வீட்டிற்கு வந்திறங்கிய தாயைக் காணக் காண உள்ளம் பொங்கியது!

ஒரு வெள்ளைக்காரனைக் கல்யாணம் செய்து கொண்டுவிட்டாய் என்ற கோபம் மறைந்ததோடு அல்லாமல், அந்த வெள்ளைக்கார மருமகனைத் தலையில் தூக்கி வைத்துத் தாங்காத குறையாக "மாப்பிள்ளை...", "மருமகன்", "மருமகன் பிள்ளை" என்று வாயாரக் கூப்பிடும் பெற்றோரைப் பார்க்கையில் பெருமிதம் கூடிக் கொண்டே போனது!

எல்லாவற்றுக்கும் மேலாக, தான் தாயின் துணைக்காக ஏங்குகிறோம் என்பதை அறிந்து கொண்டு, கடல் கடந்து சென்று, தனக்காக அவர்களிடம் பேசியிருக்கும் கணவனை எண்ணுகையில் அவளது அணு இருந்த உடலும், அவளது காதல் இருந்த நெஞ்சமும் ஒரு சேர விம்மின! தனது சந்தோஷத்திற்காக, ஜீனிடம் பேசியவன், அதோடு

மட்டும் தான் நிம்மதியடைய போவதில்லை என்பதை உணர்ந்து தன் பெற்றோரையும் அழைத்து வந்திருக்கிறானே என அவனை எண்ணிப் பூரித்துப் போனாள் மனோ! (பூரி சாப்பிட்டவ மாதிரி...அடிக்கடி பூரித்துப் பூரித்துப் போகுதுப்பா, இவளுக்கு)

அந்தப் பூரிப்புக் கொடுத்த உற்சாகத்தில், "மாட்ட், நம்ம வீட்டுக்கு வந்தாராமா?" என்றாள் மனோ மிகுந்த ஆர்வத்துடன்.

பரமேஸ்வரி பதில் சொல்வதற்கு முன்னர் ரத்தினவேலு முந்திக் கொண்டார். "ம்ம். ஆமா ராஜாத்தி! ஒரு நாள்.... அம்மாவோட சேலையை விரிச்சு அது மேல படுத்திட்டு.. அம்மாக்காக அழுதியாமே? மாப்பிள்ளை... அன்னைக்கு நைட் போன் பண்ணினார்" என்ற ரத்தினவேலு, தொடர்ந்து பேசினார்.

"நீ அழுததைச் சொல்லிவிட்டு, அம்மாவை எப்படியாவது இங்க கூட்டிட்டு வரச் சொல்லிக் கேட்டார்! ஆனா... உன் அம்மா தான்... இறங்கி வரதாவே இல்லையே!?" என அவர் கையை விரிக்க, (இறங்கலைன்னா, கையைப் பிடிச்சு இறக்கிவிடனும் சார், இது கூட தெரியாதா உங்களுக்கு? மனோவை விட மக்கா இருப்பீங்க போலவே?)

"அப்படியெல்லாம் இல்லை! எனக்கும்.. நீ உண்டாகி இருக்கேன்னு சொன்னதும், மனசுக்குள்ள உன்னைப் பார்க்கணும்ன்னு தான் இருந்தது" என அசடு வழிய ஒத்துக் கொண்ட பரமேஸ்வரி, "என்னைக்குத் தான்... உங்கப்பா என்னைய புரிஞ்சுக்கிட்டார்?" என நொடித்துக் கொள்ள மறக்கவில்லை, (வை ப்ளட்? சேம் ப்ளட்!)



"அப்புறம் என்னம்மா? என்னோட போனல அட்லீஸ்ட் பேசியிருக்கலாம் தானே?" என மனோ, தாயின் தோளில் சாய்ந்து, லேசாய் கண்ணீர் விட, "அழக் கூடாது ராஜாத்தி!" என ரத்தினவேலுவும், "அழுதா... குழந்தையைப் பாதிக்கும் கண்ணம்மா" எனப் பரமேஸ்வரியும், "பேபி! ப்ளீஸ் அழாதே! அதான், அம்மா வந்தாச்சே" என மாத்யூவும் ஒரு சேரத் தாங்கினர். (அழுடா ராஜாத்தி. நீ!)

மூவரது கவனிப்பும் தனக்கிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட அந்த வளர்ந்த குழந்தையும், "அழலை!" எனப் புறங்கையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

ஆனால், மாத்யூவோ அவளது கையை விலக்கி விட்டு, அழுத கண்களில் ஓர் முத்தம் வைக்கவும், வளர்ந்த குழந்தை மலர்ந்த குமரியாகி, வெட்கிச் சிவந்தாள்! அதோடு நில்லாது, பெற்றோர் முன்னிலையில் இப்படி நடந்து கொண்டானே என்ற கூச்சம் தலைக்கேற "அச்சோ மாட்ட்! அம்மா-அப்பா முன்னாடி இப்படிச் செய்யக்கூடாது" என அவனிடம் ஒரு விரல் நீட்டி மிரட்டினாள்.

அவளது கூச்சத்திற்கு மாறாய், தப்பாக எடுத்துக் கொள்வார்கள் என்றெண்ணியிருந்த பரமேஸ்வரியும் ராஜாகோபாலனும், கண்களில் நீருடன் மகள் மீது மருமகன் கொண்ட பாசத்தைப் பருகிக் கொண்டிருக்க, வார்த்தைகளின்றி அந்த உறவுகளிடம் ஓர் நெருக்கம் உண்டானது!

ஐந்து நிமிடத்திற்கும் மேலாய் நடந்தேறிய அந்தப் பிணைப்பை "சரி... சரி... உங்க மருமகன் வந்து

உங்களைக் கவுத்தக் கதையை அள்ளி விடுங்க'' என அன்னைக்கு ஆணையிட்டாள். (கதையா? காவியம்மா... காவியம்!?)

அவளைச் செல்லமாய் ஓர் அடி வைத்துவிட்டு, ''போன வாரத்தில ஒரு நாள்.... மருமகப் பிள்ளை வந்து, வாசலில் நின்னதும் எனக்கு ஒண்ணுமே புரியலை.''

''அச்சச்சோ, என்னோட மாட்ட்-டை அடிச்சட்டீங்களா?'' என ஓடிச்சென்று, கணவனின் கைகளுக்குள் நின்று கொண்டு, தாயின் பக்கம் ஒரு விரல் நீட்டி மிரட்டினாள் மனோன்மணி! (என்ன ஒரு கரிசனம்? அவனை அடிக்கிறதுக்கான நூறு வருஷ காண்ட்ராக்ட்ல சத்தமில்லாம கையெழுத்துப் போட்டுட்டு... பேச்சைப் பாரு.. பேச்சை!)

''இவ வளர்ந்துட்டான்னு நீங்களும் தான் மாஞ்சு போனீங்க'' எனத் தோள் பட்டையில் இடித்துக் கொண்ட மனோவின் அன்னை, மேலே பேசத் துவங்கினார். (உங்க பொண்ணைச் சரியா புரிஞ்சு வச்சிருக்கீங்கமா)

''அவர் வரது அப்பாக்குத் தெரியும் போல, நம்ம கார் மதுரை ஏர்போர்ட் வரைப் போயிருந்தது. அதில் அவர் வந்து இறங்கினதுமே, எனக்கு விஷயம் புரிஞ்சு போச்சு! உனக்காக... எம் மகளுக்காக... இவ்வளவு தூரம் வந்திருக்க மனுஷனை நினைச்சு மலைச்சிட்டு இருக்கும் போதே, உங்கப்பா... ஆத்தியோட வந்து அவரை அழைச்சிட்டுப் போகச் சொல்லி என்னை விரட்ட ஆரம்பிச்சுட்டார்! (மணமகனே, மருமகனே வா... வா! உன் வலது காலை எடுத்து வைத்து வா! தாழ்வாரத்தில் இடித்துக் கொள்ளாமல் வா வா!)



''மாமாவும் மருமகனும் இங்கிலீஷ்ல எஷிக் கிட்டதைப் பார்க்கணுமே? எனக்கு ஒரே பொறாமையா இருந்துச்சுப் போ! பாவம்... மருமகப் புள்ள.. தான், உங்கப்பா பேசின ஓட்டை இங்கிலீஷ்ல தடுமாறிப் போயிருச்சு!'' என்ற பரமேஸ்வரியை, ''மம்மா ஸ்பிக்ஸ் குட் இங்கிலீஷ்!'' என்ற தனது சான்றிதழால் அடக்கினான். மாத்து! (பொழைக்கத் தெரிஞ்சவன்டா!)

''வெள்ளைக்காரத் துரையே... நா நல்ல இங்கிலீஷ் பேசுறதா சொல்லிட்டார்! நீ.. என்னடி...?'' என ரத்தின வேலு, சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள, அங்கே ஓர் சிரிப்பலை எழுந்து அடங்கியது!

''அப்புறம்.. நீங்க ''வாங்க''ன்னு கேட்டீங்களா இல்லையா?'' என மனோ, தன் மணாளனுக்கு உரிய மரியாதைக் கிடைத்ததா என்பதிலேயே குறியாக இருந்தாள்.

''கொஞ்சம் கோபமிருக்கத் தான் செய்தது! ஊர் முன்னாடி... எங்களை அவமானப் படுத்திட்டுப் போக.. இவரோட காதல் தானே காரணம்ன்னு கோபம் இருக்கத் தான் செய்தது'' எனப் பரமேஸ்வரி ஒத்துக் கொள்ள, ''அம்மா... நான்... மாட்ட்... எனக்கு ரொம்பப் பிடிச்சது.. அவன் நல்லவன்மா'' என மனோ, தன் செயலை நியாயப் படுத்த முயன்றாள்.

''ஹ்ம்ம். நீ செய்த காரியம் எனக்குப் பிடிக்கலைன்னாலும்.. இப்பவும் பிடிக்கலை தான்.. ஆனா.... ஆனா.. நம்ம ஹால்ல இருக்க ஆண்டாள் படத்தைப் பார்த்து ''மை மானி... மாம் கேட்டு க்ரை பண்றா.. இந்த மாம்கிட்ட... அவ மாம் கேத்டா!''ன்னு உடைஞ்ச தமிழல

சொன்னபோது, எனக்கு அப்படியே என் பேரனே பேசுற மாதிரி இருந்தது தெரியுமா?'' என உடல் சிலிர்த்தார், பரமேஸ்வரி.

''ஹே! மாட்! சூப்பர்ரா தமிழ் பேசியிருக்கியே? யாரு சொல்லிக் கொடுத்தா?'' என மனோ குதூகலிக்க, ''மாம்மா'' எனத் தமிழில் அழுத்தம் கொடுத்தான், அவளது மனதை வென்றவன்.

''நீங்க அதிலேயே கவுந்துட்டீங்களா? பின்னே, என்னோட மாட்... எனக்காக... என்னெல்லாம் செய் திருக்கான்?'' என மனோ, பெருமை கொள்ளும் போதே, ''அதோட நிறுத்தலை.... நம்ம மாப்பிள்ளை!'' என்ற ரத்தினவேலு, ''நா அவர்கிட்ட... அம்மாவோட கோபத் தைப் பத்திச் சொல்லியிருந்தேன்.. அதாவது, வெள்ளைக் காரனைக் கல்யாணம் செய்துக்கிற பொண்ணோட வாழ்க்கை நல்லா அமையாது.. அவன் உன்னை விட்டுப் போய்டுவான்ங்கிற அம்மாவோட பயத்தைப் பத்திச் சொல்லியிருந்தேன்...'' எனக் காரணம் கூறி, அதை மாத்யூ நீக்கிய முறையை விவரிக்கத் தொடங்கினார்.

''ம்ம்.. ஒரு நிமிஷம் இருங்க.. எனக்கு வாந்தி வர மாதிரி இருக்கு..'' என ஓங்கரித்துக் கொண்டு, உள்ளே ஓடிய மனோவை, மாத்யூ பின்தொடர்வதற்கு முன்னர் ''ம்ம். அதெல்லாம் வராது! கொஞ்சமா எலுமிச்சைப் பிழிஞ்ச சுடு தண்ணி தரேன்..அதை முதல்ல குடி! அப்புறம், சாப்பிட்டப் பிறகு, ஒரு துண்டு மூக்கு மாங்கா தரேன்'' என முடித்தார், தாயார்.

''மூக்கு மாங்காவா? வாங்கிட்டு வந்திருக்கீங்களா?'' என மனோ, எலுமிச்சை ஜூஸைப் பருகியவாறே கேட்க, ''நீ கேட்டேன்னு மாப்பிள்ளை சொல்லி.. நிறைய மூக்கு



மாங்காய் வாங்கிட்டு வந்திருக்கேன்'' என அதற்கும் மாப்பிள்ளையின் புகழ் பாடப்பட்டது! (பொண்டாட்டி தாசன்!)

''ஸ்வீட் மாட்!'' எனக் கணவனைக் கொஞ்சிய வாறே, எலுமிச்சை ஜூஸைக் குடித்து முடித்த மனோவின் முகத்தில் தெரிந்த புது தெம்பு, மாட்-டை மகிழ்வித் தது!

மனைவியை இவ்வளவு தெளிவாய் பார்க்கையில், ஒரு வாரம் அவளைத் தனியே விட்டுச் சென்றதில் தப்பே இல்லை எனத் தோன்றியது.

''அப்புறம்... அம்மாவை எப்படிச் சரிக்கட்டினீங்க? அவ்வளவு சீக்கிரம் அடங்குற ஆளா.. நம்ம பாமு!!'' என மனோ கண் சிமிட்ட, ரத்தினவேலு ஆயத்தமானார்.

ஆண்டாள்-ரங்கமன்னார் சகிதமா ஒரு

''நம்ம வீட்டில, ஆண்டாள்-ரங்கமன்னார் சகிதமா ஒரு ''நம்ம வீட்டில, ஆண்டாள் பெரிய படமிருக்கும் இல்லையா? அதில ஆண்டாள் பக்கத்தில போய் நின்னுகிட்டு, ''உங்க பெண்ணைத் தவிர எனக்கு வேற எந்த உறவுமே இல்லை. அம்மா - அப்பா இருந்தும் ஒரு அனாதையா வளர்ந்த நான்... மனோவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்குக் கார ணம், அவ பிறந்து.. வளர்ந்த இந்த இந்தியக் கலாச்சாரம்! உறவுகள் தான் பெருசு... ஒரு கணவன்- ஒரு மனைவி என்று வாழுற உங்க கலாச்சாரம் தான், எனக்கு மனோ கிட்டப் பிடிச்சதே! எனக்குத் தாயாய், தாரமாய், தங்கையாய், தோழியாய், குழந்தையாய், எதிரியாய்ன்னு அவள், தான் எனக்கு எல்லாமுமே! அவளை.. நான் கண்டிப்பா விட மாட்டேன்.. விட்டுட்டு வேறோர் பெண் பின்னாடி போக மாட்டேன். இதை நீங்க நம்பணும்..

மனோவுக்கு. இந்தக் கடவுள் மேல தான் அவள் இவளைத் தான் கும்புடுகிறாள். அவளைப் பின்பற்றி, நானும் இந்தக் கடவுளிடம் உங்களோட கோபம் போகணும்ன்னு வேண்டிகிட்டு இருக்கேன். கோபம் போய்டும் தானே?"ன்னு இங்கிலீஷ்ல தான் பேசினார். எனக்காவது கொஞ்சம் புரிஞ்சது கண்ணு... ஆனா, உங்கம்மா.. அவள் ஆண்டாளைக் காட்டிப் பேச ஆரம்பிச்சப் போதே, கண்ணு கலங்கிப் போச்சு... கடைசியா, நீ ஆண்டாளைப் பிரார்த்திக்கிற மாதிரி, அவளோட பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கிட்டதும் அப்படியே உருகிப் போய்ட்டா!'' என்ற ரத்தினவேலுவின் குரலும், கரகரத்துப் போயிருந்தது. அங்கே ஓர் மௌனத்தை உண்டு பண்ணியிருந்தது. (என் ஒரு உருக்கம்? தமிழ் பட ஹீரோ தோத்தான் போ!)

அப்போதைய மௌனத்தைக் கலைப்பதும் மனோவின் வேலையாய் இருக்க, ''அதான்.. போன அன்னைக்கே சமாதானம் ஆகிட்டீங்களே?

அப்புறம்... எதுக்கு... இவ்வளவு நாள் இங்க வரதுக்கு?'' எனத் தன்னால் முடிந்தளவு, சூழ்நிலையை இயல்பாக்க முயன்றாள்.

''விசா... டிக்கெட் எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டாமா? மாப்பிள்ளை வேற... உனக்கு நிறைய துணி... சாப்பிடற சாமான் எல்லாம் வாங்கணும்னு சொன்னார். எங்களுக்கும், உனக்கு வாங்குற ஆசையிருக்காதா? அதெல்லாம் வாங்கிட்டு வந்தோம்'' எனப் பதில் கூறிய பரமேஸ்வரி, மகளுக்கான பத்தியச் சமையலில் ஈடுபடத் தொடங்கினார்.



சற்று நேரத்தில், மாத்யூ வேலைக்குக் கிளம்பிச் சென்றுவிட, தாய் ஆகப் போகும் மகளைத் தங்கமென தாங்கிக் கொஞ்சினர் தாயும், தகப்பனும்!

பிறந்தது தொட்டு, ராஜபாளையம் பகுதியை விட்டு வந்திராதவர்களுக்கு, அங்கிருந்த மின் சாதனங்கள் அனைத்தும் வியப்பாக இருக்க, ஒவ்வொன்றையும் இயக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்த மனோவிற்கு, நடுநடுவே ஊரிலிருக்கும் உறவுகளைப் பற்றிப் பேசுவதில், நேரம் பறந்தது!

மாலை கவிந்த நேரத்தில் வீடு வந்து சேர்ந்த மாத்யூ, ''என்ன மானி இது? விமானத்தில் வந்தது அவங்களுக்கு உடம்பிற்கு அசதியாய் இருக்காதா? நீ...உன் இஷ்டத்திற்கு அவர்களை முழிக்க வைக்கிறாயே?!'' எனக் கடிந்து கொண்டதுடன், மாமனார் மற்றும் மாமியாரைத் தங்கள் அறையில் உறங்குமாறு கூறினான்! (தப்பிச்சோம். பிழைச்சோம்ன்னு அவங்க ஓடறது என் மனக் கண்ணில தெரியுதே!)

பெரியவர்கள் இருவரும் உள்ளே உறங்கிவிட, இளையவர்கள் இருவரும் வெளி வராந்தாவிற்கு வந்து சேர்ந்தனர். பனி பொழிந்த பொன் மாலைப் பொழுதில், பொன்னென மின்னிய பெண்ணரசியை மடியில் தாங்கி, பண் பாடினான், அந்தப் பாவலன்!

சற்று நேரம், இருவரும் காதலில் கட்டுண்டு வெளியே வந்த பிறகு, ''ஜீன்...என்ன சொன்னான்? அவன் என்ன சொல்லியிருந்தாலும், உன் மனதிற்குள் எந்தக் கோபமும் இருக்கக் கூடாது, மானி!'' என மெல்ல, அவளது மேனி வருடிய மாத்யூ, உச்சியில் இதழ் பொருத்தி நிமிர்ந்தான்.

''எனக்குக் கோபமெல்லாம் கிடையாது! ஒரே சந்தோசம் தான்...ரொம்ப ரொம்ப சந்தோசம்...'' என உற்சாகமாய் கூவிய மனோ, ''ஒரு நிமிஷம்'' என்றதோடு உள்ளே ஓடி மறைந்தாள்.

மின்னல் வேகத்தில் திரும்பி வந்தவளின் கைகளில், ஜீனின் காதல் கடிதங்கள் இருக்கவே, மாட்ட் அதிர்ந்து போனான்! ஆனால், அவனது அதிர்வை ரசித்தவாறே, ஒவ்வொரு வாழ்த்தட்டைக்கும் அவனது கன்னத்தில் முத்தம் வைத்து நிமிர்ந்து, சட்டென முகத்தில் ஓர் இறுக்கத்தைக் கொண்டு வந்தாள்.

ஒரே மூச்சில் ஜீன் சொன்ன விஷயங்களைச் சொல்லி முடித்தவள், ''எனக்கும் உன் மேல முழு நம்பிக்கை இருக்கு மாட்ட்! இது... ஜீன் சொல்றதுக்கு முன்னமே வந்தது! அதை... நீ நம்பணும்... நீ ஊருக்குக் கிளம்பிப் போனதும்... எனக்குத் தோணுச்சு மாட்ட்! உன் மேல இருக்க, அதீத காதலால தான் உன்னை நான் சந்தேகப் பட்டேன்னு... அந்த அதீத காதலைக் காரணமா வச்சுட்டு, என்னை மன்னிக்கக் கூடாதா?'' எனக் கைகளை ஏந்தியவாறு நின்றவள், அவனிடம் கண்களாலும், வார்த்தைகளாலும் கெஞ்சினாள்.

''ஹே பேபி! நான் உன்னை அப்பவே மன்னிச்சுட்டேன்... என்னைக்கு நீ மயங்கி விழுந்தியோ, அன்னைக்கே எனக்கு உன்னோட மனநிலைப் புரிஞ்சுடுச்சு! உனக்கு நம்பிக்கை வரணும்ன்னா...நான் நம்பிக்கை வர மாதிரி நடந்துக்கணும்ன்னு முடிவு பண்ணித் தான், ஜீன்கிட்டப் போய் அந்த கடிதங்களைக் கொடுத்தேன்! ஐ லவ் யு... பேபி! ஐ லவ் யு... ஜஸ்ட் யு! என்னால, உன்மேல கோபமா இருக்கவே முடியாது!'' என முடித்த



மாத்யூ, அவளை இழுத்து அணைத்த வேகத்தில், அது எந்தளவு உண்மை என்பது மனோவிற்குப் புரிந்தது!

புரிந்த உண்மை மனதை நிறைக்க, தன்னைத் தன் குடும்பத்துடன் இணைத்துவைத்தத் தன் காதலனுடன், ஆண்டாளின் பாதம் பணிந்து எழுந்தாள், மனோன்மணி! ''இன்று போல் என்றும் வாழ வேண்டும்'' என்ற பிரார்த்தனையுடன் தன் காலில் விழுந்த இருவரையும் மனதார வாழ்த்தினாள், சூடிக் கொடுத்தச் சுடர்கொடியாள்!

கண்டங்கள் தாண்டி, கடல்கள் பல கடந்து, தேசங்கள் ஆயிரம் தாவி, மொழிகள் மறந்து, மதங்கள் மறித்து, ஜாதிகள் உடைந்து, கலாச்சாரங்கள் கலந்து, காதல் மட்டுமே நிலைத்திருந்த அந்த இல்லறம் முழுதானது!

* * *

ஏழு மாதங்களுக்குப் பிறகு...

''எனக்கு வலிக்குது!'' எனப் பல்லைக் கடித்துக் கொண்டு கத்திய மனோவை ''அப்படித் தான் வலிக்கும்! கொஞ்சம் பொறு!'' எனத் தாயார் அடக்க,

''இன்னும் கொஞ்ச நேரம் தான், பேபி! நம்ம பேபி சீக்கிரமே வெளியே வந்திடுவா!'' எனத் தேற்றினான், கணவன்.

''எப்ப வருவா? எனக்கு ரொம்ப ரொம்ப வலிக்குது! உனக்கு வலிச்சாத்தெரியும்...சும்மா சும்மா வலிக்காது... வலிக்காது சொன்னா...எனக்கு எரிச்சலா வரது!'' எனக் கையைப் பிடித்துக் கொண்டு கதறிய மனைவியைத் தாங்கிப் பிடித்த மாத்யூவால், மருத்துவன் வேலை பார்க்க முடியாது போக, அவளுடன் சேர்ந்து அந்த

வேதனையைத் தாங்கத் துவங்கினான் அவன். (இது வேறவா?)

புதிய மருத்துவ முறையாக, இளம் வெந்நீரில் தாயை இறக்கிவிட்டுக் குழந்தையை எடுக்கும் முறையில், தாய்க்கும் சேய்க்கும் சேதமின்றி, மாத்யூவின் புதல்வியை, உலகிற்கு மீட்டெடுத்தார் மருத்துவர்.

தாயைக் கொஞ்சமாயும், தந்தையை அதிகமாயும் படுத்திவிட்டு, வெளியே வந்த பெண்ணரசி தந்தையை உரித்து வைத்திருக்க, ''பாப்பா... என்னை மாதிரி... கொஞ்சம் கூட இல்லை'' எனச் செல்லமாய் சிணுங்கினாள், மனோ! (நல்லவேளை!)

அப்போதும், ''ஹேறா, சிணுங்காதே பேபி! குட்டிப் பாப்பாவோட கண்ணு பாரேன்... உன்னோடது மாதிரியே பெருசா இருக்குப் பாரேன். சின்ன பேபி, உன்னை மாதிரியே துருதுருன்னு அழகா இருக்கா!!'' என மனைவியைத் தேற்றிய மாத்யூவைப் பெருமையாய் பார்த்தப் பெரியவர்கள் இருவரும், கண்களைத் துடைத்துக் கொள்ள, அவர்களை மேலும் நெகிழ்த்தவென, மருத்துவமனையில் பேர் கேட்டதும், ''கோதை ஹாலிடே!'' என்றனர் திரு மற்றும் திருமதி. ஹாலிடே!! (அடங்காத மனோவும், அடக்கமான மாத்யூவும், அழகான கோதையும் வலிவும் வனப்புமாக நீடுழி வாழட்டும்! என் பணியை, மனோவின் சிங்கக்குட்டி சிரத்தையுடன் செய்வாள் என்ற நம்பிக்கையில் உங்களிடமிருந்தும், மனோவின் குடும்பத்திடமிருந்தும் விடை பெறுகிறேன்! வாழ்த்தி, விடை கொடுங்கள்!)

✱ ✱